புத்துலகில் பூந்தமிழ்

முதுமுனைவர்
இளங்குமரனார்

அமிழ்தமணி பதிப்பகம்

புத்துலகில் பூந்தமிழ்

செந்தமிழந்தணர்
முதுமுனைவர் இரா. இளங்குமரன்

அமிழ்தமணி பதிப்பகம்
33, ஜமாலியா நகர், சென்னை - 600 012.
பேச : 9941857867

நூல் விவரம்

நூல் தலைப்பு		புத்துலகில் பூந்தமிழ்
ஆசிரியர்		செந்தமிழந்தணர் முதுமுனைவர் இரா. இளங்குமரனார்
பதிப்பு	:	முதற்பதிப்பு திசம்பர் - 2009
பொருள்		செலவு நூல்
அளவு	:	டெமி 1/8
உரிமை		ஆசிரியர்க்கே
மொத்தப் பக்கங்கள்		208
தாள்		வெள்ளைத்தாள்
நூல் கட்டுமானம்	:	சாதாரணம்
கணினி வடிவமைப்பு	:	தென்றல் கணினியகம் 10, சேரன் தெரு, அன்பழகன் நகர், பிரம்பூர், சென்னை - 600 011. பேச : 9840670649 044 25582725
அச்சிட்டோர்		செம்மொழித் தமிழ் அச்சகம் சேப்பாக்கம், சென்னை 600 005. 9445237754 / 9791088814
வெளியீடு		அமிழ்தமணி பதிப்பகம் 33, ஜமாலியா நகர், சென்னை - 600 012. பேச : 9941857867
விலை		உரு. 100.00

நினையாத ஒன்று

''புத்துலகில் பூந்தமிழ்' என்பது சுற்றுலா நூல்!

ஒருவர் சுற்றுலா உலகுக்குத் தேவையா?

ஒருவர் சுற்றுலா அவர் புறப்பாடு ஏற்பாடு, அதற்குரிய கடவுச்சீட்டு புகவுச்சீட்டு ஆகியவை பெறுதல், காணும் இடத்திற்குச் சென்ற செலவு, கண்ட ஊர், காட்சி, தங்கல், மீளல் பற்றிய செய்திகளையே கொண்டிருப்பினும், அவ்வாறு சுற்றுலாச் செல்ல விரும்புவார்க்கு அது வழிகாட்டிக் கையேடு போலப் பயன்படவே செய்யும்.

செல்பவர் தாம் காணும் இடங்களின் தொல்பழ வரலாறு, அதன் வளர்நிலை, வளம், இற்றை மக்கள் நிலை, அந்நாட்டு ஆட்சி, அந்நாட்டு அறிவர் திறவர் வரலாறு, பருவநிலை, ஊண், உடை, பழக்க வழக்கம் என்பவை எல்லாம் சுட்டுவாரானால், அந் நாட்டுக்குச் செல்வாரும் செல்லாதாரும் ஒருங்கே பயன் கொள்ள முடியும்.

சுற்றுலா என்னும் நோக்கம் இல்லாமல், ஒரு நாட்டின்-அமைப்பின்-அழைப்பின் வழியாகச் செல்வார் எனினும், அவற்றின் பயன்பாட்டுப் பங்களிப்பு அளவில் நின்றுவிடுவார் அல்லர். அம் மக்கள் நிலை, தொழில் நிலை, மனப்பாங்கு, சென்ற நாட்டினர்க்கும் ஆங்குக் கற்றல் தொழில் புரிதல் வணிகம் செய்தல் முதலாம் வகைகளில் குடியேறிருப்பார் தமக்கும் உள்ள நேர்வு என்பவை எல்லாம் அறிந்த வகையான் எழுதிவைப்பின் அந் நிலையர்க்கு மிகுபயனாம்.

என் புத்துலக-அமெரிக்கச் செலவு, யான் எண்ணியும் பாராதது. அமெரிக்க நாடு மட்டுமன்றி உலகவர் உள்ளத் தெல்லாம் ஒரு மாமணியாக விளங்கிக் கொண்டிருக்கும்

ஆபிரகாம்லிங்கனாரின் அருளாட்சி என்னைக் கவர்ந்தது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரேயே! அவர் வரலாற்றை எழுதுங்கால் மனத்துப் பதிந்த பதிவும் அவலமும், 'அந் நாட்டுப் பழங்குடியினரும் மாந்தப் பிறவியரே' என அவர் எண்ணிச் செயல்புரிந்த சீர்மையும், அச் சீர்மையின் பரிசாகச் சிறுமை வழங்கிய அறப்பேரிழப்பும் எழுதுங்கால், உருகினேன்; ஒன்றினேன்; ஆனால், அப் பெருமகன் நினைவு வளாகத்தை, அவன் மாணுயர்ந்த சிலையை நேரில் காணும் பேறு வாய்க்கும் என எண்ணினே னல்லேன்!

"ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்" என்னும் தமிழ்த் தொடர் மெய்யாயிற்று.

ஐன்சுடீனார், வாசிங்டனார், எடிசனார், இரைட்டு உடன்பிறந்தார் இவர்களெல்லாம் கேள்விப் படாதவர்களா?

நியூயார்க்கு, வாசிங்டன், நயாகரா புதிதாகவோ உலகம் கேள்விப்பட போகிறது!

கேட்டவை எல்லாம் கண்முன் கண்டு கண்டு திளைக்க, என்றோ ஒருநாள் ஒரு பெருமகனார் பிரபாகரனார் தவச்சாலைக்கு வந்ததே என்பதைச் சுற்றுமுடித்து தவச்சாலைக்கு வந்தபின்னர், அவண் வந்த தில்லை குமரனாரால் அறிந்து, தம்மோடு கொண்டு தம்மோடு விருந்தோம்பி, தம்மோடு அவையரங்கேறி, தம்மோடு உலாவந்து மீளும்வரை உணர்வுப் பிழம்பாக இருந்த தோன்றல் பிரபாகரனார், இதனை வெளிப்படுத்தினார் அல்லரே! எத்தனை பெரிய நாகரிகம்! எத்தனை பெரிய பண்பாடு!

அங்கே திருக்குறள் வகுப்பு உண்டு! அவ் வகுப்பில் பல பேர் உரைகள் ஆயப்படும்! ஆனால், அடிமணையாம் உரையாக எளியேன் எழுதிய 'வாழ்வியல் உரை' என்பதே! இதனைப் பிரபாகரரே எடுத்தும் தொடுத்தும் பரப்பியும் வந்தும்

அவர் இதுபற்றி ஒரு சொல் தானும் நேரில் சொன்னார் அல்லர்! அன்பர் திரு. பீற்றர் அவர்கள் சொல்லியே அறிந்தேன்!

அமெரிக்க-சிக்காகோ-வாழ் தமிழ்த்தோன்றல் **இராம் மோகனார்** என் '**திருக்குறள் போற்றி**' என்னும் வழிபாட்டு நூலைத் '**திருக்குறள் மந்திர மொழிகள்**' எனப் பெயரிட்டு, முன்னைக் குடியரசுத் தலைவர் **அப்துல்கலாம்** அவர்களால் வெளியிடச் செய்ததும், அதனைத் தம் 'தமிழர் பண்பாட்டுக் கையேடு' என்னும் பாரிய தொகுப்பில் இடம் பெறச் செய்ததும், இனிய இசை இழையாய் ஆக்கியதும் அம் மண்ணில் என்னைத் தமிழ்-திருக்குறள்-உணர்வுடையார் உள்ளங்களில் எல்லாம் பதியச் செய்திருந்தது. யான் திருக்குறள் போற்றி வழியாக வழிபாட்டுப் பொழுதிலும் நினைவு கூரப் பெற்றேன்.

நெய்வேலிப் பேரன்பர் **அறவாழியார்-தமிழரசியார்** என் மக்கள் ஆயினர்! பாவாணர், நெய்வேலியோடு என்னை முப்பான் ஆண்டுகளுக்கு மேலாகத் திங்கள்தோறும் தொடர்பு கொண்டு தமிழ்க் கடனாற்ற மூலவரானார்! அவ் வகையில் அறவாழியார் தமிழரசியார் தலைமகனார் **மருத்துவர் செந்தில்** தம் பிள்ளைப் பருவமுதல் கொண்ட மொழிக் காதல்-மொழிக் காவல்-மொழிப்பரப்பல்-எனச் சிறந்து, என் வரலாற்றை **ஆவணப் படமாக** நெய்வேலி ஓவியக் கலைத்தோன்றல் **செல்வனார்** துணையோடு ஆக்கினார்! அதனைக் **கிழக்கு வாசல்** முதலாம் இதழ்கள் பெரும்பரப்புச் செய்தன. செந்திலார் ஆவணப் படமும் அமெரிக்கத் தமிழர் பார்வையில் பட்டு, அல்லூர் திருவள்ளுவர் தவச்சாலையை நோக்க வைத்தது! **நாற்பத்து மூன்று தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பாகிய 'பெட்னா'** என்னை அழைத்து வழங்கிய உயர் பேர் விருது பெறுதற்கே யான் அழைக்கப் பெற்றேன்.

கண்டுகொள்வார் எந்தக் கடைக்கோடியில் இருந்தாலும் கண்டுகொள்வார்; கையருகே இருந்தாலும் கண்டுகொள்ளார் கண்டு கொள்ளவே மாட்டார்! இதன் அடிப்படை, "முன்னவர் சால்பும், பின்னவர் சார்புமே யாம்!" என்பதை உணர்த்தும் உண்மை ஆவணம் இஃதாம்!

புறப்பட்டது முதல் மீண்டது வரை எழுதிய எழுத்துகள் தமிழுணர்வுடையார்க்குப் பயன்செய்யும் என்பதால் நூலாக வெளிப்படுத்தினேன்!

பொறிஞர், வழக்கு அறிஞர், தமிழ்-தமிழின-வடிவாளர், சென்னை கலைச்செல்வனார் இச் செலவின் தொடக்க முதல் நிறைவுவரை ஒவ்வொரு நிலையிலும் உடனாகி-உரையாடலாகி-ஒன்றி நின்றவர். அவர்தம் வேட்கையும், என் ஏற்பும் இசைந்து, நுங்கள் கையில் ஒரு தமிழ்க் குழந்தையாகத் தவழ்கின்றது "புத்துலகில் பூந்தமிழ்"!

சங்கத்துத் தவழ்ந்த தமிழ்க் குழந்தை, இதுகால் தமிழ் ஆர்வலராய்க் கற்பார் கைகளில் எல்லாம் தவறாமல் இடம் பெறுமானால், தமிழர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தமிழ்ச் சங்கமாய்-தமிழ் இயக்கமாய்-தமிழ்ப் புரவலராய்-தமிழ் வளர்க்கும் 'தாதா'வாய், அத் தாதாக்கள் அனைவரும் உள்ளத்தால் ஒன்றுபட்ட பேரமைப்பாய்ப் பேருலகாய்த் திகழ வாய்க்கும் "புத்துலகில் பூந்தமிழ்" என்னும் இந் நூல் அதனைத் தூண்டித் துலங்கச் செய்யுமாக!

வாழிய நலனே! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்,

இரா. இளங்குமரனார்

பதிப்புரை

செந்தமிழ் அந்தணர் இளங்குமரனாரின் கண்ணில் எந்தக்காட்சி பட்டாலும், காதில் எந்த செய்தி விழுந்தாலும், உடனே அது மூளை ஆலைக்குள் புகுத்தப்பட்டு பலதுறை ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு பல்வேறு செய்திகளாகப் பகுக்கப்பட்டு தமிழ்இனத்தின் மேம்பாட்டுக்கான ஒரு வரலாறாக உருவாகும் நிலை கண்டு நான் மட்டுமல்ல ஐயாவை அறிந்த அனைவரும் வியப்போடு நோக்குவர்.

நான் அதை ஆய்ந்து பார்த்தேன். விடை எனக்கு இப்படி வந்தது.

1. மனிதத்தின் மீது மாண்புமிகு மதிப்புக் கொண்டுள்ளார்.

2. மனிதத்தின் தோற்றம், வளர்ச்சி, சரிவு, அழிவு இதில் அழுத்தமான ஆய்வு.

3. தமிழ்மொழியில் இளவயது முதலே ஆழங் கால்பட்டிருத்தல்.

4. பாவாணர், இலக்குவனார்..........போன்ற அறிஞர்களின் தொடர்பு.

5. எல்லாவற்றினும் மேலாக 'மனத்துக்கண் மாசிலனாக' இருத்தல்.

6. தமிழ்மொழியை துறைதோறும் துறைதோறும் ஆராய்ந்து இக்கால உலகிற்கு ஏற்றவகையில் ஆய்வு நூல்களை எழுதியிருத்தல்.

7. எச்செய்தியையும் வாழ்வில் நோக்கோடு அணுகுதல்.

விரிப்பின் பெருகும்போல் எனக்குத் தோன்றுகிறது. ஆதலால் திருக்குறளின் 7 சீர்கள் போல் 7 விடைகள் மட்டும் எடுத்துவைத்துள்ளேன்.

புத்துலகில் பூந்தமிழ் என்பது..

தமிழர்கள் எப்படி நேரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும், நேரத்தின் கடமை தனக்கு மட்டுமல்லாமல் தன்னைச் சார்ந்தவர்களிடத்திலும் சரியாகக் காட்ட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டும் ஒரு காலச்சுட்டி.

தமிழர்களின் ஏற்றம் குறித்து மாற்றம் செய்ய வேண்டியவற்றை ஒரு தேற்றமாகக் கூறியுள்ள நூல் 'புத்துலகில் பூந்தமிழாகும்."

வாழ்க ஐயா!

வளர்க அவர்தம் தமிழ்த் தொண்டு!

வழக்கறிஞர் சு. கலைச்செல்வன், எம்.ஏ., பி.எல்.

புத்துலகில் பூந்தமிழ்

"தமிழ்மொழியும் தமிழ்ப்பண்பாடும் இருகண்கள்;
இவை இல்லையேல் தமிழ்இனம் இல்லை"
-என்கிறார் வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவைத்
தலைவர் (பெட்னா) தில்லை க. குமரனார்.

"கரீபியத் தீவுகள், மொரிசியசு போன்ற நாடுகளில் வாழ்ந்துவரும் தமிழர்கள் தமிழ்மொழியையும் தமிழ்ப் பண்பாட்டையும் படிப்படியாக விட்டுவிடுகின்றனர். தமிழர்களின் தனித்தன்மையே இல்லாது அழிந்து ஒழிந்துவிடும் நிலையில் உள்ளது. இது போன்ற அவலநிலை வடஅமெரிக்காவில் ஏற்படாமல் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் பேணிக் காத்து வாழையடி வாழையாக வளர்த்து வரவேண்டிய அரும்பெரும் கடமை நம் அனைவருக்குமே உண்டு."

என்கிறார் 'பெட்னாப் பேரவை' விழா ஒருங்கிணைப்பாளர் தணிகுமார் சேரனார்.

கனடாவில் இருந்து ஓர் எழுச்சிப்பண்! தமிழர்களே தமிழர்களே, உங்கள் முகவரியை இழக்காதீர்! முகவரிஇழப்பே முழுதிழப்பு! முகவரியைக் காக்க முன்வாருங்கள்! முழுமையாகப் பின்வருவனவற்றைப் பின்பற்றுங்கள்:

1. பிள்ளைகளுக்கு அவர்களது தேசிய அடையாளத்தை வெளிக்காட்டுமாறு-தமிழில்-பொருள் நிறைந்த-தூய தமிழ்ப்பெயர், சூட்டுங்கள்!

2. வீட்டுமொழி தமிழாக இருக்க வேண்டும். தமிழ்மொழியிலேயே எப்போதும் பேசல் வேண்டும் என்பதை ஒருநோன்பாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

3. அம்மா, அப்பா, பெரியம்மா, பெரியப்பா, மாமா, மாமி, பாட்டன், பாட்டி போன்ற உறவுமுறைச் சொற்களைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தல் வேண்டும்.

4. பள்ளிகளில் தமிழ் படிக்க வாய்ப்பு இல்லாவிட்டால், தனிஆசிரியர்களிடம் தமிழ் கற்க ஒழுங்கு செய்தல் வேண்டும்.

5. இறைவழிபாட்டைச் செந்தமிழில் நடத்தல் வேண்டும்.

6. தமிழர் வீட்டுத் திருமணங்களைப் பைந் தமிழிலேயே செய்தல் வேண்டும்.

7. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், புதிய ஆத்திசூடி போன்ற நூல்களைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தல் வேண்டும்.

8. தமிழ்மொழி பேச்சு எழுத்துப் போட்டிகளில் பிள்ளைகளைப் பங்குபற்ற பெற்றோர்கள் முயற்சி செய்தல் வேண்டும்.

9. தமிழின் அருமை பெருமை நீர்மை தண்மை பற்றியும் தமிழர்களது பண்பாட்டுச் சிறப்புப் பற்றியும் பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லல் வேண்டும்.

10. ஓய்வு நேரத்தில் நல்ல தமிழ் நாடகங்கள் சித்திரப்படங்கள், திரைப்படங்கள், சிறுவர் நிகழ்ச்சி முதலியவற்றைப் பார்க்க ஊக்குவித்தல் வேண்டும்.

11. முடிந்த மட்டும் பிறந்த பொன்னாட்டுக்குப் பிள்ளைகளைக் கூட்டிச் சென்று உற்றார் உறவினரைக் காட்டுதல் வேண்டும்.

இவற்றை வரிசைப்படுத்திக் கூறும் கனடாத் திருகளார், நேரில் கண்டு மகிழும் சான்றைச் சுட்டுகிறார்.

"சீனர்களைப் பாருங்கள். எத்தனை தலைமுறை அந்நிய நாடுகளில் வாழ்ந்தாலும் சீனமொழியை மறக்காமல் குழந்தைமுதல் பெரியோர் வரை பேசுகிறார்கள். இதற்கு அவர்கள் தங்கள் தாய்மொழி மீது கொண்டுள்ள பற்றும் பெருமிதமுமே காரணமாகும்" என்கிறார்.

கலிபோர்னியா மாநிலப் பள்ளிகளில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை பள்ளிப் பாடங்களை ஆய்வு செய்வதும் அவ்வாய்வைப் பயன்படுத்துவதும் வழக்கமாம்! இந்திய வரலாற்றுப் பேராசிரியர்களைப் பாடக்குழுவினர் அணுகிய போது அவர்கள் உதவ முன்வரவில்லை. ஆனால், இந்துக் கல்வி அறக்கட்டளை, வைதிக அறக்கட்டளை என்பவை அப்பொறுப்பை ஏற்றன. அதனால். அவ்வமைப்புகள் அளித்த 'புரட்டுகளின் திரட்டான பாடத்திட்டம்' கல்வித்துறைக்குச் சென்றது. பழங்கால இந்திய வரலாற்றைத் திரிக்கும் அந்த முயற்சியைக் கார்வர்டு பல்கலைக் கழக வடமொழிப் பேராசிரியர் மைக்கேல் விட்சல் அவர்களும், வேறு சில முற் போக்குச் சிந்தனையாளர்களும் முயன்று, பாடத் திட்டத்தின் உள்நோக்கை வெளிப்படுத்தி முறியடித்தனர். அதில் பங்கு கொண்டவர் பெட்னா அமைப்பின் தலைவர் தில்லை க. குமரனார்,

“இந்திய வரலாற்றைக் கூறும் இந்துத்துவ அமைப்புகள், தமிழர் பற்றியோ தமிழ்மொழி பற்றியோ ஒரு வார்த்தையும் பரிந்துரைக்கவில்லை” என்கிறார். மேலும், “அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை, இந்திய வரலாற்றில் தமிழ்மொழி தமிழர்களின் பங்களிப்பு பற்றிய செய்திகளைப் பாடப் புத்தகங்களில் சேர்க்கப் போராடி வருதலைச் சுட்டுகிறார்.

இப் போராட்டம் விழலுக்கு நீராகவில்லை. நெல்லுக்கு இறைத்த நீராயிற்று. எப்படி? அறிஞர்களின் பெரு முயற்சியால் முற்றிலும் திருத்தப்பட்டுப் பண்டை இந்தியாவின் சிறப்புகள் புதுப்பொலிவுடன் மிகுந்த பக்கங்களொடு வெளிவந்துள்ளது.

நல்லதைப் பாராட்ட நடுவுநிலை நன்னெஞ்சம் வேண்டுமே! நஞ்சையே நெஞ்சாகக் கொண்டவர் ஏற்பரா?

> “மதநல்லிணக்கம் மிகுந்த கலிபோர்னியா மாநிலக் கல்வித் துறை வேண்டுமென்றே இந்துமதத்தைக் கேலி செய்கிறது என்று தன் இயல்பான நஞ்சைக்கக்கியுள்ளது! இந்நூல் வெளிவராமல் தடுக்கவும் இந்து அமெரிக்க அறக்கட்டளை ஈடுபட்டுள்ளதாம்!”

அறிவியல் ஓங்கி-பகுத்தறிவு மிக்க இக்காலத்தும் ‘சாதிமையை அறம்’ என்னும் சண்டாளர் இங்கே மட்டுமா பேயாட்டம் போடுகின்றனர்! போன போன இடங்களில் எல்லாம் இப்பேயாட்டமே போடுகின்றனர்! ஆங்குள்ள தமிழர் போராடியே ஆக வேண்டிய இக்கட்டை ஏற்படுத்துகின்றனர்.

நமக்குக் கேடாய் வாய்த்த வைதிகர் மட்டும் நமக்குக் கேடு செய்வாரல்லர்! அவர்கள் கேட்டுக்குக் கைகட்டிக் கட்டியம் கூறுபவர்கள் வைதிக வாய்த் தமிழர்களாம்!

இதோ படியுங்கள் : அமெரிக்காவுக்குச் சென்று மீண்ட ஒரு தமிழர் கூற்று இது :

அலமோ என்பதொரு கற்கோட்டை. அதனை அடுத்து ஒரு குன்றின்மேல் சீனிவாசப் பெருமாள் கோயில்! ஆங்கே வழிபடச் செல்கிறார் தமிழர் தம்துணையுடன். ஆங்கிருந்த குருக்கள் கையில் ஆனந்தவிகடனும் கலைமகளும் இருக்கக் கண்ட அம்மையார் அவரை ஊர்கேட்கிறார். மதுரை என்கிறார். மேலே தமிழர் எழுதுகிறார்.

அர்ச்சனை செய்ய 10 டாலர்கள். கிரடிட் கார்டைப் பயன்படுத்தலாம். தட்சணை ஒரு டாலருக்குக் குறைவாக யாரும் போடவில்லை.

"இங்கே எப்படி உம்மால் வாழமுடிகின்றது" என்று குருக்களைக் கேட்டேன்.

"எனக்கு இருப்பிடம் கோயிலை ஒட்டினாற்போல் உள்ளது. நானும் என் துணைவியாரும் இங்கேயே வாழ்கின்றோம். மாதம் 800 டாலர்கள் நிர்வாகத்தினர் கொடுக்கின்றனர். தட்சணையில் 800 டாலர்கள் கிடைக்கும், எங்களுக்கு வெளியுலகமே தெரியாது. என்றும் கோயில் பணிதான்" என்றார்.

சிலர் ஐந்து டாலர் கொடுத்து தேங்காய் வாங்கி வந்திருந்தனர்.

"இங்கு சுப காரியங்கள் வேறு என்ன நடக்கின்றன" என்று கேட்டேன். சில திருமணங்கள், சிகைநீக்கி காதணி விழா இங்கே நடக்கின்றன. இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு சஷ்டியப்த பூர்த்தித் திருமணம் நடந்தது" என்று கூறினார்.

"இந்தியர்கள் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் நம் பண்பாட்டை மறப்பதில்லை என்று நினைத்து உள்ளம் பூரித்தேன்" என்கிறார்.

இப் பூரிப்பு தமிழர் பண்பாட்டைக் காவு வாங்கிவிட்ட பூரிப்பு அல்லவா!

"திருவாய்மொழி ஓதுவீரா? திவ்வியப்பிரபந்தம் சொல்வீரா? தமிழில் அர்ச்சனை செய்வீரா?" ஏதாவது கேட்டாரா? இந்தியர்கள் தம் பண்பாட்டை மறக்க வில்லைதான்! ஆனால் தமிழர் தம் பண்பாட்டை மறந்து விட்டாரே!" இப்படி மறக்க வேண்டும் மறந்தே ஆக வேண்டும்! அதற்கு எப்பாவம் எப்பழி எனினும் செய்வதே எம்பிறவிக் கடன் என்பதை 'நம் பண்பாடு' எனப் போற்றுவார் தாமே பெருங்கேடர்!"

பொருளடக்கம்

		பக்கம்
1.	தமிழால் இணைவோம்! தமிழராய் வெல்வோம்!	17
2.	குறிக்கோள் வாழ்வு	20
3.	மாட்சிமை விருது	24
4.	உரிய பொழுதின் உவகை	28
5.	போகலாம்! 'புகவு' வந்து சேரும்	33
6.	எடுத்தேன்! முடித்தேன்! நடுக்கம் ஒழிந்தது	37
7.	நீங்களா? நீங்களா?	43
8.	வாழ்ந்ததும் தமிழ்நாடு....	47
9.	நல்லாள் நகும்	50
10.	நல்லாள் இல்லாள்	56
11.	நம்மொழி செம்மொழி	61
12.	விருதுப்பேறு	68
13.	தொல்காப்பியத்தில் தமிழர் பண்பாடு	71
14.	விழாவின் விழுமிய நிலை	76
15.	விருந்தோம்பலும் விளங்கிய காட்சிகளும்	78
16.	விண்ணிற் பறந்தாரை எண்ணிய செலவு	83
17.	நூலகம், பாலகமா? மேலகமா?	87
18.	பல்பொருள் அங்காடி	90
19.	வீட்டுக்குள்ளேயே நயாகரா	93

20. வாசிங்டன் செலவு 96
21. வெள்ளை மாளிகை 100
22. காட்சிகளைக் கண்டுகளிக்க 103
23. ஆபிரகாம் லிங்கன் வளாகமும் ஆர்லிங்டனும் 107
24. ஐன்சுதீனோர் வளாகம் 110
25. வாசிங்டன் தமிழ்விழா 112
26. மேரிலாந்து 119
27. பதிவு-படம்-காட்சி 123
28. ஐந்தாம் தூண் 129
29. உலகச் சுற்றுலா மையம் 132
30. ஓய்வு 140
31. நயாகரா 144
32. மூன்றுவேளை மூன்று வேலை 153
33. அன்பின் நெறி 161
34. நியூயார்க்கு 168
35. மீட்சியின் மாட்சி 175
36. இணைப்பு 181
37. முன்னரே என் திரும்பினேன்? 196
38. விருந்தினர் கையேடு 201
39. தமிழ்மொழி வளர்ச்சிக்கான ஆக்கப் பணிகள் 203

1. தமிழால் இணைவோம்! தமிழராய் வெல்வோம்!

"தமிழால் இணைவோம்-தமிழராய் வெல்வோம்"

என்னும் குறிக்கோளில் கிளர்ந்த பேரமைப்பு, "வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை (Federation of Tamil Sangams of North America).

இப் பேரவையில் நாற்பத்து மூன்று தமிழ்ச் சங்கங்கள் இணைந்துள்ளன.

"இருபத்தைந்து முப்பது வருடங்களுக்குமுன் அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்கள், தாங்கள் வாழ்ந்த நகரங்களிலோ மாநிலங்களிலோ தமிழ்ச் சங்கங்களைத் தோற்றுவித்தனர். எடுத்துக்காட்டாக நியூயார்க்கு, வாசிங்டன், நியூசெர்சி, பிலடெல்பியா, சிகாகோ முதலிய நகரங்களில் தமிழ்ச் சங்கங்கள் இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக நடந்துவருகின்றன.

தொடக்கக் காலங்களில் தமிழ்ச்சங்கங்கள், தமிழர்கள் ஒன்றுகூடிக் களிக்கும் அமைப்புகளாக இருந்தாலும், காலப்போக்கில் கலைநிகழ்ச்சிகளையும், தமிழ்ப் பள்ளிகளையும், போட்டிகளையும், சிறப்புரைகளையும், அச்சிதழ்களையும் நடத்தத் தொடங்கின.

பின்னாளில், பெருநகரங்களில் இருந்த தமிழ்ச் சங்கங்கள் ஒன்றுகூடி வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை (FETNA) என்ற கூட்டமைப்பையும் ஏற்படுத்தி, ஆண்டுக்கு ஒருமுறை கோடை விடுமுறையில் தமிழர்

விழாக்களை ஒருங்கிணைத்தனர். முதலில், நானூறு அல்லது ஐநூறு பேர்கள் கலந்துகொண்ட இந்த மாநாட்டுக்குக் கடந்த சில ஆண்டுகளாக ஏறத்தாழ ஆயிரத்து ஐநூறு பேர்கள்வரை வருகின்றனர். அமெரிக்காவில் மிகுதியான தமிழர்கள் கூடும் ஒரே நிகழ்வு இந்தப் பேரவை அல்லது 'பெட்னா' மாநாடு"

-என்று இம்மாநாட்டு இருபதாம் ஆண்டுத் தமிழ் விழா மலர் (2007) கூறுகிறது. மாநாட்டு விழாவிற்குச் சூட்டப்பட்ட பெயர், "தமிழர் திருவிழா" என்பது.

கலைவளத்திலே காலூன்றிக் களிப்புற்ற பேரவை மாநாட்டின் பணி விரிவாக்கமாக,

"நல்ல இலக்கிய வாணர்களையும், எழுத்தாளர் களையும், கவிஞர்களையும், தமிழ் ஆராய்ச்சியாளர்களையும் அழைத்துப் பெருமைப்படுத்துவதாயிற்று"

மேலும்,

மாட்சிமை விருது என்னும் பெயரில் ஆண்டுதோறும் தமிழுக்கும் தமிழ்க் குமுகாயத்திற்கும் பெரிதளவில் தொண்டாற்றியவர்களுக்கு விருது வழங்கிப் பெருமைப் படுத்தி வருகிறது"

-இவற்றொடு தாம் வாழும் மண்ணிலே தாய்த்தமிழும் வாழ்வதற்கு-நிலைபெற வாழ்வதற்கு-,

"அமெரிக்க மண்ணில் நிரந்தரமாகத் தமிழா ராய்ச்சியில் ஈடுபடுவதற்காகப் 'பெர்க்லி'யில் உள்ள கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பீடம் ஏற்படுத்தப் பணம் திரட்டி உதவியது".

-இன்னொரு தொலைநோக்குத் தமிழர் நலத்திட்டம் ஒன்றனையும் மேற்கொண்டுள்ளது. அது,

"திருமணத்திற்கான இளைமையர் சந்திப்பை ஏற்படுத்திச் சாதிமறுப்புத் திருமணங்களை ஊக்கிவருதல்" என்பது.

இப் பேரவை வழங்கும் 'மாட்சிமை விருது'க்கு என்னைத் தேர்ந்தெடுத்து அழைத்தது வியப்பாக மட்டுமில்லை; நம்ப முடியாததாகவும் உள்ளது!

ஆனால் அழைக்கப் பெற்றேன்; விருதும் பெற்றேன்; தாய்மண்ணுக்கும் எய்தினேன்! இவற்றின் விரிவாக்கம் இச்சுவடி! வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்த வெளிப்பாடாக வெளிப்படும் இது, "சுற்றுலாச் சுவடி" அன்று! வருங்காலத் தமிழர் "பண்பாட்டுக் கையேட்டுச் சுவடி"யாக விளங்கத் தக்கதாம்!

2. குறிக்கோள் வாழ்வு

என் இளந்தைப் பருவத்தில், விருதுநகரில் இருந்து திருவில்லிபுத்தூர்க்கு வருகின்றேன். பேருந்து மல்லி என்னும் ஊரை நெருங்கும் நிலையில், வண்டி ஓட்டுநரிடம் "நான் 'மானகசேரி'க்குப் போகவேண்டும். இதற்குமுன் போனதில்லை. அந்த ஊர்க்கு இறங்கும் இடம் தெரியாது. அருள் கூர்ந்து அவ்விடத்தில் என்னை இறக்கி விடுங்கள்; போகும் வழியைக் காட்டுங்கள்" என்றேன்.

என் உருவத்தைப் பார்த்தார்; இளமையையும் எண்ணினார் போலும். "இந்த இரவில் தனியாகவா போகிறாய்" என்றார். தலையசைத்தேன். சாலைக்கு வடக்குப் புறத்தில் ஒரு கல். ஒன்றரைக் கல் தொலைவுக்கு அப்பால், ஒரு பெரிய ஆலமரமும், அதனை ஒட்டி ஓரிரு வெளிச்சமும் தெரிந்தன. அவற்றைச் சுட்டிக்காட்டி, "அதுதான் மானகசேரி" என்றார்.

இனி என்ன? நடக்கலானேன்! வண்டித்தடம் சென்றது. பின்னர் வயல்வரப்பு என வந்தன. மேடு பள்ளம் சுற்று வளைவு இருந்தன. சுடுகாடு கரும்புத்தோட்டம் நெல்வயல் என்பவை எய்தின. எனக்கு எவை வந்தால் என்ன? சிறிதே வெளிச்சம் காட்டிய நிலவொளியில் நடந்தேன்! சுற்றினாலும் வளைந்தாலும் மேடேறினாலும் பள்ளம் இறங்கினாலும் 'அதோ! ஆலமரம்!' அருமையாக அழைத்து நிற்கிறது! போய்ச் சேர்ந்தேன்! இப்பதிவு ஒரு

குறிக்கோள் வாழ்வுக்கு இன்றுவரை நின்று சிறக்கும் எடுத்துக் காட்டு ஆயிற்று!

எங்கள் குடும்பச் சொத்து என்று சொல்லுமாறு கம்பராமாயணம் இருந்தது. என் தந்தையார் சில ஆயிரம் பாடல்களை ஒப்பிப்பார். கதைத் தொடர்ச்சிக்குத் தக அமைத்தும் கூறுவார்; கூட்டத்தில் அவர் பேசியது இல்லை. சில பெரியவர்கள் சேர்ந்து உரையாடும்போது தக்க பாடல்களைச் சொல்லிப் பொருளும் கூறுவார். என் தமையன்மார்க்கும் அந்நூலில் கருத்து உண்டு. மனனமும் உண்டு.

கூற்றையும் வெல்லல் :

என் இளந்தைப் பருவத்தில் என் தந்தையார், கும்பகருணனைப் பற்றிக் கூறி, "அவன் வீறு மிக்கவன்; 'கூற்றையும் ஆடல்கொண்டேன்' என்ற பேராண்மையன்" என்றார். அச் செய்தி என்னுள் ஆழமாகப் பதிந்தது.

நானும் கூற்றை ஆடல் கொள்ளலாம்! அது, கும்பகன்னன் வழியில் அன்று. யான் கற்பனவற்றை-கேட்பனவற்றை-சொற்பொழிவு செய்வனவற்றைக் காற்றொடு காற்றாகக் கலந்து போக விடாமல், எழுத்தாக்கி விடுதல் வேண்டும்; அவ்வெழுத்து காலத்தை வெல்லும்! காலத்தை-கூற்றை-வெல்லும் வழி அதுவே என முடிவு கொண்டேன்.

என்பொழிவு, நான்கு ஐந்தாம் வகுப்புக் கற்கும் காலத்தே எங்கள் ஊரில் இருந்த 'வாலிபர் சங்க' வாரக் கூட்டம்தோறும், கல்வி, செல்வம், ஒழுக்கம் எனத் தொடங்கி விட்டது. பன்னிரண்டாம் வயதுப் பருவத்திலேயே திருக் குறளைக் கற்கும் நற்பேறு வாய்த்தமையால், குறள்வடிவில் பாடல் எழுதுதல் கிளர்ந்தது.

பாட்டு

யாப்பு அறியேன்; மேலே நான்கு சொற்கள்; கீழே மூன்று சொற்கள் என்றால் அது திருக்குறள்! அவ் வகையால் எழுதி, "தளை தட்டுப்பட்டுப் பிழைபட்டுப் போய்விட்டது" என்பதைக் கவிராச பண்டிதர் செகவீர பாண்டியனார் சுட்டிக் காட்டியபின், யாப்பினைக் கற்றுப் பாடலானேன்!

குறிக்கோளொடு கூடிய கல்வி, பொழிவு, எழுத்து என்பவை பதிவு ஆவணமாக என்னுள் ஆகிவிட்டமையால், கற்றலும் பொழிதலும் நூல்யாத்தலும் மிக எளிமையும் இயல்பும் ஆகிவிட்டன!

இவற்றின்மேலே என்ன வேண்டும்? ஒன்றே ஒன்று வேண்டும்! அரைகுறை என்பது இல்லாமல், இவற்றில் என்னை முழுதுற ஒப்படைக்க வேண்டும்! அதற்கு என் இயல்பு, என் பெற்றோர் இயல்பு, என் துணைநல இயல்பு, என் மக்கள் இயல்பு என்பவை முழுதுற ஒன்றி நின்றன; நின்றும் வருகின்றன.

விருது :

வாழ்நாளெல்லாம் எவ்வொரு விண்ணப்பமும் செய்து வேலையில் அமராமல், வேலையில் அமர்ந்தபின், 'அமர்வு அறிக்கை'யே செய்யும் பேறு, என் ஐம்பத்தெட்டு அகவை வரை ஆயிற்று என்பது இந்நாளில் நம்பும் செய்தியா? யான் எப்படி ஒரு விருதுக்கு விண்ணப்பம் விடுப்பேன்?

நல்லாசிரியர் விருதும், திரு.வி.க. விருதும் என்னைத் தேடிவந்து நின்றவையே யன்றி, யான் தேடியவை இல்லை! அவ்வாறே பிற பிறவும்!

இவை எப்படி எய்தின?

வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் பேரவை வழங்கும் 'மாட்சிமை விருது' எப்படி எய்தியது? எவர் வேண்டினார்? எவர் தூண்டினார்?

"எடுத்த செயலில் ஈடுபடு! முழுதுற ஈடுபடு! தொடர்ந்து தொய்வு சிறிதும் இல்லாமல் கடனாற்று! அச் செயல் வீறு செல்லுதற்கு அரிய இடங்களுக்கும் செல்லும்! எவரறிவார் என எண்ணாதே! எவரோ அறிவார்! எப்படியோ அறிவார்!

அதனைப் பற்றிய அக்கறை உனக்கு வேண்டுவது இல்லை! உன் வினையின் வீறு (செயல்வீறு) எங்கேயோ எவரையோ தட்டி எழுப்பி விடத் தவறாது! அதன் பயனை வழங்கவும் தவறாது!" என்று வள்ளுவம் கூறும் வாய்மொழி, வாய்மொழியாகியே தீரும்!

"வீறெய்தி மாண்டார் வினைத்திறம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்"

என்பது அது.

வினைத்திறம், எப்படி வீறு எய்தியது? எப்படி உள்ளப் பட்டது?

3. மாட்சிமை விருது

வீறு எய்துதலையும் வினைத்திறம் சிறத்தலையும், வெளிப்படுத்தினால் அன்றிப் பயனில்லையே! என்னைப் பொறுத்த அளவில், எளிமை இயற்கையன்! வெளிப்படுத்தக் கூசுபவன்! தேவையின் கட்டாயம் ஏற்பட்டால் அன்றித் தலையிடாதவன்!

என் வரலாற்றை எழுதி முடித்தபின் என்ன பெயரிட்டேன்? 'ஒருபுல்' எனப் பெயரிட்டேன்! அதற்காம் உள்ளீடுகள் பல. முதல் காரணம், உயிரிகளில் முற்பட்டது புல். "புல்லாகிப் பூடாகி" என்பது மணிவாசகம். 'புல்லும் மரனும் ஓரறிவுயிரே' என்பது தொல்காப்பியம்.

புல் நிலத்தொடு பொருந்திக் கிடப்பது, "புல்லிக் கிடந்தேன்" என்னும் வள்ளுவம் பொருந்துதல், தழுவுதல் பொருளது. புல், தன் இனம் பெருக்குவதில் தலைப்பட்டு நிற்பது. ஆடுமாடு முதலிய உயிரிகளைப் பற்றியும், உடையைப் பற்றியும், காற்றில் பறந்தும் நீரில் சென்றும் பரவுவது. இது மனோன்மணியப் பேராசிரியர் சுந்தரனார், நடவரசன் வழியாகக் கூறுவது! இப் பெயரீடு (ஒருபுல்) என் ஒடுக்கக் குறி அல்லவோ !

யான் 1954 இல் இயற்றிப் பின்னே, மதுரை ஆயிரக்கால் மண்டபத்தில் அரங்கேற்றியதொரு காவியம். அது குண்டலகேசி என்பது. அதன் அவையடக்கச் செய்தி ஒன்று மேலே சுட்டிய நடவரசன் கூற்றாக வருவதே!

மண்புழு நாவால் மண்ணைக் கூழ்செய்து உரமிக்க நன்மண் ஆக்கும். அதனால் நாங்கூழ் எனவும் பெயர்பெறும். மேலும், உழவன் தோழன் என்னும் பெயரியதுமாம். புகழ் வேண்டார் போலத் தன் ஆக்கச் செயலைப் பிறர் அறியாவகையில், தன்னை வெளிப்படுத்தாமல், மண்ணால் மறைத்துக் கொண்டே போவது. இதனை,

"ஓஓ! நாங்கூழ்ப்புழுவே, உன்பாடு ஓவாப்பாடே!
எம்மண் ஆயினும் நன்மண் ஆக்குவை
விடுத்தனை இதற்கா எடுத்தவுன் யாக்கை"

என்பார். இச் செய்தியை யான் குண்டலகேசிக் காவிய அவையடக்கமாகக் கொண்டேன். அது,

"மண்பக உழுது போழ்ந்து
மறிகளை அகலச் செய்யும்
திண்படை இருந்தும் நாங்கூழ்
திடமுறக் கிளறல் போலாம்;
எண்பெருங் கவியின் வல்லோர்
ஏண்திறம் அறிந்தும் யானோர்
வண்குழல் கேசி காதை
வகுப்பது குறித்த வாறே"

என்பது. திண்படை, கலப்பை, உழுபொறி.

இவற்றால் என்னை வெளிப்படுத்தத் தக்க சூழல் கட்டாயம் வேண்டும்! யானாக என்னைப் பரப்பேன்! அச்சூழல்,

எப்படி ஏற்பட்டது?

குண்டலகேசி அரங்கேற்றத்தில் கலந்து கொண்ட பெருமக்களுள் ஒருவர், பாரதி சாமிநாதன் என்பார். அவர், மதுரை நகர்மன்றச் சாலையில் 'பாரதி புத்தக நிலையம்' என ஒரு நிலையம் வைத்திருந்தார். பாவேந்தர் தலைமையில் தம்

திருமணம் நடத்தியவர்; தம் புத்தக நிலையத்தையும் பாவேந்தரைக் கொண்டே திறந்தவர். அவர் என்னை அணுகிக் குழந்தைகள் கற்கத் தக்க வகையில் நம் இலக்கியம் பண்பாடு வரலாறு வாழ்வியல் ஆகியவற்றைக் கதை கட்டுரை வடிவில் சிறுசிறு சுவடிகளாக எழுதித்தந்தால் உயர்பள்ளி, தொடக்க உயர்பள்ளிகள் ஆயவற்றின் நூலகங்களுக்குப் பயன்படும் என்றார். அவ்வகையில் 1962 முதல் 1964ஆம் ஆண்டுகளுள் திருக்குறள் கட்டுரைகள், திருக்குறள் கதைகள், புறநானூற்றுக் கதைகள், காப்பியக் கதைகள், பொதுக்கதைகள், பொதுக் கட்டுரைகள், நாடகங்கள் என அறுபதுக்கு மேற்பட்ட சுவடிகள் தொடர்ந்து வெளிப்பட்டன.

நாவலர் பாரதியார் வரலாற்றில் தொடங்கிய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தொடர்பால் (1960) அறுபதுக்கு மேற்பட்ட நூல்கள் வெளிவந்தன. அவற்றின் மூலவர் தாமரைச்செல்வர் வ. சுப்பையனார்.

ஈரோடு வேலாவின் குறளியம் குறளாயத் தொடர்பால் திருக்குறள் வாழ்வியல் உரை முதலாகத் திருக்குறள் ஆய்வுச் சுவடிகள் இருபதும், கட்டுரைகள் ஒரு நூற்றுக்கு மேலும் வெளிவந்தன.

சிதம்பரம், பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பனாரின் மணிவாசகர் பதிப்பக வழியாகப் பல நூல்கள் வெளிவந்தன. மூன்று நூல்கள் தமிழ்நாட்டுத் தமிழ்வளர்ச்சித் துறைப் பரிசு, தமிழ்ப் பல்கலைக் கழகத் தமிழன்னை பரிசு என்பவற்றைப் பெற்றன.

வாராது வந்த மாமணிபோல் வாய்த்த தமிழ்மண் பதிப்பகம் தமிழ்த்திரு கோ. இளவழகனார் வழியாகப் பாவாணர் நூல்கள், திரு.வி.க. நூல்கள், தொல்காப்பிய உரைத் தொகுதிகள் என்பவை தொடர்ந்து வெளிவந்து என் பங்களிப்பைத் தமிழுலகம் உணரச் செய்தது. மேலும் என்

75ஆம் அகவை விழாவில் ஒரு மொத்தமாக 65 நூல்களை வெளியிட்டுப் பரப்பியது தமிழ்மண் பதிப்பகம்.

சிங்கபுரி வாழ் செந்தமிழ் அன்பர் பாவாணர் அணுக்கர் தமிழ்த்திரு. கோவலங்கண்ணனார், என் தொகுப்பால் வெளிவந்த தேவநேயத் தொகுதிகளையும் (14), 'ஒருபுல்' என்னும் தன் வரலாற்று நூலையும் வெளியிட்டுப் பெரும் பரப்பாளர் ஆனார்.

இவ்வனைத்தின் விளைவாகவும் ஒரு புல்லின் விளக்கமாகவும் நெய்வேலி மருத்துவத் தோன்றல் தமிழ்த்திரு அ. செந்தில், நெய்வேலி ஓவியக் கலைச்செல்வர் தமிழ்த்திரு செல்வம் ஆயோர் திட்டமிட்டு என் ஆவணப்படம் உருவாக்கிச் சீரிய நிலையில் வெளியிட்டுப் பரப்பிய சீர்மை பெரும் பரப்பாயிற்று!

அப்படப் பதிவும் ஆழமான பல கருத்துகளும் தமிழுள் ளங்களுக்கு விருந்தாகி நின்றதுடன், வெளிநாட்டுக்கும் புகலாயிற்று!

அமைப்பு வகையால், தனித்தமிழியக்கமாம் உலகத் தமிழ்க் கழக அமைப்பினர், பாவாணர் பற்றுமையர் அனைவர் தொடர்பும் என்றும் பசுமையாய்ப் பாராட்டும் தகைமையவாய் அமைந்து கிடக்கின்றன!

இவையெல்லாம் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 'மாட்சிமை விருது'க்கு அடித்தளங்களாக இருந்தவை. இவ்வடித்தளங்களின் மேலே எழுப்பப்பட்ட திருவள்ளுவர் தவச்சாலையே நேரிடைத் தூண்டலாய் நின்றதை என்பட்டறிவாலும் தெளிவாலும் உணர்ந்து மகிழ்கிறேன். அது, "ஒருவன் செய்யும் குமுகாயப் பணியே உலகவர் மதிக்கும் பணியாகச் சிறந்து, எய்துதற்கு அரியன எல்லாம் எய்தச் செய்கின்றது" என்பதேயாம்!

தவச்சாலை தூண்டிய தூண்டல் என்ன?

✵

4. உரிய பொழுதின் உவகை

1994இல், காவிரித் தென்கரையில், திருவளர்குடி என்னும் அல்லூரில், திருவள்ளுவர் தவச்சாலை நிறுவப்பட்டது. திருச்சிராப்பள்ளிச் சத்திரம் பேருந்து நிலையத்தில் இருந்து ஒன்பதுகல் தொலைவில் இயற்கைச் சூழலில் அமைந்தது அது.

இயற்கை நல நிலையம், மனவள நிலையம், காட்சியகம், ஊணகம், ஆராய்ச்சி நூலகம். அறிவர் இல்லம் என்பவற்றைத் தன் கண் கொண்டது திருவள்ளுவர் தவச்சாலை.

காவிரியாறு-கருவூர்ச்சாலை-தவச்சாலை என்பவை போக்குவரவினர் எவர்கண்ணிலும் படும் வாய்ப்புடையன. அதனால் விரும்பி வருவாரை யன்றி, வழியே போவாரையும் வந்து செல்லத் தூண்டவல்லது தவச்சாலை. அவ்வகையில் எதிர்பாரா நிலையில் பலப்பல பெருமக்கள் வந்து செல்லும் பேறமைந்ததாயிற்று. அந்நிலையில் அமெரிக்காவில் வாழும் பெருமகனார், கணினிக் கலையில் மேதக்கார் 'பிரபாகரனார்' என்பார் ஒருநாள் தவச்சாலை நண்ணினார். அவர்தம் தந்தையார் சிவப்பெருஞ்செம்மல் இரத்தினசபாபதியார். ஆர்வத்தாலும் கேள்வியாலும் வந்த பிரபாகரர், தவச் சாலையை முழுதுறக் கண்டு உளம் தோய்ந்தார். தாமே படமும் எடுத்தார். அப்படத்தை மறவாமல் தவச்சாலைக்கு விடுக்கவும் செய்தார். தவச்சாலையைக் கண்டும், என்னொடும் உரையாடியும், கொண்டு சென்ற நூல்களைக் கற்றும் அவருள்ளத்தில் ஆழிய பதிவொன்று ஏற்பட்டுள்ளது.

அதனால், எதிர்பாரா வகையில் ஈராண்டுகளின்பின் அமெரிக்காவில் இருந்து பேசினார். "வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும். அதன் தலைவர் தமிழ்த்திரு. தில்லை. குமரனார் உங்களொடு தொடர்பு கொள்வார். தாங்கள் இங்கு வந்து செல்லுதலைப் பெரிதும் விரும்புகிறேன்" என்றார்!

"என்றோ அவர் நெஞ்சில் ஊன்றியிருந்த வித்து, உரியபோதில் முளைவிடத் தொடங்கியுள்ளது" என எண்ணினேன்.

பிரபாகரர் கூறிய வாறே, தில்லை. குமரனார் தொடர்பு கொண்டார். செல்பேசி, மின்னஞ்சல் என்பவை என்னிடம் இல்லாமையால், அஞ்சல் வழியாகச் செய்தியை விடுக்கு மாறும், தேவைப்படும் செய்திகளுக்கு எழுபதின் கவனகர் செல்வர் கலை. செழியனார்க்குத் தொடர்பு கொண்டால் அவரே எல்லா விளக்கங்களும் தருவார் என்றும் கூறினேன்.

தில்லை. குமரர், திட்டமிட்ட செயல் வீறும் செய்நேர்த்தியும் மிக்கார்! எனக்கு அஞ்சல் வழியே செய்தி விடுத்தார்.

எனக்கு ஓர் அஞ்சலும், அமெரிக்கத் தூதரகத்திற்கு ஓர் அஞ்சலுமாக ஈரஞ்சல்கள் ஓரஞ்சலில் எய்தின. புகவுச் சீட்டுப் பெறுதற்கு முகவகம் ஒன்றையும் திட்டப்படுத்தி வைத்தனர்.

22.5.2007இல் சேற்றுப்பட்டில் இருந்த முகவகம் சென்றேன். அவர்கள் வேண்டும் கணக்குத் தணிக்கையர் குறிப்பு, கடவுச் சீட்டுப்படி, சொத்து விளக்கம், பெட்னா அழைப்பு முதலியவற்றை வழங்கிப் படிவம் நிரப்பித் தந்தேன்.

நிகழ்ச்சி 7.7.2007இல் இருப்பதால் அதற்கு ஏந்தாக 3 அல்லது 4.7.2007இல் செலவு இருக்குமாறும், 'மரக்கறி

உணவே உணவு' என்றும், 'நேர்காணலில் தமிழே வேண்டும்' என்றும் குறிப்பிட்டேன். 'பெட்னா'வே என் ஏற்பாடுகளையும், போக்குவரவு ஊண் தங்கல் மருத்துவம் என்பவற்றையும் ஏற்றுக் கொண்டமையால், தொகைக்கு அவர்களே பொறுப்பு என்றும் கூறிவந்தேன். பின்னே கலை. செழியனார் தொடர்பு கொண்டு, நேர்காணலுக்கு 25.6.2007 பகல் 12 மணிக்குள் அமெரிக்கத் தூதரகத்தில் இருக்க வேண்டும் என்றும், வேண்டும் தகவல்களின் மூலப்படிவங்கள் இருத்தல் வேண்டும் என்றும் கூறினர்.

22.6.2007இல் நெய்வேலி சென்றேன். பேரன்பர் மருத்துவர் மேனாள் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழ்த்திரு வெ. குழந்தைவேலரின் கங்கை மருத்துவ மனைக்குச் சென்றேன். குருதி, நீர், மூச்சு, நரம்பு எனச் செய்ய வேண்டும் ஆய்வுகள் அனைத்தும் நடத்தி, எக் குறையும் இல்லாமையை அறிந்து, சான்றுகள் எல்லாமும் பெற்றுக்கொண்டு, என் ஆவணப்படம் எடுத்த இனிய பேரர் மருத்துவர் தமிழ்த்திரு அ. செந்தில் அவர்களை அவர்தம் உலகமதி மருத்துவமனையில் கண்டேன்.

திரு. செந்தில் அவர்கள், ஆவணக் குறுந்தட்டுகள் சிலவும், அதுகால் வந்திருந்த 'கிழக்குவாசல்' முத்திங்கள் இதழ்கள் இரண்டும் வழங்கினார். என்னைப் பற்றிய ஆவணப் படச் செய்திகளையும், அதன் ஆசிரியர் திரு. உத்தம சோழன் அவர்கள் தவச்சாலைக்கு வந்து என்னை நேர்காணலால் பெற்ற செய்திகளையும் கொண்டு, ஓர் எட்டுப்பக்க அளவில் கட்டுரை வரைந்திருந்தார். ஆதலால், கிழக்குவாசல் இதழ் என் பணிவிளக்கச் சான்றாக இருந்து பல பயன்களைச் செய்வதாயிற்று.

23.6.2007இல் கடலூரில் பாவலர் பொறிஞர் செந்தமிழ்ச் சேய், முருகவேலனார் ஆயோர் எடுத்த தமிழ் விழாவில் பங்கு கொண்டு, 24.6.2007இல் சென்னைக்குச் சென்றேன்.

கோயம்பேட்டுக்கு அருகில் உள்ள வெற்றி (விசய்) வளாக அரங்கத்தில் 25.6.2007 காலையில் பேரன்புச் செல்வர் கட்டடப் பொறிஞர் திரு. நடராசனார் குடும்பத் திருமணம் நிகழ்த்தி வைக்க முன்னரே இசைந்திருந்தமையால், அவ் விடுதியிலேயே கலை. செழியருடன் தங்கினேன். காலை 9.00 - 10.30 திருமணப் பொழுது. அதனை முடித்துச், சேற்றுப்பட்டு முகவகம் சென்று, வேண்டும் குறிப்புகளைப் பெற்று, பகல் 12 மணிக்குள் அமெரிக்கத் தூதரகத்தில் யான் இருத்தல் வேண்டும்.

நடவரசர் அருமையாக உதவினார். உரிய பொழுதில் மணமக்களை மேடையில் இருக்கச் செய்து மணத்தை யான் நிகழ்த்த உதவினார்.

மேடையில் மங்கல விழா நிகழ்ந்து கொண்டிருக்கும் போது நான்கு ஐந்து பேர்கள், மாலை பட்டு தட்டு என ஏந்தித் "திருக்கோயில் சிறப்பு வழங்க வேண்டும்" என்றனர். ஒருவர் மேடைக்கு வந்து தம் எண்ணத்தைக் கூறினார்.

"நன்றாக நீங்கள் சிறப்புகளை வழங்கலாம். யான் மங்கல விழாவை நிகழ்த்திக் குடும்ப விளக்கு ஏற்றி மணமக்களை வழிபடச் செய்தபின், மேடைக்கு வாருங்கள்; அதுவரை காத்திருங்கள்" எனச் சொல்லிவிட்டுச் சொல்லி யவாறே நிகழ்த்தினேன். அவர்கள் மேடையருகே நிகழ்வுவரை நின்றிருந்தனர்.

எண்ணினேன்! தில்லைச் சிற்றம்பலத்தில் மணிவாசகம் புக முட்டுக் கட்டையாவார்-முரடராய் முனைவார்-நிலையை எண்ணினேன்! சொல்லியது கேட்டு அமைந்து நின்று, நிகழ்வின் நிறைவில் மேடையேறி திருக் கோயில் சிறப்புகள் செய்த, திருமால் அடியார்களையும் எண்ணினேன்!

"பழமறைகள் ஒலிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங்கொண்டலே"

என்று கணிகண்ணனுக்குப் பின்னே சென்ற மணிவண்ணன் பற்றித், தென்தமிழ்க் குமரகுருபரர் பாடியதை நினைந்து பூரிப்படைந்தேன்.

10.15க்குள் விழாவை முடித்து மேடையில் இருந்து இறங்கிய அளவில், திரு. நடராசர் வண்டி வாய்ப்புச் செய்தார்! சாலையின் போக்குவரவு நெருக்கடி-சிவப்பு விளக்கு நெருக்கடி-உள்ளம் நொடி நொடியும் தவித்தது! உரிய பொழுதில் இருந்தாக வேண்டுமே! வண்டி ஓட்டுநர், ஒரு மாற்றுவழி கண்டார் போலும்! அவ்வழியில் சேற்றுப்பட்டு சென்று முகவகத்தில் உரிய படிவங்களைப் பெற உதவி, 11.45இல் அமெரிக்கத் தூதரக நுழைவாயில் செல்லச் செய்து விட்டார்! உள்ளே உரிய பொழுதில் புகுந்துவிட்ட உவகை, கவலையை நொடியில் களிப்பாக்கிற்று.

✵

5. போகலாம்! புகவு வந்து சேரும்

உள்ளே போனால் ஒரு பெரு மாநாட்டுக் கூட்டம்! பத்துமணி முதல் ஒவ்வொரு கால்மணிக்கும் ஒரு திரள் எனப் பெருகியபின், எட்டாம் பெருக்கில் புகுந்தவன்யான்! என் பின்னேயும் இன்னும் மணி ஒன்றுக்குள் நான்கு பெருக்குகள் உண்டே! திகைத்து நின்ற என்னை ஒருவர் 'இவ்வரிசையில் நிற்க' எனக் காட்டினார். யான் ஆங்கிருந்து வெளிவர மூன்று மணிநேரம் ஆயது.

பகல்பன் னிரண்டெனப் பகர்ந்த பொழுதில்
மிகச்சரி யாகப் புகுந்தேன்; வரிசை
ஒன்றில் நின்றேன்; ஒருமணிப் பொழுதில்
ஒன்பதாம் ஆளாய் அமைந்தேன்; ஒருவர்
ஆய்ந்து செலவே கால்மணி ஆயது;
ஓய்ந்து செய்தவர் போனார்; ஒருவர்
வந்தார்; அமர்ந்தார்; வரிசையில் நின்றவர்
எண்மரும் கால்மணிப் போதில் கடந்தனர்;
நண்ணிய தென்முறை; நயனுறப் பார்த்தார்:
"மகிழ்வாய்ச் சென்றுவரு"கென மலர்வாய்
மொழிந்தார்; உரிய படிவங் களையோர்
புதிய கோப்பில் போட்டு வழங்கினார்;
பின்னர்க் கைவிரல் பதிவுக் கொருமணி
நேரிடைக் காணற் கொருமணி என்றாய்,
ஓரிடர் இன்றி உசாவல் முடிந்தது;
"செல்க ; 'புகவு' வந்துறும்' என்றனர்
'நல்ல' தென்ன நவின்றனென் இனிதே.

தூதரக வளாகக் கூட்டத்தை நோக்க'அமெரிக்கத் தேடல்' ஆர்வம் நன்கு வெளிப்பட்டது.

மாநாட்டுக் கூட்டம் உள்ளே இருந்தாலும் ஆள் அசைவு அன்றி, நா அசைவு இல்லை! அவ்வளவு அமைதி! அமர்தற்கு வரிசை; நிற்றற்கு வரிசை; நல்ல வழிகாட்டுதல்; இவ்வெல்லாம் சரிதான்! விடிகாலை முதலே கோட்டைக்கு வெளியே சாலையில் வெயிலில் மழையில் மணிக்கணக்கில் நிற்பாரை உள்ளே உள்ள ஒரு வளாகத்தில் வரிசைப்பட அமரவைக்க இயலாதா? உள்ளிருக்கும் பரப்பை நோக்க, ஒன்றும் இல்லை, ''உள்ளத்தில் அது இல்லை'' என்பது புலப்பட்டு வருத்தியது! நிலைமை மாறலாம்! மாற வேண்டும்! என்பது வேட்கை! நல்ல கட்டொழுங்குகளின் இடையே நலிவூட்டும் குறிப்பு இஃது!

நேர்காணலில் தமிழே வேண்டும் என்று யான் வேண்டியிருந்த குறிப்பால், மொழிபெயர்ப்பாளி ஒருவர் அமர்த்தப்பட்டார். கன்னடம், தெலுங்கு மொழியென நேர்காணலுக்கு வந்தவர் ஐவர் இருந்தனர். அவர்களுக்கு வேறுநாள் தந்து போய்வர விடுத்தனர்.

என் படிவங்கள் பார்வை இடப்பட்டன. 'பெட்னா' வேண்டுகை, எனக்கு எழுதிய அஞ்சல் ஆயவை, தணிக்கையர் தரவு, அதற்கு ஆகிய மூலச்சான்று எல்லாம் வழங்கினேன். 'கிழக்கு வாசல்' இதழில் வந்த கட்டுரையும் தந்தேன். அவற்றை ஒரு கண்ணோட்டம் விட்டுப் பார்த்தபின் வினாவினர்.

"உங்கள் போக்குவரவு, தங்குதல், உணவு, மருத்துவம் ஆகியவெல்லாம் தம் பொறுப்பாகக் கொண்டு அழைக்கத் தேவை என்ன?" என்றனர்.

''அங்கே நிகழும் மாநாட்டில் பங்கு கொள்ள அழைக்கின்றனர். அதனால் அவர்கள் என் செலவைத் தங்கள்

பொறுப்பாக ஏற்றுளர்" என்றேன்.

"எவ்வளவோ பேர்கள் இருக்க உங்களை அழைப்பானேன்?"

"எவ்வளவோ பேர்களை முன்னரும் அழைத்திருப்பர்; பின்னரும் அழைப்பர்; இப்பொழுது என்னை அழைத்துளர்.'

"வேறு யாரும் இப்பொழுது அழைக்கப்பட்டுளரா?"

"மதுரையில் ஒரு பேராசிரியரும் திண்டுக்கல்லில் ஒரு பேராசிரியரும் அழைக்கப்பட்டதை அறிகிறேன்."

"உங்களை அழைக்கச் சிறப்பான காரணம் எதுவும் உண்டா?"

"எனக்கு ஏதோ சிறிது அறிவு உண்டு என்றும், அது பயன்படும் என்றும் கருதியே அழைத்ததாகும் இது. வேறு காரணம் தோன்றவில்லை."

"உங்களுக்கு என்ன வருவாய் கிடைக்கும் என்று நினைக்கிறீர்கள்?"

"வருவாய் என்பது, என் கருத்துகளை அவர்கள் கேட்கிறார்கள்; நான் என் கருத்துகளை அவர்கள் முன் வைக்கிறேன். அவற்றில் அவர்கள் விரும்பி ஏற்றுக் கொள்வன எல்லாம் எனக்குக் கிடைக்கும் வருவாயே! எனக்கு எச் செலவும் இல்லாமல் பொறுப்பேற்று அழைக்கும் வருவாய்க்குமேல், வேறும் வருவாய் வேண்டுவதில்லையே!"

"நீங்கள் நிரம்ப நூல்கள் எழுதியுள்ளீர்கள். அவற்றில் ஏதாவது கொண்டு வந்துள்ளீர்களா?"

"இல்லை! கொண்டுவரும் அளவு, பெரியது. அதனால், அதனைப் பற்றிய குறிப்புகளை யுடைய 'கிழக்கு வாசல்' இதழைத் தங்களிடம் தந்துள்ளேன்."

"தங்களுக்கு மனைவி, மக்கள் உள்ளார்களா? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்?"

என் மனைவியார் இயற்கை எய்தி முப்பது ஆண்டுகள் ஆய்விட்டன. மக்கள் நால்வர்; ஆண்கள் இருவர்; பெண்கள் இருவர். மதுரை, சேலம், பவானி ஆகிய இடங்களில் தங்கள் துணையொடும் மக்களொடும் நல்ல நிலையில் உள்ளனர்."

"திருவள்ளுவர் தவச்சாலையில் என்ன பணி நடைபெறுகிறது?"

"தவச்சாலையில் மனவள நிலையம், காட்சியகம், ஆராய்ச்சி நூலகம் முதலியவை உள. நூலகத்தில் மேலாய்வாளர்க்குப் பயன்படும் வகையில் 17 ஆயிரம் நூல்கள் உள்ளன."

"எவ்வளவு நாள் அமெரிக்காவில் தங்கப் போகிறீர்கள்?"

"மாநாட்டுக்குச் சென்றாலும் மேலும் சில இடங்களில் கூட்டம் இருக்கும். அதனால், ஒரு மாத அளவு தங்க நேரலாம்."

"சரி! நீங்கள் போகலாம். 'விசா' வீட்டுக்கு வந்து சேரும்" என்றார்.

நன்றி கூறி விடைபெற்றேன்.

அவர் கூறிய வாறே 'புகவு' எய்தியது. பத்தாண்டுகளுக்கு இனிப் புகவு பெறாமலே ஆறு, ஆறு மாதங்கள் அமெரிக்காவில் தங்கலாம் என்பது அது, அதுவும் வியப்பே தான்!

✲

6. எடுத்தேன்! முடித்தேன்! நடுக்கம் ஒழிந்தது

25.6.2007இல் நேர்காணலில் நிறைந்தபின் திருச்சிக்கு வந்தேன். 26.6.2007இல் பவானிக்குச் சென்று, 27.6.2007இல் தருமபுரியில் அரிமா அன்பர் இரத்தினம் அவர்கள் பதவியேற்புச் சிறப்புரையாற்றி, இரவு சேலம் சேர்ந்தேன். 27.6.2007இல் வாழைப்பாடி அரசு மேனிலைப் பள்ளியில், உலகத் தமிழ் அறக்கட்டளையின் சார்பில் கல்வி முதன்மையர்க்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டுரை நிகழ்த்தினேன். இரவு தவச்சாலை நண்ணினேன்.

30.6.2007இல் ஊராட்சி அன்பர் இருவர்தம் ஓய்வு விழாவில் வாழ்த்துரை வழங்கி 1.7.2007இல் நெய்வேலித் தொடர் பொழிவு செய்து திரும்பினேன்.

4.7.2007இல் அமெரிக்கச் செலவுக்கெனத் திட்டப்படுத்திச் சீட்டுகள் பெறப்பட்டமையால், 2.7.2007 இல் சென்னைக்குப் புறப்பட்டேன்.

4.7.2007 இல் புறப்பட்டு 3.9.2007இல் மீளும் வகையில் சீட்டு எடுக்கப்பட்டிருந்ததால் (போகவும் வரவும்) கைப்பையுடன் பெரும்பெட்டி (யான் எடுத்துச் செல்லும் அளவுடையதே) ஒன்றும் கொண்டு சென்றேன்.

சென்னை, புதுவை, நெய்வேலி, நெல்லையெனக் கூட்டங்களுக்குப் புறப்படுவது போல-சற்றே துணிப் பெருக்கத்துடன்-புறப்பட்டேன்!

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளுக்கு யான் வானூர்தியில் சென்றிருந்தாலும், அமெரிக்க வானூர்திச் செலவு 'அசைவை' ஏற்படுத்தவே செய்தது.

'சென்னை-துபாய்' வானூர்திச் செலவுப் பொழுது, நான்கு மணி. 'துபாய்-நியூயார்க்கு' வானூர்திச் செலவுப் பொழுது 14 மணி. 'நியூயார்க்கு-இராலே' வானூர்திச் செலவுப் பொழுது 3 மணி. மொத்தம் இருபத்தொரு மணிப்பொழுது! இதில் 14 மணி நேரம் ஒரே தொடர்ச் செலவு!

முன்னை மூன்று நாட்டுச் செலவுப் பொழுதுகளையும் சேர்த்தாலும் இச் செலவின் நான்கில் ஒரு பங்கு நேரமேயாம்!

எனக்கு நெடிது முன்னரே ஈளைத் தொல்லை உண்டு. செந்தணப்பில் (A/c) நெடும்பொழுது இருத்தல் துயரானது. குளிர்ந்த பொருள்கள் உண்ண ஆகா! குளிர் குடியும் ஆகாது!

குளிர்மிகுந்தால் கைகால் நரம்புகள் சுண்டுதல் இயல்பாக உண்டு. பயிற்சியால் சீராக்கிக் கொள்வேன்! பறப்பது விண்! பரவிக்கிடப்பது குளிர்! உணவும் குடிநீரும் குளிர்ந்தவை. கால அளவோ பதினாறு மணி!

உணவுக்கட்டும், உள உறுதியும் என்னை விட்டு நீங்காத இயற்கையாகி விட்டவை. எந்நிலையிலும் எவ்விடரிலும்,

"நான் நன்றாக இருக்கிறேன்"

"நான் நிறைவாக இருக்கிறேன்"

"எனக்கு இன்பமே அன்றித் துன்பம் இல்லை"

என்னும் மும்மணிகளை என்றும் உடைமையாக்கிக் கொண்டவன்.

4.7.2007 இரவு கடந்து 5.7.2007 வைகறை 4.15க்கு வானூர்தி ஏற வேண்டும். மூன்று மணி நேரத்திற்கு முன்னாகவே நிலையத்தில் இருத்தல் தேவை. அதனால்,

தமிழ்மண் பதிப்பக உரிமையாளர் கோ. இளவழகனார், அவர் மகனார் இனியனார், பொறிஞர், சட்ட அறிஞர் கலைச்செல்வனார், அவர் மகனார் எழுபதின் கவனகர் கலை. செழியனார், யான் ஆகியோர் இரவு 11 மணிக்குப் புறப்பட்டோம். பேரவை அழைப்பால் பங்கு கொள்ளவரும் அன்பர் பட்டிவீரன்பட்டி தமிழ்த்திரு முல்லை நடவரசனார் தம் அன்பும் நண்பும் கெழும வானூர்தி நிலையம் நண்ணினார்!

நிலையத் தணிக்கை, பொருள் ஒப்படைப்பு என்பவை முடித்து இரவு 2 மணி அளவில் நிலைய உட்பகுதிக்குள் ஏகினோம். இனி, விடைதர வந்த அன்பினர் கையசைப்பே சிறிதுவாய்க்கும்! உள்ளே புகுந்துவிட்டால் ஊர்தியில் வருவார் அனைவரும் அன்பர்! நண்பர்! ஆனால், முல்லை நடவரசர் உடனாகி இருத்தல் மகிழ்வாயிற்று. கலைத்தோன்றல் திரு. சிவகுமார் அவர்கள் தம் குடும்பத்தோடு ஐவராய் எய்தினர். அது மேலும் மகிழ்வாயிற்று. எழுவர் கூடினால் எழுச்சி இராதா? சரியாக 5.7.2007 விடியல் 4.15க்கு ஊர்தி புறப்பட்டது!

சென்னை துபாய்ச் செலவு நடுக்கம் தரவில்லை! நரம்பும் சுண்டவில்லை! நான்கு மணிப்பொழுது தானே ! ஏறத்தாழ இரண்டு மணிநேரம் தங்கித் துபாயில் இருந்து நியூயார்க்குச் செல்லும் செலவு நான்கொடு பத்து மணியும் ஆயிற்றே!

குளிரோ குளிர்! நடுக்கமோ நடுக்கம்! ‘வெப்புடை’ ஒன்றன்மேல் ஒன்று பூண்டேன்; கையுறை, காலுறை, தலைமறை என வெப்புகள் இறுக்கினேன்! வெப்புப் போர்வையும் போர்த்தேன்! காலையும் கையையும் வருடி வருடியே நொடிநொடி போயது! ஆமையிலும்-முட ஆமை-நகர்வெனப் பொழுது நகர்ந்தது. நடவரசர் தமக்கும், என்துயர் இயம்பா உறுதி நோன்பில் தாங்கினேன்; அன்பர் இயல்பாய் உண்டார்! உறங்கினார்! எனக்கோ இரண்டும் இல்லை! இருப்பவைதாம் போதாவா?

நடவரசர் முன்னே ஒரு நூல் இருந்தது. அது, அவர்தம் பட்டிமன்றத் தலைப்புக்குத் தகுவதாம் பொருளது. "புலம் பெயர் மக்கள் புரியும் செயல்கள்" என்னும் பெயரியது. முல்லை நடவரசர் தலைப்போ, "புலம் பெயர்ந்த தமிழர்கள் காண்பது இன்பமா? இன்னலா?" என்பது.

அந் நூலை எடுத்தேன். படித்தேன்; முடித்தேன்; பாடலாய் வரைந்தேன்; நடுக்கம் ஒழிந்தது.

நடுக்கம்! நடுக்கம்! நளுக்கும் குளிரால்
நடுக்கம்! நடுக்கம்! நடுக்கின் இடையே
நகர்ந்த திருமணி! நாமுறும் யார்க்குச்
சேர இன்னும் பன்னிரு மணியாம்!
எப்படிக் கழியும்? என்னாம்? என்ன
ஒப்பிய அன்பர் முல்லை அரசர்
கைவயத் திருந்த நூலது கண்டேன்;
புலம்பெயர் மக்கள் புரிவதாம் செயல்களை
இயம்பும் சுவடியாய் இருக்கக் கண்டேன்;
எடுத்தேன்; முடித்தேன்; நடுக்கம் போயது!
எதனால் போயதோ? அதனால் போயதே;
ஈழத் தெண்ணம்! ஈழ எழுத்து!
சூழும் இடமெலாம், 'சூழும் நடுக்கம்
தானே தொலையும்' என்பதை எண்ணித்
தேனாய்ச் சுவைத்தேன்! திளைத்தேன்! அதுகால்,
"நடுங்குதுயர் ஒழித்த நன்ன ராளன்"
என்னுநம் ஈழத்துப் பூதன்
நின்றான் என்முன் முறுவல் பூத்தே!

* நியூயார்க்கு.

'சம்மு-காசுமீரச்' செலவில், பனிமலையின்மேல் பத்தாயிரம் அடி உயரம் சென்று, இளஞ்செல்வன் அருட்பாவொடு பாவாய்ப் பனிக்கட்டிகளை அள்ளி வீசித்

தளிர்த்த இன்பம் இதுகால் உண்டாயது! பதினான்கு மணிப் பொழுது ஓடிப் போயிற்றே! இனி என்ன, மூன்றுமணி ஓய்வின்பின் இரண்டுமணி ஓட்டம்! ஓடிவிடாதா மானின் ஓட்டமாய்! தேனின் விசையாய்!

நியூயார்க்கில் இறங்கி இராலேக்கு ஊர்தி மாற வேண்டும்; சுமையை எடுத்துப்பதிவாக்கி விடுக்க வேண்டும்! துபாயில் ஆள்மட்டும் இறங்கினோம்! சுமை நியூயார்க்கு ஊர்தியில் ஏற்றப்பட்டது. அத் தொடர் இல்லாமல் புதுப் பதிவு! புதுப்படிவம்!

கலைஞர் சிவகுமார் மைந்தர், கார்த்திக்கு (பருத்திவீரன்) நியூயார்க்கிலேயே பயின்றவர். ஆதலால், ஓடிஓடி எல்லாவற்றையும் திறமாக முடித்தார்!

சுவை சொட்டச் சொட்டச் சொல்லாடிக் கொண்டும் தம் மாமாவின் தோள்மேல் கைபோட்டுக் கொண்டும் தள்ளுவண்டி உருட்டும் இளைஞரெனச் சிவகுமார் திகழ்ந்தார். 'பொது வாழ்வில் எப்படி இருக்க வேண்டும்' என்பதை இயல்பான வகையால் அவர் காட்டிய அருமை பாராட்டுக்கு உரியதாயிற்று! அவர் செயலும் கார்த்திக்கு செயலும் பெரியவர் மாமனார் இயல்பும் ஒருவரை ஒருவர் விஞ்சி உவகையளித்தன! அம்மையார் இருவருமோ அமைதிப் பிழம்பினர்! அவர்களும் சுமை வண்டி தள்ளினர்! அப் பேறு பெறாதவன் யான் ஒருவனே!

அமெரிக்காவில் யாங்கள்-இராலேயில் இறங்கிய நாள் 5.7.07! ஏறியதும் அந்நாள்! இறங்கியதும் அந்நாள்! இடையே கழிந்த வானூர்திப்பொழுது, உலகச் சுழற்சியால் விழுங்கப்பட்ட பொழுது! தோலிருக்கச் சுளை தின்ற கதை! இங்கே பகலா? அங்கே இரவு! அங்கே இரவா? இங்கே பகல்! இரவு ஒன்பது மணிக்குக் கூட, கதிரொளி காட்சிப் பொருள் ஆகின்றதே!

இராலே நிலையத்திற்கு வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவைத் தலைவர் தில்லை. குமரனார் எய்தினார். அவரொடு திருவிழாக் கோல அழைப்பென அன்பர்கள் இருபது முப்பது ஊர்திகளில் எய்தினர். இராலே தமிழ்ச் சங்கத் தலைவர் சேரனார் தம் குடும்பத் தொடும் எய்தினார். செல்வனார், தேவகியார், லோகனார், வாணியார், கண்ணனார், சிவராசனார், செயராசனார், சாமி (முனியசாமி) எனப்பலர் தாமும் குடும்பமும் தோழமையும் சூழ எய்தினர்.

அறந்தாங்கி வட்டம் புள்ளம்பாடி அன்பர் செல்வனார் தேவகியர் தம் விருந்தாளியராக, என்னையும் முல்லை நடவரசரையும் அழைத்துச் சென்றனர். தேவகியார் அன்னையார் வள்ளிமயிலார் விருந்தோம்ப என்றே ஊரில் இருந்து வந்திருந்தார் போலும்! செல்வரின் மக்கள் பெயர்! கபிலன், கதிர்! நம் ஊர்ப்பெயர்கள்! நல்ல தமிழ்ப்பெயர் கொண்ட பெற்றோர் தம் மக்களுக்கு இடும் பெயரில்கூட, இப்பெயர்ப் பேறு காணற்கு அரிதாகிக் கொண்டு வருவது கண்கூடு தானே!

7. நீங்களா? நீங்களா?

வள்ளுவச் சீர்களின் வரையறை போல
யானும் முல்லை அரசும் சிவகுமார்
மாமா முதல மாண்குடும் பைவரும்
எய்தினோம் இராலே வானூர் நிலையம்;
செல்வனார் அழைக்கச் சாமி அன்பர்
நல்லியங் கூர்தியில், நண்ணினோம் இல்லம்;
இல்லச் சூழல் இனிமை தவழ்ந்தது;
எல்லார் இல்லமும் இத்தகை யனவே;
புல்வெளி, மரங்கள், ஓடு பாதை,
நீடு சாலை யுடையவை யவையே;
இல்லம் எய்திய வுடனே ஓய்வாய்
நல்ல உரையாட் டொடுசீர்க் குளம்பி
பருகி இருந்து பலப்பல பேசி
தேவகி அம்மை வள்ளி மயிலார்
தேக்கிய சுவையில் ஆக்கிய உணவைச்
சீர்த்த விருப்பில் உண்டனம்; இயல்பாய்
இருபது மணிகள் ஏற்ற ஊணெதும்
வருவது இன்றி, வந்தவை கொளாமல்,
நீடிய தேவையால் குடலும் கேட்கத்
தேடிய சுவையும் திருவுளப் பேறும்
மல்கிய செல்வர் உடனிருந் துண்ண,
யானும் முல்லை அரசும் உண்டோம்;
ஊர்தியில் பத்தொடும் ஆறும் மேலும்

நேர்ந்த நான்கும் நெடிய இருக்கை
செந்தணப் புடைய குளுமையால் வந்த
நடுக்கம் கால்வலி வீக்கம் தீர
அடுத்தது உறக்கம்; விடியல் நாலரை
மணியள வெழும்வரை மலிந்த உறக்கம்!
நல்ல விடியல்! நாடிய குளம்பி!
சொல்லி வைத்த சுவையென நல்கப்
பருகினோம்; காலைப் பழக்கமாய்க் கொண்ட
செல்வர் நடையொடு சேர்ந்து நடந்தேன்.
பச்சைப் பசுமை பரவிய இல்லம்
அகன்ற சாலை அரிய தூய்மை
புகன்ற நலமாய்ப் பொலிந்த வளாகம்
கண்டேன்; களித்தேன்; புல்லை வெட்டுதல்
தள்ளு பொறியால் நொய்மை ஆக்கி
உள்ளுர மாக்கல் தெள்ளிய காட்சி;
எண்கள் ஒற்றைப் படையோர் வரிசை;
இரட்டைப் படையோர் வரிசையாய் இலங்கின;
அஞ்சல் பெட்டி சாலையில் அவரவர்
மனைமுன் இருந்தன. மறுதலை அஞ்சல்
எனையவை யேனும் எய்தின் பெட்டியில்
கைபோல் இருக்கும் தகட்டை மேலே
தூக்கி வைத்தால், அஞ்சலர் அதனைத்
தூக்கி உரியவர் தமக்குச் சேர்ப்பராம்;
அஞ்சல் போடவும் அஞ்சல் எடுக்கவும்
சாலையில் அமைந்த பெட்டியே சாலும்!
குறுங்குறு சாலையும் வளையும் எழிலொடு
சமைந்துள: சாலையின் ஓரப் பகுதியில்
புல்வெளிப் பரப்பும் நல்நடை வழியும்
பல்லெழில் மரங்களும் பரவிய பான்மைய;
இலையுதிர் நாளில் எழும்புவ இருப்பவ

கலைநலம் சேர்ப்பன என்று செல்வர்
வியப்புறச் சுட்டினார்; ஏறத் தாழ
இயல்பாய் ஒருமணி இனிதுறச் சென்றது.
இனிய குளியல்; சுவையாம் உண்டி;
கனிவுறும் உள்ளம் காட்டும் உரைகள்;
என்ன நடந்தது பொழுதே; செல்வர்தம்
மக்கள் கபிலன் கதிர்என் பாரும்
துணையும் துணையின் அன்னையும் இயல்பாய்
ஒருவரை ஒருவர் புரிந்து தத்தம்
கடமை புரிந்த காட்சி இனியன;
எழுதும் போதில் செல்வர் எழுதுதற்
கென்று வாய்த்த ஏடு தந்தார்;
கதிரையான் கேளா திருக்கவும் அவனே
எழுதுதாள் வைக்கவும் இயல்பாய் எழுதவும்
அட்டை தந்தான்; அச்சிறு வயதில்
அமைந்த பண்பாடு அருமை செய்தது;
இனிய இல்லம் செல்வம் இல்லம்;
செல்வம் இல்லம் போல எல்லார்
இல்லமும் அமையின் ஆங்கே, வேண்டும்
அரசும் ஆட்சியும் காவலும் கட்டும்
உரசுதல் சிறிதும் உறாமல் நாடே
நல்லறம் கொழித்து நயன்பல புரியும்;
வாழிய நன்றென வாழ்த்தி அவணே
எழுதிய அகவல் பகுதி இதுவே!

மருத்துவர் அன்பர் மதுரை வாழ்வர்
சேது ராமனார் மதுரையில் இருந்து
விழாவில் பங்குற எய்தினார்; இருந்தார்;
அளவ ளாவி அவணிருந் தேகினார்;
திருக்குறள் மந்திர மொழிகள் என்னும்

விருப்புறு போற்றியைத் தேவகி அம்மையார்
மனனப் படுத்தி மக்களும் பயிலத்
தினமும் கூறப் பழக்கம் செய்துளார்:
அவ்விசைச் சுருளைக் கபிலன் காட்டி
இசைக்க விட்டான்; எனக்கோ வியப்பு!
சிகாகோ வாழ்செழும் மோகனார் தொகுத்த
தமிழர்பண் பாட்டுக் கையே டேறி
அமிழ்த இசையும் ஆகிய ததுவாம்!
இந்தியத் தலைமை எய்துமுன் கலாமால்
சிந்தை யுவந்து வெளியிடப் பட்டு
விரிவுறப் பரவிய விழுப்பம் கொண்டது;
யானதை இயற்றினேன் என்பதை அம்மை
தேவகி யாரோ, செல்வமோ அறிந்திலர்;
இயற்றியோன் யானென அறிந்ததும் அவர்கள்
வியப்பினை அளக்க அளவுகோல் இன்றே!
"நீங்களா? நீங்களா? நெடுநாள் ஓதிய
போற்றியை ஆக்கிய உங்களை விருந்தாய்
ஏற்றபே றென்னே" என்ன மகிழ்ந்தனர்;
அப்பரைக் கண்ட அப்பூதி அடிகளாய்
ஒப்பிய நின்றனர் உவகை கூர்ந்தே!

✻

8. வாழ்ந்ததும் தமிழ்நாடு வந்ததும் தமிழ்நாடு

வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை கேரொலைனாத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து வழங்கும் தமிழ்விழா 2007 சூலை 7,8,9 ஆகிய மூன்று நாள்கள் நிகழ இருந்தன. விழா நிகழிடம் கரோலைனா அரங்கம்!

6.7.2007 மாலையே விழா அரங்கத்தில் அறிமுக விழா நிகழ்ந்தது. தமிழ்த்திரு. சிவகுமார் அவர்களை மேடைக்கு அழைத்தனர். அவையோர் ஆர்வ வரவேற்புக்குப் பின்னர் அவர் வரைந்த வண்ண வண்ண ஓவியங்கள் திரையிடப்பட்டு வரவேற்புப் பெற்றன. அவர் மகனார் கார்த்திக்கு நடித்த பருத்திவீரனில் இருந்து ஒரு காட்சி காட்டப்பட்டது. அவை, களை கட்டிச் சிறந்தது!

அடுத்து, விருந்தாளர் அறிமுகம் அவரவரே செய்யும் வகையில், ஏற்பாடு செய்திருந்தனர்! பொருள் தட்டுப்பாடும் முட்டுப்பாடும் இல்லாத வளமையராய் வாழ்ந்தாலும், காலத் தட்டுப்பாடும் முட்டுப்பாடும் அமெரிக்க வாழ்வர்க்கு உண்டு! அதனால், எந் நிகழ்ச்சிக்கும் எவர் பங்களிப்புக்கும் உரிய காலத்தில் ஒருமணித் துளி கடந்தாலும் அறிவுறுத்த அவர்கள் தயங்குவதில்லை! அக் கட்டுப்பாட்டை ஏற்க மனமின்றிச் சினந்தவரும், அடுத்த உரையே ஆற்றாமல் போனவரும் உண்டு எனக் கூறினர். அப்படியே, முரணுற்ற கருத்து எனத் தோன்றினால் முகவொப்புக்காக அமைந்திருப்பர் என்றோ

தொடர்ந்து கேட்பர் என்றோ கூறவும் முடியாது! இயல்பாக உரையாடிய போதில் கேட்ட செய்திகள் இவை.

சிவகுமார் அவர்கள், படக்காட்சி முடிந்து அறிமுகம் தொடங்கிய அளவில், "பெரும்புலவர் இளங்குமரனார் தம்மை அறிமுகம் செய்வார்" என்று கூறி மேடையில் அமர்ந்தார்.

யான் மேடை ஏறினேன்; அவையை வணங்கினேன்! அவை பெரிதுற மகிழ்ந்து கையொலி செய்து வரவேற்றது;

"பெருமக்களே, யான் தமிழ்நாட்டில் பிறந்தவன்;
தமிழ்நாட்டில் வளர்ந்தவன்; தமிழ்நாட்டில் வாழ்ந்தவன்;
இப்பொழுதும் தமிழ்நாட்டுக்கே வந்துள்ளேன்!
அமெரிக்கா, தமிழ்நாடா என வினாவ எண்ணுகிறீர்கள்!
ஆம்! தமிழ்நாடுதான்! நான் உங்கள்முன் இருப்பது
தமிழ்நாடுதான்!
தமிழ்நாடி நீங்கள் என்னை அழைத்தீர்கள்!
தமிழ்நாடி யான்வந்தேன்!
தமிழில் பேசி-தமிழில் எழுதி-தமிழராய் வாழ்வார்
எவ்விடத்தில் இருந்தாலும் அவ்விடம் தமிழகம்-தமிழ்நாடு-
என்பது நம் சங்கப் பரிபாடலான் முழக்கம்! அது,

"தண் தமிழ்வேலித் தமிழ்நாட்டகம்"

என்பது!
பாருங்கள்! என் தாய் ஒருவர்; உங்கள் தாயரும்
ஒவ்வொருவர்; என் தாய் வாய் ஒன்று; உங்கள் தாயார்
வாய்களும் ஒவ்வொன்று! ஆனால், நம் தாய்மார் மொழிந்த
வாய்மொழியோ நம் தாய்மொழி! இனிய தமிழ்மொழி! அம்
மொழியே நம் முகவரி! அம் மொழியே நாம் கருவிலே
கொண்டதிரு! நம்மை எங்கும் என்றும் பிளவில்லாமல்
இணைக்கும் பெருவளம் நம் தாய்மொழி ஒன்றே ! ஒன்றே!
நாம் தாய்மொழியால் ஒன்றாவோம்! நன்றாவோம்!
பேரவையை-பெருமக்களை-வணங்குகிறேன்!
வாழிய நலனே!

வாழிய நிலனே!"
என என் அறிமுகத்தை முடித்தேன்!
இடைஇடையேயும் நிறைவிலும் பெருவரவேற்பும்
கையொலியும் சிறந்து, அவையின்
ஆர்வத் தளிர்ப்பைப் புலப்படுத்தின!

சுருங்கிய அளவில் குறுகிய காலத்தில் பொது வகையில் கூறிய இவ்வறிமுகம் அறிவர்களையும் முதுவர் களையும் கவர்ந்தமை, சந்தித்தவர் வழியும் சந்திக்க வந்தவர் வழியும் அவர்கள் உணர்வுகளையும் உரைகளையும் மெய்ப் பாட்டு மெய்மங்களையும் காணக்காண 'அன்னை வாழ்க' என என்னுள் வாழ்த்திக் கொண்டேன்!

சிவகுமார், முல்லை நடவரசரையும், கார்த்திக்கையும் அறிமுகம் செய்வரென அழைத்தார்! தாமும் தம்மை அறிமுகம் செய்துகொண்டார்! அறிமுகம் அளவாகவும் செறிவாகவும் அவைக்கு நிறைவாகவும் முடிந்தது!

பின்னர்ச் செல்வனார் இல்லம் சேர்ந்து தங்கினோம் (6.7.2007).

9. நல்லாள் நகும்

7,8,9 ஆம் நாள்களில் விழா ஆதலால், விழா நிகழும் அரங்கத்தின் அருகிலேயே இருந்த 'செல்டன் இராலே' விடுதியில் (அறைஎண் 1117) தங்க வைத்தனர். யானும் முல்லை நடவரசரும் ஓரறையில் தங்கினோம். விழா அரங்கிலேயே காலை நண்பகல் இரவு உணவும், இடைக்குடிப்பு, சிற்றுண்டிகளும் வேண்டுவ வேண்டுமாறு கொள்ள ஏற்பாடு செய்திருந்தனர். உணவு வழங்கிய விடுதிப் பொறுப்பாளர் மதுரை மாவட்டம் தே. கல்லுப்பட்டி சார்ந்த அன்பினர். என்னை முன்னரே அறிந்தவர். என் நண்புடையார் பலரையும் அறிந்தவர். அவர் எனக்கு வேண்டிய உணவை இருந்துண்ணும் இடத்திற்கே எடுத்துவந்து வழங்கினார். எல்லா இடங்களிலும்-வீட்டு விருந்துகளிலும் கூட-எடுத்தூண் (பபே) முறையே இருந்து, இன்பமும் நலமும் சேர்த்தது. வீண்படுத்த வேண்டுவ பெரிதும் இராது அல்லவோ!

எனக்குரிய நிகழ்ச்சி முதல்நாளில் (7.7.2007) பாட்டரங்கத் தலைமையே யாம். கலைநிகழ்ச்சியாகவே கவியரங்கமும் கொள்ளப் பட்டது. அதற்கென வழங்கிய நேரம் பிற்பகல் 2 மணிமுதல் 3.30 மணிவரை.

என் தலைமைக் கவிதை-அழைப்பு-முடிப்பு-என்பவற்றுடன், கவிஞர் அறுவர் பங்கு கொண்டு பாடுகின்றனர். அனைவருக்கும் தலைப்பு ஒன்றே. "நிலம் என்னும் நல்லாள் நகும்" என்பது அது!

இலமென்(று) அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்

என்னும் குறள்வழியது தலைப்பு!

இதற்குமேல் விளக்கம்போல் அமைந்த குறள்,

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்

என்பது.

தலைமை அன்றிப் பாடுவோர் அனைவரும், தமிழ்ச் சங்கப் பேரவை சார்ந்தவர்களே ஆவர். அவர்கள் அன்னைதாசனார், சிகாகோ பாற்கரர், சுந்தரகவிதாசர், மலர்க்குழலி நடவரசனார், முத்தையா சுதாமனார், அப்பு ரத்தினவேலு என்பார். நிறைவில் உள்ளவர் கவியரங்க ஒருங்கிணைப்பாளராகவும் இருந்து அருமையாகக் கடனாற்றினார். என் கடிகை யாரமெனக் கருதியிருந்து உதவினார்!

என் தொடக்கத்தை உரைவீச்சு ஆக்கினேன்.

மொழிவாழ்த்துக் கூறி, அவையை முன்னிலைப் படுத்தி உரைத்தேன்.

நெல்லை குமரி மக்கள் வழக்கில்,
'அமரிக்கை' என்பதோர் அருமை வழக்குண்டு!
அமைதி என்பதே அதன் பொருளாம்;
"அவன் அமரிக்கை யானவன்" என்பர்!
நீவிர் அமரிக்கை தேடிவந்த இடம் அமெரிக்கா !
உங்கள் அறிவும் ஆற்றலும்
அமெரிக்க வளமும் வாழ்வுமாம்!
ஆதலால், உங்கள் அனைவர்க்கும்,
அமைதியும் அருமையும் வழங்குதல்
அமெரிக்கக் கடனாம்!
புகுந்த வீட்டில் பொலியும் மருமகள் தன்னைத்,

திருமகளாகத் திகழ வைப்பது
புகுந்த வீட்டினர் பொறுப்பாம்!
தமிழர் கண்ட அமெரிக்கையைத் தாங்கவே
அமெரிக்கா தன்னை ஆக்கின்,
உலகம் உய்யும்! உயர்வற உயர்ந்தே
உலகம் உய்யும்!
அமர்தல் அமைதல் அமைப்பு என்பவை எல்லாம்
ஒரு 'வேர்' வழியவை!
'அமர்தல் மேவல்' என்பது தொல்லோன் நன்மொழி!
முகத்தான் அமர்தல், அகத்தான் அமர்தல்-
என்பவை வள்ளுவம்!

பாலுக்கு அவாவு குழந்தைக்குப் பாலூட்டுதலை
'அமர்த்துதல்' என்பது தாய்மை வழக்கு!
இவையெலாம் பாருக்கு வழங்குவ தென்ன?
"பசி இல்லாகுக! பிணிசேண் நீங்குக!"
"பகை இல்லாகுக! பரிவுமிக் கோங்குக!"
என்னும் பொங்கல் வாழ்த்தே! பொங்குமா கடலாய்,
வாழிய நலனே! வாழிய நிலனே!"

என முன்னெடுப்புச் செய்தேன்.

எண் ஒரு கண்!
எழுத்தொரு கண்!
எண்ணுக! எண்ணுக!
எழுதுக! எழுதுக!
எண்ணுவார் எண்ணம்
என்ன எண்ணும்?
என்னைப் போலவே
எவரும் எவரும்
இருக்கவும் வாழவும்
சிறக்கவும் வேண்டுமென்
றெண்ணும்!

அந்த எண்ணம் எழுத்துரு எய்தும்!
எண்ணுக! எழுதுக!
மண்ணின் மாண்பை!
இனத்தின் வளத்தை!
மொழியின் சிறப்பை!
இவற்றைக் காத்தவர்,
எல்லாம் காத்தவர்!

***

<u>ஒருவனாய் வந்தேன்!</u>
ஒன்றினார் முல்லை!
இருவரும் இணைந்தோம்!
ஒன்றாய் ஆனோம்!
ஒருமை இருமை விரிந்து விரிந்து
பெருமையாம் பேரவை யாகி
ஒன்றாய் உள்ளோம்!
உலகம் ஒன்றாம் வகையை
எண்ணிய தமிழன்
எண்ணை ஒன்றெனத் தொடங்கினான்!
ஒன்று! உளத்தால் ஒன்று! உணர்வால் ஒன்று!
உலகாய் ஒன்று! ஒன்றே உலகமாம்!
ஒன்றை எண்ணி எண்ணி ஒன்றுவோம் என்றும்!
உள்ளம் விரிந்தால் உலகெலாம் சொந்தம்!
உள்ளம் சிறுத்தால் உறவும் பகையே!
பாவலர் அறுவரையும் பாடி அழைத்தேன்.
அன்னை தாசனார்
மலரின் இளமை 'முகை'யேயாம்!
'முகை'யில் மலர்ந்த பாவலர்
பகைமை அறியாப் பண்பின்

அன்னை வழிஞர்

பேசரும் பெருமை வாசிங்டன் வாழ்வர்;
தென்றல் வீசவும் தீந்தமிழ் ஓங்கவும்
தேனொலி என்ன வானொலி பரவவும்
செய்பவர், வருகிறார், செந்தமிழ் அரங்கே!

சிகாகோ பாற்கரர்

அலைவளம் மலைவளம் ஆயவை
நிலைவள மாகி நேரில் திகழும்
கலைவளப் பெருக்கை
முப்பான் ஆண்டுகள் ஒப்பிலா வாறு
சிகாகோ நிலத்தில் உழுது விதைத்து
விளைவு காணும் விழுமிய பாற்கரர்
விரைவார் அரங்கே!

சுந்தர கவிதாசர்

செஞ்சி வீரம் செந்தமிழ் வீரம்!
தீரம் திறமை தீந்தமிழ்ப் பற்றுமை
எல்லாம் செறிந்த எழிலார் பாவலர்
சுடரும் சுந்தர தாசர்
வல்ல கட்டுரை வாழ்வர்
கட்டுரைப் பாக்கட்டி உரைத்திட
எட்டு வைக்கிறார், இவ்வரங் கத்தே!

மலர்க்குழலி நடவரசனார்

மணமலர்க் குழலியார் மாண்நட வரசர்
புனைகதை சிறுகதை புகழுறு பாவொடு
கட்டுரை வல்லார் கட்டுரை விஞ்சிய
தமிழ்க்கடல் தனித்தமிழ்த் தந்தையார்
நிறைமலை யாகிய மறைமலையடிகளார்
பேறெனை வாய்த்த பேர்த்தியார்

தலைநகர்த் தமிழ்ப்பள்ளி கண்டவர்
கவிக்குயி லாகக் காண்கிறார் அரங்கே!

முத்தையா சுதாமனார்

பல்கலைச் செல்வர்; பயிலும்
ஓக நெறியர்; சட்டம் வல்லார்
மதிவாணர் என்னப் பொதிவுறு பெயரர்
முத்து முத்தாகக் கட்டுரை வரையும்
வித்தகர் முத்தையா சுதாமர்
விழுமிய அரங்கம் விரைகுவர் இனிதே!

அப்பு ரத்தின வேலர்

பற்று நோய்க் களவிலாப் பாரில்
புற்றுநோய் ஆய்வைப் புரிபுகழ் ஆக்கி
மற்றதை ஒழிக்கும் மருத்துவ மாமணி
தமிழோசை முழங்கத் தூண்டிய பாவலர்
ஒப்பிலா அன்பர் அப்பு ரத்தின வேலர்
செப்ப வருகிறார் செந்தமிழ் அரங்கே!

பாவலர் குறிப்புகளும் பாடல்களும் அச்சிட்டு வழங்கப் பெற்றிருந்தன. ஆதலால், அவர்களை அரங்கம் அழைக்க இனிது வாய்த்தது. மொத்தப் பொழுது மணி ஒன்றரை. ஆதலால். அதற்குள் முடித்து அரங்கை ஒப்படைக்கப் பாவலர் தமக்குப் பத்துமணித் துளியுள் மிகாமல் பார்த்துக் கொண்டார் ஒருங்கிணைப்பாளர்.

10. நல்லாள் இல்லாள்

நிலமென்னும் நல்லாள், இல்லாள் இணைப்பாய் யான் சில பாடினேன்!

கணவன்,
ஊரில் இருப்பான்! தெருவில் திரிவான்!
நேரில் வந்து நில்லான் என்றால்,
மனைவி மனந்தான் என்ன நினைக்கும்?

ஓடித் திரிவான்! ஊரூர் போவான்!
நாடி வாரான் நன்மனைக் கென்றால்,
நயக்கவா செய்வாள் நல்ல மனைவி:

வெளியூர் போவான்! வேற்றூர் போவான்!
ஒளிந்து கொள்வான் உரிய மனைக்கெனின்,
உள்ளவன் உள்ளம் உடையா திருக்குமா?

நோக்கிக் கிடந்தும் ஏக்கம் உரைத்தும்
நோக்கா திருந்து நோய்மை செய்தால்,
தேக்கி மகிழ்வளா தேர்ந்த மனைவி?

கணவன்,
ஒருநாள் வந்து திருநாள் போலத்
தலைவாய் முன்னர்த் தாழ்ந்து நின்றால்,
நல்ல தலைவி நகுவளா இலளா?
“இன்றுதான் தெரிந்ததா இந்த வீடே?
எந்த வீடும் இல்லா தொழிந்ததா?

என்று நினைத்தும் ஏசுதல் விட்டு,
நல்ல மனைவி நகுவளா இலளா?

"என்ன கனிவாய் எண்ணி வந்துளீர்;
இன்று தானும் இருக்கும் எண்ணமா?
என்பே றல்லவோ வந்த" தென்ன,
நல்ல மனைவி நகுவளா இலளா?

திண்ணையில் இருந்து தெருவைப் பார்க்கும்
எண்ணம், "உடனே எழுந்து போனால்
என்ன நினைவாள் என்பதோ?" என்னும்
நல்ல மனைவி நகுவளா இலளா?
உழுபவன் உழாமல் ஊர்ஊர் திரிந்தால்,
எழுந்ததும் நிலத்தை எண்ணி வராமல்
விழுந்த கிடையாய் வீடே குறியாய்
அழுந்திக் கிடப்பதே வாழ்க்கை ஆனால்,
நிலமெனும் நல்லாள் நகுவளா இலளா?

தோண்டி எடுத்தால், வேண்டிய நன்னீர்;
மேலும் தோண்டின், மண்ணெய் கன்னெய்;
மேலும் தோண்டின், தங்கப் பாளம்
மணிக்குலம் எல்லாம் அணியணி யாக
வைத்துளேன் என்பதை அறியா மடவனாய்
வாளா கிடந்தாய்; வதைகிறாய்; இதுகால்;
தேனாய் இனிக்க இருந்த என்னைத்
தேளாய் ஒதுக்கித் தீமை புரிந்தாய்;
மடியன் நீயே! குடியினைக் கெடுத்தாய்
மடிந்தாய் மடிந்தாய் மட்கிய மண்ணாய்!
முடிந்தாய்; என்முன் நில்லா தொழிகென
நிலமெனும் நல்லாள் நகுவளா இலளா?

விதைக்கும் நாளில் விருந்துக் கேகிக்
கதையும் கூத்துமாய்க் கழித்திட லானால்,
சோலை யிடையே பாலை போல
வேலை செயாமல் விட்ட உழவன்
இலையே விளைபயன்! இலையே விழைநலம்!
இலையே இலையே என்று குமைந்திடும்
நிலைமை நோக்கிய நிலமெனும் நல்லாள்
"வெட்டிப் பிறவியே! வீணப் பிறவியே!
கொட்டிக் குவிக்கக் குறியாய்க் கிடந்தேன்;
குனிந்து நிமிர்ந்து வேலை செயநீ
நினைநாள் உண்டா? நேர்ந்தநாள் உண்டா?
இலையே! இலையே! என்ன உழல்கிறாய்!
உப்பு மலைமேல் உட்கார்ந் தொருவன்
உண்டான் எனினும் உப்பை அள்ளி
இடாமல் உண்டால் சுவைக்கவா செய்யும்?
நெல்லா புல்லா கிழங்கா கீரையா
மஞ்சளா இஞ்சியா மிளகா புளியா
அவரை துவரையா தென்னை பனையா
மாவா பலாவா வாழையா கமுகா
தேக்கா சாந்தா இன்ன பயன்களைத்
தரநான் இருந்தும் வராமல் திரிந்தாய்!
உழுதனை இல்லை; விதைத்தனை இல்லை!
பொழுதுறப் பார்த்தனை இல்லை; போற்றிக்
காத்தனை இல்லை! கருதினை இல்லை!
'இலையே இலையே' என நாண் இலையோ?
என்ன நிலமகள் நகுவளா இலளா?

நிலமென உரைத்தது உழுநிலம் தானா?
தொழுநில மாகத் தொடர்வன யாவும்
உழுநில மாதல் உண்மையாம் அன்றோ!

வாணிகம் உழுநிலம்! தொழிலகம் உழுநிலம்!
ஆலைகள் உழுநிலம்; ஆய்வகம் உழுநிலம்
ஆளுகை உழுநிலம்; அமைப்புகள் உழுநிலம்!
அறிவியல் களமா பொறியியல் களமா
மருத்துவ மனையா அருந்தூண் விடுதியா
கல்வித் துறைகளா கணினி யகங்களா
காட்சிக் களங்களா காவல் களங்களா
மண்வழி ஆய்வா விண்வெளி ஆய்வா
எல்லாம் உழுநிலம்! ஏற்ற பணிகளை
எல்லாம் என்றும் எண்ணி எண்ணி
வல்லாண் திறத்தால் வாய்த்த பேறாய்
ஆர்வம் கமழக் கமழ எமக்கு
நேர்வந் துள்ள நேயத் தவமென
எண்ணிச் செய்யும் திண்மையர் தம்மை
நிலமெனும் நல்லாள், நேய நகையால்
குலமெலாம் வாழ்கென வாழ்த்திக் குளிர்வாள்!

நல்லாள் நகைத்தால் நலமே நல்கும்;
அல்லதை ஒழிக்க அவள்நகை உதவும்
உதவாக் கடையாம் ஒருவன் தனக்கும்
நல்லவள் ஒருத்தி சொல்லால் செயலால்
வல்லமைத் திறத்தால் வானுயர் நலங்கள்
வாரி வழங்குவாள்! வாழும் திறமேதும்
வாயான் எனினும் வாய்த்த நல்லாள்
ஆயவன் தன்னால், ஆள்வினைக் கவனே
சான்றாய் நிற்கும் சான்றோன் என்னச்
சாற்றச் செய்திடும் சால்பினள் அவளே!
நல்லவள் தாயாய் நல்கிய மகவு
புல்லவை யுறாது; புகழின் தலையிடம்
பெற்றிடும்; சான்றோர் பேசும் பெருந்திறம்

உற்றிடும்; உலகப் பெருமையும் எய்தும்;
உலகுக் குதவும் ஒருமகற் காகவே
இலகும் நல்லாள் இருந்திட லானாள்;
வேண்டாத் தீமை வெட்கிக் குனிய
வேண்டிய நல்லவள் செய்வதை அன்றி,
ஈண்டிய நலமெலாம் செய்குவள் அவளே
தந்தை அறிவு மகனறி வென்றும்
தாயைப் போலச் சீலை என்றும்
வழங்கு மொழிகள் வாழ்வியல் தெளிவே!

நெடுநீர் மறவி மடிதுயில் என்னும்
கெடுநீர் உடையவர் கீழ்மைகள் கண்டு
குடிகெடு மடியனைக் குமைந்து நோக்கி
அடகெடும் பாவி! ஆரோ கெடுத்திலர்;
கெட்டே ஆவேன் எனநீ உழைப்பில்
ஒட்டா திருந்தாய்! கெட்டாய்! என்ன
எள்ளினும் சிறிய எள்ளாய் எண்ணி,
எள்ளி எள்ளி நகைப்பாள் என்ன,
இருவகை நகையும் நினைக்க
வருவகை கூறி வணங்கினென் இனிதே!

அவ்வப்போது கையொலி செய்த அவையம் நிறைவில் முழங்கிய முழக்கம் பாடல் அரங்குக்குப் பாராட்டும், வரும் ஆடலரங்குக்கு வரவேற்பும் போலத் திகழ்ந்தது.

பாவலர்கள் பாராட்டுக்கு உரியவர்கள்! புதியவர் எனினும், முதியவர் எனினும்! ஏன்? மொழியைக் கெடாத நோன்பினராக ஒவ்வொருவரும் பாடினர் என்பதே அது!

8.7.2007 ஞாயிறு முற்பகல் 9.45 மணிக்குச் செம்மொழி பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சி இருந்தது.

✲

11. நம்மொழி செம்மொழி

தமிழுக்குச் செம்மொழித் தகுதி மிக உண்டு என்று வலியுறுத்திக் கட்டுரை எழுதிய பேராசிரியர் சார்ச் கார்ட் அவர்களும், செம்மொழிக் கட்டிலில் இருக்கை பெற்றுப் பணியாற்றும் முனைவர் மருதநாயகம் அவர்களும் யானும் பங்கு கொண்ட நிகழ்ச்சி அது. பொதுமக்களும் வினாவிப் பங்கு கொண்டனர். செம்மொழித் தகுதி தமிழுக்கு உள்ளமையைச் சார்ச்கார்ட் அவர்களும், தமிழ் செம்மொழி யாக்கப்பட்டபின் அத்துறைச் செயல்பாடுகள் குறித்து மருதநாயகம் அவர்களும், செம்மொழிக்கு வருங்காலத்தில் செய்யப்பட வேண்டுவன குறித்து யானும் பொழிவு செய்யத் திட்டப்படுத்தி யிருந்தனர். மூவர்க்கும் ஒருங்கிணைப் பாளருக்கும் வினாவிடைக்கும் தரப்பட்ட பொழுது ஒரு மணியே!

ஆதலால், நாங்கள் மூவரும் தனித்தனியே 15 மணித்துளியளவில் கருத்துகளை முன்வைப்பதாக முடிவு கொண்டோம். யான் மூன்றாவதாக உரையாற்றினேன்.

தமிழ்மொழியைச் செம்மொழியாக அறிவிக்கக் குரல் கொடுத்த பெருமக்களுக்கும், அதனை வலியுறுத்திப் பெற்ற தமிழ்நாட்டு அரசுக்கும், ஒப்புகை வழங்கிய நடுவண் அரசுக்கும் நன்றி கூறல் நம் கடமை எனக் கூறினேன்.

செம்மொழித் தகுதியை வழங்கிய அரசு, தமிழை ஆயிரம் ஆண்டுப் பழமை என்றும் ஆயிரத்து ஐந் நூறாண்டுப் பழமை என்றும் குறித்தது தமிழின் காலத்தைப் பின்தள்ளும்

நோக்குடன், இழிமைப்படுத்துதலும் புலனாகின்றது. அதனைச் சுட்டிக் காட்டிய பின்னரும் செவிக் கொள்ளாமல் செயல் படுவது சீரிய முறைமை அன்றாம்.

அழிந்தவை போக நமக்கு முழுமையாகக் கிடைத்துள்ள தொல்காப்பியம் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுப் பழைமையது. அது இலக்கண நூல். அந் நூலிலே ஏறத்தாழ முந்நூறு இடங்களில் முன்னை இலக்கண நூல்கள் சுட்டப்பட்டுள.

ஓர் இலக்கண நூல் தோற்றமுற அதற்கு முன்னர்ப் பல்வேறு இலக்கிய நூல்களும் கலை நூல்களும் துறை நூல்களும் தோன்றியிருத்தல் வேண்டும்.

எள்ளில் இருந்து எண்ணெய் எடுப்பதுபோல இலக்கியத்தில் இருந்து எடுக்கப்படுவது இலக்கணம் என்பது இலக்கணக் கொள்கை. "எள் இல்லையானால் எண்ணெய் இல்லை; இலக்கியம் இல்லையானால் இலக்கணம் இல்லை" என அது அறுதியிட்டுக் கூறும்.

ஆதலால் தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்ட இலக்கணங்களின் காலம். அவ்விலக்கணங்களுக்கு மூலமாம் இலக்கியக் காலம், அவ்விலக்கியங்களுக்கு மூலமாம் மொழிவழக்குத் தோன்றிய காலம், அதற்கு முன்னதாம் குறியீட்டு விளக்கக் காலம் என எண்ணின், தமிழ்மொழிக்கு ஆயிரம் ஆண்டு, ஆயிரத்து ஐந்நூறு ஆண்டு என்று காலக் கணிப்புச் செய்துள்ளமை, விளையாட்டுப் பிள்ளைகளாலும் எள்ளி நகையாடற்கு உரியதாம்!

இனி, வேண்டுகை தூண்டுகை இல்லாமலே செம் மொழியாக அமரும் பேறு பெற்றுள்ள வடமொழி, கல்வித் துறைக் கட்டிலில் வைக்கப்பட்டுளது. அக்கட்டிலில் செம் மொழித் தமிழை வைக்காமல் பண்பாட்டுத் துறைக் கட்டிலில் வைக்கப் பட்டுள்ளது நடுவண் அரசு. அதுபற்றிக் கண்டு கொள்ளாமல் உள்ளது தமிழ்நாட்டு அரசு.

ஏன், இவ்வேற்றுமை? இச் செம்மொழியிலும், வண்ண வேற்றுமை காட்டல் ஏன்? ஒன்று, "வடமொழி இருக்கையொடு (தெய்வமொழி என்பதல்லவா அவர்கள் புனைவு) தமிழ்மொழி (சூத்திரமொழி, நீச மொழி எனப் பழிக்கப்படுவது) ஓரிருக்கை யில் இருக்கக்கூடாது" என்னும் மொழித் தீண்டாமை எண்ணம். மற்றொன்று, வெள்ளப் பெருக்கெனச் செல்வம் புரளும் கல்வித் துறையில் வைத்து வளமாகப் பொருள் வழங்க வாய்ப்புத் தாராமல், வறண்ட ஆற்றின் ஊற்றுப்போல வறுமையுற்ற பண்பாட்டுத் துறையில் வைத்து விட்டால் அள்ளியும் முள்ளியும் கொடுக்கும் நிலையில் அமைந்து விடும்! ஆக்கப்பணி எதுவும் நிகழாமல் அதுவே பார்த்துக் கொள்ளும் என்னும் கரவு எண்ணமாம்!

இதன் விளைவென்ன? நூறுகோடி, இருநூறு கோடி என வடமொழி பெற, ஒரு கோடி, இருகோடி எனத் தமிழ்மொழி பெற ஆக்கப்பட்ட செயற்கை வறட்சி ஏற்பாடாம்!

இவற்றுக்கு எவ்வளவு குரல் கொடுத்தும் இன்னும் மாநில அரசுபொருட்டாகக் கொண்டு பெறவும் இல்லை; நடுவண் அரசு செவியில் வாங்கிக் கொண்டு தரவும் இல்லை! இந்நிலை மாறிச் செம்மொழித் தமிழ் கல்வித்துறையில் கட்டாயமாக இடம் பெறுதல் வேண்டும்.

மூன்றாம் குறிப்பு, செம்மொழிக்கென அமைக்கப்பட்ட குழு, ஒருமண விழாவுக்குச் சமையல் செய்ய ஒரு தலைமையையும் அவர் கீழ்ப்பணி செய்ய ஏற்படுத்திக் கொண்ட துணைகளையும் போல மனம்போன போக்கில் அமைத்துக்கொண்ட குழுவாகும்.

செம்மொழிக்குத் தக ஆய்வு செய்தார், அவர் செய்த ஆய்வு, அவர்தம் வெளிப்பாட்டுத் திறம் என்பவற்றைக் கருதினால் தக்காராக இருப்பார் ஒருகை விரலைத் தானும் மடித்தெண்ண உரிமையர் அல்லர்!

செவ்வியல் மொழி என ஒரு நூல், அச் செவ்வியல்

மொழித்தலைவர் திரு. வா.செ. குழந்தைசாமி அவர்களால் எழுதி வெளியிடப்பட்டுள்ளது. அந்நூலுக்கு முன்னுரை அருமைப் பெருமகனார் பேராசிரியர் சார்ச் கார்ட்டு அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

நூலையும் கற்றேன்: முன்னுரையையும் கற்றேன். நூலாசிரியர், செந்தமிழ் என்பதற்கு அகராதிகள் கூறும் பொருளைக் கூறி அமைகிறார். அவர் செந்தமிழ் என்பதன் மெய்ப்பொருள் கண்டு தெளிவிக்காமையால், நம் மதிப்புக்குரிய கார்ட்டு அவர்கள், தம் ஆய்வில் தடம் மாறிச் செல்கிறார். மெய்ம்மம் உணர்த்துதலைத் திரு. கார்ட்டு அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதை நம்புகிறேன்.

“கிளாசிகல் லேங்கியூச்” என்னும் ஆங்கிலத் தொடர்க்கு, இந்திய மொழிகள் எதிலும் தக்க மொழியாக்கச் சொல் இல்லை. அதற்குச் சரியான மொழியாக்கம் ‘சம்ஸ்கிருத’ என்பதேயாம்! சம்ஸ்கிருத என்பதற்குச் சரியான மொழியாக்கம் ‘செந்தமிழ்’ என்பதாம்” என்கிறார். இது முற்றிலும் பிழையான ஆய்வும், முடிவுமாம்!

என் கையில் எழுதுகோல் உள்ளது. என் எழுத்துப்பணி முடிந்ததும் அதனை வைக்கும் இடத்தில் வைத்து விடுகிறேன்.

சட்டை போட்டிருக்கிறேன்; படுக்கச் செல்லும்போது கழற்றி அதன் தூக்கியில் மாட்டிவிடுகிறேன்.

எழுதுகோலும் சட்டையும் என் உடைமைகளே! அல்லது உரிமைப் பொருள்களே!

என் கால், கை, கண், காது என்பனவும் என் உடைமை அல்லது உரிமைப் பொருள்களே!

செயல் முடிந்ததும் கைகளையோ, நடந்து முடிந்ததும் கால்களையோ எழுதுகோல் போலவும் சட்டை போலவும் கழற்றி வைத்து விடுவேனா?

உரிமைகளில் பிரியும் உரிமை, பிரியா உரிமை என இரண்டு உண்டு. பிரிபடா உரிமை தற்கிழமை : பிரிபடும் உரிமை பிறிதின் கிழமை என இலக்கணரால் சொல்லப்படும்.

சம்ஸ்கிருதம் என்பது பிரிபடும் உரிமையது. செந்தமிழ் என்பது பிரிபடா உரிமையது! இதனையும் அதனையும் இணைத்தல் அடிப்படை இலக்கணப் பிழை.

'சம்ஸ்கிருத' என்பது செப்பம் செய்யப்பட்டது என்னும் பொருளது. செந்தமிழ் என்பது செம்மையாய தமிழ் என்னும் பொருளது.

"செம்மை இல்லாது இருந்து பின்னே (இன்னொன்று கண்டு) செப்பப்படுத்தப்பட்டது என்பதற்கும், 'செம்மை யாகியது' என்பதற்கும் எத்தகைய ஏற்றத் தாழ்வு, எதிரிடை?

செங்கதிர், செங்கோல், செந்தண்மை, செம்பொருள் என்பவை மட்டுமா, செந்தாமரை, வெண்டாமரை, தண்மதி, வெண்மதி, ஒண்மதி என்பன முதலவும் பண்புத் தொகைகள். பண்பையும் பண்பியையும் பிரித்துப் பார்க்கக் கூடாதவை.

செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை உண்மை நுண்மை

இவையும், இவற்றுக்கு எதிரிடையாம் கொடுமை, பெருமை, அண்மை, நன்மை முதலியவும் பண்பின் பகாநிலைப் பதங்கள்! என்பது இலக்கணம் (நன்னூல்) ஆதலால், அடிப்படை முதல் ஆய்வுகள் செப்பப்படச் செய்தே உலகுக்கு உலாவவிடல் வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன்.

தமிழ்நாட்டு அரசின் ஆட்சிமொழியாகத் தமிழ் அறிவிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் நடைப்படுத்தப்படவில்லை. தலைமைச் செயலகம், நீதிமன்றம், திருக்கோயில் வழிபாடு, இசையரங்கு ஆயவற்றில் தமிழ் கொள்ளப்பட்டிலது; இவற்றில் தமிழ் புறம்பே தள்ளப்பட்டு

வருதல் கண்கூடு. தில்லைச் சிற்றம்பலத்தில் மணிவாசகத்தை ஏற்ற முயன்ற தேசிகர் பாடு, பேசி முடியாது! இசையரங்கில் இன்னும் தமிழ் இசை துக்கடா நிலையில் ஒதுக்கப்படவே செய்கின்றது! விடுதலை பெற்று அறுபது ஆண்டுகள் கடந்த நிலையிலும் முதலாம் வகுப்பில் தமிழ் கற்பிக்க ஆணையிடும் தமிழ்நாட்டு அரசும், அவ் வாணைக்குத் தடைவாங்க முயலும் ஆங்கில வழிக் கல்விக் கொள்ளையரும் கண்முன் காட்சி தரவே செய்கின்றனர்.

தமிழ்நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்த தமிழர்கள் தம்மரபுரிமை மொழி பண்பாடு ஆயவற்றை இழந்துவிடாமல் காக்கும் வகையில் செம்மொழித் திட்டம் அமைய வேண்டும்.

இந்தியப் பிற மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் தமிழ்பயிலவும் ஆய்வு செய்யவும் அறக்கட்டளைகளும், மொழித்துறைக் கட்டில்களும் உருவாக்கப்பட வேண்டும்.

திருக்குறள் தேசிய நூலாக ஆக்கப்படுதல் கட்டாயம் வேண்டும்.

தொல்காப்பியம் முதலாகச் செவ்வியல்மொழித் தகவுடைய நூல்களின் செம்பதிப்புகள் வருவதோடு, ஆங்கிலம் முதலிய மொழிகளில் பெயர்க்கப்படவும் வேண்டும். இன்னவும் பிறவும் அடிப்படையாகவும் உடனடியாகவும் செய்யப்பட வேண்டிய செயல் திட்டங்களாம்"

எனக் கூறினேன்! நல்ல வரவேற்பு இருந்தது.

பெருமகன் கார்ட்டு அவர்களும், முனைவர் மருதநாயகம் அவர்களும் தகவாகத் தம் கருத்துகளை வைத்தனர். கார்ட்டு அவர்கள் தமிழில் நன்றாகப் பேசினார். ஆங்கிலத்தில் விளக்கமும் தந்தார்.

வினாவிடைப் போதில் திருமிகு சேரனார், செம்மொழி யின் எதிர்காலச் செயல்பாடு குறித்து எதுவும் வினா எழுப்ப வேண்டாத நிலையில் இளங்குமரனார் பேசிவிட்டார். அவரிடம்

கேட்க விரும்பிய வினாக்களுக்கு அவர் மொழிவிலேயே விடை இருத்தலால் திரு. கார்ட்டு அவர்களிடமும் திரு. மருதநாயகம் அவர்களிடமும் கேட்கிறேன் எனச் சில வினாக்களைத் தொடுத்தார். இருவரும் விடை வழங்கினார்.

மேடைநிறைவில் திரு. கார்ட்டு அவர்களை நெருங்கியதும், அவர்கள் "அருமையான விளக்கம் தந்தீர்கள்" என்றார்! அவர்தம், 'சான்றாண்மை மெய்ம்மம் நாடும் நயன்மை' என்னை ஆட்கொண்டன. ஒன்றைக் குறையெனச் சுட்டிக் காட்டினாலே சுட்டுவிட்டது போல முகமும் அகமும் சுண்டிப் போகும் பேரறிஞர்களைக் கண்ட காட்சிமுன் 'கார்ட்டு' பனிமலையெனக் காட்சி வழங்கினார்! வாழிய அப்பொதுமை நடுமை அறம் என இதனை எழுதும்போதும் வாழ்த்துகிறேன்.

சுருங்கச் சொன்னால். பேரவையின் உள்ளத்தில் யான் பதிவாவணம் ஆனேன் என்பதைத் தனித்தனி உணர்ந்து நெகிழ்ந்தேன்.

✲

12. விருதுப் பேறு

அன்று இரவு நிகழ்வில், திருக்குறளில் தேர்ச்சியர்க்கு வழங்கப்பட வேண்டிய பரிசு, சான்றிதழ் ஆகியவற்றை யான் வழங்குமாறு வேண்டினர். அவ்வாறே செய்தேன். அதன் பின்னர்ப் 'பெட்னா' வழங்கும் 'வாழ்நாள் மேம்பாட்டு (மாட்சிமை) விருது'ம் பரிசிலும், எனக்கு வழங்கப்பட்டன; பெட்னா தலைவர் திருமிகு தில்லை. குமரரும், இராலே தமிழ்ச் சங்கத் தலைவர் தணி. குமரனாரும் அவைக்கு அறிவித்து அருமை செய்தனர்!

விருது நல்ல கட்டமைப்புச் சட்டத்துடன் இலங்குவது. அது ஆங்கிலத்தில் அமைந்தது.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை

Federation of Tamil Sangams of North America

இது பொன்வண்ண வட்ட வனப்புள் அமைந்தது போன்ற மேல்முகப்பு.

FEDERATION OF TAMIL SANGAMS
OF NORTH AMERICA
Presents
THE LIFETIME ACHIEVEMENT AWARD
to
THIRU IRA. ILANGUMARANAR
In greateful appreciation
of his immense contribuitons to Tamil and
his dedication to the welfare of Tamil people
Annual Tamil Convention 2007

Raliegh, North Carolina, USA
July 6.9.2007

Thillai K. Kumaran — President
Thani Kumar Cheran — Coordinator

என்பது விருதுச் செய்தி.

இதனொடு வழங்கப்பட்டது ஆயிரம் தாலர்!
பொன்வண்ண மேலாடை!
பூங்கொத்து-இவற்றொடு கூடிய பேரவைப் பூரிப்பு!

எனக்குப் பேரவை அழைப்பு இதழ் ஆங்கே சென்ற பின்னரே காண வாய்த்தது.

'பாட்டரங்கத் தலைமை', 'தொல்காப்பியம் கூறும் தமிழர் வாழ்வியல்' பற்றிய கருத்தரங்கப் பொழிவு என்பவை பற்றியே என்னை அழைப்பதாகவும் வேறு சில இடங்களில் பொழிவு ஏற்பாடு செய்யப்படும் என்பதாகவுமே அறிந்தேன். அழைப்பிதழ் கண்டபோதே, எனக்குப் பெட்னா வாழ்நாள் மேம்பாட்டு விருது வழங்குதல் பற்றி அறிய வாய்த்தது. எனக்கு விருது வழங்குதலால், "பேரவை மேலும் பெருமைப் படுகிறது" என்று தில்லை குமரர் கூறியபோது என் தலை தானே தாழ்ந்து பேரவையை வணங்கியது! என் ஏற்புரையாகச் சில சொன்னேன்:

ஓஓ! ஒப்பருந் தமிழே! தாயே!
உன்னைத் தொழுதேன்:
உன் மகவாகப் பிறக்கும் உயர்பே றருளினை என்றே!
ஓஓ! ஒப்பருந்தமிழே! தாயே!
உன்னை உலகத் தமிழாய்க் கண்டு காட்டிய
உண்மை பண்டே உண்டு!
ஆனால், அவ்வுலக அளவு, இன்று பாராய்! பாராய்!
இன்றை விரிவோ விரிவு! அந்நாள்
தமிழுலகம் இத்தகு விரிவினதோ?
அம்மா, உலக மாநாடு பல கண்டவள் நீ!
ஆனால், உலகத் தமிழர் தாம்வாழ்உலகில்

தாமே எடுத்த உவகை விழா இது!
அன்னை ! உன்னரும் மைந்தர் உனக்களித்துள
இவ்வுலக அரியணை ஒப்பிலா ஒன்றே! ஒன்றே!
காப்பியன் இதனைக் கருதியும் பார்த்திரான்!
வள்ளுவன் காட்டும் வையக விரிவே
விரிவென விளங்கக் காட்டினர்
'பெட்னா' பேரவைப் பெருமையர்!
நாற்பத்தொன்பது புலமையர்,
கடைக் கழகக் காலப் புலமையர் என்பர்!
அம்மா! அருமை அம்மா!
உனக்கோ நாற்பத்து மூன்று நற்றமிழ்ச் சங்கங்கள் கூடி
எடுத்த விழா! முத்தமிழ் கொஞ்சக்
கொஞ்ச எடுத்த விழா!
யான், தமிழே வாழ்வாய் வாழ்ந்ததை அன்றி,
அயலொன் றறியா எளியேன்!
எண்பதைத் தொடும் அகவையன்!
இதுகால் பெற்ற பெறலரும் விருது-
வாழ்நாள் மேம்பாட்டு விருது-
என் பிறவியில் பெற்ற பேறேயாம்!
ஒப்பிலாப் பேறேயாம்!
எளியனைக் கண்டு கொண்டு,
எல்லாப் பொறுப்பும் ஏற்று
ஈடிலா இப்பேற்றை வழங்கிய அருமைக்கு
என்ன கைம்மாறு செய்வேன்!
எஞ்சிய வாழ்நாளெல்லாம், 'முழுதுறு தமிழே வாழ்வாய்
வாழ்வேன்' என்பதை அன்றி, என்ன சொல்வேன்!
நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு
வாழிய நலனே! வாழிய நிலனே! என்றேன்!
தில்லை குமரர் தணிகுமரர் இடையே
இளங்குமரனாய் நிற்க ஒளிவெள்ளம் பாய்ந்து,
ஓவியப்படமாக்கியது!

'உலகத் தமிழர் பேரமை'ப்பின் வழியாய்த் தமிழர் தலைவர் பழ. நெடுமாறனார் எனக்கு, 'உலகப் பெருந்தமிழர்' என வழங்கிய விருது மெய்ப்பிக்கப் பட்டதாய் உணர்ந்தேன்!

பேரவையின் மூன்றாம் நாள்! திங்கள் கிழமை! ஆதலால் இராலே பேரரங்கம் தேவைப்படவில்லை. செரடன் இராலே விடுதி அரங்கமே சாலுமாய் இருந்தது.

13. தொல்காப்பியத்தில் தமிழர் பண்பாடு

9.7.2007 காலை 9.00 மணிக்குத் தமிழ்த்தாய் வாழ்த்து (9.00-9.05), வரவேற்புரை (9.05-9.10), தலைமை உரை (9.10-9.15) என நிகழ்ந்தன. தலைமை தமிழ்த்திரு. பிரபாகரனார் ஏற்றிருந்தார். 'தொல்காப்பியம் காட்டும் தமிழர் பண்பாடு' என்னும் தலைப்பில் 9.15 முதல் 9.40 வரை பொழிய வரம்பிடப் பட்டிருந்தது. அவ்வாறே என் பொழிவைச் செய்து முடித்தேன்.

தொல் காப்பு இயம் என முச்சொற்கூட்டுத் தொடர் இது. பழமையான மரபுகளைக் காப்பது பற்றிக் கூறுகிறது. அதன் சிறப்பு, பல்லாயிரம் ஆண்டுப் பழமையான மொழியை, ஆசிரியர் எண்ணப் படியே நாம் கற்றுப் புரிந்து கொள்ளவும் கற்பிக்கவும் இயல்பாக இயல்கின்றது.

ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்ட நூல்களையும் புரிய முடியா வகையில் பழமைப்பட்டுப் போகக் காணும் நாம்-வழக்கிழந்து போகக் காணும் நாம், மூவாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட தொல்காப்பியத்தைப் புரிந்து கொள்ள வாய்ப்பது, "நம் மொழி பழமைக்கும் பழமையாய்ப் புதுமைக்கும் புதுமையாய்" கட்டிக் காக்கப்பட்டு வருகின்றமை யாலேயேயாம் என்பதை உணர்தல் வேண்டும். அதனை அம் மரபு மாறாது காத்து வளர்க்க வேண்டும்.

அதற்கு, ஓர் அருமையான வழியைத் தொல்காப்பியர் கண்டார். "ஒரு மொழி புலமையாளர் வழக்கொடு மட்டும் நின்று விடாமல் பொதுமக்கள் வழக்கையும் தழுவியதாக இருக்க வேண்டும்"

என்றார் "வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின், எழுத்தும் சொல்லும் பொருளும் நாடி" நூல் செய்தார் என்பதைப் பனம்பாரனார் தம் பாயிரத்தில் கூறுகிறார்.

மற்றை மற்றை மொழிகளின் இலக்கணங்கள் எல்லாமும் எழுத்தும் சொல்லும் என்னும் அளவில் நின்றுவிடத், தொல்காப்பியரோ அவர்க்கு முந்தையர் கண்ட மரபு நிலைபோற்றிப் 'பொருளதிகாரம்' என மூன்றாம் இலக்கணத்தை விரிவாக விளக்குகிறார். அது வாழ்வியல் இலக்கணமாகும்.

அவ் வாழ்வியல் இலக்கணத்தையும் குடும்பவாழ்வு, பொதுவாழ்வு எனப்பகுத்துக் கொண்டு 'அகம், புறம்' எனப் பாடுபொருளாக்குகிறார். அவ் வழியே வழியாக, உலகவர் அனைவருக்கும் ஒட்டு மொத்த அறநூலாக விளங்கத் தக்க திருக்குறளும், தமிழர் வாழ்வியல் களஞ்சியங்களாகத் திகழும் பாட்டு தொகை நூல்களும் கிளர்ந்து தமிழ்வளமாகத் திகழ்கின்றன. இல்லறமே அறம் என்பதால் இல்லறத்தை அறத்தொடு நிலை என்கிறார் தொல்காப்பியர்.

இல்லற வாழ்வின் நிறைவு நிலையாகத் துறவற நிலையைக் காட்டி, "**கோலத் துறவைக் கொள்ளாமல், கொள்கைத் துறவைக்**" காட்டுகிறார். ஒரு மொழி, தன் மரபு நிலை காக்கும் திறத்திலேயே உயிருடைதாகத் திகழ முடியும் என்பதால்,

"மாற்றமும் சிறப்பின் மரபு" என்னும் அவர்,

"மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்" என்று எச்சரிக்கிறார்.

தமிழ்மொழி இயற்கை ஒலி, இயற்கை வரிவடிவுகளைக் கொண்டது. அதன் சொற்பொருள்களும் இயற்கை விளக்கம் உடையவை. ஆதலால், 'இடுகுறி' என்பது தமிழில் இல்லை என்பாராய்,

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"

என்றும், அப்பொருள் புலப்பாடு அறிய ஆழ்ந்து ஆய வேண்டும் என்பதை, "மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா" என்றும் கூறுகிறார். இவையெல்லாம் மொழிக் காவல் பண்பாடுகள்!

மாந்தர் தம் மேம்பட்ட நிலையை உணர்ந்து தம் வாழ்வை மேன்மை மிக்கதாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக, ஓரறிவு முதல் ஆறறிவு இறுதியாக உள்ள உயிரி வகைகளையும் பகுத்துக் காட்டுகிறார். அவ் வெல்லா உயிரிகளுக்கும் இன்பநாட்டம் உண்டு என்றும், துன்ப நீக்கமே விருப்பாவது என்றும் தாம் கண்ட தெளிவால்,

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வருஉம் மேவற் றாகும்"

என்றார். இதனால் எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வாழ்தல் மாந்தநேயப் பண்பாடு எனக் காட்டுகிறார்.

எழுத்துகளைப் பற்றிய பெயரீட்டிலேயே உயிர், மெய், உயிர்மெய், வல்லினம், மெல்லினம், இடையினம், நெடில், குறில், ஆய்தம், குறுக்கம், அளபெடை என மெய்யியல் கலைச் சொற்களை முந்தையர் வழியே வழியாய்க் காட்டினார். ஒவ்வோர் உயிரி நிலையும் உணர்ந்து போற்றக் காட்டும் ஆன்ம உள்ளுறைப் பண்பாடு ஈதாம்.

கட்டமை ஒழுக்கம் என வாழ்வியல் வகுத்த அவர், அரசியல், போரியல், அறிவியல், பொருளியல் என்பவற்றையும் பொது வகையால் கூறாமல், பண்பாட்டு அடிப்படையிலேயே கூறினார்! பண்பாட்டு விளக்கமாகவே எழுவகை நூல்கள், வாழ்த்து வகைகள், கூற்று வகைகள் என்பவற்றை அமைக்கிறார்.

வெட்சி வீரர் செயலை, "ஆதந்து ஓம்பல்" என்பது அருமைமிக்க பண்பாட்டுச் சான்றாம். காஞ்சித் திணையில் நிலையாமை கூறும் வகையால் நிலைபேற்று வாழ்வைக் காட்டி நெறிப்படுத்தும் திறம் அருமை மிக்கதாம்.

“விருந்தே புதுமை” என்னும் தொல்காப்பியர், “விருந்து கண்டு ஒழித்த ஊடல்” என விருந்தோம்பல் மேம்பாடு கூறுதல், தமிழர் பண்பாட்டின் தனிச்சிறப்பினதாம்!

அகப்பொருளில், தலைவன் தலைவி, கிழவன் கிழத்தி என்பதை அன்றிப், ‘பெயர்ச்சுட்டு ஆகாது’ எனலும், பாலொப்பு அன்றிப் பால் உயர்வு தாழ்வு இல்லை எனலும், மணமக்கள் எவ்வெவ் வகையால் ஒப்புநிலையராய் விளங்க வேண்டும் எனலும்-உயரிய பண்பாட்டின் விளக்கமாம்.

முப்பொருள் பிரிவு (முதல், கரு, உரி), நானிலப் பகுப்பு (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்) ஐந்திணை-எழுதிணை அகப்புறப் பகுப்புகள்-கட்டமை இசை ஓசையால் கிளரும் யாப்பியல் பகுப்பு, மெய்ப்பாட்டுப் பகுப்பு என்பவை எல்லாம் உயரிய பண்பாட்டு மரபில் இருந்து முகிழ்த்தன என்பது காட்டி நிற்பது. இதனை என்றும் போற்றி நம் வாழ்வியல் ‘வழியியல் பண்பாடுகளைக் காத்தலும் வளர்த்தலும் கடனாம்! இதனை, முன்வைக்க வாய்த்த பேரவையைப் பாராட்டி நன்றியொடும் அமைகின்றேன் என்பதை விளக்கியுரைத்தேன். நினைவுப் பதிவுகொண்டு எழுதும் இதில் சில விடுபாடுகளும் சேர்மானங்களும் இருக்கக் கூடும் என்பதை யான் உணர்கிறேன். ஆனால், இவ் வெழுத்தினும் விரிவுடையதும் உணர்வு மிக்கதுமாகப் பொழிவு இருந்தது! அப்பொழிவில், என்னையன்றி ஐவர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

9.40-10.05 அகநானூறு காட்டும் தமிழர் பண்பாடு-
திரு. ஜார்ஜ் ஹார்ட்.

10.05-10.30 குறுந்தொகை காட்டும் தமிழர் பண்பாடு-
திரு. பிரான்சிசு முத்து.

11.00-11.25 குறிஞ்சிப்பாட்டு களவொழுக்கமும்
கந்தர்வ விவாகமும்-திரு. மருதநாயகம்.

·11.25-11.50 பழந்தமிழ் இலக்கியத்தில் சமயம்
திரு. முருகரத்தினம்

11.50-12.05 கலித்தொகை காட்டும் தமிழர் பண்பாடு-
திரு. ஆண்டி

12.05-12.10 நன்றியுரை திரு. அரசு செல்லையா!

ஆய்வுக் கூட்டம் நிறைந்ததும், 'உலகத் தமிழர் நிலை' பற்றிய தனியாய்வும் கலந்துரையாடலும் ஆர்வலர் கூடிய ஆய்வாக அருமையாக நிகழ்ந்தது. ஒவ்வொரு பகுதியும் காலக் கணிப்பும், கட்டமைப்பும் உடையதாகவே திகழ்ந்தமை விழாக் கொள்வார்க்கு வாய்த்த விழுமிய சான்றாம்.

14. விழாவின் விழுமிய நிலை

என் பங்களிப்புப் பற்றியவையே இவண் என்னால் எடுத்தெழுதப்பட்டன. விழாவின் முழுநிலை விளக்கம் என்ன?

பேரவைப் பொறுப்பாளர்கள், வரவேற்பு-நன்றியுரை யாளர்கள், மேடைப் பொறுப்பாளர்கள் என்பவர்களை அல்லாமல், பொது அரங்கில் பங்கு கொண்டவர்கள் எண்ணிக்கை 293.

தமிழ்த்தேனீ என்னும் உள்ளரங்கப் பங்காளர் முதலாக, முனைவர் பட்டறை, கல்யாண மாலை, வளைப் பதிவார்கள் கூட்டம் என்பவற்றில் பங்குகொண்டோர் எண்ணிக்கையோ பிறவோ இவ் வெண்ணிக்கையில் சேராதவையாம்.

வழக்கமான ஆடல்பாடல் உரையாடல் பொழிவு என்பவை குழந்தையர் முதல் முதுவர்வரை நிகழ்த்தப்பட்டன. மகளிர் பங்களிப்பும் இசைவாணர், கலைவல்லார் நடிப்பு வல்லார் பங்களிப்பும் சிறந்தன. நாடகங்கள் கூத்துகள் பட்டி மண்டபம் பாட்டரங்கம் சொல்லரங்கம் என விளங்கின. வில்லடியும் வீணையிசையும் திகழ்ந்தன. ஒரு நிகழ்ச்சி! ஆம்! 'ஒரு' என்பதற்கு 'ஒப்பற்ற' என்னும் பொருளும் உண்டு! அவ்வாறு ஒப்பற்ற நிகழ்ச்சியே அது.

"அமெரிக்காவை அசத்தும் பெருவிழா–
நம்ம ஊரு திருவிழா"

என்பது அது!

மாரியம்மன், கும்மியாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், கரகாட்டம், ஒயிலாட்டம், குறவஞ்சி, பொய்க்கால் குதிரை, புலியாட்டம் என்னும் ஒன்பது வகை ஆட்டங்களைக் கொண்டது அந்நிகழ்ச்சி.

ஒவ்வொன்றும் தனித்தனியே வந்து, கதிரொளி பாய்ச்சி மின்னலென மறைய மறையத் தொடர்ந்து ஒன்பது நிகழ்ச்சிகளும் முடிந்ததும், அப்பாரிய அகன்று விரிந்த மேடையில், ஒன்பதுவகை ஆட்டத்தவரும், ஒருசேர ஆடிய அருமை, அவையோரைக் குலுக்கியது! அவர்களைத் துள்ளலாட்டத் திற்குத் தூண்டியழைத்தது! தனித்தனி ஆடல்கள்! தனித்தனி வண்ணவுடைகள்! தனித்தனிக் கோலங்கள்! ஒரே மேடையில் ஒரே வேளையில் ஒன்பது வகை ஆடல்கள்! அமெரிக்காவை அயர்த்திய பெருவிழா அது! நம் ஊர்த் திருவிழாக் கொலுவிருக்கை அது!

அந்த வனப்புக் கொள்ளையை வந்திருந்த அனைவரும் துய்க்க, எத்தனை காலம்-எத்தனை கலைவல்லார்-எப்பாடு பட்டனரோ-என்பதை ஏக்கப் பொருளாகக் கொள்ளாமல், எழுத்தால் வடிக்க இயலாது என அமைகிறேன்!

நம்மொழியை-நம்பண்பாட்டை-நம் கலைகளைப் 'பெட்னா' என்னும் நாற்றங்கால் வழியாக, அமெரிக்கா என்னும் நடவுநிலத்தில் நட்டுச் செழிக்க வளர்த்துச் செம்மாந்து விளங்கும், பேரவைப் பெருமக்களை நெஞ்சாரப் பாராட்டுகிறது, என் தமிழ் உள்ளம்!

பேரவையில் பங்கு கொள்ள அழைக்கப்பட்டவர் எவர்க்கும் எச்சிறு குறைதானும் ஏற்படாமல் திறத்தோடு திட்டமிட்டுச் செய்த நேயப்பெருக்கும் நேர்த்தியும் உள்ளுதோறும் உவகை செய்வதாம்!

விடுதிகளில் அறைகளைப் போட்டுவிட்டால் போதுமா? இன்னாரை இன்னார் பேணுதல், அழைத்தல், விடுத்தல் என்பவற்றைத் தனித்தனியே திட்டப்படுத்தி யிருந்த அருமையும், பொறுப்பை எடுத்துக் கொண்டவர் பொறுப்புணர்ந்து ஆற்றிய கடப்பாடுகளும் தழும்பேறிப் போன தொண்டின் சான்றுகளாம்.

15. விருந்தோம்பலும் விளங்கிய காட்சிகளும்

இராலே வானூர்தி நிலைய வரவேற்பில் கலந்து கொண்ட புள்ளம்பாடி 'செல்வம்-தேவகியர்' இல்லத்தில் யானும், முல்லை நடவரசரும் தங்குதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்! அவர்கள் பேணிய பேணுதல், சங்கப் புலவர் ஒருவர், 'கேளிர் எனக் கேளாது புக்கு' என்று பாராட்டியதை மெய்ப்பித்தது! ஒரு வேளையா, ஒரு நாளா? 5.7.2007 அவண் போய்ச் சேர்ந்தது முதல் விழாவுக்கென விடுதியில் தங்கிய இரண்டு நாள் தவிர்த்து (7.7.2007-8.7.2007) வாசிங்டன் பொழிவுக்குப் புறப்பட்டது வரை (13.7.2007 விடியல் பொழுதுவரை) ஆறு நாள்கள் அவர்கள் வீட்டிலே தங்கினோம்!

முட்டை-மீன்-புலவு-என எதுவும் கண்ணில் தட்டுப்படா உணவுப்பேறு அவர்கள் இல்லத்திலேயே காண வாய்த்தது!

ஒருவர் பொறுப்பிலே அல்லது வீட்டிலே தங்கி யிருக்கிறோம் என்றால், மற்றவர்கள் வாளா இருந்து விடுவது இல்லை! அவ் வீட்டாரொடு விருந்தாளரையும் தம் விருந்தாள ராக அழைக்கும் ஆர்வப் பெருக்கும் விருந்தோம்பலும், பழநாள் சிற்றூர் வாழ்வர், புதுமண மக்களைப் போட்டி போட்டுக் கொண்டு தத்தம் வீட்டு விருந்தினராக நாளும் வேளையும் ஒழுங்குபடுத்தி அழைப்பது போலவே இருத்தல் வியப்பாம். இதனை, மணநாள் போதினும் நயமாகத் தள்ளிய என்னால் தள்ள முடியாமல் அவர்கள் வழியில் நிற்றல் தவிர்க்க முடியா நிலை ஆயிற்றாம்!

ஆனால், வியப்பினும் வியப்பு! எவ் வீட்டு விருந்திலும் மிகுந்த மசாலை, மிகுந்த உப்பு, உறைப்பு, புளிப்பு என இல்லாமை, கூடிப்பேசிச் செய்த கூட்டுணவு போலவே இருந்து நலம் செய்தது.

வானூர்தியில் குழந்தையர்க்கு முதற்கண்ணே உணவு வழங்கி அதன் பின்னரே பிறர்க்கு வழங்குவது போல, குடும்பவிருந்துகளிலே, முதுவனும் மரக்கறி உணவினனு மாகிய எனக்கே முன்னுற உணவு வழங்கிப் பிறர்க்கு வழங்குதல் சொல்லிவைத்த ஏற்பாடு போலவே விளங்கிற்று!

செல்வம் அவர்கள் இல்லத்தில் தங்கியிருந்த நாள்களில் சில வேளைகள் பிறர் இல்ல விருந்துக்குச் செல்ல நேர்ந்தது. அது என்ன அடுத்த அடுத்த வீடுகளா? அடுத்த அடுத்த தெருக்களா? இருபது கல் முப்பது கல் (30 கி.மீ.; 40 கி.மீ.) தொலைவினவை!

காலை ஓரிடம், நண்பகல் ஓரிடம், இரவு ஓரிடம் என அமைதலும் உண்டு.

10.7.2007 காலை செல்வனார் இல்லம்
நண்பகல் வேதையனார் இல்லம்
இரவு வீரபாண்டியர் விடுதி
தங்குதலோ செல்வனார் இல்லம்!
நூறுகல் தொலைவுக்கு மேற்பட்ட சுற்று.

வேதையனார் இல்லத்தில் அளவளாவி நண்பகல் உணவருந்தினோம்.

மாலை 3.00 மணிக்கு வட கரோலினா-வரலாறு, அறிவியல், ஓவியக் கலைக் கூடங்களைக் காண வேதையனாரே அழைத்துச் சென்றார். நான்கு மாடங்களாய்த் தனித்தனியே ஓரிட வளாகத்தில் அமைந்திருந்தவை இவை.

அமெரிக்கக் கண்டுபிடிப்புகளின் காட்சி கால வரிசை யில் வைக்கப்பட்டிருந்தது. போர்க்கருவி-உடை-ஊர்தி-

அறுவடைப்பொறி-தலைச்சிராய்-காலணி என இருந்தன. பறவைகளின் ஒலிப்பதிவு, நீர்வாழிகளின் எலும்புக்கூடுகள், வால்ரசு சீல் என்பவற்றின் பாரிய வாய்-பல், அருவி ஒழுக்கு, ஊசியிலைக் காட்டு அமைவு, புல்வெளி, இயற்கை செயற்கை இலைகள், கோதுமை முதலிய கதிர்வகைகள், உலக உருண்டை இயக்கம், கோள் இயக்கம், வானக்குடை என வரிசைப்பட்டு நின்றன.

இந்தியச் சிற்பக் கலைக் காட்சிகளைக் கண்டு கண்டு பழகிப்போன நமக்கு, இருவேறுலகக் காட்சியாகத் தோற்றம் தருதல் கண்கூடு!

அந்நாட்டின் புதுமை, தொழில்வளம், கண்டுபிடிப்புச் சீர்மை என்பன பளிச்சிடுதல், அதன் பொருள் பெருக்க அடிப்படை, வாழ்வியல் சீர்மை என்பவற்றைக் காட்டுவன வாக உள.

நம்நாட்டின் காட்சிகள் பழமை, கலை, புனைவு, இறைமை முதலியன சமயச் சார்பினவாகவே தோற்றம் தருகின்றன.

அவர்கள் பழமை என்பது இருநூறு முந்நூறு ஆண்டு பட்டது. நம் பழமை ஆயிரம் ஆயிரம் ஆண்டுப் பழமையது!

ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட மகிழ்வுந்துகளை ஒரு தெருவில் கவின் காட்சியாக நிறுத்தி வைத்திருப்பதும், அவற்றைக் கண்டு மகிழ்வதும் அவர்கள் பழமை போற்று தலைக் காட்டும். நம் பழமையோ நம்மால் ஏறிட்டும் பார்க்கப் படாத அளவு, செல்வத்திற்கு உரிய ஒரு பெயராக உள்ள 'வெறுக்கை' என்பதை நினைவூட்டுவது!

பழைமையிலேயே பெரிதும் நீந்தும் நமக்கு அவர்கள் புதுமை மாட்சி வியப்பூட்டுவது போல, அவர்களுக்கு நம் பழமை வீறு பட்டொளி செய்து பரவயப்படுத்துகின்றது!

எது எங்கு இல்லையோ, அது அங்கு மதிப்புப் பொருளாகி விடுதல் உலகியற்கையாம்!

மாடிக்கு மாடி தூக்கிகள்; இழுவைப் படிகள், இயல்பான படிகள் என்பன பலப்பல இடங்களில் உள. காட்சிச் சாலை எதற்கும் கட்டணம் இல்லை. அப் பொறுப்பை ஏற்று அமைத்துப் பேணிவரும் தனிப்பெரும் செல்வர்களே, நாடு பேணும் புரவலர்களாக உளர்.

தொழில் அறிவியல் அரங்கம் ஒன்றைக் காணவே-விரைந்து சுற்றிக் காணவே-அரங்கப் பொழுதாம் ஐந்து மணியைத் தொட்டதால் அவ்வளவுடன் அமைந்து மீண்டோம்!

இரவு உணவுக்கு வீரபாண்டியார் தம் விடுதிக்கு அழைத்திருந்தார். அவர் மேனாள் தமிழக அமைச்சர், அவைத்தலைவர் கா. காளிமுத்து அவர்களின் உடன்பிறந்தார்! சாயல் அப்படியே இருந்தது. அதற்கு முன்னர் விழாப் பொழுதுகளிலேயே உழுவலன்பொடும் உறவாடி உரையாடி மகிழ்ந்தவர். முல்லை நடவரசர்க்கு முன்னரே தொடர்புடையவர். மதுரை மீனாட்சி மருத்துவமனை நிறுவனர் மருத்துவர் சேதுராமனாரும் அவ்விருந்துக்கு வந்தார். தமிழ்ப் பேரவை ஒருங்கிணைப்பாளர் தணிகுமரன் சேரனாரும் உடனானார்! நெல்லைச் செல்வர் பால்பாண்டியனார் என்னை நன்கு அறிந்தவர். என் அண்ணார் மைந்தர் பேரா. பெ.இராமச்சந்திரன் வழியில் உறவானவர். அவர் ஊர்க்கு வந்துவிட்டமையால் அவர்க்கு அன்பர் சிலரும் எங்கள் விருந்தில் கலந்து கொண்டனர்.

அமெரிக்காவுக்கு அலுவலாகச் சென்றவர்தாம் வீரபாண்டியனார். அவர் திறப்பாடு, ஒரு விடுதி நடத்தித் தமிழரை அன்றிக் கறுப்பர் வெள்ளையர் என அனைவரையும் அயல்நாட்டவரையும் கவர்வதாய் உள்ளமை கண்டு பூரிப்பாயது. இரவு பத்துமணிப் போதிலும் விறுவிறுப்பான இயக்கத்தில் இருந்தது. வண்டிகள் நிறுத்தத் தக்க பெருவளாகத்தில் நடுவமாக இருந்தது ஊணகம்!

ஆக்குவார் படைப்பார் அனைவரும் தமிழ்மண்ணினர். தமிழில் அளவளாவி வழங்கும் அன்பினர்.

முதற்கண் வழங்கப்பட்ட 'சாறு' அருமை! சாறு என்பது விழா! பெருவிழாக்களிலும் அரங்கேற்று அவைகளிலும் சிறப்புறு விருந்துப் பொருளாகச் சாறு இருந்தமையால். அதற்குச் 'சாறு' 'விழா' எனப் பொருள் ஏற்பட்டது. அரங்கேற்று அவைப் பாராட்டுப் பாடல்கள் '**சாற்றுக்கவி**' எனப்பட்டது இவ் வகையாலேதான். பொருள் புலப்பாடு இல்லாமல் '**சாத்துக்கவி**' யாகச் சாற்றப்படுகிறது.

சாறு பருகியபின் தோசைவகை, இட்டவி, வடைவகை, பச்சி என வகைவகையாக வேண்டுவார் வேண்டு வகையில் எய்தியது! யான் என் செய்வேன்? ஒரு மசால்தோசை வாங்கி அதனை முடிக்கவே அரும்பாடு பட்டேன்! என்ன சுவை எனினும் குடலளவு தாங்க வேண்டுமே! அருகில் இருந்த சேதுராமனார் முடிந்த அளவு உண்டு வைத்துவிடுங்கள் என்றார். குடிப்பு தேநீர்-குளம்பி-பழச்சாறு என இருந்தன. என் அளவு சிறிதும் கூட்ட இயலாது! குறைக்க வேண்டுமானால் எவ்வளவு குறைத்தும் உண்ணப் பழகிப் போனவன். என் உணவுக் கொள்கைகளில் ஒன்று; விருந்துணவிலே எனினும் ஓரளவு பசியிருக்கவே உண்டு எழும்ப வேண்டும் என்பது! பலர்க்கு இடராம் இது, எனக்கு இயல்பாகப் பழகிப் போய்விட்டது.

சேதுராமனார் தமிழில் வழங்கும் **நாற்கவி** என்பதன் விளக்கம் கேட்டார். பிறரும் செவிதந்தனர். ஊணகம் உவப்பான உரையகமாகவும் திகழ்ந்தது. வீரபாண்டியனார் விடுதிக்கு எங்களை அவர் வண்டியிலே அழைத்து வந்தார். விருந்தின் பின்னர் தணி குமரனார், தம் ஊர்தியில் நாங்கள் தங்கியிருந்த செல்வனார் இல்லத்தில் விடுத்துத் தம் இல்லத்திற்குப் புறப்பட்டார். அப்பொழுது இரவு 11 மணி.

✵

16. விண்ணில் பறந்தாரை எண்ணிய செலவு

11.7.2007 அன்று இரைட்டு உடன்பிறந்தார் வானூர்தியில் பறந்த இடத்திற்குச் சென்று வருவதற்கு வீரபாண்டியார் ஏற்பாடு செய்திருந்தார். நாங்கள் தங்கியிருக்கும் இராலே பகுதியில் இருந்து நான்கு மணிப்பொழுது மகிழ்வுந்துச் செலவு. ஏறத்தாழ நானூறு கிலோமீட்டர் தொலைவினது. அதற்குத்தக வழக்கத்திற்கு முன்னாகவே எழுந்து கடன்களை முடித்துக் கொண்டு புறப்பட அணியமானோம். செல்வனார் காலையில் குளம்பி தந்ததுடன் காலை நண்பகல் உணவுகளையும் ஆக்கி வழங்கினார். வீரபாண்டியார் காலை எட்டுமணியளவில் வண்டியோடு எய்தினார். யானும், முல்லை அரசும், சேதுராமனாரும் புறப்பட்டோம். வீர பாண்டியாரே வண்டி இயக்கினார்.

வானூர்திச் செலவில் ஏறும்போதும் இறங்கும்போதும், சில கட்டடங்கள் சில வெளிச்சங்களைக் காணத்தானே முடியும்! விழாவும் அரங்கும் விடுதியும் என்றால் எல்லாம் கட்டடப்பரப்பும்-மாடி-அடுக்குமாடி-தூக்கி என்பவைதாமே! காலை உலாவலில் ஐந்தாறு வீடுகள் கடக்கவே, மாறி நடக்கவே அரைமணி முக்கால் மணிப்பொழுது! சாலை, நடைபாதை, புல்வெளி, மரம், கட்டடம் என்பவையே! எப்பொழுதோ எவரோ ஒருவர் விடியல் நடைபயில வருவார்! பழகாதவர் எனினும் முகம்பார்த்து 'ஆய்' என்று நகைத்துப் போய்விடுவார்!

ஆனால், நானூறு கல்லுக்கு மேலும் சென்று மீளும் இந்நெடுஞ்செலவு இன்பக் கொள்ளையாம்!

ஊருக்குள் என்றால், உள்ள சாலைகள் எல்லாம் வளைவும் நெளிவும்! இந் நெடுஞ்சாலை கடற்கரை வரை செல்லும் சாலை! நேர், நேரே! மூவழி நால்வழித் தடங்களே!

சாலையில் இருபாலும் பச்சைப் பசுங்கோட்டைகள் கட்டி எழுப்பினால் போன்று இடைவெளியில்லாச் செறிவுடைய மரங்கள்! கட்டிவைத்த பச்சைக் கற் கோட்டைகளைப் போல! அக் கோட்டைக்கும் சாலைக்கும் பரப்பிவைத்த பச்சைக் கம்பளம் என்னப் புல்தரைகள்! சாலைக்கு நாற்பது ஐம்பது அடி அளவில் கட்டடம் இல்லாத திட்டமான அமைப்பு! அங்கும் எங்கும் எவரிடமும் வினவியறிய வேண்டாத சாலைக் குறிப்புகள் நகரக் குறிப்புகள்-பிற விளக்கங்கள்!

இடைவெளிப்பட ஓய்வில் தங்கவும் உண்ணவும் வாய்த்த சாலை ஓர வளாகங்கள்-அங்காடிகள்!

எந்தக் குறுக்கீடும் தடைப்பாடும் இல்லாச் சாலைப் போக்குவரத்தால் 60 கல், 70 கல், 80 கல் விரைவு! கிலோ மீட்டர் அன்று! மைல்!

காணும் பரப்பெல்லாம் பசுமைவெளி! ஊடேஊடே குத்தவரை (பீன்சு); பயிர் நிலம் என்றால், முந்நூறு நானூறு ஏக்கர் பரப்பு! குழாய்நீர் தானே பாயும் ஏற்பாடு. அட்லாண்டிக் கடலுள் பாலங்கள் இரண்டு! அச் செலவு கடல்மேல் கலச்செலவு போல இன்பச் சுரப்பானது! சாலைப் பரப்பில் ஓரத்து மரம் பார்வையைத் தடுத்து நிறுத்துவது போலக் கடற்பரப்பு தடுப்பது இல்லையே! வானும் நீரும் கைகோத்து நிற்கும் காட்சியல்லவோ அது!

காலைச் சிற்றுண்டியை 9.30 அளவில் முடித்தோம்! இரண்டு மணியளவில் கடல்சார் காட்சியக வளாகத்தில் நண்பகல் உணவு முடித்தோம். காட்சியகத்தையும் கண்டோம்!

இராலே என்பார் முதற்கண் வந்த இடமும், குடியிருப்பு

அமைத்த இடமும், அவ் வளாகமும் கண்டோம்! அவர் பெயரால் அமைந்த மாநிலமும் பெருநகரமுமே இராலே யாம்! திட்டமிட்ட நகரமைப்புச் சான்று அவ்விராலே அமைத்த அமைப்பே என்பதும், சாலைப் போக்குவரவு இல்லா எப்பகுதியும் இல்லை என்றும் ஆக்கியவர் அவரே என்பதும் அவர் பெற்ற புகழ்மாலை!

இராலே இருந்த பழமையான வீடு மண்ணால் கட்டப்பட்டது! மரத்தைப் பயன் படுத்தியது! இன்றும் காக்கப் படுகிறது. அதனை அடுத்தே நாடக அரங்கம் ஒன்று இயற்கை வெளியரங்கமாக விளங்குகின்றது!

"மக்களால் ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இராலே, மக்களுள் மக்களாகவே நடந்தும், விடுதி சென்று உண்டும், வரிசையில் நின்று அங்காடியில் பொருள் வாங்கியும் வாழ்ந்தார். துமிக்கி இல்லாத ஒருவர் உடனாகி இருப்பார்! அவரை எவரும் காணலாம்! உரையாடலாம்! மக்களுக்காக யான் என்பது அவர் கொள்கையாக இருந்தது" என்கின்றனர். அவர் ஆளுநராக இருந்த மாளிகைப் பகுதியிலேயே மாநாடும், எங்கள் தங்குதல் விடுதியும் இருந்தன வாகலின் அவரைப் பற்றிய செய்திகளைப் பலர் சொல்லக் கேட்க வாய்த்தது.

இராலேயின் பழைய மாளிகையைத் தாண்டி அரைமணி நேரம் ஓடினால்-(ஓரிடத்திற்கும் ஓரிடத்திற்கும் உரிய தொலைவைக் கல்லளவால் குறிப்பதிலர்-அரைமணி-ஒரு மணிச் செலவு என்பது ஆங்குள்ள வழக்கமாம்) இரைட்டு உடன் பிறந்தார் விண்ணில் பறந்த விரிவான வளாகத்தைக் காணலாம் என்றனர். அச் செலவில் இருபாலும் கட்டடங்கள்-தொழிலகங்கள்-அங்காடிகள் என்பனவே உள. தங்கல் விடுதிகளும் பலப்பல.

இரைட்டு வளாகம் சேர மாலை மணி நான்கு ஆயது. கட்டணம் வழங்கியவர் உள்ளே விரைந்து சென்றால், "காட்சி விளக்கம் கண்டு கேட்டு மகிழலாம்" என்றார். ஏறத்தாழ

முக்கால் மணிப்பொழுது இரைட்டு உடன்பிறந்தார் வரலாறு, அவர்தம் அயரா முயற்சி, மும்முறை பறந்தமை, நான்காம் முறையில் சிறந்தமை, அவர்தம் ஊர்திகள், கருவிகள் என்பவை பற்றிய விளக்கங்கள் செய்தார் ஒருவர். வானூர்தி மாதிரிகள் இருந்தன. இவற்றை விளக்கும் காட்சிச் சாலையும் ஆங்கேயே இருந்தது. ஒவ்வொரு முறையும் பறந்த தொலைவு அடையாளம் இடம் காட்டப்பட்டிருந்தது. நினைவுக் குறியாகப் பெருகி உயர்ந்து விரிந்த திரடு ஒன்றில் உயரமான நினைவுத் தூண் இருந்தது. ஒரு பெருநகரப் பகுதிக்கு வேண்டும் விரிவுப் பசும்புற் பரப்பும், சுற்றுச் சாலையும் நடைவழியும் உடையதாக இருந்தது! அமெரிக்க இடப் பரப்பில் அது கூடுவதே என எண்ண வைத்தது.

''எவர்பொருள் கொண்டும், எவர்செய்த கருவி கொண்டும் நாங்கள் பறக்கவில்லை! எங்கள் முயற்சியே''

என்பது, தட்டி எழுப்பும் எழுச்சி முரசங்களாக இன்றும் முழங்கிக் கொண்டிருக்கும் அவ்வளாகம், ஏறா விண்ணில் ஏறத் தூண்டிய-அண்டம் விட்டு அண்டம் செல்ல ஏவிய உந்து கோள் இடமாம்! தன்னம்பிக்கை மாந்தனுக்குத் தன்னம்பிக்கையே முற்பொருளும்! முழுப் பொருளும்! தன்னம்பிக்கை இல்லானுக்கு என்னம்பிக்கை இருந்தும் ஆவது என்ன?

1901, 1902, 1903 ஆகிய மும்முறையும் பறந்துபோய அடையாளமும், வானூர்தி ஓட அமைத்த தண்டவாளத் தடமும் காக்கப்படுகின்றன.

ஆர்வில் இரைட்டு கி.பி. 1871-1948

வில்பர் இரைட்டு கி.பி. 1876-1912

இறுதியாக மிகப் பறந்த நாள் 17.12.1903

உள்வளாகத்தை நடந்து பார்த்துவிட்டுத் திரும்பினோம். தணி. குமரனார் இல்லத்திற்கு 10 மணி அளவில் வந்து ஆங்கு விருந்துண்டு பின்னர் அவர் ஊர்தி வழியாகச் செல்வனார் இல்லம் சேர்ந்தோம்.

17. நூலகம் பாலகமா மேலகமா?

12.7.2007 இல் இராலே பகுதியில் அமைந்த நூலகம், பள்ளி, அங்காடி என்பவற்றைக் கண்டுவரத் தேவகியார், காஞ்சி இராசேசுவரியாரை வேண்டியுளார். அப்பணியை அவர் விரும்பி ஏற்று, எங்களை அழைத்துச் சென்றார். தேவகியார்க்கு அலுவலகப் பணி அழுத்தம் அவ்வளவு இருந்தது.

தொடக்கப் பள்ளி ஒன்றனைக் கண்டோம்! அது தொடக்கப் பள்ளியா என வியந்தோம்! முதற்கண் அதன் பரப்பு! அடுத்து அதன் கட்டடம்! மேலும், பள்ளிக்கூட வண்டிகள் ஐம்பது அறுபது! மாணவர் வண்டிகள் நூற்றுக்கு மேல்! விளையாட்டிடம் எல்லாம் எல்லாம் நம் நாட்டுக் கல்லூரிகளும் முன் நிற்க முடியாச் சிறப்பினவை!

அடுத்துக் கண்டது 'மேற்குப் பகுதி நூலகம்' என்பது!

இராசேசுவரியார் தம் மக்கள் படிப்பதற்காகவும், தாம் படிப்பதற்காகவும் எடுத்துச் சென்ற நூல்கள்! தம் வண்டியில் அமர்ந்திருந்தபடியே நூலகச் சுவரொடு பொருந்திய புழைவழியாக நூல்களைக் கட்டாக உள்ளே தள்ளினார்.

"நூல்கள் உள்ளே போய்விடும்! அந்த நூல்கள் நூலகத்திற்கு மீண்ட குறிப்பு பதிவேட்டில் ஏறிவிடும்! நூல்கள் இருக்க வேண்டும் இடத்தில் ஆகிவிடும்! நூலைத் தர நாம் நேரே போக வேண்டும் என்பது இல்லை!" என்றார்.

புத்தகம் எடுக்கப் போகலாம்; வேண்டுவன நாமே எடுத்துக் கொள்ளலாம்! நாமே கணினியில் பதிவு செய்து விடலாம்! புத்தகத்தை எடுத்துக் கொண்டு வந்துவிடலாம்! எவருடைய கண்காணிப்பும், பதிவும் வேண்டுவது இல்லை.

ஏதாவது விளக்கம் வேண்டுமானால் ஆங்கிருக்கும் பொறுப்பாளரிடம் கேட்டால் உரிய விளக்கங்கள் தருவார்! இங்குப் பெற இயலா நூல்கள் எங்குப் பெறலாம் எனச் சுட்டுவார்! என்று விளக்கினார்.

அந்த நூலகம் பெரிதும் குழந்தையர்க்கே உரிய தாகலின் பத்து ஆண்டுகளுக்கு உட்பட்ட நூல்களே ஆங்கு உண்டாம். அதற்கு முந்தியவை அப்பாற்படுத்தி வேறு நூலகங்களுக்குச் சென்றுவிடுமாம்!

நூலகச் சுற்றைப் பார்க்க வியப்பாயிருந்தது. நூல் வைத்திருக்கும் அட்டளை, பேணும் தூய்மை. வரிசைக் கட்டொழுங்கு, ஆங்காங்குள்ள பதிவுக் கருவிகள், குழந்தைகள் அமர்ந்து கொண்டும், சாய்ந்து கொண்டும், படுத்துக் கொண்டும் படிக்கச் செய்துள்ள ஏந்துகள் ஆகியவை எல்லாம் 'என்னைப் பார் என்னைப் பார்' என நோக்க வைத்தன.

நூலகத்தின் ஒரு பகுதி மழலையர் பள்ளியாக விளங்கியது. ஒரு வயதுக் குழந்தைகள் முதல் இருபது முப்பது பேர் இருந்தனர். அவர்கள் பெற்றவர்கள் அல்லது உற்றவர்கள் ஒவ்வொருவர்க்கும் உடனாகியிருந்தனர். மடியில் தோளில் போட்டிருந்த குழந்தைகளும் விரிப்பில் கிடத்தியவர்களும் இருந்தனர்.

விளக்குநர் கதை படம் பாட்டு ஆட்டம் செய்தி ஆகியவற்றைச் சொல்லுவதும் சைகை செய்வதும் ஆடி அசைவதும் போலப் பெற்றோர் செய்தனர்; பிள்ளைகளும் செய்ய வைத்தனர்.

பெரியவர்கள், குழந்தைகளுடன் ஒன்றாகக் கற்று அதனைக் கற்றுத் தருபவராகவும் இருந்தனர்.

ஓய்வு ஒழிவு வாய்க்காத பரபரப்பான அமெரிக்க வாழ்வில் இவ்வாறு குழந்தைகளுக்காகக் காலம் ஒதுக்கிக் கொள்ளப் பெற்றோர்க்கு எப்படி முடிகின்றது! "தம் பொருள் என்ப தம் மக்கள்" என்னும் பெருநிலையில் கொண்டதாக

இவ்விளமை நிலையில் கொள்ளலாம்! ஆனால், வளரவளர எவரொடும் எவர்க்கும் என்ன ஒட்டு? என்ன கூட்டு? 'விரும்பிய வண்ணமே' என்பதை அன்றிக் குடும்பத்தவரொடு ஒத்தது அறிந்து ஒட்டி வாழும் நிலை வினாக்குறி ஆகி விடுகின்றதே!

ஆனால், தமிழகத்துக் குழந்தைகளுள் அமெரிக்க மயம் ஆனவை-அல்லது ஆக்கப்பட்டவை அல்லாத மற்றவை எல்லாம், ஆடல் பாடல் உரிமைகளொடு ஒட்டுரிமையும் கொண்டு வாழமுடியாது எதனால்? மரபு நிலை மாறாமல் மயங்காமல் பேணி வருவதால் ஏற்படுபவை அவை என்பதை உணர்ந்தால், அவை என்றும் எங்கும் நம்மவர் அடையாளமாகித் திகழும்! அவ்வாறே நான் நெருங்கியிருந்த உறைந்த குடும்பப் பெற்றோர்களும் பிள்ளைகளும் இருக்கக் கண்டு என்னுள் தளிர்ப் பெய்தினேன்.

இனி, நூலகத்தின் மொழி ஒப்புரிமை பேணற் சான்று ஒன்றைச் சுட்டுதல் வேண்டும்.

வாரந்தோறும் காரி(சனி)க் கிழமையன்று நூலக அரங்கு ஒன்றில் விரும்பும் குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கவும் கலந்துரையாடவும் முதியவர்கள் ஆய்வு செய்யவும் வாய்ப்புத் தந்துளர்! வாரந்தோறும் தமிழ்ப் பிறவியர்க்கு வாய்க்கும் பேறு அல்லவோ அது!

புது நூல்கள் வாங்கவும், பழுதாகிய பழைய நூல்களை அட்டை கட்டவும் வாய்ப்பு இல்லாமல் தேய்பிறையாகி வரும் நம் ஆணைக்குழு நூலகங்களுள் பலவற்றைக் காணும்போது, உண்டாகின்ற கசப்புணர்வு, அப்பொழுது தலைநீட்டாமல் இருக்கவில்லை.

ஒன்றைக் காணுங்கால் அதன் ஒப்பே அன்றி, அதன் மறுதலையும் தோன்றாமல் இருப்பது இல்லையே! வேறு ஒன்றும் இல்லை, அந்தத் தூய்மை, அந்த வளமை, அந்த அமைந்த கட்டொழுங்கு என்பவையெல்லாம் வாய்திறந்து என்ன சொல்கின்றன? நீங்கள் எப்பொழுது இந்நிலையை எய்தப் போகிறீர்கள் என்பதேயாம்!

18. பல்பொருள் அங்காடி

நூலகத்தைக் கண்டு வியந்த நாங்கள் பல்பொருள் அங்காடி ஒன்றனைப் பார்க்கச் சென்றோம். அதன் பரந்த முகப்புப் பகுதியில் நூற்றுக்கணக்கான வண்டிகள் நின்றன. இன்னும் அதுபோல் பன்மடங்கு வண்டி நிறுத்த இடம் இருந்தது. நுழைவாயில் பகுதியைக் கடந்ததும் தள்ளு வண்டிகள் வரிசைவரிசையாக அடுக்கி நிறுத்தி வைக்கப் பட்டிருந்தன. பொருள் வாங்க வருவார் அதனை முதற்கண் தள்ளிக் கொண்டு அங்காடிக்குள் நுழைவர். வேண்டும் பொருட்பகுதி உள்ள இடங்களுக்குத் தள்ளிக் கொண்டு சென்று தமக்கு வேண்டும் பொருளை எடுத்து வண்டியில் வைத்து, இன்னும் இன்னும் வேண்டும் பகுதி செல்வர். வேண்டுவ எடுப்பர்; நிறைவில் கணினியில் பற்றுச் சீட்டு வரும். அட்டை ஒன்றை அதுவே பதியும்! காசு கழிக்க வேண்டும் வைப்பகத்தில் இருந்து கழிந்துவிடும்! அட்டை கொண்டே எல்லாக் கணக்குகளும் வாங்கக் கொடுக்க நிகழும்!

நாங்கள் புகுந்த பேரங்காடியில் காய்கறிகள், கீரைவகைகள், பழ வகைகள், பருப்பு வகைகள், மளிகைப் பொருள்கள், சலவைப் பொருள்கள், புனைவுப் பொருள்கள், தின்பண்டங்கள் என வகைவகையாக "எல்லாப் பொருளும் இதன்பாலுள" என இருந்தன. புலவு வகைகளும், பதனிட்ட உணவு வகைகளும், மதுவகைகளும் இருந்தன. வெளியே வைக்கப்பட்ட பொருள்களை அன்றிப் பதன்கெடாமல் காக்க வேண்டும் பொருள்களை வைக்கும் வைப்பறையின் பக்கம்

செல்லவே நடுக்காயது! அதனைக் காணலாமா என்ற இராசேசுவரியார், பொறுப்பாளர் அவர்களிடம், "இந்தியாவில் இருந்து இங்கு வந்தவர்கள்! அதனைக் காண விரும்பு கின்றனர்" என்ற அளவில் அவர்தாமே வந்து அழைத்துச் சென்றார்.

உள்ளே புகுந்தால் ஒரே பனிப்பொழிவு! வெண்போர்வை மூடல்! இரண்டு மணித்துளிதானும் நிற்க இயலவில்லை! அதற்குள் பணிசெய்வார் அரைமணிக்கொரு முறை மாற்றப் பெறுவராம்! அந்த அரைமணி! உறைபனி ஊடு இருப்பது அல்லவா ! துருவப் பகுதி வால்ரசு, சீல் என ஆகிவிட்டவ ராகவே அவர் இருப்பார்! ஆங்கிருந்து வெளியேறினேன், இரண்டு மணித்துளிப் பொழுதுக்குள்! வெளியேயும் குளிரறையே! ஆனால் அது கதகதப்பாக மாறிவிட்டதே!

அக்குளிர்க்கு இக்குளிர், எக்குளிர்!

தோளிலே துடிக்கத் துடிக்க வலியிருந்ததாம் வலிய வீரன் ஒருவனுக்கு! வீரன் எனினும் வலி வலி தானே! அவன் போர்க்களம் போக அவ் வேளை வந்தது! போனான்; களத்தில் பகைவன் ஏவிய வேல் மார்பில் பட்டுத் துளைத்தது! அத்துளைப்பின் பின்னால் தோளில் இருந்த வலி தெரியாமல் போயிற்றாம்!

"வேல் ஏறுபடத் தோள் ஏறு விட்டாற்போல"

என்பது பழைய உரை! அதுபோல், குளிரூட்டறைப் புகவு, செந்தணப்பு அறைக்குளிரைப் போக்கி வெதுப்பறைக் காட்சியாக்கிற்று!

இவ்வளாகத்தின் அடுத்தடுத்தே குடும்பப் பயன் பொருள், மின் பொருள், கட்டடம் கட்டுமானப் பொருள், உதிரி உறுப்புகள், பூந்தொட்டி வகைகள், அடுகல, அணிகல வகைகள், விளையாட்டுப் பொருள்கள், பழப்பயிர்கள்,

பூவகைகள் என, “நாள்முழுதும் பார்த்தாலும் நான் பார்த்து முடித்தேன்” என்று நிறைவு வாராப் பேரங்காடியில் இருந்து வெளியேறினோம்!

அடுத்து இதனினும் பெரியதோர் அங்காடிக்கு அழைத்துச் சென்றார்; “இவ் வங்காடியை முதற்கண் பார்த்திருந்தால் அவ்வங்காடியைப் பார்க்க வேண்டியே இருந்திருக்காது” என்றார் இராசேசுவரியார்.

காலணி, உடுப்பு, பெட்டி, அழகுப் பொருள் என ஒவ்வொரு பகுதியும் நீண்டு அகன்று கிடந்த அவ்வளாகத்தைப் பறவைப் பார்வையாய், மான் பாய்ச்சலாய்ப் பார்த்து, மயிலாடுதுறை அன்பர் அசோகனார் இல்லம் சென்றோம்! அவர் வாழும் நகர்ப்பகுதி ‘கேரி’ என்பது! அவர்தம் செல்வன் ‘சாயிராம்’ பேரவை நடாத்திய திருக்குறள் போட்டியில் பரிசு பெற்றவன். யான் பரிசு வழங்கியதையும் அவன் பெற்றதையும் குறிப்பிட்டு மகிழ்ந்தனர்.

✲

19. வீட்டுக்குள்ளேயே நயாகரா

அசோகனார் இல்லத்தில் அரிய உணவுகளைத் தேர்ந்து தேர்ந்து அமைத்திருந்தனர். விருந்து வழங்கும் உள்ளங்களுக்கு விருந்தாளர் வழங்கும் ஒரு விருந்து உண்டு! அது, தாம் வழங்கும் விருந்தினைச் சுவைத்துச் சுவைத்து உண்டு, கேட்டுப் பெற்றுத் துய்ப்பது! இதனைப் பிறர்பிறர் செய்வதைக் கண்டும் உணர்ந்தும், என்னால் செய்யக் கூடுவது இல்லை! என் செய்வேன்! அழுந்திய பழக்கம் அவ்வப்போது யார்க்காகவும் எதற்காகவும் மாற்றிக்கொள்ள இயல்வது இல்லை! எனக்கு ஏற்றதாய் யான் எண்ணும் உணவில் எனக்கு வேண்டும் அளவே எடுத்துக் கொள்வது. "இவ்வளவு செய்தும்.." என்னும் எண்ணம் விருந்தோம்பும் தாய்மைக்கு ஏற்படாமல் தீராது!" எனக்கோ அதனை ஏற்படுத்தாமல் தீராது! ஒப்புக்கு அமர்ந்து உண்டதாகக் கருதினாலும், எனக்கு முழுநிறை அளவு அதுவே ஆதலைக்குடல் உணர்த்தத் தவறாது. பல இடத்து விருந்தின்போதும் ஏற்பட்ட பொதுநிலைக் குறிப்பை இவண் சுட்டினேன்! அவ்வளவே!

நயாக்ரா செல்லும் எண்ணம் எங்களுக்கு இருந்ததால் அதன் தொலைவு, செல்வதற்கு ஆகும் பொழுது என்பவற்றை அறிய ஆவலாயிற்று. அசோகனாரிடம் வினாவினோம். அவர்தம் மக்களை நோக்கினார்! மக்கள் கணினியை நோக்கினார்; நாங்கள் அவர்களையும் கணினியையும் நோக்கினோம்! அவர்கள் இல்லத்தில் இருந்து புறப்பட்ட கிளைச்சாலை, தலைமைச்

சாலை, குறுக்கிடும் சாலைகள் நகரங்கள் காட்டிக் காட்டி எங்களைக் கூட்டிக் கொண்டே அருவியின்முன் நிறுத்தியது கணினி!

விளையாட்டுப் போல விளக்கத்தை எங்களுக்குக் கண்முன் காட்டி வியப்பூட்டி விட்டனர். பின்னர்ச் சில பேசிச் செல்வனார் இல்லத்திற்கு அவரே அழைத்து வந்தார். புறப்படும்போது அருமை பலவற்றுக்கு இடமாம் செல்பேசி ஒன்றனை வழங்கினார். அன்பர் முல்லை நடவரசர்க்கும் வழங்கினார். நன்றிகூறி விடை பெற்று வந்தோம்! இரண்டு நாள் கழித்து அசோகனாரிடமிருந்து ஒரு செய்தி, எனக்கு வழங்கப்பட்ட பேசியில் இணைக்கத்தக்க பொறி ஒன்று தர விடுபட்டுப் போய்விட்டது? எப்படி விடுப்பது? என்றார். உங்களுக்கு விடுக்க எளியவழி, 'சென்னை தமிழ்மண் பதிப்பக உரிமையாளர் கோ. இளவழகனார்க்கு விடுப்பதே. அவர் எனக்கு உடன்சேர்ப்பார்" என்றேன்! வியப்பு என்ன? யான் திரும்பித் தமிழகம் வருமுன்னரே அவர் அப் பொறியை இளவழகனார்க்கு விடுத்துவிட்டார்! அசோகனார் ஊர், மயிலாடுதுறை! பயன்மிக்க பொருளும் பயன்படுத்துவார் கையில் இருந்தால் தானே பயன் செய்யும்! எப்படிப் ;பயன்செய்யுமோ எனக்கு, என்பது நடைமுறையிலேயே புலப்படும்.

தமிழகத்தில் தேனி பெரியகுளம் கடமலைக்குண்டு என்பவை சார்ந்த கோவிந்த நகரினர் 'இரவி-ஆர்த்தி' இணையர். அவர்கள் விழாவின்போதே அறிமுகமாகியவர்கள் செல்வனார் தேவகியார் ஆயோரையும் எங்களோடு விருந்துக்கு அழைத்திருந்தனர். இரவியார் ஊர் சென்றிருந்தார். அவர் அன்று வருவதாக இருந்தார். வானூர்தித் தாழ்வால் அவர் விடியல் வருவார் என்பது தெளிவாயிற்று.

ஆர்த்தியார் விருந்து ஏற்பாடு பலவும் சிறப்பச் செய்திருந்தார். வீடு, அவர்களே இடம்வாங்கி விரும்பும் வகையில் கட்டியது என அறிந்தோம். அடித்தளம் நிலத்தளம், மேல்தளம் என முத்தளம் கொண்டது. ஆடிடமும் கொண்டிருந்தது. அனைவரும் மகிழ்வொடு விருந்துண்டு செல்வனாருடன் அவர் இல்லம் சேர்ந்து தங்கினோம். விடியலில் வந்த இரவியார் பேசி மகிழ்ந்தார்.

20. வாசிங்டன் செலவு

13.7.2007 விடியல் எழுந்து கடமைகளை முடித்துக் கொண்டு வாசிங்டன் செல்லும் திட்டத்தொடு இருந்தோம். செல்வனார் இல்லத்தில் காலை உணவு அணியப்படுத்தி யிருந்தனர். வீரபாண்டியர் அங்கே வந்தார். எங்களை அழைத்துச் செல்லும் பொறுப்பு மேற்கொண்டிருந்த தணி-குமரனார் எய்தினார். என் திட்டம் வாசிங்டன் சென்று நிகழ்ச்சியை முடித்து நயாக்ரா நீர்வீழ்ச்சியைக் கண்டு, நியூசெர்சியில் உரையாற்றிவிட்டு, நியூயார்க்கு நிலைய வழியாகத் தமிழகம் சேர்வதாக இருந்தது. ஆதலால், செல்வனார் குடும்பத்தவ ரிடத்தும், வீரபாண்டி யாரிடத்தும் விடைபெற்றுக் கொண்டேன். நரம்பு சுண்டுதல் விரைத்தல் போதில் உதவுமெனச் செல்வனார் எங்களுடன் வந்து ஒரு மருந்தகத்தில் BENGAY என்னும் தடவி பசைக்கூடு ஒன்றனை வாங்கி வழங்கிவிட்டு விடைபெற்றுக் கொண்டார். வீரபாண்டியார், செல்வனார், ஒரு பேரன்பர் என மூவர். தனித்தனி நூறு தாலர் தவச்சாலைக்கென வழங்கினர். தணி குமரனார் ஊர்தி வழியே யானும் நடவரசரும் வாசிங்டன் செலவு மேற்கொண்டோம்.

தணிகுமரனார் இசைக்காதலர்; இயற்காதலர்; இவற்றின்மேல் தொண்டின் ஊற்றமிக்கார். என்னிடம் சில வினாவி அறிவதற்காக அவர் என்னை முன் இருக்கையில் அமரக் கூறினார். நம் பழ வரலாறு பண்பாடு இலக்கியம் முதலிய பலப்பல வினாக்களைத் தொடுத்தார். எட்டுமணி யளவில் நியூரேலியில் இருந்து கிளர்ந்து ஏறத்தாழ இரண்டு

மணிநேரச் செலவின்பின், காலை உணவுக்கு ஓர் அமை விடத்துப் புகுந்தோம். சாலைச் செலவு கொள்வார்க்கு, ஓய்வுகொண்டு செல்லும் இடம் அது. உண்ணும்போது ஒரு திட்டம் அவர்க்கு ஏற்பட்டிருக்கிறது. புறப்படும்போது எங்களை வாசிங்டனில் இருந்து அழைக்க வருவார் பொறுப்பில், ஓர் இடத்தில் ஒப்படைத்துவிட்டு மீள்வதாக எண்ணியவர் அவர். ஆனால், இந்த உரையாடல் பலப்பல நூல்களைக் கற்கும் பயன்பாடுடையது.

இன்றும் நாளையும் உடனாகியிருந்து பயன் கொள்ள வேண்டும் என்னும விருப்பம் எழுந்ததால், தாம் மறுநாளுக்கு வேண்டும் மாற்றுடை எடாமல் வந்தும், தாம் தங்கப் போவது குறித்துச் சொல்லிவராமல் இருந்தும் எங்களோடு வரவும் தங்கவும் முடிவெடுத்தார். 'புத்துடை எடுத்துக் கொள்ளலாம்' எனத் தேர்ந்தார். எங்களை எதிரிட்டு அழைக்க வருவாரை, "வருதல் வேண்டா; யானே அழைத்து வந்து உடனிருப்பேன்; கூட்டம் முடிந்தபின் மீள்வேன்" என்றார்! இது தமிழாற்றல்-தமிழ் வேட்கை-தமிழ்க்காதல் என்பதை அன்றி வேறு என்ன சொல்லமுடியும்! சேரனார் மொழி இனப்பற்றுமை உருக்கியது! தமிழன்னை, சேரனார் போலும் மக்களைப் பெற்றிருக்கும் பேற்றை எண்ணி நெகிழ்ந்தேன்!

காலை உணவுக்குப் பின் வண்டி வாசிங்டனை நோக்கியது, "இன்னும் மூன்று மணிப்பொழுது போக வேண்டி யிருக்கும்" என்றார். அவரொருவரே இயக்கினார். எனினும், சிறிதும் அயர்வு தளர்வு இலராய்க் கிளர்ச்சியோடு உரையாடிக் கொண்டே கண்ணும் கருத்துமாக ஓட்டினார். சற்றே அயர்வு தோற்றும் என அவர் எண்ணியபோது, ஓரிடத்துத் தங்கல் வளாகத்தில் வண்டியை நிறுத்திக் குளம்பி பருகினார். முல்லையாரும் பருகினார். பின்னர் வண்டி சென்றது!

வாசிங்டனை நெருங்க நெருங்கப் போக்குவரவு ஊர்வதாயிற்று! அடிஅடியாக நகர்தலும் ஆயிற்று!

சில நாள்களுக்கு முன்னர்க் கோயம்பேட்டில் வண்டியேறித் தாம்பரத்தையடைய இரண்டரை மணிப் பொழுது ஆயது என் நினைவில் நின்றது! ஆனால், அங்கே செவியைப் பிளந்த ஒலியில் ஓர் ஒன்றுதானும் இல்லாமல் வாசிங்டனில் வண்டி ஊர்ந்தமை என்னைப் பலப்பல எண்ண வைத்தது.

"ஒருவர்க்காக ஒருவர், ஒருவரை நோக்கி ஒருவர்" என ஓட்டுவார் இருப்பின், எத்தகு நெருக்கடியாம் இடத்திலும், பொழுதிலும்-இடிபாடு கூச்சல் குழப்பம் ஏற்படுவது இல்லை! அந்நிலை போற்றப்படா இடத்தில், நூறடிச் சாலையிலும் ஆறடி வண்டி இரண்டு கடக்காமல் முட்டிக் கிடக்கும் என்பது காட்சியாய் நின்றது!

இராலேயில் இருந்துவரும் எங்கள் செலவு, வாசிங்டன் வந்தடையுமுன் மாநிலம் தாண்டி மாநிலம் வரும் செலவு; தேம்சு என்னும் பேராற்றைக் கடந்தோம்; மாநிலச் சட்டமன்றம் ஆளுநர் மாளிகை என்பவற்றைச் சுட்டினார் சேரனார். மாநிலத் தலைவர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் என்றும் அவர்களைக் கலைக்கும் அதிகாரம் ஒன்றியத் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் அமெரிக்கத் தலைவருக்கு இல்லை என்றும், மாநிலம் தன் விருப்பப்படி சட்டம் இயற்றி ஆளுரிமை கொள்வது என்றும், அயல்நாட்டு ஒப்பந்தங்களும் தானே செய்யும் உரிமை கொண்டது என்றும் சேரனார் கூறினார்! மாநில சுயாட்சி என்று முழங்கியவர்கள் நம் நாட்டில் தங்கள் அளவுக்குப் பதவி, வாய்ப்பு என்பவை கிட்டினால் அக் குரலைப் புறம்தள்ளி ஒடுங்கிப் போவதையும் காண்கிறோம்! இங்கிலாந்தின் கெடுபிடியில் இருந்து விடுதலை பெற்ற வீறு, அவர்களுக்குப் பாடமாக இருப்பது புலப்பட்டது!

வாசிங்டனை அடைந்தோம்! வாசிங்டன் தமிழ்ச் சங்க அழைப்பை ஏற்றே அவண் செல்கிறோம். அதன் பொறுப்பாளர் களுள் ஒருவராகிய திரு. பீட்டர் இல்லத்தில் உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சிற்றுண்டி-பேருண்டி-பழவகை என்பன இருந்தன. வேண்டுவார் வேண்டுவ கொண்டு உண்டோம்; பிற்பகல் 3 மணி அது.

பீட்டர் அவர்கள் இல்லத்தில் அரசு செல்லையா அவர்களையும் வேறு சில அன்பர்களையும் சந்தித்து மகிழ்ந்தோம். அவர்கள் பேரவை விழாவில் கலந்து கொண்ட வர்களே ஆவர். திரு. பீட்டர் அவர்கள் நாகர்கோயில் சார்ந்தவர். திரு. அரசு செல்லையா அவர்கள் பெரம்பலூர் அம்மா பாளையத்தினர். முன்னர்த்தாம் தம் ஊர்க்கு வந்திருந்தபோது, யான் பெரம்பலூர் திருவள்ளுவர் தவச்சாலையின் திங்கள் பொழிவில் 'உழவு' என்னும் தலைப்பில் யான் பொழிவு செய்ததைக் கேட்டு மகிழ்ந்ததாகக் கூறினார். தாம் வாசிங்டனில் இருந்து நயாக்ரா நீர்வீழ்ச்சிக்கு அழைத்துச் செல்லும் பொறுப்பு ஏற்றுள்ளமையை உரைத்து மகிழ்வித்தார். நயாக்ராவைக் காண வேண்டும் என்னும் நாட்டம் எனக்கு இருப்பதைப் பேரவைச் சந்திப்பின் போதே அறிந்து கெண்டவர் அவர், ஆதலின், அதனை முன் நாளே அறிவித்தார். ஆங்குத் தங்கிய இரண்டு மூன்று நாள்களிலும் அவர் அன்பின் அருவியாகத் திகழ்ந்து இன்புறுத்தினார்.

உணவுக்குப் பின்னர் வாசிங்டனைக் காண அன்பர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இரவு 8 மணிக்கு மேலும் கதிரொளியைக் காணத் தக்க பகலாக இருந்தலால், நான்கு ஐந்து மணிப்பொழுது சுற்ற வாய்த்தது.

✲

21. வெள்ளை மாளிகை

வாசிங்டன், இங்கிலாந்தின் பிடியில் இருந்து அமெரிக்கா விடுதலை பெற வேண்டும் எனக் கிளர்ந்த புரட்சியின் தலைமைத் தளபதி சார்ச் வாசிங்டன் என்பது அவர் பெயர். அமெரிக்கா தன்னுரிமை பெற்றபின் முதல் தலைவராக இருந்தவரும் அவர். அவர் பெயராலே அமைந்ததே வாசிங்டன்! அது கொலம்பியா மாவட்டத்தில் பொடாமக் ஆற்றின் கரையில் அமைந்தது. வாசிங்டன் என்ற எண்ணம் வரும்போது எவர்க்கும் முதற்கண் தோற்றம் தருவது 'வெள்ளை மாளிகை' எனப்படும் தலைமை இடமே! அமெரிக்க ஒன்றிய அரசின் கொலுவிருக்கையும், கோலோச்சும் களமும் அதுவே ! அதன் சூழல் எப்பொழுதும் மக்கள் வெள்ளமும் ஊர்திப் பரப்புமாகவே இருக்கின்றது. அத்தனை காட்சியகங்கள் உலகில் எவ்விடத்தும் இல்லையாம்!

"உலகிலேயே எந்த நகரிலும் இல்லாத ஒரு வாய்ப்பு வாசிங்டனில் உள்ளது. வரலாற்றுப் புகழ்வாய்ந்த கண்காட்சிச் சாலைகள் ஏறத்தாழப் பதினெட்டினை இணைத்து ஒரு வீதி உள்ளது" என்று திரு. பு.ச. முருகு சுப்பிரமணியனார் 'யாதும் ஊரே' என்னும் தம் நூலில் எழுதி வியக்கிறார் (பக். 99) வெள்ளை மாளிகை இவற்றின் ஊடே தனியாட்சி புரிகின்றது.

வெள்ளை மாளிகைச் சுற்றில் காவல் வண்டி அன்றி வேறு வண்டி செல்ல இயலாது. ஆள் நடமாட்டத் தடை எதுவும் இல்லை. மாளிகை வாயிலில் காவலர் ஒருவர்

நின்றிருந்தார். மாளிகை மேலே கண்காணிப்பவராக ஒருவர் நின்றார்!

அம்மாளிகையில் இருந்த ஆபிரகாம் லிங்கனைப் பற்றி 1960 ஆம் ஆண்டிலேயே யான் நூல் எழுதி, அது சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வழியே வெளிவந்தது. அதனை நேரில் காண நேருமென நினைத்தது இல்லை! ஆனால் நிகழ்ந்தது.

வெள்ளை மாளிகை நுழைவாயில் முகப்பின் எதிரிலேயே, ஒரு முதிய அம்மையார் சாய்வு கட்டிலில் சாய்ந்திருந்தார்! அவரைச் சுற்றிச் சில காட்சிப்படங்கள்-சுவரொட்டிகள்! பலநாள் அவ்விடத்தையே தம் கொள்கை விளக்கப் போர்க்களமாகக் கொண்டிருக்க வேண்டும்! அவரைச் சுற்றிச் சில புறாக்கள்! அணில்கள்! (அமெரிக்க நாட்டு அணிலுக்கு இராமர் கோடு போடாமல் விட்டு விட்டார் போலும்! முதுகில் மூவரி இல்லை) அவர் உண்ணா நோன்பி என்பது புலப்பட்டது! "வேண்டாம் வேண்டாம் போர் வேண்டாம்" என்னும் முழக்கத் தொங்கல் அவ் வீதியில் செல்வாரை ஈர்த்தது.

ஒரு காவலர். ஓர் ஓரத்தே நின்றிருந்தார். அவர் பக்கத்தில் நின்று ஒருவர், அமெரிக்கத் தலைவரைக் கண்டித்து அறிக்கை வழங்கிக் கொண்டு இருந்தார்! தில்லியிலே அன்று; நம் கிண்டியிலே கூட நம்மால் இப்படிக் காண நம் மக்களாட்சி இடம் தருமா? அவர்கள் எங்கே கொண்டு போகப்பட்டார்கள். என்ன ஆனார்கள் என்பதை எளிதாய் அறியத் தானும் இயலுமா? அரசு, காவல் என்பவை என்ன, அவர்களின் எடுபிடிகளின் பாட்டைத் தாங்க முடியுமா? ஓர் அரசை எதிர்த்து எவரொருவரும் நேருக்கு நேர்நின்று குறைசொல்லும் உரிமையை அவ் வல்லரசு கொண்டிருப்பது அதன் அடிப்படை அரசியல் சட்டத்திற்கு மதிப்புக் கொடுக்கும் மரபுரிமையேயாம்!

வெள்ளை மாளிகை வெளியரங்கப் பரப்பில் கண்ணைக் கவரும் ஒரு சிலை, அது ஆபிரகாம் லிங்கன் குதிரைமேல் இருப்பது போன்றது.

உயரமான கற்பீடம்! அதன்மேல் அப்பீட உயரத்திற்குக் குறையாத உயரத்தில் குதிரை. குதிரையின் பின்னங்கால்கள் ஊன்றி எழும் தோற்றம் கொண்டிருக்க, முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கித்தாவும் அருமையான அமைப்பு! அதன்மேல் உடைவாளுடன் காட்சிதரும் இலிங்கன்! அவன் பீடத்தில் அமர்ந்திருக்கும், அவன் பெயரிய வளாகத்தை அடுத்தே பார்க்க வாய்க்கும் என்பது அறியாமல் பார்த்த எழில் அப்படியே ஆட்கொண்டது! அரிய வார்ப்படம்! நம்மவன் கல்லில் காட்டிய கலைவண்ணக் கொள்ளையழகொடு ஒப்பிடக் கூடாதது மாழைச் சிற்பம் எனினும், அச் சிற்பத்தின் மதிப்பீடு எளிமையானது அன்றாம்!

வாசிங்டன், செபர்சன், ஜான்சுடன் என்பார் சிலைகளும், விடுதலைத் தேவியின் மாணுயரச் சிற்பமும் புத்துலகப் புகழ்க்கலைக் கொடையாகவே பொலிகின்றன.

பின்னங்கால் ஊன்றலில் குதிரையின் முழு எடைத் தாங்கலையும் நிறுத்திய ஆற்றல் குதிரைக்கு இருந்தி ருக்கலாம்! இல்லாமலும் இருந்திருக்கலாம்! ஆனால், இச்சிற்பி யின் கலையாற்றுலுக்கும் செய்நேர்த்திக்கும் இருந்தது என்பது மெய்மையாம்!

திருவனந்தபுரம் ஓவியக் கூடத்திலே வைக்கப் பட்டிருந்ததொரு கழுதையின் படம்! அது பொதியொடு போகின்றது! எதிரிட்டுக் காற்று அடிக்கின்றது! காற்று கடுங் காற்று என்பதை ஓவியன் கழுதையின் மூச்சுத் திணறலிலே காட்டிவைத்துள்ள அருமையை ஏறத்தாழ ஐம்பது ஆண்டு களின் முன்னே கண்டதை இக் குதிரை கண்முன் நிறுத்தியது! கலைவல்லான் கலைத்திறம் தானே, கலையின் திறம்! வேறு அதற்கென என்ன உண்டு?

22. காட்சிகளைக் கண்டுகளிக்க

வாசிங்டன் காட்சி வளாகங்கள் முறைமன்றங்கள் அலுவலகங்கள் கல்லூரிகள் நூலகங்கள் எல்லாவற்றையும் ஒருவர் ஓரிரு நாள்களில் கண்டுவிட முடியுமா?

அதற்கும் ஒரு வழிகாட்டியுள்ளனர். அவ்வழியை யாங்கள் பற்றிக் கொள்ளாமல் சிலவற்றைத் தனித்தனியே மகிழ்வுந்தில் சென்று கண்டோம். சுற்றிக் கண்டவர் எழுதுகிறார் :

"கண்காட்சி வீதியில் ஒன்றன்பின் ஒன்றாகப் பத்து நிமிடங்கள் இடைவெளியில் 'டூர் மொபைல்' பேருந்துகள் ஒருவழிப் பயணம் செய்கின்றன. பெரியவர்களுக்கு 8.5 டாலர் (ரூ.300), சிறுவர்களுக்கு 4.00 டாலர் (ரூ. 140) பயணச்சீட்டு வாங்கினால் நாம் வழியில் வரும் எந்தக் காட்சிச் சாலையிலும் இறங்கலாம். மீண்டும் நாம் நினைக்கும் இடத்திற்குத் தொடர்ந்து வரும் பேருந்துகள் எதிலும் ஏறிச் செல்லலாம். ஒவ்வொரு பேருந்திலும் ஒலிபெருக்கி அமைத்து விளக்கம் கூற 'டூர்கைடு' ஒருவர் உடன்வருகிறார். பேருந்து செல்லும் போதே தொடர்ந்து ஊரைப் பற்றிய விளக்கங்கள் ஒலிபெருக்கி யில் கேட்டுக் கொண்டு பயணம் செய்யலாம். அத்துடன் நாம் பேருந்தில் ஏறும்போதே ஒரு சிறு நூல் நம்மிடம் அளிக்கின் றனர். அதில் நாம் காண வேண்டிய இடங்கள் பேருந்து போகும் வழியைக் காட்டும் வரைபடம் பேருந்து நிற்கும் இடத்தின் விவரங்கள் யாவையும் மிகத் தெளிவாக விளக்கியுள்ளனர்.

அமெரிக்க சனாதிபதியின் அதிகார இருப்பிடமான வெள்ளை மாளிகை, வாசிங்டன் மானுமெண்ட், கலை பொறியியல் கண்காட்சி, நேசனல் ஏர் மற்றும் ஸ்பேஸ் மியூசியம், யூனியன் ஸ்டேசன், கேப்பிடல், நேசனல் கேலரி ஆப் ஆர்ட்ஸ், இயற்கை சரித்திரக் கண்காட்சி, அமெரிக்கச் சரித்திர மியூசியம், பிரோ ஆப் என்கிரேவிங், லிங்கன் மெமோரியல், சான் எப் கென்னடி சென்டர், பார் பெர்மார்மிங் ஆர்ட்ஸ், ஆர்லிங்டன் தேசியக் கல்லறை இவ்வளவு இடங்களையும் மொபைல் பஸ் சுற்றி வருகின்றது" என்கிறார். (யாதும் ஊரே பக். 99).

நாங்கள், வாசிங்டன் சுற்றூர்தியைக் கண்டோம்; ஏறவில்லை! நயாக்ரா அருவிப் பகுதியைக் காணுங்கால், அவ்வூர்தியில் ஏறினோம். தொடரியைக் கண்டோம். ஆனால், ஏறினோம் இல்லை. இச் சுவடியைக் கற்பார்க்குச் செய்தியாகத் தரப்படுகிறது அது.

"பிலடெல்பியாவில் இருந்து ஆம்டிரேக் இரயிலில் வாசிங்டன் டி.சி.க்குப் புறப்பட்டோம். சர்குலர் டூர் டிக்கெட் வாங்கியதால் 25 விழுக்காடு சலுகை கிடைத்தது.

இரயிலில் ஏறிய உடனேயே தங்களுடைய கோட்டைக் கழற்றி அதை இரயிலில் உள்ள வளையத்தில் தொங்க விட்டனர். பின்னர்க் கையில் கொண்டுவந்த செய்தித்தாள் அல்லது புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்தனர். ஒரு சிலர் கையில் 'பேஜர்' கம்ப்யூட்டரில் கணக்குகள் போட்டுக் கொண்டே குறிப்பெழுத ஆரம்பித்தனர். ஒருவருடன் ஒருவர் யாருமே பேசவில்லை. இரயில் ஓடும் சத்தம் மட்டிலும் தொடர்ந்து வந்துகொண்டிருந்தது.

இரயில் பெட்டிகள் படுசுத்தமாக இருந்தன. தரை கார்பெட்டினால் மூடப்பட்டிருந்தது. இருக்கைகள் வெல்வெட் போர்வையினால் மூடப்பட்டிருந்தன. நம்முடைய நாட்டின்

பழக்கமே இரயிலில் ஏறிய உடனேயே வாய் அசைபோட வேண்டும். அதற்கென்றே நொறுக்குத் தீனி வீட்டிலிருந்து கொண்டு வருவர். 'டைம்பாஸ் டைம்பாஸ்' என்ற கூக்குரலுடன் வேர்க்கடலை, பட்டாணி விற்க ஆரம்பித்து விடுவார்கள். தரை முழுதுமே அசிங்கப்படுத்தி விடுகிறோம். சுகாதார விதிகளை நாம் பின்பற்றுவது இல்லை. இரயிலில் தரையைத் துடைத்துச் சுத்தமாக்கிப் பிச்சை எடுப்பதையே சில சிறுவர்கள் தொழிலாகக் கொண்டுள்ளனர். நம்முடைய இரயில்களையும் அவர்களுடைய இரயில்களையும் ஒப்பிட்டுப் பார்க்க என் சிந்தனை தவறவில்லை.

இரயிலில் உள்ள கழிப்பறை என் கவனத்தை ஈர்த்தது. விமானங்களில் உள்ள கழிப்பறை போலவே இரயில்களிலும் கழிப்பறை மிகவும் சுத்தமாக இருந்தது. நம் ஊரிலுள்ள இரயில்களில் கழிப்பிடத்தின் வடிகால் நேராகத் தரையில் விழும்படி உள்ளது. நம் அறிவற்ற மக்களும் இரயில்வே ஸ்டேஷன் உள்ளே இரயில் நிற்கும்போதே கழிப்பறைகளைப் பயன்படுத்துவதால். காணச் சகிக்காத காட்சிகள் நம் கண்முன் நிற்கின்றன. ஆனால, ஆம்டிரேக் இரயில்களில் கழிவுகள் யாவும் தரையில் விழுவதில்லை. இருக்கையின் எதிரில் உள்ள ஒரு பொத்தானை அழுத்தியவுடன் ஒரே வினாடியில் அழுத்தக் காற்றினால் யாவும் உள்ளே உறிஞ்சப்பட்டு விடுகின்றது. 'டிஸ்யூபேப்பர்' போடுவதற்கென்றே தனியாக மூடியிட்ட டப்பி ஒன்றுள்ளது. கைகளை மட்டிலும் கழுவ ஒரு பேசினில் குழாய் பொருத்தியுள்ளனர் .நாம் கைகழுவும் தண்ணீரும் தரையில் விழுவதில்லை. இதனால், இரயில்வே நிலையங்களும் சுத்தமாக உள்ளன. இதுபோன்ற நல்ல அமைப்பை நம் நாடு என்று காணப் போகின்றதோ-தெரியவில்லை.

ஏர்கண்டிசன் செய்யப்பட்டுள்ள இரயில் பெட்டிகளின் உள்ளே இருந்து வழிநெடுக இருபுறமும் இயற்கைக் காட்சிகளைக் காணும்போது நம் உள்ளம் நெகிழ்கின்றது. இலையுதிர் காலம் நெருங்குமுன் மரங்களிலுள்ள இலைகளெல்லாம் நிறம் மாறிவிடுகின்றன. பச்சை நிறம் பழுப்பாக மாறி, சிவப்பு மஞ்சள் ஆரஞ்சு போன்ற பல நிறங்களில் காட்சியளிக்கின்றன. சில மரங்களின் இலைகளெல்லாம் உதிர்ந்து கொத்துக் கொத்தாக வண்ண மலர்கள் நம் கண்களுக்கு விருந்தளிக்கின்றன. எங்கு நோக்கினும் பல வண்ணங்களில் இலைகளும் பூக்களும் ஏன் அமெரிக்காவில் மட்டிலும் விந்தை புரிகின்றன? ஒருக்கால் மண்ணின் மகிமையா? அல்லது சீதோஷ்ண நிலையின் காரணமா? என்று அறிய முடியவில்லை. நம்முடைய இரயில் பாதைகளில் நெருஞ்சி முள் புதர்களையும் வேலிக் காத்தான் மரங்களையும் பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்ட கண்களுக்கு அங்குள்ள வண்ண மலர்களும் இலைகளும் விந்தை செய்தன." (யாதும் ஊரே. 97-99)

-இவ் விரிவான மேற்கோள் செய்தியைத் தந்தது, அந்நாட்டுப் பேருந்து தொடரி நிலையை அறிவதற்கே! சொற்கலப்பு, எழுத்துக் கலப்பு ஆயவை கொண்ட மேற்கோளை மாற்றுதல் ஆகாது என்பதால் அப்படியே தரப்பட்டதாம். தெளிவுடையார் தாமே தரப்படுத்திக் கொள்ள இயலும்.

இவ்வூர்திகளை மட்டுமன்றி எவ்வொன்றை ஒப்பிட்டாலும்நாம் தலைகுனியவே நிற்கும்! ஆனால், அதே பொழுதில் 'நாம் நிமிர்ந்து நிற்கும் இடங்களும் உண்டு' என்பதை மறந்துவிட முடியாது! அதனையும் நாம் அறியத் தான் போகிறோம்!

✵

23. ஆபிரகாம் லிங்கன் வளாகமும் ஆர்லிங்டனும்

பெங்களூர் திரு. சாமி எங்களை அவர் வண்டியில் ஆபிரகாம் லிங்கன் வளாகத்திற்கு அழைத்துச் சொன்றார். பிரிட்டீசு அரசில் இருந்து தன் உரிமை பெற்ற பேறு அமெரிக்காவுக்கு வாசிங்டனால் ஏற்பட்டது என்றால் (4,7,1776), நிறவேற்றுமைக் கொடுமையில் இருந்து மாந்தப் பிறப்பை மீட்டெடுத்த பேறு ஆபிரகாம் லிங்கனுக்கு உண்டு. அவர் தம் பிறப்பையே, ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்பதை நிலைநாட்டற்கே முழுதுற ஈகம் செய்தவர்.

எல்லா அதிகாரங்களையும் பெற்றிருந்தும் அதனை அன்புவழிக்கன்றிப் பிற வழிக்குப் பயன்படுத்தாத அருளாளர் எனப் பெருமை கொண்ட பெருந்தகை அவர்.

அவர்க்குள்ள அப்பேற்றுக்கு முன்னோடியாக இருந்த பெருமையர் தாமசு செப்பர்சன் என்பார். பிறப்பால் மக்கள் அனைவரும் சமமானவரே என்பதை வலியுறுத்தியவர். அரசியல் அமைப்புச் சட்டத்தையே பிறப்பொப்புக்குத் திருத்தியமைத்த பெருமையர் அவர். அவருடைய வளாகம் பெரும்பரப்பில் தனியே அமைந்துள்ளது.

ஆபிரகாம் லிங்கன் நினைவு வளாகம், சிறுமலை ஒன்றன்மேல் ஏறுவது போன்ற படிக்கட்டும், அதன்மேல் மண்டபமும், மண்டபத்திற் பொலிவுடன் பளிங்குச் சிலை வடிவில் அவர் அமர்ந்த கோலத்தில் இருக்கும்அருமையும் கண் அகலாக் காட்சியவாம்!

தாமசு செபர்சன் வளாகத்தில், பெருமித மிக்க அவர் தோற்றமும் அப்பெருமித விளக்கம் போன்ற அவர்தம் சமன்மைக் கொள்கை ஆவணப் பதிவுகளும் உள! நேரே பார்த்தால் பொடோமேக் ஆறு ஓடுகிறது. படகுத்துறை, சட்டமன்றக் கட்டடம் என்பவை பளிச்சிடுகின்றன. ஆற்றின் கரைமேட்டு வளாகத்தில் உயரமிக்கதும் பதிவுக் கட்டணம், முன்னரே செலுத்தித் தூக்கி வழியே மேலேறிச் செல்லுவதுமாம் வகையில் வட்ட வடிவில் அமைந்த கோபுரம் ஒன்று உள்ளது. அது வாசிங்டன் நினைவுக் கோபுரம் பொடோமேக் ஆறு கரையளாவிய பெரும்பரப்பாகச் செல்கிறது; தூய்மை என்றால் அவ்வளவு தூய்மை; அதன் கரைச் சூழலெல்லாம் இயற்கைக் காக்களொடு செயற்கைப் பூங்காக்களும் மல்கியுள. ஆங்கேயே உறைவார்க்கும், முழுதுறக் காணலரிதாம் காட்சிகளை நாளும் பொழுதும் குறித்துக் காணச் செல்லும் எங்களால் என்னதான் கண்டுவிட முடியும்!

ஆர்லிங்டன் என்பது அமெரிக்கப் போர்களில் அமரராகிய வர்களின் நினைவுக் குறியாம் நடுகற்களைக் கொண்ட பெரிய வளாகம். அதன் உச்சிமேட்டிலே கென்னடி நினைவகம் எழுச்சி மிக உள்ளது. எங்கும் அமைதி காணும் காட்சியகங்களே இருப்பினும், இவ்வமரர் நினைவகத் தமைதியோ தனி அமைதியாம்! குறித்த தொலைவில் வண்டியை நிறுத்திவிட்டுப் பெரிதும் நடந்தே செல்ல வேண்டும். அவ்வளாகத்தில், கென்னடி மாளிகை அடிவாரத்தில் நின்று வியப்புற்ற நாங்கள், அமைந்து நின்று எங்களுக்குள் உதடு அசைத்தோம்! ஆங்கு நின்ற காவலர், தம் இதழ்களின்மேல் விரல்வைத்துக் காட்டிப் 'பேசாதீர்' என எச்சரித்தார். ஆங்கே அமைதி எழுத்துப்பொறிப்பு இருப்பதையும் கண்டோம்!

உலகப் போர்கள், உள்நாட்டுப் போர்கள், வியத்நாம் போர் எனத் தொடரும் போர்களில் உயிரீகம் செய்தவர்

இலக்கக் கணக்கானோர். அவர்க்குப் பதவி-உயர்வு-தாழ்வு என்பன பாராமல் ஒப்பாம் அமைப்பிலும் வரிசையிலும் பீடும் பெயரும் எழுதிய கல் ஊன்றியுளர்.

அவ்விடத்தின் பரப்போ 612 ஏக்கர். வெர்சீனியா மாநிலத்தில் பொடோமேக் ஆற்றங்கரையில் வரிசை வரிசையாக உள்ள அவை நம் நாட்டில் வாழைக் கன்றுகளை வரிசையாய் நட்டு எப்பக்கத்திருந்து நோக்கினும் நேராகத் தோற்றம் தருவது போன்று உள்ளது! ஆனால், அத்தூண்கள், 'வெட்டுப்பட்ட வாழைத் தோப்பின்' உணர்வையே ஊட்டின! நம் பழங்கால இலக்கியத்தில்,

"ஆடவர் பீடும் பெயரும் எழுதி, அதர்தொறும் நாட்டிய பிறங்குநிலை நடுகல்" என்பதன் நினைவை எழுப்பியது.

காட்சி கால்கோள் நீர்படை நடுகல் பெரும்படை வாழ்த்தெனத் தொல்காப்பியரும் அவர் கூறியவாறு வஞ்சிக் காண்டத்தை அமைத்த இளங்கோ வடிகளும் தோற்றம் தந்தனர்!

அதன் நிறைவில் சுவரோவியமாகப் பளிக்குப் பாளப் பொதிவில், வீரர் தோற்றம் விளங்கியது. "விடுதலை என்பது இலவயமாய்ப் பெறுவது இல்லை" என்னும் எழுத்து இருந்தது. அப்பொழுது வெள்ளை மாளிகை முன்னர் நின்றவர் வழங்கிய அறிக்கையில், "எந்த நாட்டுக்காகவோ இந்த நாட்டு மக்களைக் கொல்லாதே! கொல்லாதே!" என்று வழங்கிய முழுக்கமும் செவிக்கண் ஒலித்தது!

24. ஐன்சுதீனார் வளாகம்

அடுத்து நாங்கள் கண்டது அணு ஆய்வறிஞர் ஐன்சுடீனார் சிலையமைந்த இயற்கை வளாகம்!

எப் பெருமாளிகையும் இல்லாமல் இயற்கை எழில்வாய்ந்த ஒரு பெருவளாகத்தில் அமைந்த மேடையில், இப்படியும் வார்ப்படம் செய்ய முடியுமா என்று வியக்க ஐன்சுதீனார் 'வார்ப்படச் சிலை' அமர்ந்த நிலையில் இருந்தது! அவர்தம் ஆழ்ந்த சிந்தனை, முகத்தில் தேங்கிக் கிடந்தது. செப்புருக்குச் சிலை அது. அதன் மடி, கால், தோள், தலை ஆகிய பகுதிகளில் குழந்தைகள் ஏறி அமர்ந்தும் நின்றும் ஆடிப் பாடுதலும் படம் எடுத்து மகிழ்தலும் காணமுடிந்தது.

எருமையின்மேல் அமர்ந்து செல்லும் ஒரு சிறுவனைக் கண்ட சங்கப் புலவன், குண்டுக்கல்மேல் அமர்ந்த குரங்குக் காட்சியைப் படமாகக் காட்டியது கலித்தொகையில் உள்ளது.

"பேடிப்பெண் கொண் டாடுகை கடுப்ப, நருவரப் பணைத்த திரிமருப் பெருமை, மயிர்க்கவின் கொண்ட மாத்தோல் இரும்புறம், ஏறிச் சேஎணோர்க்குத் துறுகல் மந்தியில் தோன்றும்"

என்றது அது. குழந்தைகள் பார்வையில் எருமை என்ன? இணையிலா மேதை என்ன? ஒப்பக் காண்பது தானே அவ் விளமை! ஆனால், அணில் தாவிப் போகலாம், விளையாடலாம்! பறவை அமரலாம், எச்சமும் இடலாம்! குழந்தைகள் தாமே வந்திலரே! பெற்றோர் பெரியோர் தம்மொடு தாமே வந்துளர்!

அவர்களும் குழந்தைகளின் செயலைத் தடுக்கவில்லை! பூரிப்பு அடைகின்றனர் என்பது மட்டுமில்லை! உவப்புமீக் கூர ஒளிப்படமும் எடுத்துக் கொள்கின்றனர்! நம் ஊரில் இப்படிக் காண இளைஞர் முயன்றாலும் முதியர் இசைந்து நிற்பரா? ஒட்டு உறவுகளின் இடைவெளி மிகமிக, இவையும் பண்பாடாகிப் போகின்றதை எண்ணத் தோன்றுகின்றது.

கன்னியாகுமரிக் கடலக வள்ளுவர்க்குப் போற்றி சொல்லப்படுகிறது. படம் எடுப்போர் வள்ளுவர் சிலை அடிப்பகுதியை மிதித்துப் படம் எடுக்கச் செல்ல அதனைத் தடுத்தனரே ஏன்? அது தமிழகப் பார்வை!

✲

25. வாசிங்டன் தமிழ்விழா

வர்சீனியாப் பகுதியிலே அன்பர் சிவா இல்லம் இருந்தது; அவர் மயிலாடுதுறையைச் சார்ந்தவர்! பாவலர்; கட்டுரையர்; கலகலப்பான இயல்பாளர், அவர் இல்லில் விருந்துண்டு இரவு ஆங்குத் தங்கினோம் (13.7.2007)

இதற்கு முன்னர் இராலேயில் தங்கிய வீடுகள் எல்லாமும், தனித்தனியானவை. அன்பர் சிவா இல்லப் பகுதி, ஐந்து ஐந்து இல்லங்களின் இணைப்பாக இருந்தன; இருந்தாலும் தனித்தனி அமைப்புகளே! பொதுவான வழி, முற்றம் ஒன்றே!

வழக்கம்போல விழிப்பு வந்துவிடுகிறது. 6 மணிக்கே கடன்களை முடித்து ஆங்குள்ள 'மந்தை வில்லிச்' சாலையில் நடந்தால், வீட்டு முன்புறம் சாலையெல்லாம் வண்டிகள்! ஆள்கள் எவரும் இல்லை! வண்டி இயக்கமும் இல்லை! நம் ஊர்போல் கோழி கூவல், கன்று அழைப்பு, நாய் குரைப்பு உண்டா இல்லை!

காரி ஞாயிறு அவர்களுக்கு விடுமுறை! ஐந்து நாள் பரபரப்பான பொறிவாழ்வு! ஆறு ஏழாம் நாள்களில் அமைவாகிப் போகின்றது! அல்லது சுற்றுச் செலவு, விடுப்பில் செய்யவுள்ள பணிகள் என இருப்பார் அன்றிப் பிறர் எழும்போது தான் விடியல்!

அப் பகுதியில் வடஇந்தியர் தெலுங்கர் தமிழர் ஆகியோர் குடும்பங்கள் இருப்பதாகக் கூறினர். தெலுங்கர்

குடும்பம் நூறு என்றும் தமிழர் குடும்பம் இருபது என்றும் உரைத்தனர்.

அன்று வாசிங்டன் தமிழ்ச் சங்கச் சார்பில் நிகழும் விழாவில் கலந்து கொள்ளவே அவண் வந்தேன். முல்லை நடவரசருக்கும் இசைப்பொழிவு இருந்தது. யான் இராலேயில் இருக்கும்போது, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியர் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் நியூயார்க்குக்கு வந்துவிட்டதை உரைத்தார். முன்னரே அவண் மகனார் அழைப்பால் வரவிருப்பதை உரைத்திருந்தார். மகனார் திரு. மறைமலையார்!

நலம் உசாவிவிட்டு யான் வாசிங்டன் தமிழ்ச்சங்க அழைப்பை ஏற்று வருதலை அறிந்ததும், நியூயார்க்கில் இருந்து வருவதாகக் கூறினார். அதன்படியே வாசிங்டன் அரங்குக்கு மகனார், துணைவியார் ஆகியோருடன் வந்திருந்தார்.

நண்பகல் உணவு 'வாழைஇலை'யில் பரிமாறப்பட்டது. வாழையிலை என்ன நம் ஊர் இலைபோலவா? ஆகாது என ஒதுக்கிச் சிற்றுண்டிக்குப் பயன்படுத்தும் இலைபோன்றது! என்று பெறப்பட்டதோ, எப்படிக் கொண்டு வரப்பட்டதோ! இலை வைக்கப்பட்டு எடுத்த இடத்தின் அருகில் எங்கள் உணவு வழங்குதல் நேர்ந்ததால் காண முடிந்தது அதன் நிலையை! அதன் விலை இலை ஒன்று 150 உரூபாவாம்!

"நாங்கள் எங்கள் திருமணத்தில் வாழையிலையில் உண்டோம்! இருபது ஆண்டுகளின் முன்னர் ஒருமுறை உண்டோம்! இந்த விருந்தின்பெருமை வாழையிலையே! எனப் பலப்பலரும் உரையாடி உண்ணுதல் காண முடிந்தது. வழக்கம்போலத் தேன்வக்கு உண்டேன்! அப்பொழுது உண்டு முடித்துக் கழக ஆட்சியாளர் வந்தனர். பின்னே அரங்கில் அளவளாவினோம்!

மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் இரா. மோகன் தலைமையில் பட்டிமன்றம்! அவர் துணைவியார் ஓர் அணியின் தலைவர். தலைப்பு "இலஞ்சம் பெருக ஆட்சியரே காரணம்! மக்களே காரணம்!" என்பது! இது நம் ஊர் இலஞ்சமா? அமெரிக்க இலஞ்சமா? நம் ஊர் இலஞ்சத்தை ஆங்கே பேசி என்ன பயன்? இங்கே பேசியே பெருக்கெடுக்க வைக்கும் இலஞ்சத்தை, அங்கே பேசியா அசைக்க முடியும்! "கையூட்டுத் தருதலும் பெறுதலும் குற்றம்" என்னும் அரசியல் அமைப்புச் சட்டம் பொழுது போக்காகப் பேசப்படுகிறது என நினைத்துக் கொண்டேன். மூவர் மூவர் வாதிட்டனர்!

2.30 மணிக்கு விழா, தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. வரவேற்பின்பின், பட்டிமன்றம் நிகழ்ந்தது. என்உரை "வாழ்வின் நோக்கு" என்பது. அப்பொழிவுக்கு முன்னர்க் கழக ஆட்சியாளர் 'தென்றல் முல்லை' என்னும் நூலை வெளியிடவும் யான்பெறவும் ஏற்பாடு செய்தனர்.

அதன்பின் என்பொழிவு சரியாக அரைமணிப் பொழுது என ஒதுக்கித் தரப்பட்டவாறு நிகழ்ந்தது. பட்டிமண்டப நடுவர், அணித்தலைவர் அணியர் ஆகிய எழுவர்க்கும் தந்தபொழுது ஒன்றரை மணி. 20 மணித்துளிப் பொழிவு என்பது அந்நாட்டில் பெரும் பொழிவு! சிறப்புப் பொழிவு!

'பிறவியின் நோக்கு' என்பது என் பொழிவுத் தலைப்பு.

ஓரறிவுப் பிறவி ஆனாலும், பேரறிவுப் பிறவியாம் ஆறறிவுப் பிறவி ஆனாலும், அப் பிறவியின் நோக்கு 'துன்ப நீக்கம்; இன்ப ஆக்கம்' என்பதே. வெளிப்படத் தெரியும் எறும்பைப் பாருங்கள்! முகட்டில் கட்டித் தூக்கிய உறியில், நெய்யோ இனிப்போ இருந்தால் முகர்வு ஆற்றலால் கண்டு, சுவரில் ஏறி, வளைவில் நடந்து, உறியில் இறங்கி, வண்டு கட்டியிருந்தாலும் மேலே மொய்ப்பது ஏன்? இன்ப விருப்பு-

இன்பத் தேட்டம்! மூன்றாம் அறிவு, முகர்வு அறிவாம் மூக்கறிவு. தொல்காப்பியரே ஆறறிவு உயிர்களின் விளக்கங்களை வழங்கியுள்ளார். மரத்தின் இனம் புல்லின் இனம் எனப் பாகுபாடு செய்த அவர், அவற்றுக்கு ஓரறிவு உண்டு என்றார். ஐம்பூதச் சேர்க்கையே உலகும் உயிரும் என்றார். இவ்வாறு உயிரி ஆய்வை இளம்பருவந்தொட்டே அறிய வேண்டும் என்பதற்காக உயிர், மெய், உயிர்மெய் என எழுத்துகளுக்கு நம் முன்னோர் பெயரிட்டனர். உயிர் உடல் பற்றிய ஆய்வின் அடிப்படையே பிறவி நோக்குத் தழுவியதாம்!

சுவையின்பம் கருதிச் சென்ற எறும்புக்கு, ஏதோ ஒரு தடை, எதிரீடு உண்டானால் என்ன செய்கிறது? உடனே திரும்புகிறது! வந்த வழியே திரும்புதலில் இடராயின் மாற்றுவழி, வேற்றுவழி கண்டு திரும்புகிறது! முன் எறும்பு, தான் திரும்புவதற்காம் நிலையை அடுத்த எறும்பு அறிந்துகொள்ள-மெய்ப்பாட்டியல்பால்-செய்கின்றது! எல்லா எறும்புகளும் திரும்புகின்றன! இவை உயிரியின் நோக்கைப் புலப்படுத்தவில்லையா?

அறிவில் எல்லாம் தலைப்பட்ட அறிவு, தன்னை அறியும் அறிவு! தன்னை அறிவான்தான், தனக்கு வரும் இன்பம் துன்பம் போலப் பிறர்க்கும் அவை உண்டு என்று நினைப்பான். தான் துன்பம் நீங்கி, இன்பம் தாங்கி வாழவேண்டும் என்று நினைப்பது போலப், பிறப் பிறரும், பிறப்பிற பிறவிகளும் நோக்கும் என்பதை உணர்வான்! அவ்வுயிர்க்கு இன்பம் செய்வதே தான் பெறும் இன்பம் எனக் கடனாற்றுவான்! தொண்டு புரிவான்!

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வருஉம் மேவற் றாகும்"
"எல்லாரும் இன்புற் றிருக்க நினைவதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

என்பவை நம் முந்தையர் மொழிகள்!

நம்மவர் கண்ட அறிவின் இலக்கணம் என்ன?

தவத்தின் இலக்கணம் என்ன?

இரண்டுமே, 'துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும்' அடியாகக் கொண்டனவே!

''ஓர் உயிர் துடிக்கும் துன்பத் துடிப்பைத், தான் கொண்ட துன்பத் துடிப்பாகக் கொண்டு, அத் துன்பத் துடிப்பை ஒழித்து, அது இன்பப் பேறு பெற்றதாக மகிழச் செய்வது எதுவோ அதுவே அறிவு!''

அறிவு அவ்வாறு செயல்படாமல், ஏட்டுக் கல்வியாக-தன்னலக் கல்வியாக-பொருட்கல்வியாக-அரசியல் கல்வியாக-இருந்தால் அதனை அறிவு எனல் ஆகாது! அவ்வறிவால் தன் பிறவி நோக்கோ பிறர் பிறவி நோக்கோ நிறைவேறாது.

"அறிவினால் ஆகுவ துண்டோ, பிறிதினோய்
தன்நோய்போல் போற்றாக் கடை"

என்பது அறிவின் இலக்கணமாம்.

இனித் தவத்தின் இலக்கணம் என்ன?

"தனக்கு வந்த துயர் தாங்குதல்; பிற உயிர்க்குத் துன்பம் செய்யாமை" என்பதே தவம் என்பதை,

"உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

என்கிறது திருக்குறள்.

உயிரிகளின் நோக்கை உணர்ந்தவர் எவரும், தமக்கென வாழார்; பிறர்க்கென வாழும் பெருந்தகையர் ஆவர்!

அவர் இயற்கை வழங்கும் ஓதாக்கல்வியை உணர்ந்த மேம்பாட்டில் திகழ்பவர்.

ஓரறிவு உயிரியாம் மரம் தன் இலையால், பட்டையால், பூவால், காயால், கனியால், வித்தால் பிறவற்றால் முழுதுறப் பயன்படுகின்றது.

அதன் நிழல் எத்தனை உயிரிகளுக்கு அடைக்கலம்! அதன் கிளை எத்தனை பறவைக் கூடுகளுக்குத் தஞ்சம்! அதுதான் காய்ந்தாலும் தன்னைச் சார்ந்தவை காயாமல் தண்மை யுறச் செய்யும் தகைமை என்ன?

தான் காய்ந்தாலும், 'காய்ப்பதன்' மேன்மை என்ன? காயாகிக் 'கனிகின்ற பேரருள் என்ன?

ஓரறிவுப் பிறவியின் இவ்வுயர்வு ஆறறிவுப் பிறவியாம் நமக்கு உண்டா?

இப் பிறவிக்கு-இவ் ஓரறிவுப் பிறவிக்கு-பிரிவு-பிளவு-பிணக்கு, வேண்டியவர் வேண்டாதவர் என எவ்வேறு பாடாவது உண்டா?

"போன பருவம் தந்தேன்; இப்பருவம் தாரேன்" எனச் சுருக்கம் உண்டா? இப்படிப் பார்க்க, மாந்தர்க்கு மனக்கருவி இருந்தும் பார்க்காமை ஏன்? முட்டல் மோதல் முரண் பகை கொள்ளை கொலை ஏன்? ஏன்? ஏன்?

பிறவிநோக்கை அறிந்த எவரும் இப்பாழ்நெறியை எண்ணுவரோ? தம் துயர் காணாது பிறர் துயர் தீர்க்கும் பண்பாளரால்தான் உலகமே உய்கின்றது! அழிப்பாரால் உலகம் இல்லை! இன்பத்தில் இறுத்திக் காக்கும் கடமை பூண்டார்களாலேயே உலகம் உய்கின்றது!

-இக்கருத்துகளை வரலாறு எடுத்துக் காட்டு வகைகளால் கூறினேன்! அவை முழுதுற வயப்பட்டு நின்றதை உணர்ந்து நெகிழ்ந்தேன்!

'ஊழ்' என்பது தலைவிதி அன்று; உலகத்து இயற்கை; வெள்ளம், புயல், நிலநடுக்கம், எரிமலை, ஆழிப்பேரலை இன்னவை உலகத்து இயற்கையாம் ஊழ். இயற்கை ஒழுங்கு முறை அது. ஊழல் என்பது, முறைகேடானது. நீர் ஓடுதல், பள்ளத்தே பாய்தல்; தீ பரவுதல் மேலெழுதல்; காற்று விரிதல், சுழலல், விண்வெளி ஒலி, மண், திண்மை மணம் இவை ஊழ்.

ஆக்கமாம் 'பூதமே' அழிவுமாம்; ஆதலால் ஆகூழ், போகூழ்; நல்ஊழ்; அல்லூழ் என்றது வள்ளுவம்.

ஊழை வெல்லலாம் முயற்சியால்! ஊழும் வெல்லும் நம் அயர்வால்!

அதனால், 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்றும்,

'ஊழிற் பெருவலி யாவுள?'' என்றும் கூறினார் திருவள்ளுவர்.

ஊழியல் அறிந்தவர், துன்ப நீக்கம் இன்ப ஆக்கம் இரண்டையும் ஒப்ப எண்ணுவர். அவர் வாழ்வு வெற்றி வாழ்வு.

-இன்னவற்றை விளக்கும்போது அவையம் தனிப்பெரும் தளிர்ப்புற்றது.

மாலை 6 மணிக்குமேல் செபர்சன் நினைவு வளாகம் சென்றோம்: படகுத் துறை சட்டமன்றப் பேரவை (காங்கிரசு) முதலியன கண்டோம். இரவு 9.30 மணிக்குச் சிவா இல்லம் சேர்ந்தோம். 11.30 வரை உரையாடினோம்.

அறிஞர் பிரபாகரனார், சேரனார், சங்கரபாண்டியனார், திருக்குறள் வாழ்வியல் உரையால் ஈடுபாடு கொண்ட சிவகாசி செயம்பாண்டியனார் உடனாகி மகிழ்ந்தனர். அன்று அவண்தங்கி மறுநாள், நெல்லை சங்கர பாண்டி இல்லம் செல்வதென முடிவு செய்து கொண்டோம். விடியலில் சங்கர பாண்டியே குளம்பி ஆக்கினார். சிவா இல்லத்தினர் எழுமுன் அவர் எழுந்து தாமே குளம்பியாக்கி விருந்தினராகிய எங்களுக்கும், சிவா இல்லத்தவர்க்கும் வழங்க வேண்டு மெனில், எத்தகைய ஒத்த நல் உளமும் அன்புரிமையும் இருக்க வேண்டும்! குளம்பியின் சுவை, பண்பாட்டுச் சுவையொடு கலந்து தனிச் சுவையாயது. பாண்டியர் வண்டியிலேயே எங்கள் பொருள்களை எல்லாம் எடுத்துக் கொண்டு அவர் இல்லம் சேர்ந்தோம்.

26. மேரிலாந்து

15.7.07 ஞாயிறு ஓய்வுநாள். பாண்டி உடனிருந்தார். அவர் குடும்பத்தினர் ஊர்க்குச் சென்றிருந்தனர். அதனால், அவரே முழுமையாகப் பேணிக் கொண்டார். ஊணாக்கலில் நல்ல தேர்ச்சியராக விளங்கினார். காலை உணவின் பின் வானியல் அரங்கம் செல்வதாகத் திட்டப்படுத்தியிருந்தனர். வானூர்தி ஆய்வுத் தொடக்க முதல் திங்கள், செவ்வாய்ச் செலவு என இற்றைவரை செய்துள்ள ஆய்வுவிளக்கம், பயன்படுத்தப்பட்ட எவுகருவி-விண்கலம்-எடுத்துவந்த பொருள்-படங்கள் இன்னவெல்லாம் பன்மாடிக் கட்டடத்தில் வரன்முறையாக வைத்திருக்கக் கண்டோம். முதல், இரண்டாம் உலகப் போரில் பயன்படுத்திய வானூர்தி, விண்வெளிக் கூண்டுகள், விண்செலுத்து கூம்புகள், இரைட்டு உடன்பிறந்தார் கொண்ட மிதிவண்டி முதலாம் படைப்புகள், கலிலியோ பயன்படுத்திய தொலைநோக்கி என்பனவெல்லாம் பகுதி பகுதியாகவும் விரிவு மிக்கதாகவும் அமைந்து காணக்காண இன்பம் சேர்த்தன. அத் தொகுப்பும் தொகுப்பின் அமைப்பும் காட்சி ஆக்கமும் பட விளக்கமும் பிறவும் செய்நேர்த்திச் சான்றுகளாக விளங்கின.

நுழைவாயிலில், வானூர்திச் செலவினரை ஆய்வது போலவே ஆய்வு இருந்தது. ஆனால், படக்கருவி கொண்டு செல்லவோ படம் எடுக்கவோ தடையில்லை. சிம்பேனியன் (Simdphonian) என்னும் நிறுவனம் அதனை அமைத்து வழங்கியுள்ளதாம்! காண்பதற்குக் கட்டணம் இல்லை.

பால்டிமோரில் இருந்து வாசிங்டன் செல்லும் வழியில் 'சிவன்மால்' கோயில் உருவாக்கப்பட்டுள்ளது. கீழ்த்தளம் முழுமையும் திருக்கோயில் உணவு-பண்டம் என வழங்குதல்-உண்ணு மேடைப் பகுதி. ஏறத்தாழ ஊணக நிலையமே எனலாம். ஆனால், கோயில் சார்ந்துள்ளமை மேலும் விருப்புக்கு உரித்தாகிச் சிறக்கின்றது.

தமிழகத்துக் கிடைக்கும் பண்டங்கள், உணவு வகைகள் எல்லாமும் ஆங்குக் கிடைக்கின்றன. நண்பகல் ஆங்கேயே உணவு கொண்டோம்! இருவகை உணவு இல்லாத ஓரிடம் என அதனைச் சொல்லல் தகவாம்!

மேலே, கோயில் உள்ளது. நம் ஊர்ச்சாமிகள் எல்லாமும் உள்ளனர். கோயில் நுழைவாயிலில், சாமி பெயர் உருவம் ஆயவற்றைப் பார்க்குமுன், பட்டர் எவரெவர் உள்ளார் எனப் படமும் பெயரும் உள்ளன. தெய்வப் பெயர்கள் எல்லாமும் ஆங்கிலத்திலும் வடமொழியிலும் உள, தமிழில் ஒன்றுதானும் இல்லை! தமிழன் உடைமையாகத் தமிழகக் கோயில்களே இல்லாத நிலையில் ஆங்கே காண முடியுமா?

"இக் கோயில் வழிபாடு தமிழிலே செய்யப்படும்; அதற்காகவே உருவாக்கப்பட்டது: அயன்மொழியோ அயலார் எனத் தம்மைக் கருதிக் கொள்வாரோ வழிபாட்டுப் பணிக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டார். தேவாரம் திருவாசகம் திருவாய்மொழி முதலாம் தமிழ்மை நெறிப்பட்டது. இக்கோயில்" என அக் கோயிலை உருவாக்கியவர் கொள்கை வகுத்து, அக் கொள்கைக் கடைப்பிடியாளரே அறங்காவலராக வழிவழியே வர அமைத்தால் அன்றித் தமிழை வழிபாட்டு மொழியாக்க-குடமுழுக்கு மொழியாக்க-வழியில்லை.

ஏனெனில், தமிழைக் கெடுக்க வரிந்து கட்டி நிற்கும் அயன்மொழியாரினும் தமிழப் பிறப்புப் பிறந்த தமிழப் பாவிகளே அவர்களுக்கு ஊக்குதலும் உரமுமாய் இருந்து வருகின்ற

நிலையில் வேறுவழியில்லை. தமிழ்நாட்டுக் கோயில்கள் தமிழ்நாட்டு அறநிலையத் துறையின் ஆட்சியில்-கண்காணிப்பில்-உள்ளவை. தமிழில் அன்றித் தமிழ்நாட்டுக் கோயில்களில் அயன்மொழி வழிபாடு கூடாது. அது தமிழகப் பொதுமை அறம்! அதனை மறுப்போர் குற்றவியல் சட்டப்படி தண்டிப்புக்கு உரியர். அவரைச் சார்ந்தும் பரிந்தும் நிற்போரும் தண்டிக்கப்படற்கு உரியவரே எனச் சட்டம் இயற்றி, அச் சட்டம் விலக்கு இல்லாமல் கடைப்பிடிக்கத் தக்க வகையில் நடைப்படுத்தினால் அன்றித் தன்னலப் பிறவியர் மாறவே மாறார்! தமிழக வழிபாடு பற்றி இவ்வாறு எண்ணும் நாம், ஆங்குக் கோயில் கட்ட உதவுவோர், வழிபட வருவோர்; துணிவான செயற்பாட்டாலேயே தமிழ் வழிபாட்டைப் பெறவாய்க்கும். ஏனெனில், அந்நாட்டுச் சட்டம் அவர்கள் வழிபாட்டைப் பற்றித்தானே அமையும்!

அதனை அடுத்துச் சிறிது தொலைவில் முருகன் கோயில் ஒன்றும் உள்ளது.

"வள்ளி தேவ சேனை உடனாய் அமர்முருகன்" எனத் தமிழில் எழுதப்பட்டுள்ளது. தமிழில் வழிபாடு வேண்டும் என்றால் செய்வதாகக் கூறினர். அதன் அடித்தளத்தில் திருவள்ளுவர் சிலையும், அதனைச் சார்ந்த அரங்கம் ஒன்றும் உள்ளன. வி.சி.பி உலகத் தமிழ்ச் சங்கம் அதனை நிலைப் படுத்தியுள்ளது. திருவள்ளுவர் பெயரும் தமிழில் இல்லை. அக்கோயில் வளாகம் சுற்றிவர உந்திலேயே தேரமைப்புச் செய்து, தெய்வ உலாக் கொள்ள நேர்த்திக் கடனாளர்க்கு வாய்ப்புச் செய்துள்ளனர்! ஒருவர்க்கு நிகழ்ந்த மணிவிழாவைத் தேர் புறப்படும் முழக்கத்துடன் கண்டோம்!

நாட்டின் தூய்மைக்குத் தக ஆங்கேயாவது கோயில் தூய்மை பேணப்படுதல் புலப்பட்டது! நம் ஊர்க்கோயில்

சூழலை அறிந்து நோவும் நமக்கு எட்டாத் தொலைவில் பட்ட தோற்றப் பேறு இது!

இரவு சங்கர பாண்டியர் இல்லம் சேர்ந்தோம்! தங்கினோம்! வாய்த்த பெரிய வீடு! துணையும் மக்களும் பிறந்த ஊர்க்கு வந்தமையால் மூன்று நான்கு படுக்கை அறை-வரவேற்பறை-விருந்தறை-அலுவலக அறை-கலைப்பதிவு அறை என விரிந்திருந்த அப்பகுதியில், நானும் முல்லை நடவரசரும் சங்கர பாண்டியாருமாகிய மூவருமே இருந்தால், எங்கள் தனியரசு இல்லையா!

27. பதிவு-படம்-காட்சி

தணி சேரனார் மகனார் மருத்துவர் செந்திலார் தாம் எங்களைக் காண வருவதாகவும் நேர்காணல் பதிவு சில செய்ய விரும்புவதாகும் முதல்நாள் இரவே குறிப்பிட்டிருந்தார். அவ்வாறே அவர் பதிவுக் கருவிகளுடன் வந்தார்.

நல்ல இளைஞர்; எதையாவது வீறுமிகச் செய்தாக வேண்டும் என்னும் துடிப்பு மிக்கவர்; நாடு மொழி இனப் பற்றுமைக்குக் குறுக்கீடாம் எதனையும், புறந்தள்ளத் தயங்காதவர். ஏதாவது தடை என எண்ணினால், அத் தடையை உடைப்பதே பிறப்புப் பேறு எனக் கொண்டவர். "அவர்போல் வளரும் இளையர்களைக் காணும்போது, ஆர்வத் தழுவுதலும், ஆக்கத் துணை ஆதலும் வேண்டுமே அன்றி, ஒதுக்கிவிடல், பெரும்பெரும் எதிர்விளைவுகளை உண்டாக்கி உறவு உரிமையாளர்களைக் கூட உதறியடித்து வீறி எழும். அப்போது, அவர்களைக் குறுகிய நோக்கொடு பார்த்தல் சால்பு ஆகாது!" என்னும் உறுதி நெடிய நாள்களின் முன்னரே கொண்டவன் யான். ஆதலால், செந்திலாரை யான் புரிந்து கொண்டேன். அவரும் என்னைப் புரிந்து கொண்டார். ஒரு மணிப்போதுக்குள், ஆத்திசூடி விளக்கம் 2. புறப்பாடல் விளக்கம் 3. அகப்பாடல் விளக்கம் 'திருக்குறள் விளக்கம்' எனஆறு விளக்கம் ஒலிஒளிப்பதிவாகி முடிந்தது. எனக்குப்பதிவைப் போட்டும் காட்டினார்!

என் ஆவணப் படம் ஒன்றனைச் சங்கர பாண்டியரிடம் வழங்கினேன். முதல்நாள் இரவு போட்டுப் பார்த்தோம்.

பாண்டியர்க்குச் சில பதிவுகள் வேண்டும் என்றார். அவை, அப்படத்தில் இருப்பது கண்டு, அவற்றில் இல்லாத சில வற்றைக் கேட்டுக் கொண்டார். அவ் வாவணப் படத்தைச் செந்திலார் கண்டார். மிகமிக மகிழ்ந்தார்! "ஆவணக் குறும்படம் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இப்படம் இருக்கிறது. இதனைத் திட்டமிட்டு அருமையாக எடுத்து முடித்தவர் நல்ல தேர்ச்சியர். அவர்க்குச் சிறந்த எதிர்காலம் உண்டு" என்று பாராட்டினார். மிகப் பலர் எடுத்த குறும்படங்களின் திறனாய்வு கொண்ட பளிச்சீடு அவர் சொல்லில் புலப்பட்டது. அப்படம் எடுத்தலில் ஆழ்ந்த நெய்வேலி மருத்துவர் செந்திலையும், ஓவியர் செல்வரையும், படம் பிடித்த கலைவல்லார் குடந்தை பிரசன்னாவையும் நேயத்தால் நினைந்து வாழ்த்தினேன்! அவர்களே என்னை வளைத்துப் படம்பிடியாக்கால், ஓர் ஆவணப் படம் எனக்கு வர வாய்ப்பு உண்டா? எண்ணியும் பாராததன்றோ அது! அமெரிக்க வருகையும் யான் எண்ணியா எய்தியது?

நண்பகல் உணவுக்குமேல் 2 மணி அளவில், மீன்காட்சி சாலை காண்பதற்குச் சென்றோம். செந்திலார் அழைத்துச் சென்றார். ஒருவர்க்குப் பணிநெருக்கடி என்றால், அதனை முன்னரே எண்ணி உரிய வகையில் திட்டப்படுத்தி முடிக்கும் திறம், ஆங்குள்ள தமிழர் அனைவருக்கும் கைவந்த கலையாகி விட்டமை, அம் மண்ணின் மைந்தர் வழியாக நம்மவர் பெற்றுக் கொண்ட நற்கலை எனப் பாராட்டலாம்! ஆங்கே அப்படி இருப்பார், அப் பண்பாட்டை இங்கேயும் காட்டி நெறிப்படுத்துவதை விட்டுவிட்டு வானூர்தியில் இருந்து இறங்கு முன்னரே, பழைய நம்மவராகி விட்டால் என்ன பயன்? நம்மவராக இருக்க வேண்டும் கட்டாய மானவற்றில் இல்லாமல், நமக்குப் பயன்படும் என்னும் அயல்நாட்டு நல்ல நடைமுறையில் காட்டிப் பழைய நம்மவராக இருப்பதால், அவர்கள் இருவகைக்கும் எடுத்துக் காட்டாக இருப்பது இல்லையே!

செந்தில், முல்லை நடவரசர், யான் மூவரும் சென்றோம்!

அடித்தளத்தில் இருந்து, மேல்தளங்கள் நான்கு. நான்காம் தளத்தில் ஏறியிருந்தும் கீழ்த்தளம் வரை காணு மாறான உள் வெளிச்சதுரம்! ஒவ்வொரு பகுதியும், இனமும் வகையும் விரிந்தவை. காட்சிப் படங்கள், பதனிட்டவையின் தோற்றங்கள்-உயிரிகள்-அதன் சூழல்கள், தனித்தனி மீன் உலாவு அமைப்புகள், ஊடேஊடே பெரிய சிறிய மீன்களை ஒன்றாக உலாவ விட்ட நீர்நிலைகள், வண்ண வண்ண மீன்களின் தொட்டிகள் என்பவையெல்லாம் கண்டோம்! விரைந்து கண்டோம். ஏனெனில் 3.30 முதல் 4.00 மணிவரை தால்பின் மீன்விளையாட்டுக் காட்சியரங்க நிகழ்ச்சி உண்டாம்! அதனைத் தவறவிடக் கூடாது எனப் பார்க்கும் அளவு பார்த்துவிட்டு தால்பின் அரங்கத்தில் போய் அமர்ந்தோம்!

விலங்குக் காட்சியை நிகழ்த்துவார் போல, ஆடவர் மகளிர்; நால்வர் ஐவர் இங்கும் அங்கும் தோற்றம் காட்டு கின்றனர். கூடை தட்டு வாளி ஆகியவற்றில் மீனுக்குத் தரும் உணவு இருக்கின்றது. குறித்துக் காட்டியவாறு தால்பின் செயல் படுகிறது. ஒவ்வொரு செயலும் முடிந்ததும் அதற்கு உணவு தரப்படுகின்றது. உண்டதும் அடுத்த நிகழ்வை அதுவே நோக்கி நிற்கின்றது! வாயசைவு கையசைவு முதலியவை கண்டு அருமையாகச் செயல்பட வைத்துளர்.

ஒரு மொட்டானில் (Stool) யானை அமர்தலையும், ஒரு வளையத்தில் பற்றி எரியும் தீயிடையே குரங்கும் நாயும் தாவிச் செல்லுதலையும், புலிவாய்க்குள் கையை விட்டும் தலையை விட்டும் எடுத்தலையும், அரிமாவின்மேல் ஆள்ஏறி வருதலையும் வட்டக் காட்சியில் கண்டு மெய்ம்மறந்து தோய்தலும் கைதட்டுதலும் செய்வது போலத் தால்பின் காட்சிகளும் கண்டோரைக் கண்களித் துவப்புறவும்.

கைதட்டொலி முழங்கவும், வாயொலி எழுப்பவும் செய்து விடுகின்றன.

மனித ஆற்றல் விலங்கு, நீர்வாழி, பறவை இன்னவற்றை எல்லாம் தன் சொற்படி இயல வைக்கின்ற திறத்தை அறிந்து பாராட்டும் நாம், நம் அறிவும் அச்சுறுத்தலும் அவற்றுக்குத் தரும் உணவுமே அவற்றை அப்படி ஆட்டிப் படைக்கின்றன என்பதை மறந்து விட முடியாது! அவ்வாறே அம்மண்ணின் மைந்தரை விலங்காய், குரங்காய், பறவையாய், ஊரியாய் புழுவாய் ஆட்டி அலைத்தும் வாட்டி வதைத்தும் ஆக்கிய அறிவையும் அறிவுப் படைப்பாம் கருவிகளையும் தலைக்கனச் செருக்கையும். தன்னலத் தடிப்பையும் புறந்தள்ளி விடமுடியாது! எதனைக் களிப்பக் கண்டாலும் அதனுள் புதையுண்ட கரவிலா மக்களின் சவ உரத்தின் மேலே நடப்பட்டு வளர்க்கப் படுகின்ற கண்காட்சிக் கவின் மலர்களாகவே நமக்குத் தோற்றம் தருகின்றன! ஏன்? ஆறறிவுப் பிறப்பியாய்ப் பிறந்து மாசிலா மன உணர்வு பெற்றுவிட்ட பெருங்குற்றத்தின் விளைவு அது எனல் சாலும், நிற்க!

நீர்ப்பரப்பு நெடுவட்டம்! நெடுவட்டச் சூழலெல்லாம் அமர்வு இருக்கைகள்! இருக்கைகள் போதாமலும் நிற்கும் ப்ரப்புகள். சில ஆயிரம் பேர் ஒரே முறையில் அமர்ந்தும் நின்றும் ஒருவரை ஒருவர் மறைக்காமல் காணத்தக்க அரங்க அமைதி! சூழல் பகுதி, கடல்! கப்பல் வரிசை! நெடுமாட எழில்கள்!

வட்ட வளாக நீர்நிலையை அடுத்தும் ஒரு வளாகம்! அங்கும் நீராழியே! தால்பின் காட்சியே! ஆனால், ஆட்டிப் படைக்காமல் தாமே தம் இயல்பில் இயங்குவன. 'பயிற்சிக்களம்' அது போலும்! 'பார்வை அரங்கம்' இது போலும்!

நீருடையோடும் மகளிர் வட்டக் காட்சி முன்வந்து கைதட்டி ஆர்ப்பது போல் ஆர்க்கின்றனர். அவர்களைக்

கண்டதும் மக்களும் ஆர்க்கின்றனர். அவர்கள் ஆடலுக்குத் தகத் 'தால்பின்' ஆடுகின்றது, தாளத்துக்குத் தக உந்துகின்றது, கையசைப்புக்குத் தகத் துள்ளுகின்றது! புரள்கின்றது! வளைய மிடுகின்றது! மேடேறக் காட்டினால் மேடேறிப் புரள்கின்றது. மேலே கட்டி வைத்த புடைப்பானை (பலூனை)த் தட்டச் சொன்னால் தாவித் தட்டுகிறது (15 முதல் 20 அடி உயரம்)! ஒன்றனைக் குறுக்கிட்டு ஒன்று போக, இணைந்து போக, தாம் இணைந்து போக, தம்மைத் தழுவிப் போக, தாம் தழுவி ஊர்ந்து போக என எல்லாமும் நிகழ்கின்றன.

கையைப் புரட்டியதும், வாலைப் புரட்டி அடித்து நீரைப் பாய்ச்சுதல் அல்லது பீச்சியடித்தல், வளையத்தின் முன் இரண்டு மூன்று வரிசைகளுக்கு மழையோ, மலை அருவியோ, பீச்சுக் குழாய் அடிப்போ, கூட்டம் கலைக்கக் காவலர் ஏவும் நீரிறைப்போ என எண்ணச் செய்கின்றது. நீர்த் தெளிப்புக்கு ஆட்பட்டவர் கொள்ளும் ஆரவாரம் வட்டச் சூழலெல்லாம் பற்றிக் கொள்கின்றது!

சரியாக அரைமணி நேரம் தால்பின் காட்சி! ஒவ்வொரு முறையும் வாயில் ஊனை ஊட்டிக் காட்டிய பயிற்சி, அவ்வூனை நினைந்தே செயல்படச் செய்யும் தூண்டு காந்தமாகத் திகழ்கின்றது. அதனை இளையர் முதியர் குழந்தை என எல்லாரும் பல்லெல்லாம் முல்லைக் காடாக, முகம் தாமரைப் பொய்கையாக, மீன்துள்ளல் தேன் துள்ளலாக வெளிவரும்போது, அப்படியோர் இன்ப உலகம் படைக்க வல்ல மாந்தன் ஏன், துன்ப உலகில் தோய்ந்து தோய்ந்து உழலச் செய்வதே குறியாக உள்ளான் என எண்ணத் தோன்றுகின்றது!

மீனின் துள்ளலைக் காட்சிப்படுத்த வல்லான், உயிரற்ற முண்டமாக உடலைத் துள்ள ஏன் செய்கின்றான்! அவன் பிறவி மனிதப் பிறவியாக இருப்பினும் இன்னும் படிநிலையில் பெற்ற (ஐயறிவு வரை பெற்ற) இயல்பை விட்டான் அல்லனே என்று

சிந்திக்க வைத்தது! எத்தனை பேரைச் சிந்திக்க வைக்கும்! சிந்திக்க வேண்டியவரைச் சிந்திக்க வைப்பதல்லவோ சிந்தனை! சிந்தனைப் பயன்! யான், 'சிந்தனை முகத்தில் தேக்கி வந்தேன்! எளிய யான் என் செய்வேன்? என்னால் இயலும் பதிவை எள்முனை குறையாமல் பதிவு செய்தேன்; அவ்வளவே!

'போட்டோமார்க்' ஆற்றங்கரைச் சாலைச் செலவு-அழகியது; இனியது. சில இடங்களில் கோடைக்கானல், உதகைப் பகுதி மலைவழியில் ஊர்ந்து செல்வது போல்வது! ஆனால். அமெரிக்காவில் ஊர்தல் என்பது 60 கல் (ஏறத்தாழ 100 கி.மீ.) விரைவேயாம்!

போட்டோமார்க் ஆற்றுக்கு இருபாலும் பெரும் பெரும் நகரங்கள்! தனித்தனி மாநிலங்கள் சார்ந்தவை. அவை வாசிங்டன், வர்சீனியா என்பவை. அமெரிக்காவின் தலைநகர் என வாசிங்டன் இருப்பினும் கொலம்பியா மாவட்டம் சார்ந்ததே. அது, 1790இல் அமைந்தது.

வழக்கம்போல் சங்கர பாண்டியார் இல்லத்தில் தங்கினோம்.

28. ஐந்தாம் தூண்

17.7.2007 செவ்வாய்

எங்கள் கடமைகளை வழக்கம்போல் முடித்தோம். அன்று, வாசிங்டன் தமிழ்ச் சங்கத் தலைவர் விசய் ஆனந்தர் எங்களை அழைத்துச் கொண்டு சுற்றுச் செல்வதாகவும் சுற்று முடிந்து அவர் இல்லத்தில் உணவு கொள்வதாகவும் திட்டப் படுத்தியிருந்தார்.

அன்று காலையில் சேரனார் பேசினார். "தனித்தமிழ் கடினமானது என்ற கருத்து பரவலாக உள்ளது. தனித் தமிழ் ஆர்வமும் பற்றுதலும் உடையவரிடத்தும் கூட அக்கருத்து உள்ளது. எளியதும் மக்கள் வழக்கில் உள்ளதுமே தனித்தமிழ் என்பதை நாம் தெளிவுபடுத்தியாக வேண்டும். அதற்குத் தாங்களே தக்க வழிகாட்டி என எங்களுக்குப் புலப்படுகிறது. அம்முயற்சியில் ஊன்றுதல் நன்று" என்றார். "என் கருத்தும் அதுவே! என் பணியும் அதுவே! இன்னும் அழுந்தி நிற்றல் கடன் என்பதை உணர்கிறேன். ஆழமான ஆய்வுக் கட்டுரை விளக்கம்-மேற்கோள் என்வற்றில் தவிர்க்க முடியா நிலையில் கடின நடை ஏற்பட்டு விடுகின்றது. அந்நாள் புலமையர்க்கு வழக்குச் சொல்லாக இருந்தது. இந்நாள் புலமையர்க்கு இலக்கியச் சொல்லாகத் தோற்றம் தருகிறது. அந்நிலையில் பொதுமக்களை நம்பால் ஈர்க்கத் தாங்கள் கூறும்வழி தக்க வழியே! இவ்வழியைக் கொள்வோம்; வேண்டுவோம்! தூண்டுவோம்!" என்றேன்.

அன்பர் விசய் 10.30 மணியளவில் அவண் எய்தினார். பாண்டியர் பணிக்குச் சென்றிருந்தார். விசயே சில

இடங்களைக் காட்டும் பொறுப்புக் கொண்டமை முன்னரே அறிந்திருந்தமையால், அவரை எதிர்பார்த்திருந்தோம்.

அவர் தமிழ்ச் சங்கத் தலைவர் எனினும், வெளிப்படப் பாரதியார் பற்றுமை மிக்கார் என்பது அவர் மேலொட்டியில் பொறித்த 'உருவப் பொறி' காட்டியது! இளமைத் துடிப்பர்! வேட்டியொடு விளங்கினார்! மேடையிலும் அப்படியே விழாவில் தோன்றினார். கையூட்டு ஒழிப்புத் துறை அலுவலராக இந்திய அரசின் அமெரிக்கப் பகுதியின் அலுவலகப் பொறுப்பில் இருப்பவர்; சுறுசுறுப்பு மிக்கவர்!

தகவல் அறியும் உரிமை எவர்க்கும் உண்டு. தகவல் தருதல் அலுவலர் கடமை. அத்தகவல் அறிய முடியாமையும், தகவல் தாராமையும், தகவல் தரக் காலம் தாழ்த்துதலும் கையூட்டைத் தூண்டுகின்றன. நாம் வேண்டும் தகவலை இவ்வளவு காலத்துள் தந்தே ஆக வேண்டும் என்பது சட்டம். அதனைத் தரத் தவறினால் மேல் நடவடிக்கை எடுக்கும் உரிமை மக்கள் அனைவருக்கும் உண்டு! எவரிடமும் வினாவலாம். காரணம் கேட்காமல் தகவல் தரல் அவர்க்குக் கட்டாயக் கடமை. இவற்றை மக்களுக்கு அறிவித்து, விழிப்புணர்வு ஏற்படுத்தும் கடன், 'காந்தியக் கடனாக'ப் புலப்பட அவர் உருவம் பொறித்த பணத்தாள் (போலி) விளம்பரம் உருவாக்கப்பட்டுளது.

> ''நான் லஞ்சம் வாங்கவோ கொடுக்கவோ மாட்டேன்'' என்பது குறிக்கோள் மொழி. சமுதாயத்தில் அனைத்துத் தரப்பில் இருந்தும் லஞ்சம் மற்றும் ஊழலை அறவே ஒழிக்க ஒவ்வோர் இந்தியக் குடிமகனுக்கும் ஊக்கமளித்துச் சாத்தியப் படுத்தி அதிகாரம் அளிப்போம்'' என்பது மேல்விளக்கம்! துறைக்குப் பெயர் ஐந்தாம் தூண்! ''கையூட்டு ஒழிப்பு என்பது, மாடத்தின் நான்கு தூண்களொடு ஐந்தாம் தூணாக விளங்குவது'' எனக் காட்டுவது! அதன் சென்னை நிறுவனம், அண்ணா

தலைமைச்சாலை, கோடம்பாக்கம், சென்னை-24இல் உள்ளது.

அரசுக் கடமையைச் சீராகச் செய்வதுடன், அன்னைத் தமிழ்ப்பணியும் செய்பவராகிய அவர், இன்னும் உயரிய ஒருங்கிணைப்பாளராகச் சிறந்தால், அவரே 'தமிழ்த் தூணாகத் திகழலாம்' என என் உணர்வு கூறியது! அவர் தந்தையார் திருச்சியில் மாணவப் பருவத்தில் **பாவாணரிடமும் புலவர் நடேசனாரிடமும்** பாடம் கேட்டவர் என்ற பேற்றை அறிந்தபோது, மகிழ்ந்தேன். அவர் கோவை வேளாண் கல்லூரிப் பேராசிரியராக இருந்தவர். அவர்தம் துணைவியாரும் அக் கல்லூரிப் பேராசிரியராக இருந்தவர். ஓய்வின்பின் மகனாரொடு அவ்வப்போது வந்து சில மாதங்கள் தங்குகிறார்.

✲

29. உலகச் சுற்றுலா மையம்

'இட்லர் வளாகம்' என ஒன்றுள்ளது. அதில் இட்லர் வரலாறு, அவர் வளர்வகை, போர்க்கொடுமை, நாடு அழிப்புகள், உலகப்போர் முடிவு என்பவை நேரிடைப் படங்கள்-காட்சியாகவும் வைக்கப்பட்டதுடன், திரைப்பட வாயிலாகவும் காட்டுகின்றனர்! கொடுமைதான்! இட்லர் மட்டும்தாமா? அண்டை நாடு அயல்நாடு என்பவற்றொடு தன் நாட்டிலும் வன்கொடுமை செய்யும் அரசுகள் போர்வெறியர்கள் தலைகிள்ளுதலைத் தலைக்கடனாகக் கொண்ட சமய வெறியர்கள் ஆகிய எல்லாரும் இட்லர்களே! அவர்களுள் அளவால் கூடுதல் குறைதல் இருக்கலாமே அன்றி அறவோர், அருளாளர் என்பாரைக் கண்டறிதல் எளிதன்றாம்! அப்படி ஒருவர் இருப்பார் என்றால், அவரை வெறியர் விட்டு வைக்கமாட்டார் என்பதற்கு ஆபிரகாம் லிங்கனைத் தீர்த்த அந்த மண்ணுக்குச் சான்று வேறு வேண்டுவதில்லையே!

இரண்டாம் உலகப் போர் வெற்றி மாளிகையையும் கண்டோம். அவ் விரிந்த வளாகத்தில் செல்லும் பேருந்து அருகே உள்ள கடலுள் புகுந்தும் நீந்தும் நிலத்திலும் நீரிலும் இயங்கும் வாத்துப் போல்வது ஆதலால், அதற்கு 'வாத்து வண்டி' என்பது பெயர். அதன் ஊதலே வாத்தொலிதான்! வண்டியில் ஏறுவார்க்கும் 'வாத்தொலி ஊதி' தருவராம்!

வாசிங்டன் நகரை உலகச் சுற்றுலா மையம் ஆக்குவதற்காகவே திட்டமிட்டு அமைத்துள்ளனர் என்றார் விசய்!

அடுத்தே ஒரு பெரு வளாகம்! ஆற்றங்கரைப் பகுதிதான்! ஒரு முரடன் சிலை! அவன் மார்பும் வயிறும் புதையுண்ட நிலை! பெரிய தலையை எடுப்பாகக் காட்டியிருத்தல்! கைகள் மட்டும் இருபதடி முப்பதடிகளுக்கு அப்பால் வெளிப்படல்! தோள்பட்டை முதலியவை புதையுண்ட நிலை! கால்கள் இரண்டும் அறுபது எழுபது அடிகளுக்கு அப்பால், காலும் விரலும் தோற்றம் ஒருகால்! ஒருகால் முழந்தாள் தோற்றம்! ஒரு நூறடிக்கு மேற்பட்ட நீளஅகலப் பரப்பில் உருக்கு வார்ப்படப் புதைசிலையாக உள்ளது!

எதிரேயுள்ள ஆற்றை அடுத்த எதிர்க்கரையாகிய வர்சீனியாவின் வானூர்தி நிலையத்தில் இருந்து, பெருநகரப் பேருந்து போல வானூர்தி வரவும் செலவும் நிகழ்ந்து கொண்டே உள்ளன.

ஆங்குள படகுத் துறையில் கறுப்பர் ஒருவர், தூண்டில் போட்டுக் கொண்டு இருந்தார். அவரைப் படம் எடுக்க முல்லை விரும்பினார். எடுக்க மறுத்து விட்டார் கறுப்பர். அதற்குமேல் அவரிடம் பேசமுடியாது! ஒன்றரை ஆளாய் உயர்ந்து விரிந்து இருப்பவர்! எளிமையாய் ஒரு கையில் எவரையும் தூக்கி எறியத் தக்க தூண் உருவர்!

ஆங்கே இருந்த மரநிழலில் அவர் மனைவி படுத்திருந்தார்; மகவொன்றும் படுத்திருந்தது.

படம் எடுக்கக் கேட்டதும் மறுத்ததும் அதன் செவியில் பட்டிருக்க வேண்டும்! எழுந்து வந்தார்! 'என்னைப் படம்பிடி' என்றார்! அவரொடு இணைந்து படமெடுக்கவும் ஒப்பினார்.

என் சிந்தனை சிறகடித்துப் பறந்தது!

நிறத்தில் என்னடா கறுப்பு, வெள்ளை, சிவப்பு, மஞ்சள்!

அந்தக் கறுப்புக்கு உள்ள பெண்ணுரிமை விளக்கம் என்ன?

அந்தக் கறுப்பின் உரிமையில் தலையிட்டுத் தடுக்காத-ஏறிட்டுத் தானும் பாராத அந்தக் கறுப்பின் உரிமைக் காப்புக் கொடைதான் என்ன?

தமிழ-இந்திய-பிறபிற-இனங்களில் இப் பெண்ணு ரிமையை எண்ணவாவது இயலுமா? குடும்பமே இதனால் இரண்டு பட்டு விடாதா என்ன? சிந்தித்தால் கறுப்பு என்றால் 'கள்ளம் களங்கமிலா உரிமைப் பிறவி' போலும்! அச்சப்படுத்திச் சுரண்டிய வெள்ளைத்தோல், அஞ்சும் வகையில் வீறு பெற்று வருகிறது கறுப்பு! ஆனால் தன் பழைய விலங்கு வாழ்வை முற்றாக மறந்துவிடவில்லை என்பதும் புலப்படுத்தவே செய்கின்றது!

கல்லறைப் பகுதி-'கென்னடி நினைவகம்' என்பவை எல்லாம் முன்னரே நன்கு சுற்றிக் கண்டவை ஆதலால் சுற்றிக் கண்டு சென்றோம்! ஆற்றங்கரைச் செலவு இன்பக் கொள்ளையாயிற்று.

வாசிங்டன் நினைவு மாளிகை உயரத்திற்கு மேல் எக்கட்டடமும் ஆங்கு எழுப்புதல் ஆகாது என்பது வரம்பாம்! ஆனால், அது அந் நகர் அளவுக்கு மட்டுமே! நம் நாட்டிலும் கோயில் கோபுரத்துக்குமேல் கட்டடம் எழுப்பக்கூடாது என ஒரு திட்டம் வேந்தர்கள் குறுநில மன்னர்கள் காலத்தில் இருந்தமை உண்டு.

நண்பகல் உணவுக்கு, ஆம்! 3 மணிக்கு, விசய் இல்லம் சேர்ந்தோம்! "மொய்த்துவளர் பேரழகு மூத்த வடிவென்கோ" என, விசய் தாய் தந்தையர் காட்சி வழங்கிவரவேற்றனர். வகை வகை விருந்து! கொள்ளுவன கொண்டேன்! எனக்குச் சற்றே ஓய்வு கொள்ள இடம் உதவினர்! முதுமை, முதுமையைப் புரிந்த வகை அது! ஓய்வு சிறிதுகொண்டு பாவாணர்தம் நினைவு கூர்ந்து ஏதாவது செய்தி தர வேண்டினேன்! இளம் பருவம்!

ஓராண்டே அவரிடம் படிப்பு! அவர் தம் பீடுமிக்க தோற்றம் மட்டுமே பதிவாகி நிற்பது. பிற நினைவில் இல்லை என்றார்! ஒருமுறை கண்டாரை மறுமுறை காணாமலே நினைவகலாப் பாவாணரின் அரிமாத் தோற்றம் நிற்பதில் வியப்பொன்றும் இல்லையே!

மாலையில் எங்களை அழைத்துச் செல்ல, முதற்கண் இராலேயில் இருந்து வாசிங்டன் வரும்போது வரவேற்று விருந்தளித்த அன்பர் **பீற்றர்** வந்திருந்தார்.

வினாவங்கி

அவர் ஓர் வினாவங்கியாக விளங்கினார். அவர் வினாக்களும் அவற்றின் விடையும் எழுதின் அதுவே தனிநூலாகிப் போகும் என்பது சொல்லுக்குச் சொல்வது இல்லை! உண்மை!

"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும்"

"ஆவிற்கு நீர் என்று இரப்பினும்"

"அறத்தாறு இதுவென வேண்டா"

"கல்லாதான் ஒட்பம்"

"குளவளாக் கோடு இன்றி நீர்"

"உண்மை யறிவே மிகும்"

"பிறிது மொழிதல் அணி"

"இருமனப் பெண்டிர்"

"வினைவலியும் மாற்றான் வலியும்"

"தீக்காய்வார் போல்க"

"ஒருவர் பெயரில் வல்லொற்று வருமா?"

என் கொள்கை ஒன்று உண்டு! உலாவப் போகும் இடங்களில் அவ்விடங்களைக் காணல், குறிப்பு எழுதுதல் எனவே முழுதும் பொழுதைச் செலவிடுதல் வேண்டும்! நண்பர் அன்பரொடு அது தொடர்பில்லாத செய்திகளை உரையாடிப் பொழுதைப் போக்கிவிடக் கூடாது. மற்றைச் செய்திகளை நண்பர் அன்பர்களைக் காணும் போதெல்லாம் பேசலாம்! ஆனால், அரிய பெரிய புத்தம்புது இடங்களைக் காணும்போது அக் காட்சியிலே முழுதுற ஒன்ற வேண்டும் என்பது. அக் கடைப்பிடியை அமெரிக்கச் செலவில் இருவரிடம் யான் இழக்க நேர்ந்தது. ஒருவர் சேரனார்! ஒருவர் பீற்றர்!

ஆனால், பெரிதாக யான் இழந்துவிடாமல் என் காது கண்களைக் காட்சியிலேயே ஈடுபடுத்தி, அவர்களுக்கும் பயன்பட்டேன் என்பது குறைவாகிவிடவில்லை!

"இத்தனை வினாக்கள் எழுப்புகிறீர்களே! ஏதாவது ஆய்வு செய்கிறீர்களா?" என்றேன் திரு. பீற்றரிடம்.

"மாதந்தோறும் திருக்குறள் வகுப்பு நடத்துகிறோம். 15,20 பேர்கள் கூடுகிறோம். ஒவ்வொருவரும் ஓர்ஓர் உரைகொண்டு வருகின்றனர். ஒரு குறளைப் படித்தால் அதற்குரிய பல்வேறு உரைகளையும் படித்து எவ்வுரை பெரிதும் ஒத்துவருகிறது என ஆய்வு செய்கிறோம். அவ் வகையில், நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு உங்கள் வாழ்வியல் உரையே ஒத்துப் போகிறது" என்றார்.

"வாழ்வியல் உரை வைத்துள்ளீர்களா? ஆய்கிறீர்களா?" என்றேன்.

பிரபாகரர் தவச்சாலைக்கு வந்து தங்களைக் கண்டபோது வாங்கிக் கொண்டு வந்த உரை அது. அதனை முன்வைத்தே ஆய்வு செய்கிறோம். எங்கள் ஆய்வு வழிகாட்டி

பிரபாகரரே! அதற்காகத் தவறாமல் கூட்டத்தின் போதெல்லாம் (மாதம் இருமுறை) ஐம்பது அறுபது கல் தொலைவுவந்து செல்கிறார் என்றார்! எனக்கு இப்பொழுதுதான் அவர் வினாவிய ஐயங்களின் அடித்தளம் புலனாயது! என் பொழுது பயன்மிக்க பொழுதே என மகிழ்ந்தேன்! கற்பிக்கும் ஆசான், கற்பிக்கக் கற்கும் கவின் பேற்றுத் துணையாதற்கு இணை உண்டா? அது வாய்க்கின்றதே!

திருபீற்றர் முக்கூடல் அன்பர் ஆறுமுகச்சாமி என்பார், "கண்டு உரையாட வேண்டும்" என விரும்புகிறார்! அவர் இல்லம் சென்று, பாண்டி இல்லம் சென்று விடலாம், செல்லும்வழிதான்" என்றார்! "எந்த வழி, எவர் வீடு-என்ன தெரியும் எங்களுக்கு?" "உங்கள் திட்டப்படி செல்க" என்றோம்! முக்கூடலார் இல்லம் சேர்ந்தோம்! மொழிப் பற்றுடைய தொழில் முனைவர் அவர் என்பது விளக்கமாகியது! தமிழ்ச் சங்கப் புரவலருள் ஒருவர் என்பதும் புலப்பட்டது. அவர் கணினி நிறுவனம் அமெரிக்காவில் இருந்தாலும், அதன் செயற்பாடுகள் சென்னையிலும், உண்டு! "இங்குப் பகலானால் அங்கு இரவு! அங்கு இரவானால் இங்குப் பகல்! ஆதலால், இரட்டைப் பகல் வேலையை இங்கிருந்தே பார்த்து விடுகிறேன்" என்றார்! இயல்பாக இனிமையாக உரையாடினார்! நேரம் கழித்தே நாங்கள் உண்டு சென்றமை யால், பெயருக்குச் சிற்றுண்டி கொண்டு உரையாடினோம்! முல்லை, இசைச்செல்வர் ஆதலால், அவரிடம் திரையிசை பற்றிப் பல கேட்டனர். ஆறுமுகனார் திரைப்படப் பாடல் தொகுப்பார்வலர் என்பது புலப்பட்டது.

ஆங்கிருந்து புறப்பட இருந்த எங்களை, 'மதுரை மசாலா' என்னும் பெயரிய விடுதிக்கு-"தமிழ்ப் பற்றுடைய தமிழ்நாட்டார் விடுதி அது-இங்குவரும் தமிழ்நாட்டு அன்பர்கள் அவர் விடுதிக்குச் செல்லாமல் திரும்புவது இல்லை! அவர் அவ்வளவு பற்றாளர்" என்று அழைத்துச் சென்றார்! நினைவுக்

குறியாக ஓர் எழுதுகோல் வழங்கினார். அவர் மகனார் வானூர்தி வலவனாக இருப்பதை உரைத்தார். அவர் உறவினர் பட்டிவீரன் பட்டியில் இருப்பதை முல்லையாரிடம் கூறினார்! முல்லையார் ஊர் அது ஆதலால்! உறவு நாட்டொடு, உறவு ஊரும் சேர்வது ஒரு படி பெருக்கம் ஆகிவிடும் அல்லவா!

இந்தியப் பரப்பில், சென்னை! சென்னையில் தஞ்சை! தஞ்சையில் மன்னார்குடி! மன்னார்குடியில் இன்ன தெரு! என்பது வழக்கம்தானே! அப்பற்றால் ஏற்படும் பிணைப்பு ஆக்கப் பிணைப்புத் தானே !

இனி, "மதுரை மசாலா" என்ன பக்கத்துத் தெருவா? இருபது முப்பது கல் என்பது என்ன, அரைமணிநேரம்-பக்கம் தான்!" என்றனர்.

கடையின் பெயர் : 'மதுரை மசாலா' அடையாளம் மதுரைக் கோபுரம்.

நிறுவனர் இராசேந்திரன்; இளமையில் வந்தவர்; மாமனார் வேங்கடசாமி, அவர் மகளாரை மணந்து அவரொடும் கடை நடத்துகிறார். இரண்டு செல்வியர் படிக்கின்றனர். அவரூர் சிவகங்கை சார்ந்த கொல்லங்குடி! ஆயினும், மதுரைப் பற்று! மதுரைத் தமிழ்ப்பற்று!

உண்ணும் நிலையில் யான் இல்லை! ஓர் அப்பளம் தின்றேன்! மிளகு அப்பளம்! சிறிது குளம்பி பருகினேன்; பாண்டி வீட்டுக்குச் சென்று பின்னர் உண்ணும் வகையில் 'மசாலா தோசை' கட்டித் தந்தனர்! அங்கே பாண்டி இருக்கிறாரே! பார்த்துக் கொள்ளலாம் என ஏற்றோம்! முல்லை யார்க்கும் வேண்டுவ வழங்கினர். அதன்பின் திருவாளர் ஆறுமுகச்சாமி அவர்களே, பாண்டி இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். வழி தெரிய வேண்டுமே! வண்டி செல்ல வேண்டும் இடம் தெரிந்தால் போதுமே! அதுதான், வழியை வரைபடத்தால் காட்டிக் கொண்டே செல்கின்றதே; தவறாகப் போனால் அவ்வழியே போய் உரிய

வழியை அடைய அதுவே வழியும் காட்டுகிறதே! இரவு 11 மணியை யொட்டிப் பாண்டி இல்லம் சேர்ந்தோம்! 'மசாலா தோசை' ஏறத்தாழ மூன்று மணிப்பொழுதை உண்டு விட்டது என்றால், அடுத்த நாளுக்கு அடுத்த நாள் அதன் கதையே வேறு!

சுற்று மிகுதி-காலம் கடந்த உணவு-பொழுது நீட்டிப்பு இவற்றால் இரவு உறக்கம் பெரிதும் இல்லாமல் போயது! அளவுக்குமேல் உடல் அலுத்தால் அளவுக்கு உண்ணவும், அளவுக்கு உறங்கவும் இயலாமை இயற்கை!

✵

30. ஓய்வு

18.07.2007 அறிவன்

காலை 6.30 கடன்கள் கழித்தல்; குளம்பி பருகுதல், இற்றைத் திட்டம், "சுற்று இல்லை! ஓய்வு" என்றார் பாண்டி!

படிக்க எழுதப் பயன்படுத்தலாம் என எண்ணினேன். பாண்டி, நாங்கள் தங்கியிருந்த அறைக்கு அடுத்த அறையில், ஒரைம்பது அறுபது நூல்களை அடுக்கி வைத்திருந்தார். அவர்க்குரிய ஆய்வு நூல்களைக் கீழ்த்தளத்தில் வைத்தி ருந்தார். இந்த நூல்களின் மேல், பார்வையைச் செலுத்தினேன்.

17.9.1933இல் தொடங்கி ஆறு ஆண்டுகள் நடாத்தப் பெற்றதும் புதுமைப் போக்கும் புதுமை நோக்கும் அமைந் ததும் ஆகிய மணிக்கொடி இதழ்த் தொகுப்புக் கண்டேன். அதன் ஆசிரியர் வ.ரா. அவர்கள்.

அரிய சொற்கள்-வழக்குச் சொற்கள்-எனப் பல பயன் படுத்தியிருக்கக் கண்டேன். அச் சொற்களுக்குப் பொருளும் அறிய வாய்க்கின்றது.

திருச்சி சாமிநாத சாத்திரி என்பவர் 'இதழ் கனி ராட்டை' என்று எழுதியுள்ளார். அதில் வரும் சோனிக்கு 'மெலிவுப்' பொருள் உள்ளது. என்றும் 'சோனிக் கழுகு' என்றும் கூறுகிறார்! சோனி என்பது நாமும் கேட்பதே!

வ.ரா. 'கருமாயம்' என்னும் சொல்லைச் சுட்டுகிறார். கருமாயம்-'கிராக்கி' என்பது என்கிறார். ஆனால், "அந்தக் கருமாயத்தை என்ன சொல்ல" என்பதே வழக்கு! கருமாயம்

என்பதற்குத் துயரம், துயரம் செய்பவன் என்பவே பொருளாம். இன்றும் முகவை, நெல்லை வழக்கில் கேட்கலாம்! ஒருவேளை, 'கிராக்கி' என்பது சென்னை வட்டார வழக்காகலாம்.

புத்தர் மாணவர் ஆனந்தர் பற்றிய செய்தி ஒன்று. இது கவிமணியால் ஆசிய சோதியில் பாடு புகழ் பெற்றது. புத்தரின் சீடர் ஆனந்தர் கிணற்றில் நீர் இறைக்கும் ஒரு பெண் பிள்ளையிடம் நீர் கேட்க, "நீர் உயர்ந்த சாதி; நான் தாழ்ந்த சாதி; தண்ணீர் தருவது பாவம்" என்கிறாள்.

"உன் சாதியை நான் கேட்கவில்லை! தண்ணீரே கேட்டேன்; நீரில் சாதி இல்லை! தா" என்றார்! இது புத்தர் கேட்டதாகவும் உண்டு போலும்!

சுவையான கதைகள்! நல்ல மறுமலர்ச்சி அடையாளம்! சமுதாய அவலங்களை அகற்றும் நோக்கில் கிளர்ந்தது. புதுவகை ஆக்கப்பணி அது.

வேறொரு நூல் படித்தேன். அதில் ஒரு குறிப்பு இருக்கக் கண்டேன். அதனைப் பொறிக்கிறேன்!

ஓர் ஆங்கில அலுவலர், அவர் ஏவலர் ஒரு பார்ப்பனர்,

ஆங்கில அலுவரின் உதவியாளர், ஒரு நாயுடு. ஒருநாள், ஒரு வீதியில் ஆங்கிலவரும் பார்ப்பனரும் நடந்து சென்றனர். அவர்களைக் கண்ட நாயுடு, ஆங்கிலரைக் கைகுலுக்கினார். பார்ப்பனரைக் காலைத் தொட்டு வணங்கினார்.

ஆங்கிலவர், "ஏன் இப்படிச் செய்கிறீர்?" என்று நாயுடுவை வினாவினார். நாயுடு, ஆங்கிலவரை நோக்கி, "நீங்கள் மிலேச்சர்; அவர் பிராமணர்; அவரைத் தொழுதல் என் கடமை" என்றார். ஆனால், தமிழ்த் திவாகரம் என்ன சொல்கிறது? "ஆரியர் மிலேச்சர்" என்கிறது! அவர் மேலை ஆரியர்! இவர் கீழை ஆரியர்; வேறுபாடு இதுவே!

மன்னர் முடியையே தடவித் தலைகீழ்ப்படுத்திய ஆரியம், என்னதான் செய்ய வைக்காது?

அமெரிக்க நிலை, ஓர் அலுவலர் அலுவலகத்தில் இருந்துதான் வேலை செய்ய வேண்டும் என்பது இல்லை. குறித்த வேலையைக் குறித்த காலத்தில் முடித்தாக வேண்டும். அலுவலகத்தில் இருந்தும் செய்யலாம்! அவரவர் வீட்டில் இருந்தும் செய்யலாம் இதனைத் தேவகியார் முன்னரே உரைத்தார். இன்று பாண்டியார்க்கு வீட்டில் இருந்தே அலுவல் பார்த்தலாகக் கொண்டிருந்தார்; அதனால் அலுவலகம் சென்று முன்னரே திரும்பி வந்துவிட்டார்! எப்பொழுது வாய்க்குமோ இரவு பகல் எனப் பாராமல் செய்து முடித்தால் சரி. உழைப்பு மதிப்பீடு போற்றும் நாட்டில் இஃதியற்கையே!

முன்னரே என்னிடம் சில வினாவத் திட்டமிட்டிருந்த பாண்டி, இன்று அதனைப் பயன்படுத்திக் கொண்டார். அவர் வைத்திருந்த இணைய தள அமைப்பு 'பூங்கா' என்பது. அதன் சார்பில், தவச்சாலை, தமிழ்வழிக்கல்வி, தமிழிசை, இளைஞர்க்குத் தமிழ்ப் பயிற்சி, வெளிநாடு வாழ்தமிழர் கடமை, அறிவியல் கலைச் சொற்கள், சொல்லாக்க நெறி என்பவற்றை வினாவினார். யான் விடை வழங்கினேன். பதிவாக்கிக் கொண்டார்.

என் நூல்கள், பதிப்பு, ஆய்வு, அரசுத்துணை, தனியார் உதவி என்பன பற்றியும் வினாவினார். மாலை 7 முதல் 7.30க்குள் இவ்வினா விடைகள் முடிந்தன.

அன்று இரவு 8 மணிக்கு அன்பர் முத்துவேல் செல்லையா அவர்கள் இல்லத்தில் விருந்து! எங்களுக்குத் தான் என்று எண்ணிக் கொண்டு சென்ற யான், அங்கே சிவா, அரசு, பிரபாகரர், பீற்றர் எனப் பலரும் தத்தம் குடும்பத் தொடும் எய்தி இருந்தமை பெருமகிழ்வாயிற்று! இராலேயில் இருந்து

தொடர்ந்து வரும் தோழமையர் ஒருங்கு கூடும் கூட்டு அல்லவோ!

உரையாடலொடு விருந்து சிறப்பாக நிகழ்ந்தது. வழக்கமான 'எடுத்தூண்' முறையே! யான் சுட்டியவற்றைச் செல்லையா அவர்களே எடுத்துவந்து அமர்ந்துண்ணச் செய்தார். அவர் குடும்பத்தினர் ஆக்கியிருந்த வகைகளும் அருமைப்பாடும் அவர்கள் முயற்சியையும் முனைப்பையும் விருந்தோம்பல் சிறப்பையும் காட்டின. கலகலப்பாக உரையாடி விடைபெற்றுக் கொண்டு இரவு பாண்டி இல்லத்திற்குத் தங்கச் சென்றோம்! மணி 11 ஆயது.

31. நயாகரா

19.07.2007 வியாழன்

பல நாள்களாக எதிர்நோக்கியிருந்த இனிய நாள் இது எனல் தகும். இந்நாளே நயாகரா அருவியைக் காணத் திட்டமிட்டிருந்த நாள். அப் பொறுப்பை அருமை அன்பர் அரசு செல்லையா அவர்கள் ஏற்றிருந்தனர்.

விடியல் 4 மணிக்கே எழுந்து கடமைகளை முடித்துக் கொண்டோம். முதல்நாளே விருந்துண்ட இல்லத்திலும் தம் இல்லத்திலும் எனத் திட்டமிட்டுக் காலை உணவு, நண்பகல் உணவு, இரவு உணவு, துணை உணவு என எல்லாமும் கொண்டு வந்தார் அரசு! சங்கர பாண்டியர் தம் வண்டியில் வானூர்தி நிலையம் ஏற்றிச் சென்று விடுத்தார். நாங்கள் நிலைய ஆய்வின் பின் ஊர்தியை அடைந்தோம்! ஊர்தியில் ஏறுமுன்னரே திட்டப்படுத்தியிருந்தபடி, ஊர்தி பப்பல்லோ சேர்ந்ததும், அங்கேயே காலை உணவை முடித்தோம்! பல மணிச் செலவுப் பொழுதைச் சுருக்கிப், பார்க்கும் பொழுதைப் பெருக்கிக் கொள்ளும் உத்தியிலேயே அரசு இவ் வேற்பாட்டைச் செய்துள்ளார் என்பது புலப்பட்டது. ஏனெனில் பல்லாயிரம் உருபா செலவாகும் அல்லவோ! ஆனால், ஒரு மணிப்பொழுதுள் போய்விடலாம் பப்பல்லோ! ஆங்கிருந்து ஒரு மணிநேரச் செலவு மகிழ்வுந்து!

உணவை முடித்ததும் வாடகிப் பகுதியை அடைந்தோம்! தனித்தனி முகவகங்கள்! ஐந்நூறு ஆயிரம்

என வண்டிகள்! ஓட்டி ஒருவரைத் தாமும், காண வியலா வண்டி வரிசை!

முகவகம் ஒன்றில் அரசு ஒரு வண்டியைப் பதிந்தார். எண் வழங்கி எடுத்துச் செல்லக் கூறினார். 'ஆள்' என்றேன்! 'நான்' என்றார், அரசு!

முகவகத்தில் இருந்து யாரும் வரவில்லை! வண்டி வரிசையில் எண்ணைப் பார்த்து எடுத்துக் கொள்ள வேண்டியது! போகும் இடம் சென்று மீண்டும் இருந்த அளவு எண்ணெய் நிரப்பி விட்டுச் செல்ல வேண்டியது! ஒருநாள் வண்டி வாடகை 80 தாலர் (3200 உருபா). ஆள் வேண்டும் என்றால் உடனே வாய்க்காது. முன்னரே ஏற்பாடு செய்திருக்க வேண்டும்! ஓட்டுநர்க்கு 120 தாலர் (4800 உருபா). அவரும் எளிதில் கிடைக்க மாட்டார்!

நயாகராவை நோக்கி ஓடியது மகிழ்வுந்து! வானமும் மகிழ்வாயிற்றுப் போலும்! துளி சொரிந்தது, சாரல் ஆயது! மழையும் பிடித்தது! "அது பெருகி அடைத்தது' என்றால், எதைப் பார்ப்பது? எப்படிப் பார்ப்பது? மழை பெய்யப் பெய்ய மனம் உழன்றது; சுழன்றது! நயாகராவைக் காணக் கருதிக் கருதி இருந்த கற்பனை, 'இப்படி இடியாக இறங்கி விட்டதே' என்னும் மலைப்போடு போய்ச் சேர்ந்தோம்!

கதிர் முகம் காட்டியது! வான் வெளிறியது! இளவெயிலும் அடித்தது! சரி; சுற்றும் அளவை விரைவில் சுற்றிவிட வேண்டும்! மீண்டும் அடைத்தால்! வண்டியோட்டத்தொடு கண்டதும் அருவியே! வந்த ஒட்டத்தோடு நெருங்கி நின்று கண்டதும், அவ் வருவியே! எத்தனை வேறுபாடு!

வானமே பனிமூட்டம்! தெளிப்பெல்லாம் பனிப்பஞ்சின் வருடல்! இன்னும் நெருங்க வேண்டும்! நெருங்கிச் செல்ல உரிய சீட்டு-உரிய உடை-உரிய மிதியடி-என்பவை எல்லாம் உண்டாம்!

எட்டக் காட்சியே இப்படித் தொட்டால், கிட்டக் காட்சி! பார்க்கத் தானே வந்தோம்! இயற்கையும் இசைவாகியுள்ளதே! அரசு, மூவர்க்கும் சீட்டுப் பெற்றார். மேலே கண்ணாடித் தாள் சட்டைதலைமுதல் அடிவரை! ஆம்! அந்தாதி எனினும் சரி; அங்காதி எனினும் சரி! வரி வரி அடியமைந்த செருப்பு ஆம்! வழுக்கல் காப்பு! வழுக்கி விடுமா? அப்படி இல்லையேல், வழுக்கல் காப்பரண் எதற்கு?

புதிய வேடம்! புதிய தோற்றம்! புதிய நடை! புதிய புதிய உணர்ச்சி! மேல்மட்டத்தில் இருந்து அருவிக் கொழிப்பைக் கண்டோம்! ஒரே வெள்ளக்காடு மேல்தட்டு! பன்னூறு அடிப்பரப்பு! ஒண்டாரியோ ஏரியில் இருந்து, அண்டார் டிகையை அடையப் பாயும் பாய்ச்சல்! அப் பாய்ச்சலை நேரே விடாமல் பன்னூறடிப் பள்ளத்தில் ஒரு மொத்தமாகக் கொட்டல்! வெள்ளப்பரப்பு-வீழ்ச்சி முழக்கம்-வானளாவி எழும் வெண்பனிக் கொள்ளை! கீழே ஓடும் ஓட்டம்! அதிலே ஓடும் கப்பல் ஊர்வலம்! அதில் இருந்து சொட்டச் சொட்ட நனையும் தலைகள்! நாமும் போகத்தானே போகிறோம்!

நயாகராவின் ஒரு பகுதி அமெரிக்காவினது; மற்றொரு பெரும்பகுதி கனடா நாட்டினது! அப் பகுதியை இப் பகுதியில் இருந்து பார்க்கலாம். அதற்குச் செல்ல அந்நாட்டுப் 'புகவு' வேண்டும்! நீர் பிரிக்க வில்லை! நிலம் பிரிக்கவில்லை! ஆனால், நாடு பிரிக்கிறது! நாடா பிரிக்கிறது? நாட்டுடைமையர் பிரிக்கின்றனர்! இரு பகுதி நீரும் ஒன்றாக எந்நாடு தடுத்தது? எவர் தடுத்தார்? நீரில் இருந்தே நீர்மை பிறத்தலையும், ஒழுக்கில் இருந்தே ஒழுக்கம் பிறத்தலையும் கண்ட மூல முதல்வன் தமிழன்! அவன் இந்நாளில் நீராலும் நிலத்தாலும் நேயமிலாப் பிறவிகளாலும் படும் பாட்டை என்ன சொல்வது? நயாகராவில் நின்றாலும் தமிழ்மண் நெஞ்சில் நில்லாமல் போய்விடவில்லையே! பிறந்த மண்ணின் மணம் அதுதான்!

மேலே இருந்து பார்த்தோம்! கப்பலில் போகத்தானே கண்ணாடித் தாள் மேல்மூடு! இருந்தாரை இறக்கிவிட்டு, வருவாரை ஏற்றும் கப்பல்! வான்முகில் வேலை இதுதானே! நீரை அள்ளல்! அந் நீரைப் பொழிந்து தள்ளல்!

பட்டினப்பாலையிலே கடியலூர் உருத்திரங்கண்ணனார் அந்நாள் கடல் வாணிகத்தைச் சுட்டுகிறார்! வரிசை வரிசையாகக் குதிரைகள் பந்தியில் நிற்பது போலக் கலங்கள் நிறுத்தப்பட்டள்ளனவாம்! கடல் நீரை முகில் அள்ளிச் செல்வது போலக் கலங்கள் கரையில் உள்ள பண்டப் பொதிகளை ஏற்றிக் கொள்கின்றனவாம்! கரைக்கு வந்த கலங்கள், நீரை அள்ளிய நெடுமுகில் நிலத்தில் பொழிவது போலப் பொருள்களைக் கரையில் சேர்க்கின்றனவாம்!

> "வான் முகந்த நீர் மலைப் பொழியவும்
> மலைப் பொழிந்தநீர் கடற்பரப்பவும்
> மாரிபெய்யும் பருவம் போல
> நீரினின்று நிலத்தேற்றவும்
> நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்
> அளந்தறியாப் பலபண்டம்
> வரம்பறியாமை வந்தீண்டி" பட். 126-132.

இக் காவிரிப்பூம்பட்டினத்துறைமுகக் காட்சி நயாகரா அருவியின் கலச்செலவு வடிவில் தோற்றம் தந்தது! "பனிநீர் நனைவு, தனிப்பெரும் நனைவு" என எனக்கே தோன்றினால், பிறர்க்கு எப்படி இருக்கும்? 'எனக்கே' என்பதன், ஏகாரம் என்ன என்றால், பனித்துயரோ எனக்குத் தனித்துயராக இருந்து உறவாடி உழுவலன்பால் விட்டுப் போகாத பெருந்தகு பெற்றியது! ஆதலால்தான், அவ்வுரிமை கருதி 'எனக்கே' என எழுதினேன்!

கப்பலில் ஏறினோம் பாருங்கள்! முகத்தில் சல்சல் என்று சப்பி அடிக்கும் வகையில் கலத்தின் முகப்பிலேயே நின்றேன்! நின்றோமும்தான்!

என்ன தெளிப்பு! என்ன களிப்பு! திருமண வீடுகளில் பன்னீர் தெளிப்பது போலவா? அப்படியே கண்ணை மட்டும் விட்ட மறைப்புக் கண்ணாடிச் சட்டைமேல், சொட்டச் சொட்டக் கொட்டிய பனித்தெளிப்பு நீர்! அருவிக் கொழிப்பு நீர்! படுவார்க்குக் களிப்புநீர்!

கலமோட்டி அருவியைக் காண்பார் களிக்கக் களிக்கத் தாமும் களிப்பார் போல், எட்டத்தில் காட்டி, நெருங்கிக் காட்டி, சில அடிகளுக்குச் சார்ந்து காட்டி, கனடா நாட்டு அருவியையும் கண்டு திளைக்க வட்டமிட்டுக் காட்டி, அருவியில் நீராடிவிட்டு வருவார் போலவே நிற்கக் காட்டி மீளவும் கரைக்குக் கொணர்ந்தார்! ஒருமணிப் பொழுதுதான்! அது வாழ்நாள் காட்சி ஆயிற்றே!

எத்தனை கோடிப்பேர் குளிரக் குளிரக் கண்டு சென்ற நயாகராவை நாமும் காண வாய்த்ததே! இன்னும் இன்னும் எத்தனை எத்தனை காலம், எத்தனை எத்தனை கோடிப்பேர் காணும் கவின் காட்சியாகத் திகழப் போகிறதோ! இயற்கை அன்னையின் செம்மாந்த கொடை நடையில் எல்லா ஆற்றுக்கும் அருவிக்கும் இடமுண்டு என்றாலும், நயாகராவிற்குத் தனி இடம் உண்டு என்பது உலகம் அறிந்த உண்மை!

மேலிருந்து பார்த்தாயிற்று! நீரில் சுழன்று பார்த்தாயிற்று! நேரில் சென்று பார்க்க வேண்டுமே! அப் பேற்றை விடலாமா? ஆழ் சுரங்கத்துள் இறங்குவதுபோல் தூக்கி வழியே இறங்கிக் கீழே சென்றால், அங்கே அருவி அடிமுதல் முடிவரை 'பலகைப் படிகள்'! நேராய்-வளைவாய்-சுற்றாய்-நட்டாய்-இறக்கமாய்-அமைந்தவை-பன்னூறு படிகள்! ஆங்கெல்லாம் அருவிச் சாரல்! அருவி கொட்டல்! அருவி தூவல்! சில இடங்களில் ஒரு மணித் துளி தானும் நிற்க முடியாத நெடுஞ்சுழிக் காற்றொடு நீர்ப் பீச்சுதல்! "வருவீர்களா?" "வரத்தானே வந்தேன்" அன்பர் அரசின் வினாவும், என் விடையும்! அவருக்கே

வியப்பு! ''எப்பொழுதும் முற்போக்கன் யான்'' என்பது புலப்பட்டு மகிழ்ந்தார்! அவர் அரவணைப்பில் அல்லவோ ஆங்கு வந்துள்ளோம்!

படிவழியே அருவி காண முன்னே வழங்கிய கண்ணாடித்தாள் நீலுடை (நீல உடை) ஆகாதாம்! நடை யிடத் தடையாகும் அல்லவோ! அதனால், வெண்ணிறக் கண்ணாடித் தாள் சட்டை வேறொன்று வழங்குகின்றனர். கீழே ஏறும் படிக்கட்டை நெருங்கும் போதே, சாரல் குளிப்புத்தான்! பத்துப் பதினைந்து அடிக்குப் பக்கமாகச் சென்றால் எப்படி இருக்கும்! சுருட்டியடிக்கும் சுழல் புயல்தான்! இனிமை தவழத் தவழ ஏறினேன்!

இப்பொழுது விட்டால் எப்பொழுது வாய்க்கும்? குற்றால அருவியா, பாவநாச அருவியா? எண்ணிய போதெல்லாம் போய் வர! ஆதலால், யாரினும் யாரினும் காதலனாக நயாகராத் தூவலில் இன்புற்றேன்! எதுவும் செய்யுமா? எதுவும் செய்யாது என்பது என் உள்ளம்! ''உள்ளம் உடைமை உடைமை'' என்பது வள்ளுவம் ஆயிற்றே!

நல்ல நிறைவோடு நண்பகல் உணவை நாடினோம்! காணும் இடமெல்லாம் புல்வெளி! மரத்தடி! இருக்கைகள்! உணவோ கைவயம் உள்ளது! உண்டபின் வேண்டாதன வற்றைப் போட்டுவிட மூடுவாய்ப் பேழைகள்! பிறகு என்ன?

ஒரு விடுதியின் வளாகத்தில் போடப்பட்டிருந்த பலகை இருக்கைகளில் அமர்ந்து அடுக்கடுக்காக எண்ணி எண்ணி வைத்திருந்த ஊண் வகைகளை அரசு எடுத்து வைக்க உண்டோம்!

அப்பொழுது சென்னையில் இருந்து கலைச் செல்வரும், கலை. செழியரும் என்னைத் தொடர்பு கொண்டனர், அரசு தொலைபேசிக்கு! ''அருவி ஒன்றை மட்டும் பார்க்கவே அமெரிக்கா வரலாம், அத்தகு அருமையது'' என்றேன்! ''முடிந்த

அளவும் நாள்களைப் பெருக்கித் தமிழ்வளம் சேர்த்து வருக'' என்றனர்! ''அருவியைப் பாராமல் வருதல் ஆகாது என்பதாலேயே இருந்தேன்; இனி நியூசெர்சியில் ஒரு கூட்டம்! அடுத்த நாள் நியூயார்க்கு சென்று சென்னைக்குப் புறப்படுதல்; ஊர்திச் செலவு உறுதியுமாயிற்று'' என்றேன்.

அப்பொழுதில் ஒரு கசப்பான செய்தி, ''இராலே விடுதியில் எங்களைத் தங்க வைத்த அன்பர், அரசினிடம் பேசினார். அதனை அரசு, நீங்கள் விடுதியில் தங்கியிருந்த நாளில் தொலைபேசிக் கட்டணம் உருபா 3360 போடப்பட்டுள்ளதாம்! நீங்கள் இருவர் தாமே தங்கியிருந்தீர்கள்'' என்பது அது! யான் என் செய்வேன்! முல்லையாருடன் தங்கி யிருந்தேன்! தொலைப்பேசிக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை! என்னிடம் திருவாளர் சாமி ஓர் அட்டை தந்து அவ் வட்டையைப் பேசப் பயன்படுத்திக் கொள்ளலாம், என்றதைத் தானும் மேற்கொண்டிலேன்! என் செய்வேன், இதனை முல்லையார் முன்னேயே சொன்னேன். இக் கசப்பில் சிறிது போது நயாகராவில் உற்ற அருவியின்பமும் சற்றே ஒருவி ஒருவி (நீங்கி, விலகி) மீளவும் அவ் வெண்ணத்தை மறக்கடித்து நானானேன். என் மனச்சான்று என்னைக் கட்டாயம் குத்திக் காட்ட வழியில்லை! அது போதும்! எவருக்கும் என்னால் சுமை ஏற்பட என் மனச்சான்று என்றும் இடம் தந்ததில்லை! தருவதும் இல்லை! இக் கசப்பு ஏற்படாமல் இருந்திருக்கக் கூடாதா என்று இதை எழுதும் போதும் எண்ணுகிறேன்!

நண்பகல் உணவுக்குப்பின் 'நயாகரா' பற்றிய படக்காட்சியைக் கண்டோம்! அருவி உருவாகிய வகை, அவ் வருவியைச் சார்ந்திருந்த மக்கள் நிலை, தங்கள் திறத்தைக் காட்டக் கம்பி வழியே நடந்து கடந்தோர் திறம், மரப்பலகையால் செய்யப்பட்ட உறையுள் மெத்தை தலையணை அடைத்து ஒரு பெண், ஒரு பூனையுடன் ஆற்றில் உருண்டு வந்து அருவியில் வீழ்ந்து கரை சேர்தல் என்பன வெல்லாம் காட்டினர்.

12300 ஆண்டுகளின் முன் முதல் அருவியும், 7500 ஆண்டுகளின் முன் இரண்டாம் அருவித் தோற்றமும் உண்டாயிற்றாம்.

நயாகரா நகரைச் சுற்றினோம்; சுற்று வண்டியில் எங்கும் ஏறி எங்கும் இறங்கலாம்! சீல்மீன் காட்சியகம் கண்டோம்! தால்பின் பயிற்சிபோல் இதற்கும் பயிற்சி தந்துளர்.

மாலைப்பொழுதில் சாரல் பெய்தது; மழையும் ஆயது, நிறைவாகச் சுற்றிப் பார்த்து விட்டமையால் மழையைப் பற்றிக் கவலைப் படாமல் மழையில் நனைந்தே வண்டியை அடைந்தோம்!

அன்பர் அரசு நயாகரா பற்றிய நூல்கள் இரண்டனை வழங்கினார். அரிய காட்சிகளும் விளக்கங்களும் அமைந்தவை அவை.

எங்களுக்கு பப்பல்லோ நிலையத்தில் 8.40க்கு வானூர்தி! நாங்கள் 8.00 மணிக்கே வந்துவிட்டோம்! மழையால் வானூர்திகள் பல நிறுத்தப்பட்டன. காலம் தாழ்ந்து புறப்பட்டன. இரவுக்கும் உணவு இருந்தது! குளிர்-கடுங்குளிர்! நடுக்கம்! ஆதலால் யான் உண்ணவில்லை! 9.40 மணிக்கும் ஊர்திக்கு அழைப்பு இல்லை!

நயாகரா நினைவு, படக்காட்சியாய் மீளமீள வந்தது. மனத்திரையில் காணக் காண யான் குளிரை வென்றேன்!

''ஓஓ! உவமன் உறழ்வின்றி ஒத்ததே'' என்று சொல்லுமாறான கிளர்ச்சி ஏற்பட்டது! உவமைதான் கிட்டவில்லை!

உறுப்பு நலங்கள் முழுதுற அமைந்தாரை எப்பால் இருந்து எப்படி நோக்கினும் அழகே!

பண்புநலம் முழுதுற அமைந்தாரை எத்தனை கூர்ம் பார்வையால் ஆய்ந்தாலும் இன்ப நலமே!

அறிவுக் கூர்ப்பு வல்லாரை எத்தனை வகையால் ஆய்வு செய்தாலும் அறிதோறும் அறியாமை புலப்பட்டுக் கொண்டே இருக்கும்!

-இவற்றை யெல்லாம் எண்ண வைக்கும் இயற்கை எழில் நயாகரா!

"தோள் கண்டார் தோளே கண்டார்"

"புலவரை இறந்த புகழ்"

"வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல"

- என்னும் தொடர்களுக்குச் சான்றாக இருக்கும் நயாகராவின் உரிமை முழக்கம், பொதுமை முழக்கமே ! நீர்மை விளக்கமே!

ஒரு வழியாக வானூர்தி 10.30-க்குப் புறப்பட்டது. 11.30-க்கு வாசிங்டன் வந்தோம்! பாண்டியார் வண்டி வழியே அவரில்லம் சேர்ந்தோம்! சூட்டொடு சுவையான உணவு வழங்கினார்! 12.00 மணியைக் கடந்து படுக்கையில் வீழ்ந்தோம்! 20 மணிப் பொழுது உடலைச் சாய்க்க முடியவில்லை அல்லவா!

✻

32. மூன்று வேளை, மூன்று வேலை

20.7.2007 வெள்ளி

இன்று வேறு எங்கும் சுற்று இல்லை. ஓய்வு-படிப்பு-எழுத்து எனப் பொழுதைப் பயன்படுத்த முடிவு செய்தேன். ஆனால், நிலைமை வேறாக இருந்தது. ஓய்வும் இல்லை! படிப்பும் பெரிது இல்லை! எழுத்துக்கும் வாய்ப்பு இல்லை. ஏன்?

மூவேளை உணவும் மூவேறு இடங்களில் எனத் தீர்மானிக்கப் பட்டிருந்ததைக் காலையில் சங்கர பாண்டியர் உரைத்தார்! மூன்று இடங்களில் என்றால் ஒன்றற்கு ஒன்று நாற்பது ஐம்பது கல் தொலைவு! இன்று இரவு உணவுக்குப் பின் விருந்துண்ட இடத்திலேயே தங்கியிருந்து மறுநாள் காலையில் நியூசெர்சி செல்ல வேண்டும். அதனால் யான் தமிழகம் திரும்பும்வகையில் பொருள்களை ஒழுங்குசெய்து எடுத்துக் கொண்டு புறப்பட வேண்டும்.

காலையில் சங்கர பாண்டியர் இல்லத்தில் குளம்பி. பின்னர்ச் சிற்றுணவு. அதற்குமேல் நண்பகல் உணவுக்கு மதுரை மசாலா உணவு விடுதிக்காரர் வழங்குவது.

இரவு அறிஞர் பிரபாகரனார் இல்லத்து விருந்துணவு.

மதுரை மசாலா அன்பர் 11 மணிக்கே எங்களை அழைத்து வரத் தம் வண்டியில் புறப்பட்டிருக்கிறார். தொலைவும் போக்குவரத்து நெரிசலும் அவரை 1.30 மணிக்கே வரவைத்திருக்கிறது. நாங்கள் புறப்பட எதிர் நோக்கி இருந்தமையால் உடனே புறப்பட்டுத் தடை குறையும் என

வேறொரு சாலைவழி சென்றும் போய்ச்சேர 3.00 மணியாயிற்று. ஆங்கே, நான் ஒரு மசாலா உண்டேன்! அன்பர் அவர் விரும்புவ உண்டார்! 3.30க்குப் புறப்பட்ட நாங்கள் சங்கர பாண்டியர் இல்லத்திற்கு ஐந்து மணி அளவிலேயே வர முடிந்தது! அவர்க்கு இன்னும் மீண்டு போய்ச் சேர 6.30 மணி. ஒரு மசாலா தோசை சாப்பிட வைக்க, அன்பர் எத்தனை கல் வந்திருக்கிறார்! எத்தனை மணி நேரம் செலவிட்டிருக்கிறார்; நேரச் செலவு மட்டுமா? வாணிகப் பணிக்குத் தடை இல்லையா? வண்டிக்கு எண்ணெய்க் கணக்கு என்னவோ? இவ்வளவுக்கும் அடிப்படை **மண்ணின் பற்றுமை! இனப்பற்றுமை! மொழிப் பற்றுமை!** என்பவை தாமே! அன்புக்குக் கணக்கேது வழக்கேது? வரவேது செலவேது?

கணக்கு வழக்கு வரவு செலவு என எண்ணியிருந்தால், அரசு செல்லையா எங்களை நயாகரா அழைத்துச் சென்று மகிழ்வித்த வகையில் செலவிட்ட தொகை எத்தனை ஆயிரம்! ஒரு பகல் ஓர் இரவு என ஏறத்தாழ ஒரு முழுநாள் தம் பணிகளை ஒதுக்கி வைத்து விட்டு அல்லவோ வந்திருந்தார்!

மதுரை மசாலா அன்பர் இராசேந்திரனின் நண்பர் தமிழ்ச்செல்வன். அவர் முல்லை நடராசர் முகவரி அட்டையைப் பார்த்தாராம்! முன்னரே முல்லையார் பட்டி மன்றம் கேட்டவராம்! அப்படிப்பட்ட பெருமையர் உங்கள் கடைக்கு வந்திருக்கிறார். அவர்க்கு நீங்கள் தனியே விருந்து செய்யாமல் விட்டு விட்டீர்கள் என்று சொல்லி ஆங்கிருந்து, பட்டிவீரன் பட்டிக்கு முல்லையார் தங்கியிருக்கும் இடம் கேட்டறிந்து, பாண்டியார்க்குத் தொடர்பு செய்து அழைத்தாராம்! ஒருவர் கொண்ட ஆர்வம் என்ன சுற்றுச் சுற்றுகிறது பார்த்தீர்களா? அழைத்தவர் விருந்துக்கு உடனாகவில்லை! உடல்நலம் குன்றியதாம்! ஆனாலும் நாங்கள் உண்டு புறப்படுமுன் வந்து விட்டார்! விருந்தின்பின் உடன் வந்தார்! வரும் வழியிலேயே முடியாமையால் வாந்தியும் எடுத்தார்! எத்தனை இடர்கள்!

அன்பும் அன்புவழி ஆர்வமும் எல்லாமும் செய்யும்! எல்லாமும் தாங்கும்!

பிரபாகரனார் இல்லத்தில் அல்லவோ இரவு விருந்து! எங்களுக்கு மட்டுமா? முத்துவேல் செல்லையா அவர்கள் வீட்டு விருந்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் வேறு சிலரும் கூடிய பெருவிருந்து! விருந்து தொடங்க 9.15 ஆயது! நாங்கள் அப்பொழுதுதான் ஆங்குப் போய்ச் சேர முடிந்தது!

ஆங்கும் எடுத்தூண் முறையே! அருமையான அமைவான விருந்து! அவ்விருந்தொடு உரைவிருந்தும் வேண்டுமெனப் பிரபாகரனார் அவாவினார். அதனால், இல்லம்-மனை-வீடு-விருந்து-மக்கள்-அறம்-அருள் என்பவை இணைந்தும் பிணைந்தும் தமிழர் வாழ்வில் அமைந்து கிடத்தலை அரைமணிப் பொழுதுக்குமேல் பேசினேன். என் உரைக்குப் பின் திரையிசைப் பாடல்கள் பற்றி முல்லையாரிடம் சிலச்சில வினாவினர்! பிரபாகரனார் இல்லத்திலேயே நாங்கள் அன்று இரவு தங்கினோம்.

21.07.2007 காரி

காலை 5.30க்கு எழுந்தேன். கடமைகளை முடித்தேன். கண்ணுக்கு எட்டிய பரப்பில் ஒரு மணிநேரம் நோக்கியும் எவரொருவர் உலாவுதலையும் எவ்வோர் ஒலி கேட்டலையும் அறியக் கூடவில்லை. வீட்டிலும் அப்படியே அமைதி-இன்று விடுமுறை ஆதலால் மகிழ்வுந்துகளும் அமைந்து நின்றன.

பிரபாகரர் குளம்பி கொணர்ந்தார். முன்னைப் பழமையர்; தவச்சாலை வருகையர். அவர் திருவாரூர் கச்சினத்தினர் எனினும், அவர் தந்தையார் திருச்சி இரத்தினசபையார். அவர் காலத்தவர் திருக்குறள் திருவாசக உரையர் அறிஞர் வரதராசனார். அவர்,

"நீங்கள் எடுத்துக் கொள்ளும் உணவு மிகக் குறைவு" என்றார். அவ்வளவு என் பதினாறு அகவை தொட்டு ஒட்டியது; அதுவே அறுபது ஆண்டுகளுக்கு மேல் தொடர்கிறது.

வானூர்தியில் 12 மணிப்பொழுது வரினும் ஓரிட்டவி; அதற்குத் தொட்டுக் கொள்ளச் சிறிது பட்டாணி அவ்வளவே கொண்டேன்; பசிக்கப் பொறுத்துப் பழகிவிட்டேன்; கேடு எதுவும் எனக்கு இல்லை; உண்ட அளவில் நிறைவு கண்டு பழகியமையால் உணர்வும் ஒத்துப் போய்விடுகிறது. ஆனால், ஒவ்வா உணவு சிறிது சென்றாலும் யான் படாத்துயர் பட நேரும் என்பதைப் பட்டறிவால் உணர்ந்து வைத்திருத்தலால் புலாலிலா உணவு எனினும் பொருந்தியவை அன்றிப் பொருந்தாதவற்றைத் தொடவே மாட்டேன்: நெடிய பழக்கம்! இனி அப்படித்தான்" என்றேன்.

அவரும் வேறு சொல்லாமல் தலையசைத்து விட்டுச் சென்றார். என்னை நியுசெர்சியில் சேர்த்துவிட முன்னரே ஏற்றுக் கொண்டவர் அவர். அன்று (21.7.07) பிற்பகல் 2.00 மணிக்குச் செர்சி தமிழ்ச் சங்கக் கூட்டம். அதனால், அதற்குத் தக முற்பகல் 9 மணி அளவில் காலை உணவை முடித்துக் கொண்டு புறப்பட்டோம். முல்லையார்க்கும் செர்சியில் பொழிவு உண்டு. ஆதலால் அவரும் பிரபாகரரும் அவர்தம் அருமைத் துணைவியாரும் உடன் வந்தனர். துணைவியாரும் பேராசிரியர். நல்ல உரையாடலொடு சென்றோம்.

நாங்கள் தங்கியிருந்த பிரபாகரர் குடியிருப்புப் பகுதி பெல்கேர். அதிலிருந்து நியூசெர்சிக்குச் செல்ல வேண்டும். பெல்கேரில் இருந்து செல்லும்போது பிலடெல்பியா வந்தது. அதன், மேல்பாலத்தில் வண்டி செல்லுங்கால் கீழே நோக்கினால் ஆயிரக்கணக்கில் எண்ணெய்ச் சேமிப்புப் பெரும் கலங்களே பரப்பெலாம் தெரிந்தன. அனைத்தும் கன்னெய், கருநெய்க் கலங்கள்! நியூசெர்சி, பென்சில்வேனியாவைச் சார்ந்தது. அதனைப் பிரபாகரர் முன்னரே அறிந்திருந்தாலும் நாங்கள் போய்ச் சேர வேண்டிய முத்துக்குமார் இல்லத்தை அடைய வேண்டுமே.

மாநிலம் மாநிலமாகச் சாலையும் நகரும் தெருவும் வீடும் பதிவுப்படமாக வண்டியில் உள்ளதே! எவரைக் கேட்க வேண்டும்?

படத்தையும் இடத்தையும் நோக்கிக் கொண்டு சென்றால் போதும்; வண்டியை நிறுத்திவிட்டு வழிச்செல்வார் எவரிடம் கேட்பது? நம் வண்டிக்கு முந்து வண்டிகள் தாமே, வரும் உந்து வண்டிகள்! வழி நடை என்பது, அலுவலகத்துள், அங்காடியுள், அவரவர் வீட்டுள் என ஆகிவிட்ட நிலை யாயிற்றே.

அன்பர் முத்துக்குமார் இல்லத்தைப் பகல் 11.00 மணி அளவில் அடைந்தோம்!

முன்னே நாங்கள் தங்கிய வீடுகள் எல்லாம் நகர வீடுகள்! பெரும் பரப்பு வீடு-பெரும்பரப்பு இடைவெளி, எனினும் தொடுத்தமைந்த வீடுகள்! அன்பர் முத்துக்குமார் வீடோ சிற்றூர் வீடு!

நாம் நம் சிற்றூரை எண்ணினால் நெருக்கம், அடைசல், ஒன்றுக்குள் ஒன்று, முக்கு, முடக்கு, கூரை, குப்பை எனத் தோற்றமுறும். ஆனால் நேர்மாறு அமெரிக்க நாட்டுச் சிற்றூர் நிலை.

சிற்றூர் வீடு ஒன்றன் பரப்பு 2 ஏக்கர்: அதற்குக் குறைந்திராது. அவ்விடத்தில் குறித்த அளவுக்கு அமைக்கப் பட்ட வீட்டுப் பகுதி போக, எஞ்சிய பகுதி யெல்லாம் **புல்வெளியாய்**-பயிர்நிலமாய்-இருத்தல் வேண்டும்! வீட்டுக் கழிவுநீர் எல்லாம் ஒன்றாய் ஒவ்வொரு வீட்டுக்கும் அமைக்கப் பட்ட மேட்டுப் பகுதிக்கு அந்நீர் ஏற்றப்பட்டு, ஆங்குக் கற்சரளை, செங்கல், மணல் எனப் பரப்பப்பட்ட குழிப் பகுதியில் இறங்கி நிலத்தடி நீராக அமைய வேண்டும்! வெளிப்பகுதி எக்காலத்தும் எந்நிலையிலும் பசுமை மாறா அமைவுடன் இருத்தல் வேண்டும்! புல் பூத்துக்காயுமுன் வெட்டி

உரமாக்கியும் வேறு களை முளையாமல் களைகொல்லி தெளித்தும் கட்டாயம் காக்க வேண்டும். இல்லையானால் மேலே இருந்தே நோட்டமிட்டு ஒறுப்புக் கட்ட, முற்றத்துள்ள பெட்டியில் குறிப்புத்தாள் கிடக்கும்! ஆதலால், வேலைநாள் போக விடுப்பு நாள்களில் பெரிதும் இப் பசுமைப் பணிக்கே செலவிட நேருமாம்! இல்லையேல் பணியாள் கொண்டு செய்தாக வேண்டும்! பணியாள் கிட்டல் அருமை, வண்டி ஓட்டுநர் பற்றிப் 'பப்பல்லோ-நயாகரா'ச் செலவின்போது எழுதியது நினைவுக்கு வரும்! உதிரி உறுப்பு ஒன்று ஒரு தாலர் விலை எனினும், அதனைப் பொருத்துவார்க்கு ஒன்பது தாலர்! வேறு விளக்கம் வேண்டாவே!

முத்துக்குமார் தந்தையார் கணபதி என்பார்; வருவாய்த் துறை அலுவலர்; அவர் கொண்டிருந்த நேர்மையால் அவரை அரசியலார் ஊரூர்க்குப் பந்தாடினாராம்; அந்நாளிலேயே அரசியல் வீச்சுக்கு ஆட்பட்டவர்! தமிழகத்து ஊர்களை யெல்லாம் சுற்றுலா ஆக்கிக் கொண்டவர்! திருச்சியிலும் இருந்தாராம்!

முத்துக்குமார் தமிழகத்திற்கு வர விரும்புதல் உண்டு. ஆனால், மக்கள் தமிழகம் வரவே விரும்புவது இல்லாமை மட்டுமன்று; வெறுப்பும் அடைகின்றனராம்.

ஆங்குள்ள ஈ எறும்பு கொசுத் தொல்லை, கழிப்பிட அவலம், தெருக் குப்பை இன்னவை மாறா வெறுப்பை மனத்திருக்கப் பதித்துவிட்டனவாம்! முதற்கண் வந்து திரும்பியபோது நோய்வாய்ப்பட்டே மீண்டனராம். அவர்கள் விரும்பாமை, எங்கள் விருப்பத்தையும் தடுக்கவே செய்கின்றது என்றார். அவர்தம் அருமைத் துணைவியார் அருணா என்பார். இருவரும் சென்னை மாநிலக் கல்லூரி மாணவராகக் கற்றவர்கள்!

"இந்தியர் கடுமையான உழைப்பாளர் என்னும் எண்ணம் அமெரிக்கருக்கு உள்ளது. இங்கு வந்து இவ்வளவு கடுமையாக உழைப்பவர்கள் அங்கு ஏன் உழைப்பது இல்லை" என்று குமார் கேட்டார்! இவ்வினா நான் எழுப்பி, அவர் விடை தரவேண்டியது என்பதுதான் முறைமை! அவர் உட்கிடை ஒன்று கொண்டுதான் இவ்வினா எழுப்புகிறார் எனப்பட்டது! அதற்கு, அவர்தம் தந்தையார் பட்ட அலைக்கழிவுப்பாடுகள் மூலமாக இருக்கலாம்.

நான் எண்ணினேன்; அவர் வினாவுக்கு அவர் விடை தராமல் அமைந்தாலும் விடை காண வேண்டிய வினாவே என்பது உண்மை!

"நம் நாட்டுக் கல்வி, கொள்ளையடிக்கும் கொடுமைக்கு இடையே பெறப்படுகிறது. உள்ளது உரியதை எல்லாம் தொலைத்தும் கடன் பட்டும் கற்ற பின்னரும் வேலை கிட்டுவது இல்லை. அதற்கும் அரசியல்-பணம்-என விளையாடுகின்றன! வேலை வாய்த்தாலும் தகுதிக்கு ஏற்ற வேலை வாய்ப்பது இல்லை! அப்படி ஒரு வேளை தகுதிக்கு உரிய வேலை வாய்த்தாலும் பழஞ்செலவுகளை மீட்டி மேடேறும் நிலைக்குப் போதியதாய் இல்லை! கடுமையாக உழைப்பவர், உழையாதவர் என்பவர் எவராயினும் பணிக்கால மூப்பு அடிப்படையிலேயே பதவி உயர்வு சம்பள உயர்வு என்பவை வாய்க்கின்றன! இவற்றை எல்லாம் மாற்றி நல்வழி பிறக்கச் செய்யும் திட்டம் நாட்டில் அரும்பவே இல்லை! ஆனால் அமெரிக்க நிலை என்ன?

தொழில்கள் தனியார்மயம்! அவர்களுக்குக் கல்விச் சான்று தேவையில்லை! வேலைத்திறம்! வயது அளவு தேவை இல்லை! வேண்டியது வேலைத் திறம்! வேலைத் திறம் இருந்தால், தானே சம்பளம் பெருகி உயர உயரச் செல்லும்! இல்லையா? எந்தக் காரணம் பற்றியும் கருதாமல், வேலை தானே போய்விடும்! யாரும் யாரையும் கேட்க முடியாது! உழைப்பு மட்டுமே உரிய மதிப்பீடு! ஆதலால், ஆங்கு

உழைக்கின்றனர்! செல்வத்தைக் குவித்துவிடும் ஆவலில் குவிகின்றனர்! ஆனால், உள்ளத்தே தாய்மண் தலைகாட்டி-தலைநீட்டி-அழைப்பு விடுத்துக் கொண்டே உள்ளது! ஆதலால், "காந்த முள் வடக்குத்திசை காட்டுவது போல்" பெரும்பாலோர்க்குத் தாய்மண் தன்திசை காட்டிக் கொண்டே உள்ளது!

ஒன்றை நினைக்க வேண்டும்! வறிய மண்! அந்த மண் தன் அளவிற்கு மீறிப் பெரிய கல்வியை வழங்கியிருக்கிறது; அம் மண்ணின் பங்களிப்பை எளிதாக மதிப்பிட்டுப் புறந்தள்ளி விடல் ஆகாது! நான் பெற்ற அறிவு திறம் ஆற்றல் ஆயவற்றால் அந் நாட்டுக்கு-அந்நாட்டின் முன்னேற்றத்திற்கு என்னால் ஆய பங்களிப்பைச் செய்தல், நாட்டுக்கு நான் பட்ட கடன்! அது அப்படி இப்படி எனக் கருதாமல், எப்படி ஆக வேண்டுமோ அப்படியாக என் பங்களிப்பை அரைகுறையாக இல்லாமல் முழுவதாக ஒப்படைத்துப் பணி செய்வேன் என்னும் வீறு தானே ஏற்பட்டிருக்கவேண்டும்! அது, ஏற்படாமல் காரணம் காட்டுபவர், கடமை செய்பவர் ஆவரா?

பொருளைக் கொள்ளை கொள்ளையாகக் குவித்து விட்டவர் என்பவர், அனைவரும் முழுநிறைவு கொண்டவரா? அவரால் அமைந்து உறங்க முடிகிறதா என்று பாருங்கள்! உண்மை புலப்படும்!" எனப் பல எண்ணினேன். சில பேசினேன்!

பிரபாகரர் பணிமிக்கிருந்தும் எங்களை நியூ செர்சியில் சேர்க்கும் கடமையை நிறைவேற்றினார். முத்துக் குமரர் இல்லில் நண்பகல் உணவு கொண்ட பின்னர் நாங்கள் பொழிவுக்குப் புறப்பட்டோம்!

பிரபாகரர் இணையர் தம் ஊர்க்குப் புறப்பட்டனர்! நான் மறுநாள் புறப்படுவதால் விடைபெற்றுக் கொண்டேன்! என் புறப்படுதல் வருதல் ஆகியவற்றை அன்பர்களுக்கு அறிவிக்கும் பொறுப்பை அவரே ஏற்றுக் கொண்டார்!

33. அன்பின் நெறி

ஓய்வு கொள்ளப் பொழுதில்லை. நேரே முத்துக் குமரரொடு, நிகழ்வுக்குப் புறப்பட்டோம்! பிரின்கூடன் பல்கலைக் கழகத்தின் அருகில் அமைந்த ஒரு நூலக அரங்கில் கூட்டம் நிகழ்ந்தது. நிகழ்வு 1.45 முதல் 2.45 முடிய! அதன்பின் ஓரரை மணிப்பொழுது கலந்துரையாடல்.

என் தலைப்பு "அன்பின் நெறி" என்பது.

உலகைக் காக்க வல்ல ஒரோ ஒரு நெறி அன்பின் நெறியே! எச்சமயம் ஆயினும் எச்சார்பு ஆயினும், அச் சமயமும் சார்பும் அன்புச் சமயமும் அன்புச் சார்புமாக அமைதல் ஒன்றே, உலகத்து உயிர்கள் அனைத்தும் உய்யும் திருநெறியும் பெருநெறியும்!

ஒருவர் உயரம் என்பின் உயரமா? இல்லை! என்பின் உயரம் அடிக்கணக்கில் நிற்கும்; அகலமும் அப்படியே! ஆனால், அன்பின் உயரத்திற்கும் அகலத்திற்கும் அளவு உண்டா?

மண்ணினும் விரிந்தது; நீரிலும் ஆழ்ந்தது; விண்ணினும் பரந்தது! அன்பு, அன்பே!

அன்பின் இயக்கமே உயிரின் இயக்கம்! அஃதிலா இயக்கம் சவ இயக்கம்! அன்புடைய உடம்பே உயிருடம்பு; அன்பிலா உடம்பு என்புதோல் போர்த்த பொ(ய்)ம்மை உடம்பு!

அன்பு தன்னுள் தோன்ற வேண்டும்! தன்னைத்தான் காதலிப்பதாய் விளங்க வேண்டும். அத் தற்காதலே முற் காவல்! தன்னைக் காப்பான், பிறரையும் காப்பான்!

ஓரன்பன் ஓரன்பு மனையை அடைந்து அன்பு மகவைப் பெறுகிறான். அன்பு சுருங்குகிறதா விரிகிறதா? வளர்கிறதா தேய்கிறதா?

அன்பு விரிகிறது! தன்மேல் கொண்ட அன்பு தன் துணையாய், தன் மகவாய் விரிகிறது; வளர்கிறது. அதன்மேல் உற்றாராய், உறவாய், நட்பாய் விரிந்து விரிந்து அலைவட்ட மெனப் பெருகி உலகமாகிறது!

அன்பு தன்னை மறக்கிறது! தன்னைத் துறக்கிறது! அன்பே மன்னுயிர் எல்லாமும் ஆகிறது! ஒரு நண்டு துடிக்கவும் வண்டு துடிக்கவும் தாங்காமல் தான் துடிக்கிறது. அவற்றின் துயர்க்குத் துடிக்கும் அளவில் நின்றால் அன்பின் பயன் என்ன? அவற்றின் துயரைத் துடைக்க முந்தி முந்தி நிற்கிறது அன்பு! அன்புக்கு இனப்பரப்பு இல்லை! இடப்பரப்பு இல்லை! வேறு எந்தச் சார்பும் இல்லை. அன்புச் சால்பே சால்பாய் ஓங்குகிறது!

கால்நடைப் பாதை இல்லை! மிதிவண்டிப் பாதை யில்லை! மாட்டு வண்டிப் பாதை இல்லை! பேருந்து-தொடர் வண்டிப் பாதைகள் இல்லை! அது விண்ணில் பறக்கும் பார்வையது! ஒப்ப நோக்கும் ஒரு பார்வை அன்றி, எப்பக்கமும் சார்ந்து விடாச் செப்பப் பார்வையது அது!

> "அன்பைப் பெருக்கி எனது ஆருயிரைக் காக்கவந்த
> இன்பப் பெருக்கே இறையே பராபரமே"

என்றும்,

> "அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
> இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே"

என்றும் இறைஞ்சி வேண்டத் தூண்டுகிறது!

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே" எனப் பற்றுகிறது.

"அன்பெனும் குடில்புகும் அரசே" என ஆட்சி நடத்துகிறது!

அன்புடையார், என்பென்ன அவருடைமையா?

"அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு"

எனத் தம்மை-தம் வாழ்வை-தம் குருதியை-கண்ணை-சிறுநீரகத்தை வழங்கும் வண்மைப் பேறாகத் திகழ்கின்றது! அன்பிலா வாழ்வு, விலங்கினும் இழிவாழ்வு! கொடியவை எவற்றினும் கொடிய வாழ்வு! அன்பிலா வாழ்வே, அன்புப் பிறப்பாகப் பிறந்தாரையும், வன்புப் பிறப்பாக மாற்றி உலகை அழிக்க வழி வழியாகத் தூண்டிக் கொண்டிருப்பது!

"அன்பே வடிவாக வாழ்வோம்! அன்பு வாழ்வே இறைமை வாழ்வு"

இந்த அடிப்படையில் ஆற்றிய உரையும் எடுத்துக் காட்டும் வரலாறும் பலரை அழச் செய்தது! ஆவித் தழுவச் செய்தது! அனைவரும் ஒருங்கே எழுந்துநின்று நெடும் பொழுது கையொலி எழுப்பச் செய்தது! இப்படி இருபது ஆண்டு களின் முன் ஒருவர்க்குச் சிறப்புச் செய்யப்பட்டது எனப் பேசப்பட்டது.

பின்னே கலந்துரையாடல் போதில் கேட்டவை பல. அவற்றுள் ஒன்று:

"ஒத்துப் போக முடியாத நிலையில், கணவன் மனைவியர் பிரிதலைப் பற்றிய தங்கள் கருத்து என்ன?" என்பது ஒருவர் வினா!

அன்பர் வினாவியதன் நோக்கம் எதுவாயினும் ஆக! நான் தெளிவாக இருக்கிறேன், "ஒத்துப் போக முடியாதவர் நண்பரோ அன்பரோ அல்லர்! வணிகக் கூட்டினரோ அலுவல் தலைவரோ அல்லர்! அவர் மனைவியார்-கணவனார்! "சரிதானே" என்றேன்.

"ஆம்" என்றார். "நல்லது; பிரிவு எனப் பொதுவாக நின்றாலும் இருவகைப் படுவது அது!" "**விட முடிந்த பிரிவு; விட முடியாப் பிரிவு**" என்பவை அவை. நான் சொல்லிய நண்பு அன்பு கூட்டு என்பவரைப் பிரிதல் விட முடிந்த பிரிவு! அதிலும் உள்ளத் தவிப்பு இருந்தாலும் தவிர்க்கவும் இயலும்! ஆனால், தாய் தந்தை மனைவி மக்கள் என்பார், விட முடிவு எடுத்தாலும் விட முடியாதவர். உங்கள் பெற்றோரை நீங்களோ உங்களை உங்கள் பெற்றோரோ பிரிந்து விட முடிபவரா? உங்கள் உடல் உங்கள் தாயின் மணிவயிற்றில் இருந்து வந்தது என்பது இல்லாமல் போகக் கூடியதா? உங்கள் தந்தையார் பெயரை உங்கள் முன்னோ பின்னோ சேர்க்காமல் உங்கள் பெயர் முழுமை பெறுகிறதா? இப்படித் தானே கொண்ட துணையும்! உங்கள் காதல்-உங்கள் இன்பம்-உங்கள் மக்கள்-உங்கள் ஒருவரை மட்டும் சார்ந்ததா? அவர் இல்லாமல் இவை உண்டா? பெற்றோர் மனைவி பிள்ளை என்னும் விடற்கில்லா உரிமையை விடும் உரிமையாகக் கொள்ளல் முடிந்தாலும், வாழ்வின் பாதிப்பை-மனத்தின் பாதிப்பை-மக்களின் பாதிப்பை இல்லாமல் ஆக்கிவிட முடியுமா?

இதற்காக வள்ளுவர் ஓர் உயரிய வழிகாட்டினார்! அது, "ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்" என்பது!

நூற்றுக்கு நூறும் ஏற்றுப் போகும் பெற்றோர், துணை, மக்கள் இருந்ததுண்டா? இருக்குமா? உலக வியப்பாகத் தோன்றிய **சயாமிய இரட்டையர்** தமும்-முழுதுற உடல் ஒன்றியே இருந்தும்-உணர்வு ஒன்றி இருந்தது இல்லை என்னும்போது, நாடி நரம்புகள் தனித்தனியாவது போல எண்ணங்களிலும் தனித்தனி அமைதல் இயற்கையே! இவற்றுள் எவை எவை ஒத்துப் போகத் தக்கனவோ அவற்றில் ஒத்துப் போக இருவருள் ஒருவர் கொண்டாலும் படிப்படியே வளர்நிலையோ முழுநிலையோ காணலாம்! ஒரு பக்கமும் ஒத்தது அறிதல் இல்லாத நிலையே இடர்நிலை!

அஞ்சலகத்தில் வாங்கும் உறையில் ஒரு பக்கம் இருக்கும் பசையில் (பயின்>பிசின்) தண்ணீர் பட்டதும் அடுத்த பக்கம் ஒட்டிக்கொள்வது இல்லையா? அப்படி ஒரு பக்கம் அழுத்தமான அன்பு இருந்தாலும் அவ்வன்பு இருவரையும் இணைத்தே தீரும்! அன்பு நெறியே விட்டுக் கொடுத்து ஒத்துப் போவதே'' என்றேன்.

இன்னொரு வினா : ''திருக்குறள் தொடர்பாகப் பல நூல்கள் எழுதியுள்ளீர்கள். அவற்றை மொத்தமாகப் பெற முடியுமா! எல்லாவற்றையும் கற்க வேண்டும் என்ற எண்ணம் தங்கள் வாழ்வியல் உரையால் ஏற்படுகிறது. எங்குக் கிடைக்கும்?''

''அன்பர் வினா ஆர்வத்தால் அன்றி, ஆய்வு அழுத்தத்தால் ஏற்பட்டது என்பேன். ஏறத்தாழ அறுபது நூலுக்கு மேலும் திருக்குறளுக்கு எழுதியுள்ளேன். கட்டுரை வகையால் இருநூற்றுக்கு மேலும் எழுதியுள்ளேன். எல்லாவற்றையும் களஞ்சியப் படுத்திப் பத்து அல்லது பதினைந்து தொகுதிகளாக வெளியிட்டால் அன்றி உடனே முழுமையாகப் பெற இயலாது. ஏனெனில், அந் நூல்களைப் பல்வேறு பதிப்பகங்கள் பல்வேறு காலங்களில் வெளியிட்டுள்ளன! இருபது முப்பது நூல்கள் வேண்டு மானால் இப்பொழுது சில படிகளைத் தொகுத்துத் தர முடியும். தங்கள் எண்ணத்தைப் போலவே வேறு சிலர்க்கும் எண்ணம் இருக்கலாம்! அதனை எண்ணிச் செயலாற்ற நீங்கள் தூண்டியதாகக் கொள்கிறேன். தங்களுக்கு நன்றி கூறுகிறேன்'' என்றேன். கூட்டம் முடித்து, முத்துக்குமார் இல்லத்திற்குச் செல்லும் வழியில் தம் இல்லத்திற்கு வந்து தேநீர் அருந்திச் செல்ல அன்பர் சிவராமன் வேண்டினார்.

அவர் முன்னரே கூட்டங்களிலும், வீரபாண்டியார் விடுதியிலும் உடனாகி இருந்தவர். ஆங்கு 5 மணியளவுக்குச் சென்றோம்! தேநீர் பருகினோம்! உள்ளார்ந்த அன்புக் குடும்பம்!

உரிமை அன்பால், இருட்போதில் நூல் பயிலும் அளவுக்கு அமைந்த ஒளிதரும் விளக்கு ஒன்றனை வழங்கினர்! "முதியவர் படிக்க உதவும்" என்னும் ஆழிய எண்ணம் அதனை வழங்க அவர்களைத் தூண்டியிருக்கலாம்! 'இது பொருந்தும்' என்பது தேர்வுப் பயன் அல்லவா!

அவர்தம் இல்லத்தில் விருந்து அளவளாவும் போது, யூத இனத்தார் கட்டமைப்புப் பற்றிய கருத்தொன்று பேசப்பட்டது.

> "யூதர் ஒருவர் அறிந்தவர் எனினும் அறியாதவர் எனினும் இந்நாட்டுக்கு வருவராயின் அவரை யூதர் எவரும் வரவேற்று அவர்க்கு வேண்டுவ புரிதலைப்பிறவிக் கடனாகக் கொள்கின்றனர். தாமே அன்றியும் தக்கார் வழியாகவும் உதவிபெறச் செய்கின்றனர். யூத, 'மில்லினர்' ஒருவர், இன்னொரு 'மில்லின'ரை ஆக்குவதில் பெருமைப்படுகிறார். ஒவ்வொரு யூதரும் தம் வருவாயில் ஒரு நல்ல பகுதியை யூத அமைப்புக்கு வழங்குவதை நோன்பாகக் கொண்டுளர் என்பது அது! இக் கட்டமைப்பைத் தமிழினம் என்றாவது கொள்ளுமா? தமிழினத் தலைமைகள் இக் கட்டமைப்பு ஏற்பட விட்டு வைக்குமா?

திரு. முத்துக்குமார் இல்லம் சேர்ந்த சிறிது பொழுதில் நடவரசர் புறப்பட வேண்டியது ஏற்பட்டது. அவர் வேறொரு நகர் நோக்குகிறார். யான் அன்று அங்கே தங்கி, மறுநாள் ஊர் நோக்குவேனாக உள்ளேன்.

அன்பர் நடவரசரொடு முத்துக்குமாரும் திண்டுக்கல் அன்பர் ஒருவரும் இணைந்து சென்றனர். செல்லுமுன் முத்துக் குமரர் அவர்தம் துணைவியார் அருணாவிடம் என்னுரை பற்றிக் கூறியிருக்கிறார். ஏனெனில், அவரால் நிகழ்வுக்கு வர இயலவில்லை! வேறொரு விருந்தினர் வந்து விட்டார்.

அம்மையார் ஆங்குப் பேசியது பற்றியும், குடும்ப வாழ்வு, மக்கள் வளர்ப்பு, முதியரைப் பேணுதல் என்பவற்றைப் பற்றியும் நல்ல வினாக்களை எழுப்பினார். ஏறத்தாழ அரைமணிநேரம் அறிவார்ந்த உரையாடலுக்கு அவர் ஒதுக்கி இருந்தமையே பெரிதாம்! அதன் பின்னர், இரவு உணவை உண்டு தங்கினேன்.

மறுநாள் காலை உணவுக்குத் திருச்சி, உத்தமர் கோயில் அன்பர் மருத்துவர் திரு. **இளங்கோ** என்னை அழைத்திருந்தமையை முத்துக்குமரர் கூறினார். அவர் என் உரைபற்றிக் கேட்டவர் உரைத்ததைக் கேட்டிருக்கிறார். தவச்சாலை இருக்கும் இடமும் அறிந்திருக்கிறார். நம் முனைவர் **கோடப்பிள்ளை** அவர்களிடம் தமிழ்பயின்ற சிறப்பினராம்! அவர், கால்முறிவு பட்டுக்கட்டுடன் இருந்தமையால், நியூசெர்சி நிகழ்வுக்கு வர இயலாமல் போனதை உரைத்து, விருந்துக்கு வந்து செல்ல வேண்டியுளார். அதனால், விடியல் வேறிடம் செல்ல இருப்பதை எண்ணி வழக்கத்திற்கு முன்னாகவே எழுந்து விட்டேன்.

34. நியூயார்க்கு

22.7.2007 ஞாயிறு

காலைக் கடன்களை முடித்து விட்டுப் புறப்பட்டோம்; முத்துக்குமரர், அருணா முத்துக்குமரர் ஆகிய இருவரும் உடனாகினர். ஆங்கே திருச்சி அன்பர் பேரா. நாகராசனார் தம் மகளாருடன் வந்தார். முன்னர் இராலே மாநாட்டுக்கும் வந்து இரண்டு நாள்களும் இனிது உறவாடினார். முதற்கண் சந்தித்தபோதே, ''சிலப்பதிகாரக் கானல்வரிப் பகுதியை முழுதுறத் தெளிவாக்கும் வகையில் பொழிவு செய்ய வேண்டும். நம் அன்பர்கள் பத்துப் பதினைந்து பேர் ஆய்வு நோக்கில் கூடிப்பொழிவும் கலந்துரையாடலுமாக நிகழ ஏற்பாடு செய்ய என் எண்ணம். ஊர்க்கு வந்தபின் அன்பர்களொடு கலந்து முடிவெடுக்கலாம்! நீங்கள் பொழிவு செய்ய வேண்டும்'' என்றார்.

''செய்ய வேண்டுவதே ஆம்! தேர்ந்த கருத்துகள் வருங்காலப் பயனாம் வகையில் நூலாக்கமும் செய்துவிடலாம்'' என்றேன். அவர், தம் இல்லத்திற்கு அழைத்தும் காலம் இன்மையால் தம் அன்பர் இல்லத்து அழைப்புடன் தாமும் கலந்து கொள்ள இருப்பது அறிந்தேன்.

திரு. இளங்கோ அவர்கள் ஓய்வு பெற்ற மருத்துவர். மக்களொடு இருக்க அவரும் அம்மையாரும் வந்துள்ளனர். மக்கள் பெயரர் எனினும் வெவ்வேறு இடங்களில் பணி, கல்வி! ஆதலால், அவரும் அம்மையாருமே இருந்தனர். காலில் கட்டைப் பிரிக்கும் நிலையில் தேறி இருப்பதாகக் கூறினார்.

பலப்பல அளவளாவினார். மாநாடு பொழிவு பற்றிப் பேசினார். தம் ஆசிரியரை மனமுவந்து பாராட்டினார். இலக்கண வகுப்பும் இனிய வகுப்பு என எண்ண வைப்பவர் அவர் என்றது எனக்கு மிக மகிழ்வாக இருந்தது.

அம்மையார் வகைபல ஆக்கியிருந்தார். அருணா அவர்களும் உடனாகிப் பரிமாறி உதவினார். சற்றே காலத் தாழ்வு ஆயிற்று. நாகராசனார் வருதற்கு. நாங்கள் நண்பகலுக்கு மேல் நியூயார்க்கு சென்று காண்பன கண்டு எட்டு மணிக்குள் வானூர்தி நிலையம் சேர வேண்டும்! ஆதலால், உண்டோம்! திரு. பாபு என்பார் விழாவுக்கு வந்தவர். அவர் பலப்பல வினாவினார். உணர்வு மிகப் பாராட்டினார். விரைந்து திரும்ப இருப்பது அறிந்து பேசுவதாகவும் கூறினார்.

புறப்பட வேண்டும் என்னும் நிலையில் நாங்கள் இருக்க, நாகராசர் எய்தினார். வரைபடம் அவ்வாண்டில் விரிவான கட்டடப் பகுதியைக் காட்ட வாய்க்காது. அடுத்த ஆண்டிலேயே சேரும். அன்பர் இளங்கோ இல்லம், குறித்த எண்ணைத் தாண்டிய எண்ணில் இருந்த இடரால் வீட்டைக் கண்டறியக் காலத் தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. இந்நிலை எங்களுக்கும் ஏற்பட்டது. சிறிது போது கனிந்து உரையாடிப் புறப்பட்டோம். புறப்படும்போது அன்பர் இளங்கோ தவச்சாலைக்கென 100 தாலர் வழங்கினார். திருச்சிக்கு வருங்கால் தவச்சாலைக்கு வருவதாகக் கூறினார்.

11.00 மணியளவில் முத்துக்குமரர் இல்லத்திற்குப் புறப்பட்டோம். சிறிதே ஓய்வு கொண்டு நண்பகல் உணவுக்குப் பின் 2 மணிக்குப் புறப்பட முடிவு செய்தோம். நியூயார்க்கு சென்று சுற்றிப் பார்க்க வேண்டும். வானூர்தி புறப்பட உள்ள நேரம் இரவு 11.15 மணி. ஆதலால், இடையேயும் வானூர்தியிலும் உண்ண என இரண்டு வகை உணவைக் கொண்டு செல்லக் கூறினர். அம்மையார்

அணியமாக்கிக் கட்டும் போட்டு விட்டார். யான் கண்டேன் அவற்றை! பையில் வைக்கவும் இயலாது! என்னால் உண்ணவும் இயலாது என்று வேறு கட்டுப் போட்டுத் தரச்சொன்னேன்". "மூன்றே மூன்று இட்டலி! அதற்குப் பொடி; வேறு ஒன்றும் வேண்டா" "இன்னொன்று, இதே அளவான எலுமிச்சைச் சோறு சிறிது துவையல்! அவ்வளவே" என எடுத்து வைத்துக் கொண்டேன். தண்ணீர் வைத்திருந்தேன்.

பகல் இரண்டு மணிக்கு முத்துக்குமரர் என்னை அழைத்துக் கொண்டு புறப்பட்டார். போகும்போது ஆங்குள்ள குழந்தைகள் நிலையைக் குறிப்பிட்டார். அவை ஆழமிக்க செய்திகள்! கட்டாயம் எண்ணிப் பார்க்க வேண்டியவை. 'ஒருவர் குடும்பம் ஒரு குழந்தை நிலை'யெனத் தள்ளிவிட முடியாதவை!

"அம்மா கட்டாயமாக அழைக்கிறார் கோயிலுக்கு! எனக்குப் போகவே பிடிக்கவில்லை. அவர் திட்டுவாரே என்று போனால் அங்கு சொல்லும் மந்திரம் புரியவே இல்லை! கட்டாயமாகப் போவதால் பயனென்ன" என வினாவுகிறான். அர்ச்சகரிடம் கேட்கிறான்!

"நீர் ஏதோ சொல்கிறீர்! இந்த மந்திரத்தின் பொருள் என்ன? எனக்குப் புரியும் மொழியிலேயே நீர் ஏன் சொல்லக் கூடாது?"

அர்ச்சகர், "இந்தச் சம்ஸ்கிருத மொழியில் சொன்னால்தான் மந்திரம்! இதில்தான் சொல்ல வேண்டும்" என்கிறார்.

"உமக்குப் புரிந்தால் நீரே உம் வீட்டில் சொல்லிக் கொள்ளும்! இது பொதுக் கோயில் எனக்குப் புரிய, எனக்குப் புரியும் மொழியில் சொல்லும்" என்கிறான்.

அது முடியாது என்கிறார். "அப்படியானால் நான் இதனைப்படித்து இங்கே ஓதலாமா?"

"ஓதக் கூடாது"

"ஏன்?"

"ஓதுவதற்கு, நீ பிராமணனாகப் பிறக்க வேண்டும்! நீ பிராமணன் இல்லை"

"பிராமணனும் மனிதப் பிறவி தானே! அவனுக்கு மட்டும் எப்படி அந்த உரிமை வந்தது?"

"அதைச் சொல்ல முடியாது! நீ உன் மொழியில் சொல்ல வேண்டுமானால் மாரியம்மன் காளியம்மன் கோயிலில் சொல்லலாம். இது சிவன் கோயில் இங்குச் சம்ஸ்கிருத மந்திரந்தான் ஓத வேண்டும்!"

"சாதியில் உயர்வுதாழ்வு போலச் சாமியிலும் உயர்ந்த சாமி தாழ்ந்த சாமியா?" என்கிறான்.

"இனி அம்மாவுக்காகக் கூட நான் கோயிலுக்குப் போக மாட்டேன் என்கிறான்"-என்றார்.

இது வழிபாட்டு மொழி இடர்! இன்னொன்று தாய்மொழி நிலை!

அமெரிக்காவில் பிறந்து அமெரிக்க நிலையிலேயே வளர்க்கப்பட்டுவிட்டவன் அல்லது வளர்ந்து விட்டவன் தமிழ்ப் பள்ளிக்குப் போக அல்லது தமிழ் பேச வெறுக்கிறான்! வேண்டா வெறுப்பாக உதறுகிறான். கட்டாயப்படுத்தித் தமிழ்ப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினால், அங்கே நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி.

தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் புதிதாகப் பள்ளிக்கு வந்த பிள்ளைகளிடம், "நீ இதுவரை அறிந்த தமிழ்ச் சொற்கள் எவை?" எனக் கேட்கிறார்.

பையன் சொல்கிறார், "சனியனே, பிசாசே, உருப்பட மாட்டாய்"

இவை எனக்குத் தெரிந்த தமிழ்ச் சொற்கள்!"

"இவற்றுக்குப் பொருள் தெரியுமா?"

"தெரியாது! திட்டுகிறார் என்பது மட்டும் தெரிகிறது!"

"தமிழ் படிக்க விரும்புகிறாயா?"

"விரும்பவில்லை; தமிழைக் கற்று என்ன பயன்? கட்டாயப்படுத்தி இங்கே இழுத்து வந்து தொல்லைப் படுத்துகிறார்கள்"

என்னும் நிலைமையே இங்கே இருந்தது. ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது.

தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் உள்ளன! வேண்டியவாறு தமிழ்நூல்கள் உள்ளன! திட்டமிட்ட பாடங்கள் உள்ளன! நம்மவர் கலைகள் போற்றப்படுகின்றன! பண்பாட்டுக் காவலும் நிகழ்கின்றது! எல்லாம் ஆங்காங்கே உள்ள தமிழ்ப் பற்றாளர்கள்-தமிழ் உணர்வாளர்கள் திட்டமிட்டு உருவாக்கி வாரந்தோறும் மாதந்தோறும் நிகழ்த்துகின்ற தமிழ் நிகழ்ச்சிகள்! ஆண்டு விழாக்கள்! எல்லாம் எல்லாம் தமிழ்ச் சங்கங்களின் செயற்பாட்டால் நிகழ்பவை. தமிழ்ச் சங்கப் பேரவையோ ஒட்டுமொத்த அமெரிக்கத் தமிழர்களையும் ஒருங்கே கூட்டித் தமிழ்ப்பெருவிழாவாகவே பல்லாயிரவர் கூடி எடுக்கும் வகையில் பொலிவாக நிகழ்கின்றது என்றார்!

எட்டிக்காயாய்த் தொடங்கிய பேச்சு, கட்டிப்பாகாக அல்லவோ நிறைந்தது! இப்பணி பூண்டார் அனைவரும் உலகத் தமிழர் ஒருமித்த பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியர் என்பதைத் திசை நோக்கிச் சொல்கிறேன்.

நியூயார்க்கில் உலகப்பெருமா மன்றம் இருந்தாலும், காண வருவோர் உள்ளம் கவர்வது எல்லிசுத் தீவில் உள்ள உரிமையன்னையின் உயர் பெருஞ்சிலையேயாம்! குடியேற வருவார்க்கெல்லாம் வாயிலாக இருந்த கப்பல்துறைத் தீவின் கலை எழுச்சி வரவேற்பே, அச்சிலை. பிரான்சு நாட்டினர் வழங்கிய நினைவுக் கொடை அது. ஆண்டு 1886.

பீடம் 79 அடி, சிலை 151 அடி, மொத்த உயரம் 230 அடி. சூழல் பரப்பு ஒருபால் பசுமை; முப்பால் நீலம்! வானும் நீலம்! சிலையில் உடை நிறம் பச்சை! பொன்னொளித் தீப்பந்தம் ஒருகையில்! விண்ணில் பறப்பார் சிலையின் முகப்பொலிவை நெருங்கிப் பார்க்கலாம். கப்பலில் சென்று பார்ப்பார் முழுமையையும் அமைந்து பார்ப்பார். நியூசெர்சி ஒரு மாநிலம்! நியூயார்க்கு ஒரு மாநிலம்!

லிபர்ட்டி தீவின் சுற்றெல்லாம் வானளாவிய அடுக்கு மாடிகள்! ஐ.நா. நிலையம், அரசுசார் அலுவலகங்கள் விரைந்துபார்க்க வேண்டிய நிலையில் நுழைந்து பார்க்க வகை உண்டா? கப்பலில் ஏறிச் சிலையைச் சுற்றிவரவே சில மணிகள் ஆயின.

கப்பலுக்குரிய நுழைவாய்ப் பகுதியில் நான்கு ஐந்து பேர் கொண்ட ஒரு தமிழ்க் குடும்பம்! என் பொழிவை வாசிங்டனில் கேட்டவர்! அவர்களும் சுற்று வந்துளர். பொழிவு பற்றி உரைத்தனர். செர்சி கூட்டம் தெரியாதாம்! முத்துக்குமரர் தமிழ்ச்சங்கத்தொடு தொடர்பு கொள்ள முகவரி தந்தார். அவர்கள் திருச்சி பெரியார் நகர் சார்ந்தவர்கள்! அவருள் சத்திவேல் என்பார் ஒருவர். அவர்தம் உறவினரே பெரியார் நகரில் இயற்கை மருத்துவம் பார்ப்பவர் என்றார். அப்பகுதியில் எனக்குத் தெரிந்த இயற்கை மருத்துவர் பாலகிருட்டிணர். தம் உடன்பிறந்தாரைத் தவச்சாலைக்கு வரச் சொல்வதாகக் கூறினார்.

முத்துக்குமார் நியூயார்க்கு நகரைச் சுற்றிக் காட்டி ஒரு வழிகண்டார். போன பாதைகள் பல, மேல் தளங்கள்! கீழே செல்லலாம்; நன்குபார்க்கலாம்! பொழுதும் இருக்கிறது என்றார்! அப்படியே சென்றார். நியூயார்க்கு நகரத் தெருக்கள் மற்றவை போல் விரிவானவை அல்ல. தெருவின் இருபாலும் உயர்ந்த மாடங்கள்! அங்காடிகள்! ஊர்திகளின் பெருக்கமோ

அளவிட முடியாது! ஊர்ந்துதான் போக வேண்டும்! சிவப்பு விளக்குத் தடைகளுக்கும் குறைவு இல்லை! மற்றை இடங்களில் காணா மிதிவண்டி, தள்ளு வண்டி இங்கே உண்டு!

தெருவின் நடைபாதை யெல்லாம் கடைகள், தடைகள்! குறுக்கே குறுக்கே மக்கள் நடைகள்! ஆம் மாலைநேரச் சென்னைப் பாண்டிப் பசாராகவே இருந்தது! சைனா பசாரும் ஆகக்கூடும்!

ஏன் நியூயார்க்கின் நிலை இவ்வாறு உள்ளது! ஆங்கு மக்கள் பெருகுகின்றனர்! குவிகின்றனர்! செங்கற்பட்டு, காஞ்சிபுரம் முதலாம் இடங்களில் இருந்து சென்னைக்குப் பணிநோக்கி வந்து போவார் போலப் போய்வருகின்றவர்! குடியிருப்புத் தட்டுப்பாடு! கட்டுப்பாடு பற்றிக் கவலை காட்டாக் கறுப்பர் பெருக்கம்! அப்படியானால், புத்துலகிலும் கூட்டம் கும்பல் கூச்சல் குப்பைப் பகுதி உண்டு! அடிப்படை "மக்கட்பெருக்கம் தீர்க்க முடியா நெருக்கடிகளை ஏற்படுத்தத் தவறாது" என்பதே யாம்!

✲

35. மீட்சியின் மாட்சி

7.15 மணிக்கே வானூர்தி நிலையம் வந்துவிட்டோம்! இன்னும் வானூர்திக்குரிய பொழுது, நான்கு மணி இருக்கிறது. யான் உள்ளே போக ஓர் எளிய வழி! அவர் விரைந்து விடைபெற்றுச் செல்லவும் அரிய வழி! அதனால், முதுவரை ஏற்றிச் செல்லும் அமர்வு இருக்கைத் தள்ளு வண்டியை ஏற்பாடு செய்தார். அவ் வண்டியார் அமரச் செய்தார்! பொருளை எடை போட்டார்! உள்ளே தள்ளிப்போய் வானூர்திப் புகுவாய்ப் பகுதியில் அமரச் செய்து விட்டார்! வானூர்திக்குள் புக அறிவிப்பு வந்ததும் தாம் வருவதாகக் கூறிப் போய்விட்டார்! எளிதாகப் புகுந்தாயிற்று! எங்கும் செந்தணப்பு! இன்னும் ஊர்திக்குள் புகவே நான்குமணிப் பொழுது! வானூர்தியில் பன்னிரு மணிப்பொழுது! பின்னர்த் துபாயில் இறங்கி ஆறுமணிப்பொழுது காத்திருக்கை! அதன்மேல் நான்கு மணிச்செலவு சென்னை! கணக்கிட்டுப் பார்த்தால் குளிர் நடுக்கம், மேல் நடுக்கமே ஆயிற்று!

அருணா முத்துக்குமார் அவர்கள் 'இட்டவி-பொடி'க் கட்டு தந்ததை இப்பொழுதுதான் உண்ணக்கூடும்! ஊர்தி ஏறிவிட்டால் சீராகாது என எண்ணி 'ஆர அமர' உண்டேன்!

நொடிநொடியாகப் பொழுது நொண்டியடித்துக் கொண்டிருந்தது. ஒருவாறு 10.30க்கு வானூர்திக்கு வர அழைப்பு வந்தது. என்னை விட்டுச் சென்றார், வந்தார்! வண்டியில் ஏற்றினார் ஊர்தி வாயிலில் இறக்கி உள்புக விடுத்தார்! உரிய இருக்கையில் அமர்ந்தேன்!

சரியாக 11.15க்கு ஊர்தி நியூயார்க்கில் இருந்து துபாய்க்குப் புறப்பட்டது. முன்னே உள்ள காட்சிப் பெட்டியில் துபாய்க்குச் செல்ல உரிய செலவுத் தொலைவு! செலவு நேரம்! ஊடுஊடு போடப்பட்டுக் கொண்டே வந்ததை நோக்கி நோக்கிக் காலைத் தடவிக் கொண்டிருந்தேன்!

உணவு-தண்ணீர்-என எவை எவையோ வந்தன! எதனையும் கேளாமல் வேண்டாமல் மூன்று இட்டவி உண்ட நிறைவே நிறைவாய்த் துபாயில் இறங்கினேன்.

இமயமலையை எப்படியோ கடந்தாயிற்று! இனி என்ன மேற்குத் தொடரைக் கடப்பதுதானா அரிது. வையை வளம் என்னும் நூலை எழுதுங்கல் சேற்றூர்ப் பகுதியிலே ஏறி தேக்கடியிலே இறங்கிய வீறு இன்று உடலுக்கு இல்லை என்றாலும் உளத்திற்கு உண்டே!

நியூயார்க்கு நிலையத்தில், சென்னை அன்பர் சொக்கலிங்கத்தை முத்துக்குமரர் அறிமுகப்படுத்தினார். சென்னை அன்பர் சத்திவேலரை நியூயார்க்கிலேயே யான் கண்டேன்; துபாயில் கலந்து பேசினேன்; மயிலாடுதுறைக் குடும்பத்தார் ஒருவர் நாலைந்து பேராக வந்தார்! இனி என்ன?

எழுத எழுதுகோல் உள்ளது; குறிப்பேடு உள்ளது; வாய்த்த போதெல்லாம் எழுதலாம்; சிந்திக்கலாம்! இருந்த உணவை எடுக்கவோ உண்ணவோ எண்ணம் வரவில்லை!

மயிலாடுதுறையார் தம் தந்தையாரைக் காணச் செல்கிறார். தம் குடும்பத்துடன்! அவர் முடியாமல் மருத்துவ மனையில் இருப்பதாகச் செய்தி வந்து புறப்பட்டுள்ளார். செல்வம் தேடுதல் கட்டாயம்! உறவை விட்டுப் பிரிந்திருக்கப் பெரிய ஏக்கம்! இரண்டன் இடைப்பட்டுத் தவிப்பார்க்குத் தக்க ஆறுதல் கூறினேன்; வழிகாட்டினேன்; என் பணிக்கு 'அவையம்' தான் வேண்டும் என்பது இல்லையே! அமைந்து கேட்டபார் ஒருவர் தாமும் அவையம் தானே! அதனால் தானே பண்டை

இலக்கணர் "ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி" என்றனர்! அன்பரின் அன்னையார் ஆசிரியர்! கற்ற முகம் தன் கவினொடு தாய்மையும் தாங்கி நின்றமை ஆங்கோர் குழந்தை வர அதனை அரவணைத்துப் பேசிய பேச்சால் புலப்பட்டது. என்னைத் தெரிந்து கொண்டு பலப்பல வினாவினார்.

எதிரே ஓர் ஆங்கிலப் பெண்மணி! தம் குழந்தைகள் இரண்டையும் படுக்க வைத்த முயற்சி! படிக்க உதவிய அருமை! உணவு தந்த தாய்மை! எந்தத் தாயாக இருந்தாலும் இத் தெய்வ நிலை சேர்ந்தே ஆகும் போலும்! இரண்டு மான்குட்டிகளை இப்பாலும் அப்பாலும் படுக்கவைத்து அவற்றை மகிழ்வாய் உறங்கச் செய்தமை, ஐங்குறு நூற்றுச் செவிலித்தாய் பெற்ற தாயினிடம் பெரிதுவந்து பாராட்டுவது போல இருந்தது!

வானூர்தி அறிவிப்பு வரவும் அதன் புகவுப் பகுதி வாயிலில் இருந்த இருக்கை சென்று அடைந்தோம்! ஊர்தியிலும் ஏறி அமர்ந்தாயிற்று!

சீட்டில் போடப்பட்டிருந்த இருக்கையில் வேறொருவர் இருந்தார். அப்பகுதிச் செவிலியர் வேறோர் இடம் காட்டினார்! பின்னர் அவ் விடத்திற்குஉரியவர் வந்து என்னிடம் என்றார்! வேறோர் இடம் காட்டினார். ஏன் இக் குழப்பம்!

செல்லும் வழியில் இருக்கும் இடத்தில் ஏற்றிப் பின்னர் மாற்றும் பேருந்து நிலை வானூர்தியிலுமா? வானூர்தியிலும் கூட உண்டு என்பதுதான் பட்டறிந்த தாயிற்றே!

நான் இருந்த பகுதியில் இருந்த செவிலியர் பெருங்குணத்தை அறிந்து யான் நாளும் போற்றும் வகைக்காகவே, இம் மாற்றி யடிப்பு வேலைகள் நிகழ்ந்தன போலும்!

என் இருக்கை மூவிருக்கையின் ஊடிருக்கை அப்பக்கம் உருதார்! இப்பக்கம் ஒரு தமிழர்! உருதாரை

நல்லவராக்கவே வந்தார் போலும் இவர்! சில பிறவிகள் அப்படிப் பிறந்துவிட்டு, நம்மை ஒட்டிக் கிடந்தால் விண்ணில் இருந்து குதிக்கவா முடியும்?

வானூர்தி இரண்டு மணிப்பொழுது பறந்து விட்டது. செவிலியர் (ஆடவர் அமெரிக்கர்) என்நிலையை எண்ணினர் போலும்! "முதுமை! எதுவும் உண்ணாமை! உறங்கவும் இல்லாமை! நீரும் வேண்டாம் என்றமை!" இவை ஒருவர் பரிவுக்குக் கட்டியம் கூறுவன அல்லவோ!

அவர் என் செவியோடு செவியாகச் சொன்னார். பலரும் நிரப்பத் தந்த படிவம் போல எனக்கும் படிவம் தந்தவர் அவர். அவரே பின்னர் என் செவிக்கண் மெல்லச் சொல்கிறார். "நானே இப்படிவத்தை நிரப்பித் தரலாமா?" எவர் கேட்கச் சொன்னார்? அல்லது எது கேட்கச் சொன்னது? அந்த மாந்த நேயம் எளிதில் வாய்ப்பதா? பக்கத்தில் இருந்த மரத்துக்குக் கண்ணும் செவியும் மனமும் இல்லையே!

படிவத்தை நிரப்ப யான் கடவுச்சீட்டைத் தருகிறேன். நடக்கும் குறுகலான வழியில் மண்டிக் காலிட்டுப் படிவம் நிரப்புகிறார். இடைஇடை நடை புரிவார்க்குத் தாம் இடம் தந்து எழுந்து பின்னர் மண்டியிட்டு எழுதுகிறார்! நன்றி என்று வணங்குகிறேன்! என்னினும் தாழ்ந்து நன்றியொடு வணங்குகிறார், தமிழர் வணங்கும் இருகை முழு வணக்கமாய்!

"பொல்லா உலகத்திலும் பூரித்துப் பாராட்டத்தக்க நல்லதும் இல்லாமல் அற்றுப் போய்விடவில்லை" என்பதை எண்ணி மகிழ்ந்தேன்!

வானூர்தி குறித்தவாறு 7.15க்குச் சென்னை நிலையம் சேர்ந்தது. உடனே வெளியே போகி விடமுடியுமா? தணிக்கை உண்டு! கொண்டுவந்த சுமையை எடுத்தல் உண்டு! இவை யென்ன நொடிநொடி வேலையா? தணிக்கை என்பதில்

எனக்கு எவ்விடத்தும் சிக்கல் இல்லை! கையைக் காட்டிப் போகக் கூறிய அளவொடும் சரி!

நியூயார்க் ஊர்தியில் போடப்பட்ட சுமை! அதன்மேல் எத்தனை எத்தனை சுமையோ! எந்த மூலையில் கிடந்ததோ? பாறைக் கற்களுக்கு இடையே ஒரு பருக்கைக்கல் கிடந்தது போன்ற என் எளிய சிறிய பை ஒருமணிநேரம் கழித்து வந்தது! வந்த மகிழ்வில் அப்படியே வாரி எடுத்துப் பிரிந்த குழந்தையைப் பெற்றவள் வாரி அணைப்பது போல எடுத்துத் தள்ளுவண்டியில் ஏற்றிச் சென்றேன்! எல்லாரும் செல்லும் வழிக்கு எதிரே சிறிது திறந்திருந்த வழியில் யான் செல்லவும், என்னைத் திட்டாமல்-தள்ளாமல், வாயிலைத் திறந்து வெளியே செல்ல உதவினார் காவலர்!

ஆர்வத்தால் 7 மணி முதல் 9 மணிவரை வாயிலில் காத்திருந்து கையசைத்து நின்ற கலைச்செல்வனார், செழியனார், இனியனார் ஆயோரைக் கண்ட அளவில், மாலையும் ஆடையும் போர்த்திப் பையை எடுத்தால், 'பை' தன் வாய் திறந்து மூடியும் மூடாமல் கிடக்கிறது! அவ்வளவு சுமை ஏற்றவும், தூக்கி எறியவும் பட்டுக் கிழிந்திருக்கிறது! எல்லாம் துணிகள்! எப்பொருளும் போய்விடவில்லை! பூட்டும் இழுவையும் இருந்தது இருந்தபடி இருக்க இப்படியா வாய்கிழியும்! நல்ல இன்பியல் இல்லையா? எப்படி இன்பியல்? கிழிந்தது தவிர ஒழிந்தது எதுவும் இல்லையே! போனால்தான் என்ன போயிருக்கும்? என் சட்டை வேட்டி போயிருக்கும்! வேட்டியைக் கட்டிக்கொண்டு வானூர்தியில் ஏறிய ஒரே ஓர் ஆள் யான்! அதனை எவர் சீந்துவார்! என் சட்டையா என் பதினாறு வயது அளவு! உயரம் நீளம் அகலம் எல்லாம் எல்லாம்! என்றும் பதினாறு, எவர்க்கு ஏற்றுவரும்? எண்ணிப் பார்க்க இனிக்கும் இவை யெல்லாம் எப்படி இன்பியல் இல்லாமல் போகும்.

தமிழ்மண்ணில், தமிழ்மண் பதிப்பக ஊர்தியில் ஊர்ந்தோம்! அந்நேரம் வானூர்திச் சுறுசுறுப்பிலும், வெளிச்சாலைச் செலவு நெருக்கடியிலும் ஊர்ந்து சென்று திரு. கோ. இளவழகனார் இல்லத்தை அடைகிறோம்! பல்லை விளக்கிக் கடன்களை முடித்துக் குளம்பி பருகுகிறோம்! காலை உணவும், நண்பகல் உணவும் ஆங்கேயே முடித்து ஓய்வும் உறக்கமும் உரையாட்டும் எனப் பொழுது போகின்றது.

பையின் வாயை மூட்டச் செழியன் எடுத்துச் செல்கிறார். கலைச்செல்வரும் செழியரும் மாலையில் வருகின்றனர். ஆங்கிருந்து விடைபெற்றுக் கொண்டு கோயம்பேடு எய்தித் திருச்சிராப்பள்ளிப் பேருந்தில் 24 இரவு 9.30க்கு ஏறுகிறோம்!

25 காலை 5.30க்குத் திருச்சிராப்பள்ளிச் சத்திரம் வந்து, தானி வழியே 6.00 மணிக்குத் தவச்சாலை அடைகிறோம்! முதல்நாளே அவண்வந்து எதிர்பார்த்திருந்த செல்வர் இளங்கோவைக் கண்டு மகிழ்கிறோம்! திருச்சியில் இருந்து வழியனுப்பிய அவர், திருச்சிக்கு வந்து வரவேற்றது நிறைவாயிற்று!

"சென்றதோ, மீண்டதோ, தெரியாதே!" என்றவர் உண்டு! "சொல்லியிருக்கலாம்" என்றவர் உண்டு! ஆனால், ஒருவர் செலவால் பலர் தத்தம் கடமை நெகிழவும், விளம்பரமாக்கவும் தேவை இல்லையே! வழக்கமாக நெய்வேலி, புதுவை, நெல்லை, சேலம், கோவை, சென்னை எனச் செல்வது போல்தானே சென்றேன்; மீண்டேன்! ஒவ்வொன்றும் சொல்லியா சென்றேன்! சொல்லியா வந்தேன்! ஆயினும், வந்துவிட்டார் உளரே! அவரைத் தடுப்பார் எவர்? அவர் வரவில்லை என்னும் எண்ணம் ஏன் ஏற்பட வேண்டும்! எதிர்பார்ப்பு இல்லையா, ஏமாற்றம் இல்லையே!

36. இணைப்பு

காலம்! காலம்!

அமெரிக்காவில் வாழும் தமிழன்பர்கள், கூட்டத் தொடக்கமா-நிகழ்நிரல் காலமா-கூட்ட நிறைவா சரியான கடிகாரமாகவே செயல்பட்டனர். மாநாடு மட்டுமில்லை மற்றை மற்றைக் கூட்டங்கள், விருந்துகள், சந்திப்புகள் என்பவற்றிலும்!

மாலை 6 மணிக்கு வருவேன் என்றார் திருவானைக்கா பெரியார் நகர் அன்பர் மலர்ச் செல்வனார். அவர் 6.15க்குத் தவச்சாலை எய்தினார். காலத் தாழ்வாயிற்று என்றே வணக்கத்தின்முன் கூறினார். போவதற்குள் நான்கு ஐந்து முறை காலத் தாழ்வு ஆயதைச் சொல்லிப் பொறுத்துக் கொள்ள வேண்டினார். எதனால் அவர்க்கு அந்த உணர்வு அழுந்தியது! அவர் அமெரிக்க வாழ்வர்! ஒரு கிழமைக்கு முன் ஊர்க்கு வந்தவர்!

"சேரன் பேசுகிறேன்; பீற்றர்; நாங்கள் இன்னும் அங்கு வர ஒருமணி நேரம் ஆகலாம்; நீங்கள் எங்களை நோக்கி உண்ணாமல் காத்திருக்க வேண்டாம்; உணவை முடித்து விடுங்கள்"

-இன்னொருவர் தம் கடமையைத் தடையின்றிச் செய்ய உதவும் நல்ல அறிவிப்பு இல்லையா!

"உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் இன்னும் இரண்டு மணித் துளிகளே உள்ளன; முடித்துவிடுங்கள்"-எவ்வளவு

பெரியவர் எனினும் முகத்துக்காக-ஏதாவது நினைப்பார் என்பதற்காக-காலம் தவற இடம் தருவது இல்லை!

பணியில் காலம் தவறாதவர்க்கு-குறித்த காலத்தில் குறித்த பணியை முடித்துத் தருபவர்க்கு அலுவலகம் வரவேண்டும் என்னும் கட்டாயம் இல்லாமல் வீட்டில் இருந்தே அலுவலகப் பணி செய்ய ஒப்புகின்றனர். சிலர்க்குக் கிழமையில் ஒருநாள், இருநாள் வீட்டில் இருந்து பணி செய்ய தொடர்இசைவு வழங்குகின்றனர். இவை, காலக் கடைப்பிடிக்கு வழங்கும் கொடையாம்!

"ஒருவர் காலத்தாழ்வு அவரொடு நிற்பது இல்லை! அவர் ஒருவர் சுணக்கம் அலுவலக இயக்கச் சுணக்கம்! அதனை ஏற்க வேண்டியவர் அவரே. அங்கே காரணம் என்பதற்கே இடமில்லை" என்கின்றனர்.

நம்மவர் அங்கே இக் காலங்கருதுதலில் தவறுவது இல்லையாம்! ஏன் அவர்கள் இங்கேயும் அக் கொள்கை யாளராக விளங்குவது இல்லை!

காலமும் இடமும் முதற்பொருள் என்று கண்ட மண் தமிழ்மண்! காலமறிதல் இடமறிதல் இரண்டும் இரட்டைப் பிறவியராய் இணைந்தவை! இத் தமிழகப் பழங்கொள்கை, பஞ்சாகப் பறந்து போய்க் கிடக்க அதனை மேலை உலகம் கடைப்பிடியாகக் கொண்டுள்ளது என்றால், அவ்வுலகத்தில் வாழ்ந்து இவண் வாழ வருவாரேல், நடைமுறைப் படுத்துதலை நழுவவிடாராய் நடைப்படுத்துவாராக! அது நாட்டுக்கு நற்பயனாம்! நல்ல பண்பாடுமாம்!

கல்வி:

அமெரிக்கக் குழந்தைகள் அனைவரும் 16 வயதுவரை பள்ளியில் சேர்ந்து கட்டாயமாகக் கல்வி பெறுதல் வேண்டும். 18 வயது வரை பயில வேண்டும் என்பதும் சில மாநிலங்களின் சட்டம்.

12 ஆண்டுக் கல்வி-இடைநிலைப்பள்ளிகள் வழியே கட்டணமின்றிக் கற்கலாம்.

கல்வி தருதல் ஆளுதல் ஆகியவை அந்தந்த மாநிலம் சார்ந்தவை. அல்லது அந்தந்தப் பகுதி சார்ந்தவை. கல்வித்துறை தொடர்பான அனைத்துத் திட்டங்களும் அதிகாரங்களும் நடுவண் அரசிடம் இருப்பதை அமெரிக்க மக்கள் ஒருமுகமாக எதிர்க்கின்றனர்.

அமெரிக்காவில் எல்லாப் பள்ளிகளிலும் ஒரே மாதரிப் பாடத்திட்டம் இல்லை. அந்தந்த மாநில அலுவலர் ஒன்று கூடி அவரவர் விருப்புக்குத் தகப் பாடத் திட்டங்களை வகுத்துக் கொள்கின்றனர்.

முதியோர் கல்விக்கெனத் தனிப் பள்ளிகள் உண்டு. பொதுப் பள்ளிகளில் கிழமைக்கு ஒன்று இரண்டு நாள்கள் முதியோர் கல்வி கற்கும் வாய்ப்பு உண்டு. நூலகங்களிலும் மழலையர் பள்ளியும், முதியோர் பள்ளியும் இணைந்து விளங்குதலும் உண்டு.

மாணவர்கள் படிக்கும் காலத்தில் சேவை செய்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. நூலகம் சென்றும் மருத்துவ மனை சென்றும் தூய்மைப்படுத்துதல்-உதவுதல் வறியர் உடற் குறையர் ஆயவர்க்காக வேண்டும் கடமைபுரிதல் என்பவை சான்றுடன் கூடியதாய்த் தேர்ச்சியின் ஒரு பகுதியாகக் கொள்ளப்பட்டுள்ளது.

தனியார் பள்ளிகளினும் அரசு நடத்தும் பள்ளிகளே சிறந்த கல்வி தருவதாக மக்கள் மதித்து அப்பள்ளியில் சேர்க்க விரும்புவதாகக் கூறுகின்றனர்.

தொடக்கப் பள்ளி என்பவை தாமும் அகன்றுவிரிந்த வளாகமும் பரந்து உயர்ந்த கட்டடங்களும் நூலகம் அறிவியல் ஆய்வகம் ஆகியவும் கொண்டதாகவே உள்ளன. நூற்றுக்

கணக்கில் வண்டிகள் நிற்க வாய்த்த இடங்கள் எப் பள்ளியிலும் உண்டு.

கலிபோர்னியாவில் தமிழ் கற்பிக்கும் பள்ளிகள் பல உள்ளன. 500 பிள்ளைகள் படிக்கும் பள்ளிகளும் உண்டு.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பெட்னா அறக்கட்டளையால் அமைக்கப்பட்ட தமிழ் ஆய்வுத் துறையும் செயல்பட்டு வருகிறது.

நாங்கள் கண்ட தொடக்கப் பள்ளி நூலகம் ஒன்றனைப் பற்றி முன்னர் எழுதப்பட்டது. கார்வர்டு, ஏல், இல்லினாய்சு, மிக்சிகன், கொலம்பியா முதலிய பல்கலைக்கழக நூலகங்கள் பலப்பல மில்லியன் நூல்களைக் கொண்டவை என்பது கேள்விப்பட்ட செய்தி.

வீடு :

ஒவ்வொரு வீடும் தோட்டச் சூழல் வீடே எனல் தெளிவு. இணைப்பு வீடுகளைக் காணல் அரிதேயாம்!

அடுக்கு மாடிப் பகுதிகள் அகநகர் சார்ந்தவை. இரட்டை வீடு, ஐந்து வீடு என இணைப்பு வீடுகள் ஆங்காங்கே உள்ளன.

சிற்றூர் வீடு என்பது ஒற்றை வீடே !

வீடுகளின்முன் ஆள்களைக் காணல் அரிது; ஆனால் உந்துகளைக் காணாமல் இருக்க முடியாது.

குப்பைக் குவியல் இல்லை. ஒவ்வொரு நாள் குப்பையும் உரிய பெட்டியில் போட வேண்டும்! மடிக்கும் பொருள், மடியாப்பொருள் எனத் தனித்தனி பிரித்துப் போட வேண்டும். அன்றன்று வாரி எடுக்கப்பட்டுவிடும் குப்பை.

தோட்டம் பசுமையாகவும் களையில்லாமலும் பார்த்துக் கொள்ளல் கட்டாயம். இல்லையானால் ஒறுப்புக் கட்டணம் உண்டு.

ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு மூன்று படுக்கை அறைகள் கட்டாயம் உண்டு. சில வீடுகளில் மேலும் இருக்கலாம்! ஒவ்வொருவருக்கும் தனித்தனி வண்டி போலத் தனித் தனிப் படுக்கையறை யுண்டு!

அண்டை வீடு செல்லுதல், பொழுதுபோக்காகப் பேசுதல் என்பவை காண முடியாதவை.

பக்கத்து வீட்டு நாய் குரைத்து இரவு உறக்கம் கெட்டால், அவர் முறைமன்றம் செல்லல் உண்டு! தம் வீட்டின் முன் இரவில் கூடிநின்று பேசி, வண்டி ஒலி எழுப்பி, உரக்கத் தொலைக்காட்சியை வைத்து-அமைதியைக் கெடுத்தாலும், வழக்கு மன்றம் காண நேர்ந்துவிடும்!

சாலை, வீடு, தோட்டம் என எங்கும் தூய்மை கொலுவிருத்தல் கொள்ளை இன்பம்!

கொசு, ஈ, எறும்பு, கறையான் என்பவற்றைக் காண முடியாது! அந்நாட்டுக் குளிர்நிலை ஒரு காரணமாக இருக்கலாம். எனினும் தூய்மைக் கேடு இருந்தால் உருவாகி விடவே செய்யும். யான் சென்று பதினாறு நாள் ஆன பின்னர் தங்கியிருந்த வீட்டுக் குளிப்பறையில் ஓர் எறும்பு ஊர்தல் கண்டேன்! அங்காடிப் பகுதியிலும், போக்குவரவு பூங்கா, பொதுநிலையம் என எங்கும் மாசில்லாமையே மாணப் பெரிய காட்சியாம்!

வீடுகள் என்றதும், அதன் பாரிய உயர அகலங்களைக் கண்டதும், நமக்குக் கல், செங்கல் முதலியவே முன் நிற்கும். ஆனால் அவை எல்லாமும் மரப்பலகை, ஒட்டுப் பலகை ஆயவற்றால் அமைக்கப்பட்டனவேயாம்! தளங்கள், படிகள் பளிச்சுக் கற்கள் பாவப்பட்டவை, முகட்டு வீடுகளே எங்கும்உண்டு! அவற்றின் முகடு ஓடு வேயப்பட்டவை!

வீடுதோறும் உள்ள வரவேற்பறை பெரிதும் ஒத்த காட்சியனவாகவே உள. மெத்தென்ற இருக்கைகள்,

அணைகள், ஊடுமிசை (மேசை) காட்சிப் பெட்டி, அழகு அட்டளை என்பவற்றைக் காணலாம்! எப்படியும் ஒரு பதின்மர்க்குக் குறையாமல் அமர்ந்து பேசும் வாய்ப்புடையது.

சிலர் வீடுகளில் அலுவலக அறை உண்டு! அவர்கள் அலுவலகப் பணியை வீட்டிலேயே இருந்து செய்துவிட்டு, அவ்வப்போது அலுவலகம் போய் வருபவர். வீட்டு வேலை உணவாக்கல் முதல் இருவருக்கும் ஒத்த பொதுக்கடமை யாகவே கொள்ளப்படுகின்றது!

வெளியே வீடுகளில் பூட்டுத் தொங்குவது, பூட்டுவது இல்லை. உள்ளிருந்து கதவைச் சாத்திவிட்டாலும் சரி, வெளியே இருந்து சாத்திவிட்டாலும் சரி தானே பூட்டுப் பூட்டிக் கொள்ளும்! உள்ளிருப்பார்க்கு ஒலிகொடுத்து அவர் வந்து கதவைத் திறந்தாலேயே வீட்டுள் புக முடியும். அல்லது திறவுகோல் கொண்டு திறந்து போக வேண்டும்.

வீட்டு மின் அமைப்பு, நீர் இணைப்பு நம் நாட்டு வழக்கத்திற்கு மாறாக உள்ளவை. நாம் மின் சொடுக்கியைக் கீழே அழுத்துகிறோம்! அங்கே மேலே தூக்க வேண்டும்!

தண்ணீர்க் குழாயும் மேலே தூக்குதலே.

கழிப்பறை சிறப்பானவே எனினும் நமக்கு ஏற்பதாய் இல்லை! தண்ணீரைப் பயன்படுத்திப் பழகிப் போன நமக்குத் தாளைப் பயன்படுத்துதல் ஒத்ததாக இல்லை! தனியே குவளை கேட்டு ஆங்கு வைக்கப்பட்டன.

குளிப்பும் வடிகுளிப்பு, தூவுகுளிப்பு உண்டு, ஆனால் அத் தொட்டிக் குளியல் ஒத்துவரவில்லை. அவர்கள் பழகிப் போனதால் அவர்களுக்கு இயல்பாகி விட்டது; இனியதும் ஆய்விட்டது.

அமெரிக்க வாழ்வினராகிப் பணிபுரிவார் அவாவி நிற்பது பச்சை அட்டை பெறுதல். அவ் வட்டையே வீடு கட்டிக்

கொள்ள அச்சாரம் எனத் தக்கது. அது பெற்றும் வீடு கட்டும் உரிமம் பெறாதோர் மிக உண்டு.

வீடு ஒதுக்கீட்டில் பெறலாம்! வீட்டு மனை பெற்று, அதன் வழியாகக் கடன்பெற்று வீடும் தம் விருப்பம்போல் உரிய அமைப்புப்படி கட்டிக் கொள்ளலாம்! கடன் அலுவலகப்பணி வருவாயில் இருந்து பிடித்துக் கொள்ளப்படும். ஒதுக்கப்பட்ட வீட்டை விற்கவும் உரிமை உண்டு.

ஒரு வீட்டை விற்க விரும்புபவர், அவ் வீட்டுப்பரப்பு, உள்ளமைப்பு, உள்ள பொருள்கள் ஆகியவை எல்லா வற்றையும் வரைபடம், புள்ளி விளக்கம், விலைமானம் என்பவற்றால் அறிவிக்கையாக்கி அவ்வீட்டு அஞ்சல் பெட்டி அருகே எவரும் அறிந்து எடுத்துப்பார்க்கவும், கொண்டு செல்லவும் ஆகிய வகையில் சுருணையாக வைத்துவிடுவார்! அதனைக் கொண்டு வேறு எவரையும் நாடாமல் தாமே வீட்டை வாங்கிக் கொள்ளலாம்.

கல்நார் அட்டை எனப்படும் (அசுபெசுடாசு) கூரைத் தகட்டை அமெரிக்க அரசு நலக்கேடானது எனக் கண்டு அதனை எங்கும் பயன்படுத்தத் தடை விதித்துள்ளது. அதனால் அம்முகடமைந்த வீட்டை எங்கும் காண முடியாது.

வீட்டுச் சூழலில் காய்கறிப்பயிர் போட வாய்ப்பு உண்டு! ஆனால் அதனைப் பார்க்கப் பொழுது வேண்டும்! அல்லது ஆள் வேண்டுமே!

இருவரும் பணிக்குச் செல்லும் இடங்களில் குழந்தைக் கல்வி, குழந்தை வளர்ப்பு என்பவை இடர்மிக்கதாகவே உள்ளன. பல குடும்பங்களில் தத்தம் குடும்ப முதியர் உறவர் என இருப்பாரை வைத்துக்கொண்டுளர். அவர்களும் ஆங்கிருத்தலை வேறு என்ன செய்வது என்னும் இரண்டும் கெட்டான் நிலையிலேயே உள்ளனர். கூட்டை விட்டுப் பறக்க நேரம் பார்த்துக் கொண்டு ஏக்கத்தோடு இருக்கும் பறவை

போலவே உள்ளனர்! வாய்ப்பும் வசதியும் மட்டும் வாழ்வைத் தந்து விடாது அவற்றுக்கு அப்பாலும் வாழ்வின் நிறைவு வேறுவேறு உண்டு என்பதை உணராமல் முடியாது.

இருவரே இருக்கத்தக்க வீடா-அதற்கும் வாய்ப்பு உண்டு.

முதுமை அகவையரா, அவர்க்குத் தக அமைந்த வீடு உண்டு.

மாடியேற மாட்டாதவரா, அவர்க்கெனவும் வீடு உண்டு!

ஒரு முதியரைப் பேணும் வாய்ப்பு இல்லாக்கால் பக்கத்து வீட்டாரோ, வேறு சில வீட்டாரோ அவரைப் பேணும் பெருநெறியரும் உளர். பேண உரியவர் இருந்தும் முதியரைப் பேணாது புறக்கணிப்பாரை முறைமன்றத்தில் ஏற்றி முறை வழங்கச் செய்வாரும் உள்ளனர்.

அங்காடி-ஊணகம் முதலியவற்றிலும் முதியர்க்குச் சலுகை வழங்குதல் காண முடிந்தது.

முதியவர் ஒருவர் நடந்தால் அவரைக் கடக்காது, அவர் கடந்தபின் செல்லுதலை இயல்பாகக் காண வாய்த்தது.

சில முதியவர் தங்களை முழுதுற ஒப்படைத்துத் தொண்டராக வாழ்வதைக் கண்டு மகிழும்போது, அவர்கள் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றனர்! அவர்கள் தம் மக்களொடு வழிமுறையையும் வழிமாறாமல் காக்கும் கடப்பாடுடையர் என்பது மொழி இனப் பற்றாளர் பூரிப்பு!

ஒரு பகுதியில் குடியிருந்து ஓரலுவலகத்தில் பணி புரிபவர்கள் தமக்குள் திட்டமிட்டு இன்ன நாள் இன்னார் வண்டி என ஒருமித்துச் செல்லுதல் நலச் செய்தியாம்!

சாலை :

சாலை என்றால், சென்னையில் 'தலைமையகக் கடற்கரைச் சாலையே' என நம் நாட்டில் தோற்றம் தரும் காட்சிச் சாலையாக-பிறநாட்டவர்க்குக் காட்டி மகிழும்

சாலையாக உள்ளது! அதுவும் ஒரு பகுதிக்கே! அதனைக் கடந்து தெற்கோ வடக்கோ போனால் மற்றைச் சாலைகளைப் போலவே தான்!

கடற்கரைச் சாலையிலும் மேம்பட்ட சாலைகளையே நாடளாவிய அளவில் கொண்டது அமெரிக்கா எனல் தகும். இதில், நான் நேரில் கண்டு கூறிய நியூயார்க்கு நகரம் தவிர!

ஆடு மாடு குதிரை பன்றி என்பவை காணற்கில்லாச் சாலை என்பது மட்டுமில்லை, ஆள்நடை, மிதிவண்டி, குதி வண்டி என்பவற்றைத் தாமும் காண முடியாச் சாலை!

'இத்தனை கல் விரைவு' எனச் சாலைக் குறிப்பு உண்டு!

கீழே ஓடும் சாலையின் மேல், மேலே குறுக்கிட்டு ஓடும் சாலைகள் பலப்பல.

பெரும்பாலான சாலைகள் முத்தடம் நாற்றடம் கொண்டவை.

ஐம்பது அறுபது கல் தொலைவுக்குள் தங்கு நிலையங்கள்; அங்காடி ஊணகம், ஓய்வறை உடையவை.

பதினாறாம் அகவையிலேயே ஓட்டும் உரிமை வழங்குதல் உண்டு!

ஒருவர் வண்டியை ஒருவர் வண்டி கடக்க ஒலி எழுப்பாமலே உரிய தடத்திற்கு மாறிக் கொள்கின்றனர்.

சிவப்பு விளக்கால் நின்ற இடத்தும் ஒருவரைப் புரிந்து கைகாட்டியே ஒருவர் ஓட்டுகிறார்.

கடக்கும் இடமாயினும் வேறு இடம் ஆயினும் எவரேனும் நடப்பரேல் அவர்க்குச் சிறிதும் அச்சம் உண்டாகா வகையில் புன்முறுவலொடு தம் வண்டியை நிறுத்தி அவர்க்குக் கையசைத்து அவர்போய பின்னரே, தம் வண்டியை ஓட்டுதல், அப் பரபரப்பிலும் கொண்ட கட்டொழுங்கை வெளிப்படுத்து கின்றது.

சுங்கத் தொகை, அங்கங்கே வழங்கும் வகையிலும் பெறுவதிலும் காலத்தாழ்வு ஏற்படுவது இல்லை.

ஒளியைப் பாச்சி வண்டி எண்ணைப் பதிவாக்கி உரியவர் அட்டையிலே தொகையை எடுத்துக் கொள்கின்றனர். எல்லாம் கணினியால் உண்டாகி விடுகின்றது.

விரைவு, மார்புக்கச்சை அணிதல், மெதுவாகப் போதல், பொறிக்குறை என்பவற்றை எல்லாம் ஆளிலாப் படமெடுப்புக் கருவி உடனுக்குடன் படமெடுத்து உரிய தண்டனையை வழங்குகின்றது.

வண்டித் தூய்மைக்கு உரிய அட்டையை நுழைத்து விட்டால் தானே அது செய்வன செய்து வண்டியைத் தூய்மைப் படுத்தி விடுகின்றது. வண்டியை விட்டு இறங்குதல் வேண்டா! எவரையும் தேடல் வேண்டா எவ்வெத் தூய்மை, அவ்வத் தூய்மைக் கட்டணம் செலுத்தல்! வாய்திறக்க வேண்டாமல் எல்லாமும் முடிந்துவிடும்!

எண்ணெய்க் கிடங்கில் எண்ணெய் நிரப்ப அட்டையைக் கருவியில் நீட்ட வேண்டியது. குறித்த தொகைக்குக் குறித்த அளவு எண்ணெயை ஓட்டுநரே போட்டுக் கொண்டு போக வேண்டியது! அங்கே காசு வாங்க, எண்ணெய்விட, ஒழுங்குறுத்த எவரும் இரார்!

தங்கல் மனைகளிலும் தாம் தாமே ஒழுங்கு மாறாமல் வண்டியை நிறுத்தி எடுத்துக் கொள்ள வேண்டும்.

விரைவாக வண்டியை எடுத்து வண்டியை ஓட்டுகிறார் என்றால். "நீ மார்ப்பு பட்டையைப் போடு" என்று ஒலி எழுப்புகிறது. அவ்வொலி அமைப்பு இல்லா வண்டிகளில் வண்டி எடுக்கும்போதே நல்ல விழிப்புணர்வு வேண்டும். ஓட்டுநரே அன்றி பக்கல் இருப்பாரும் பின்னிருப்பாரும் மார்பு வார் அணிதல் கட்டாயப்படுத்தப்படுகின்றது. எப்படி? படம்

எடுக்கப்பட்டு அக்குறிப்பு அறிவிக்கப்பட்டு, பணம் அட்டையில் பிடிக்கப்பட்டுவிடுகின்றது. கூப்பிடல்-கேட்டல்-அறிக்கைவிடல்-எதுவும் இல்லை! எல்லாம் தானியக்கம்!

ஆள் எவரும் இல்லையே; காட்டுப்பகுதியே; எவர்க்குத் தெரியுமென இயற்கை அழைப்புக்கு இடம்தந்து விட முடியாது! 'அரசு உறங்காது' என்பது பழங்காலத் தமிழ்மரபு! அமெரிக்கச் சாலைத் துறை உறங்காது போலும்!

அமெரிக்கா :

அமெரிக்க ஐக்கிய நாடு என்பதும் இதுவே. இதன் தலைநகரம் வாசிங்டன். இந் நாட்டில் ஐம்பது மாநிலங்கள் உள்ளன. இதன் தேசியக் கொடியில் பதின்மூன்று பட்டைகள் உள்ளன. அவற்றுள் சிவப்பு நிறம் ஏழு; வெள்ளை நிறம் ஆறு. கொடியின் மேல் இடப்பக்கத்தில் நீலநிறப் பின்னணியில் ஐம்பது வெண்ணிற விண்மீன்கள் உள்ளன.

பட்டைகள் பதின்மூன்றும் நாடு விடுதலை பெற்ற போது இருந்த பதின்மூன்று மாநிலங்களின் அடையாளம். விண்மீன்கள் ஐம்பதும் இன்றுள்ள மாநிலங்களின் அடையாளம்.

ஆபிரகாம் லிங்கன் வளாகக் கட்டடத்தில் ஐம்பது மாநிலங்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள. மாநிலத்திற்கு இருவர் என்னும் எண்ணிக்கையில் நூறு பேர் ஆட்சி உறுப்பினர்களாக விளங்குகின்றனர்.

"புதிய நாடுகளைக் கண்டறியும் வேட்கை கொண்ட இசுபெயின் கி.பி. 1499இல் பிர்சோன் என்னும் கடலோடியைக் (கொலம்பசு கப்பற் பயணத்தில் ஒரு கப்பலின் தலைவராக இருந்தவர்) கப்பலொடு விடுத்தது. அக் கப்பலில் செலவு செய்தவர் 'அமெரிக்க சுவெசுபூசி' என்பார். அவர்தம் செலவில் கண்ட புதிய நாட்டைப் பற்றிக் கட்டுரை எழுதினார். அதனைப் பற்றிய சுருக்கம் ஒன்றை வால்சுமுல்லர் என்ற செருமானியர்

வெளியிட்டு, உலகின் நான்காவது பகுதியாகிய இதற்கு அமெரிக்க சுவெசுபூசியசின் கண்டுபிடிப்பை நினைவிற் கொள்ளுமாறு 'அமெரிக்கா' எனப் பெயர் சூட்ட வேண்டும் என்றார். இப் பெயர் நிலைபெற்றது. மெய்யாக இதனைக் கண்டவர் கொலம்பசு எனினும் அமெரிக்க வெசுபூசியசின் பெயரே நிலைத்து விட்டது" என்பது இதன் பெயர் வரலாறு (வாழ்வியல் களஞ்சியம் I.448).

வெசுபூசியசு இத்தாலி நாட்டினர் (கி.பி. 1454-1512).

உருசியா கனடா ஆகிய நாடுகளுக்கு அடுத்த படியாக,நிலப்பரப்பில் அமெரிக்கா மிகப் பெரிய நாடாகும். இந் நாடு கிழக்கு மேற்காக 4800 கிலோ மீட்டரும், தெற்கு வடக்காக 2400 கிலோமீட்டரும் ஆகிய பரப்புடையது.

வாசிங்டன் :

அமெரிக்க நாட்டின் முதல் குடியரசுத் தலைவர் சார்ச்சு வாசிங்டன் (கி.பி. 1889-97). அவர் காலத்தில் நாட்டின் தலைநகராக நியூயார்க் இருந்தது.

வாசிங்டன் இரண்டுமுறை தலைவராக இருந்தார். மூன்றாம் முறை தலைவராகப் போட்டியிட விரும்பாது மறுத்துவிட்டார்.

கி.பி. 1800 ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில் தாமசு செபர்சன் வெற்றி பெற்றார். அவர் காலத்தில்தான் வாசிங்டன் தலைநகர் ஆக்கப்பட்டது. அமெரிக்க அரசை நிலைப்படுத்திய வாசிங்டன் பெயர் சூட்டப்பட்டது.

தலைவரின் ஆளுகை இடமான வெள்ளை மாளிகை இங்கேயே உள்ளது.

பார்க்கும் பகுதிகள் அனைத்தும் காட்சிச் சாலைகளையும் அலுவலகங்களையும் கொண்ட பெருநகர் இது. இந்

நகரிலுள்ள காட்சியகங்களை முழுமையாகக் கண்டு ஆய்வு செய்ய வல்லார்க்கு நெடிய நாள்கள் தேவை!

நயாகரா நீர்வீழ்ச்சி :

வடஅமெரிக்காவில் நியூயார்க்கிற்கும் கனடாவில் உள்ள ஒண்டாரியா மாநிலத்திற்கும் இடையில் ஓடும் ஆறு நயாகரா. இது ஈரி ஏரியையும் ஒண்டாரியோ ஏரியையும் இணைக்கிறது. நீளம் 54.7 கி.மீ.

இந்த ஆறும் இதன் நீர் வீழ்ச்சியும் புகழ் பெற்றவை. ஆற்றின் நடுவே நயாகரா நீர்வீழ்ச்சி உள்ளது.

நயாகரா கோட்டுத் தீவைச் சுற்றி இரண்டு கிளைகளாகப் பிரிந்து இரண்டு நீர்வீழ்ச்சிகளாக விழுகின்றது?

பெரிய நீர்வீழ்ச்சி கனடா நாட்டைச் சேர்ந்தது. இதன் பெயர் குதிரை லாட நீர்வீழ்ச்சி. இதன் உயரம் 48.2 மீ. அகலம் 793 மீ.

அமெரிக்காவிலுள்ள நீர்வீழ்ச்சி உயரம் 51 மீ. அகலம் 467 மீ. இந் நீர்வீழ்ச்சியின் அடியில் ஆற்றுநீர்க் குடைவால் பெருங்குகை ஒன்று உள்ளது.

இந்த ஆற்றில் மூன்று பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. அவற்றுள் 'வானவில்' பாலம் அழகிய தோற்றம் உடையது. இதன் நீளம் 317 மீ. 1941ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

நியூயார்க்கு :

அமெரிக்க நாட்டு நியூயார்க்கு மாநிலத்தது இந்நகர். அமெரிக்க நாட்டின் மிகப் பெரிய நகர்; பெரிய துறைமுக நகரும் இது. வணிகப் பெருக்கம் தொழிற்பெருக்கம் உடையதாய், உலக நாடுகளின் பொருள் நிலையைத் தீர்மானிக்கும் இடமாகவும் உள்ளது.

அட்சன் ஈசிட்டு ஆகிய ஈராறுகளின் கூடிடத்தமைந்த இந்நகர் 3996 ச.கி.மீ. பரப்புடையது.

இங்குள்ள பேரரசு மாளிகை 102 அடுக்கு களையுடையது. இங்குள்ள விடுதலைச் சின்னம் உலகப் புகழ் பெற்றது. உலக நாடுகளின் தலைமை நிலையம் இங்கேயே உள்ளது. இங்குள்ள நூலகமும் மாநகராட்சி அருங்காட்சியகமும் மிகப் பெரியவை.

நியூசெர்சி :

நடு அட்லாண்டிக்குக் கடற்கரையில் உள்ள மாநிலம் இது. தோட்டங்களின் மாநிலம் என்னும் சிறப்புப் பெற்றது. ஆங்கிலக் கால்வாயில் பிரான்சின் கடற்கரைக்கு அருகில் உள்ள செர்சி தீவின் நினைவாக அமைந்த பெயர் இது.

இங்கு வேளாண் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. மக்காச் சோளம், கோதுமை, ஓட்சு, அவரை, ஆப்பிள், திராட்சை முதலியவை மிக விளைகின்றன.

அறிவியல் அறிஞர்களாகிய எடிசன், ஐன்சுதீன், மோர்சு என்பார் இம் மாநிலத்தைச் சேர்ந்தவர்.

வண்ணம் :

ஆங்கில நாட்டு வெண்ணிறத்தரை 'வெள்ளைப் பறங்கியர்' என்று மக்கள் வழங்கினர். பாவலர்களும் பாடினர்.

காய்வகையுள் ஒன்று பறங்கி. அதில் வெள்ளை நிறத்தொடு இருப்பதால் அதனை வெள்ளைப் பறங்கி என்றனர்.

பூசுணை வகையினது; அதனினும் பெரியது. பூசுணை உட்பகுதி சிவப்பு நிறமானது. பறங்கியின் உள்ளீடும் வெண்ணிறமானது.

இவ்வெண்ணிறம் தமிழர்களால் வியந்து நோக்கப்பட்ட நிறம்! அச்சங் கொண்ட நிறமுமாம். அந்நிறம் கொண்ட வெள்ளை நோய் பறங்கி எனப்பட்டது. வெள்ளை, வெட்டை, பறங்கி என்பவை அவை. வெள்ளை முற்றினால் வெட்டை.

வெட்டை முற்றினால் பறங்கி; பறங்கி முற்றினால் பாண்டு என்பது பழமொழி! பாரதத்து வரும் பாண்டு அந்நோய்ப் பட்டவன்.

இவ்வெள்ளை வெள்ளையருள் சிலர்க்கே வெறுப்பாய், கறுப்பாக்க அரும்பாடும் பெரும்பாடும் படுகின்றனர். நம்மூர் மருத்துவர்கள் கட்டளையால் விடியலில் நடையும் ஓட்டமுமாய்த் திரிவார்போல அமெரிக்காவில் இடுப்புக் கச்சையொடு வெயிலில் நடப்பாரும், புல்வெளியில் சாய்ந்து கிடப்பாரும் காணலாம்!

இனி, கறுப்பர் என்பதை அன்றி வேறுவகையால் அழைக்க அமெரிக்கக் கறுப்பர் விரும்புவது இல்லை. வேறு வகையில் அழைப்பது சட்டப்படி குற்றம் என ஆக்கியுள்ளனர். நிற வேற்றுமை காட்டி இழிமைப்படுத்தல் பிறப்புரிமைக் கேடு எனக் கொள்ளப்படுகிறது. பழமையர் நிறவெறியர் உள்ளுக்குள் நினைப்பதை என் செயக்கூடும்? ஆனால் வழங்குநிலை மாற்றமுற்றுவிட்டது.

கறுப்பு நிறம் இயற்கை இறைமை எங்களுக்குத் தந்த பரிசு என்று கறுப்பர்கள் தங்கள் நிறத்துப் பெருமை பாராட்டும் பெருமித நிலை நம்மை வயப்படுத்துகிறது. அம்மட்டும் இல்லை.

என் அருகே, நயாகரா நீர்வீழ்ச்சி அலுவல் பார்க்கும் ஒருவர் வந்து இந்தியரா என்று கேட்டு, 'ஆம்' என்ற அளவில் அந்த உயர்ந்த கட்டிக் கருவயிரம் தோளிலே தட்டி நாம் ஒரு பிறப்பினர் என்றது அருவியின் குளிரினும் குளிராயிற்று.

வண்ணங்கள் தாமா பெருமை!
எண்ணங்கள் அல்லவோ பெருமை!

37. முன்னரே ஏன் திரும்பினேன்?

எனக்கு வழங்கப்பட்ட 'புகவுச்' சீட்டில், 5.7.2007 முதல் 3.9.2007 வரை, தங்க ஒப்புகை வழங்கப்பட்டிருந்தது.

அதனைக் கடந்து ஆறு திங்கள் காலம் தங்கவும் ஆணை தரப்பட்டிருந்தது. எனினும் 3.9.2007ஆம் நாளை மாற்றி, 22.7.2007இலேயே புறப்பட வேண்டியது என்ன?

மாநாட்டு நாள்களில் இரண்டு நாள்கள் விடுதியில் தங்க வைத்தனர். அச் செலவுப்பாடு அளவு கடந்தது! எவர் பொருள் ஆனால் என்ன? செலவு, செலவுதானே! அதன்மேல், இரண்டு திங்கள் காலம் அன்பர்கள், நண்பர்கள் வீடுகளில் விருந்தாளியாகத் தங்க வேண்டும்! நம் சொந்தப் பொறுப்பில் தங்கவும் முடியாது! விடுதியில் தங்க வைப்பதும் பெருஞ்செலவு!

நண்பர்களாய் அன்பர்களாய் அழைப்பாரும், ஒவ்வொரு நொடியும் பணியழுத்தத்தில் இருப்பவர்!

காரி ஞாயிறு இரண்டு நாள்களே நிகழ்ச்சி உண்டு! நிகழ்ச்சிகள் மாநிலம் கடந்த மாநிலம்! ஆயிரம் கல்! ஆயிரத்து ஐந்நூறு கல்!

ஓய்வுநாள் இரண்டையும், இவ்வாறு பயன்படுத்துதலே அவர்கள் கடமைக்குக் குறுக்கீடாக இருக்க, ஐந்து நாள்களும் (திங்கள் முதல் வெள்ளிவரை) ஒருவர் இல்லத்தில் தங்கியிருத்தல் என் மனச் சான்றொடு பொருந்தவில்லை; ஐந்து நாள்களை நாமே சுற்றிப் பார்க்கலாம் எனின், அவர்களின்

துணை இல்லாமல் சென்று வர இயலாது! இந்நிலையில் செயலற்றுக் கிடக்க என் மனம் இடம் தரவில்லை.

எழுதிக் கொண்டிருக்கலாம்; படிக்கலாம் என்றால், அவற்றைச் செய்யாத நாள் இங்கேயே இருந்தது இல்லையே! அங்கே போய் நெருக்கடியாக்கிக் கொண்டா அவற்றைச் செய்ய வேண்டும்? உணவைப் பொறுத்த அளவில் மிகமிகக் கட்டுத் திட்டத்தொடு வாழ்ந்தே பழகிவிட்டமையால், பெரும்பாலான உணவுகளைக் கொள்ள முடியவில்லை! உப்பு உறைப்பு புளிப்பு மிகாமல் மசாலை எண்ணெய் பெரிதும் இல்லாமல், புலவுப்பகுதி என ஒன்றே இல்லாமல் சிலர் வீடுகளில் உண்ண வாய்த்தமை போல எல்லா வீடுகளிலும் வாய்த்தல் என்பது இயல்பாக இல்லாததுடன் அவர்களுக்குத் தண்டனை தருவது போன்றதுமாம்!

மேலும், செப்டம்பர் மூன்றாம் நாளுக்கு முன்னரே யான் சில ஆய்வுக் களங்களில் பங்களிப்பும், திருமணம் நடத்திவைத்தல் ஒப்புகையும் தந்திருந்தமையால் இவண் வந்து மறுநாளே என் சுற்றைத் தொடங்க நேரிட்டுவிட்டது.

ஒரு கூட்டத்திற்கு அன்பர்கள் வழங்கும் தாலர்கள் 250, 300 என உள்ளன. இவை நம் ஊர் மதிப்பீட்டில் 10000, 12000. இத் தொகை பெரிதே! இன்னும் ஐந்தாறு கூட்டங்களிலேனும் பங்கு கொள்ளுமளவு காலம் இருக்கவே செய்தது; எனினும், அத் தொகையையும் அச்சுற்றுப் பயனையும் கருதித் தவச்சாலைக் கடமைகளைத் தவிர்க்க முடியாமையும் உண்டு!

விடியல் போதிலே மட்டும் சற்றே குளிர் மிகுதியாகி வந்தது. இந்நிலை விரைந்து மாறினால், உடல்நிலை என்னாம்? நயாகரா சென்று மீண்ட இரவு மழையாலும் குளிராலும் வானூர்தி நிலையத்தில் ஏற்பட்ட நடுக்கம்,

எவ்வளவு முன்னர்ச் செல்லக்கூடுமோ அவ்வளவு நல்லது என்றே உணர்த்தியது.

அன்பர்கள் சிலர் விருந்துக்கு அழைத்தனர்! 'இவ்வளவு விரைவில் புறப்படல் தெரியாதே" என்றவர் உண்டு. "சில பிள்ளைகளுக்குத் தமிழ்ப்பயிற்சி தர விருப்பம் இருந்தது" என்றவர் உண்டு!" நீங்கள் எவ்வளவு காலம் இந் நாட்டில் இருந்தாலும் அவ்வளவு காலமும் எங்கள் வீட்டிலேயே உங்கள் வீடுபோல் தங்கலாம்" என்றவர் உண்டு! என்றாலும், என் உள்மனத் தூண்டலால், இரண்டு முறை நாள்களை மாற்றி மாற்றி வானூர்திச் சீட்டு பெறுமாறாம் நிலை உண்டாயிற்று! எனக்குப் பெருநிறைவு, எவருக்கும் எத்துயரும் தருவோனாக இல்லாமல் நிறைவோடு திரும்பியதேயாம்!

முன்னறிந்த மூவர் :

தவச்சாலையைத் தாமே கேள்வியுற்றுத் தேடி வந்தவர் பிரபாகரர். கணினிப் பொறிஞர்; அமெரிக்க வாழ்நர். அவர் தந்தையார் திருச்சி இரத்தினசபையார். பிரபாகரர், தவச்சாலையை முழுதுறக் கண்டார்; நிரம்பிய உரையாடினார்; நூல்கள் சில பெற்றார். அவற்றுள் திருக்குறள் வாழ்வியல் உரையும் ஒன்று. பிரபாகரர்க்கு வாழ்வியல் உரை பற்றுமையாகி விட்டது. ஆங்கே போய்த் திருக்குறள் ஆய்வுக்குப் பயன்படுத்தினார்; தவச்சாலை நிறுவுதல் அவரை வயப்படுத்தி யிருக்கிறது என்பது தில்லை. குமரனார் வழியே அறிய வாய்த்தது. என்னை வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 'மாட்சிமை விருது'க்குத் தூண்டியவர் அவரே என்றார் தில்லை. குமரனார். இதில் தூண்டிய பிரபாகரரும் அத் தூண்டுதலை ஏற்ற தில்லையாரும் என்றும் நினைவு கூரத் தக்கவராகின்றனர். தில்லை. குமரனார் 18.8.2007இல் தவச்சாலைக்கு வந்த போது சொல்லிய செய்தி இது.

பிரபாகரர் மாநாட்டுக் கருத்தரங்கத் தலைமை யேற்றிருந்தார். அவர் தலைமையிலேயே 'தொல்காப்பிய வாழ்வியல்' குறித்து உரையாற்றினேன்! இடம் இராலே மாநாடு!

வாசிங்டன் தமிழ்ச் சங்கப் பொழிவுக்குச் சென்றபோது பிரபாகரர் உடனானார். தம் இல்லத்து விருந்தினனாக்கி ஆங்கொரு பொழிவு செய்யவும் வைத்தார். அவரே, நியூசெர்சிப் பொழிவுக்கு அழைத்துச் சென்று உதவினார்.

அடுத்துத் தவச்சாலைக்கு வந்த ஒருவர் மலர்ச்செல்வனார். திருச்சிராப்பள்ளி மாம்பழச் சாலைப் பெரியார் நகரில் வாழ்பவர். அமெரிக்காவில் பணிபுரிபவர். தாமே தவச்சாலையை நாடிவந்து அறிமுகம் செய்து கொண்டார்! அறிமுகத்தின்பின், அளவளாவிப் பேசினார். தவச்சாலையை முழுமையாகக் கண்டார்; சில நூல்களும் பெற்றார். அவர்க்குத் தவச்சாலையும் யானும் பதிவாகி நின்றமை, அமெரிக்க மாநாட்டு விழாவில் அவரைச் சந்தித்த போது புலப்பட்டது. இனிய வகையில் கலந்துநின்றார்! மாநாட்டின் பின் யான் இவண் எய்திய நெருக்கத்தில், அவரும் ஊர்க்கு வந்துள்ளார். தம் இனிய மனைவி மக்களொடு வந்தார்! பாரதி, யாழினி மக்கள் பெயர் என மகிழ்வூட்டினார்! முதிர்ந்த தந்தையாரை நினைந்து சீராட்டினார். தேவநேயத் தொகுதிகளும், என் நூல்கள் அறுபத்தைந்தும் பெற்றார்! மீண்டும் காண்பதாகச் சொல்லிச் சென்றார்! நல்ல பேரன்பினர் இராலே மாநாட்டில் சந்தித்த ஒருவர் அரசு. செல்லையா என்பார். அவர் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டதொடு பெரம்பலூர் சார்ந்த அம்மாபாளையத்தினர் என்றும், அவர், யான் பெரம்பலூர்த் திருவள்ளுவர் தவச்சாலை சார்பில் உழவு பற்றிப் பேசிய ஒரு மணிப்பொழுதுப் பொழிவை முழுமையாகக் கேட்டு மகிழ்ந்ததாகவும் கூறினார். எனக்கு வியப்பாக இருந்தது.

அவர் மாநாட்டில் மிக ஒன்றியிருந்தார். நயாகரா செல்ல வேண்டும் என்னும் என் எண்ணத்தை அறிந்து கொண்டு, அவரே தம் பொறுப்பில் என்னையும் முல்லை நடவரசரையும் மகிழ்வுந்து, வானூர்தி என அழைத்துச் சென்று அருமையாக நயாகராவைக் காணச் செய்தார்! ஒரு முழுநாள், பல்லாயிரம் செலவு அவர்க்கு ஏற்பட்டது! தவச்சாலைக்கு வாராமலும் தவக்கொடைஞராக அவர் திகழ்ந்தமை நெஞ்சம் நெகிழச் செய்வதாம்!

சென்னை முதல் கன்னிவரை யுள்ள தமிழ்வாணர் மட்டுமா, மலையகம், ஈழம், சிங்கை, கனடா என எங்கெங்கோ வாழ் தமிழர்கள்தம்மை யெல்லாம் காணும்பேறு, அமெரிக்க மாநாட்டில் வாய்த்தது. என்னொடு, தவச்சாலை அவர்கள் எண்ணத்தில் பதிந்திருந்தமை என்றும் அழுந்திய தொண்டில் நிற்க வைப்பதாம்!

✲

38. விருந்தினர் கையேடு

வருக வணக்கம்!

1) விடுதியின் சாவி ஆவணங்களைக் கவனமாக வைத்திருக்கவும்.

2) உங்கட்குத் தரப்பட்டிருக்கும் தொலைபேசி பயன்படுத்த வேண்டிய முறைகள் அந்த அட்டையில் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

3) உங்கட்கு உதவி வேண்டும்போது தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி, அலைபேசி எண்கள் ஓர் அட்டையில் விரிவாகத் தரப்பட்டுள்ளன.

4) தாங்கள் நிகழ்ச்சி துவங்குவதற்கு 45 நிமிடங்கள் முன்னதாக அரங்கத்தினுள் இருக்குமாறு வேண்டுகிறோம்.

5) உங்கட்குத் தரப்பட்டிருக்கும் உணவு அடையாள அட்டையை மறவாமல் அரங்கத்திற்கு எடுத்து வருமாறு வேண்டுகிறோம்.

நன்றி.

Phone Contact Sheet

Contact	*Home*	*Mobile*
Sammy Subramanian	8596879	412-1878
Hari Srinivas	469-8685	732-689-1928
Logan Modehala	387-7683	306-7794
Selvan Patchamuthu	303-3517	454-4641
Jayanthi Rao	859-1275	247 6848
Jayanthi Satagopan	469-5905	637-6664
		271-6664
Vani Modahala		306-7794

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கத்தில் என் பொழிவு முடிந்தது. அதன் தலைவர் தமிழ்த்திரு விசய் ஆனந்த்.

நன்றி மடல் விடுக்கிறார் : 17 சூலை 2007

அன்பார்ந்த ஐயா உயர்திரு இளங்குமரனார் அவர்களுக்கு, தாங்கள் சூலைத் திங்கள் 14ஆம் நாள் வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் கலந்துகொண்டு 'வாழ்வின் நோக்கு' எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றிச் சிறப்பித்து வந்திருந்த தமிழ் அன்பர்களின் நெஞ்சங்களில் அற்புதமான மற்றும் பல ஆழமான கருத்துகளை அரைமணி நேரத்தில் பதிய வைத்த உங்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

விஜய் ஆனந்த்

செயற்குழு உறுப்பினர்கள் 2007

✲

39. தமிழ்மொழி வளர்ச்சிக்கான ஆக்கப் பணிகள்

1. செவ்வியல் மூலப்பதிப்பு-உரைப்பதிப்பு-சிதைக்கக்கூடாது.
2. பாட வேறுபாடு, உரைவேறுபாடு 'ஆய்வுக்குழு' அமைத்து அப்பழுக்கற்ற தாக்கல்.
3. செவ்வியல் நூல்-பெயர்ப்பு-வெளியீட்டு ஆணைய ஒப்புகை இன்றி வெளியிடக்கூடாச் சட்டம் இயற்றல்.
4. கலைச் சொல்லாக்கத் தணிக்கைக்குழு ஏற்படுத்தி அக்குழு ஏற்கும் சொல்லையே வழக்கிலும் நூலிலும் ஆணையிலும் பயன்படுத்தல்.
5. தக்கவை எனத் தேர்ந்த விதி, சட்டம், ஆணை ஆயவற்றை ஆயம் தீர்மானித்த அளவில் நில்லாமல் கட்டாயமாக்கலும் உரிய எச்சரிப்பு-தண்டம் தந்து-நிலைப்படுத்தலும்.
6. அடங்கலில் (நெடுங்கணக்கில்) இல்லாத எந்தவோர் எழுத்தையும் நூலிலும் அடங்கலிலும் பயன்படுத்தலிலும் இடம் பெறச் செய்யாமை.
7. அயல்நாட்டுத் தமிழர் தம் தாய்மொழியை எளிதில் கற்கவும் வளர்க்கவும் தேர்வுகள் எழுதவும் நூல்கள் இயற்றவும் வேண்டிய அடிப்படை வாய்ப்புகளை உடனடியாகச் செய்தல். பிற மாநில வாழ்வினர்க்கும் இதனை விரிவாக்கல்.
8. செவ்வியல் மொழி எனத் தீர்மானிக்கப்பட்டவை எல்லாம் ஒத்த இருக்கையில் ஒரு துறையில் இருத்துதல். அதாவது கல்வித்துறையில் இருத்தல்.

9. ஏட்டு வழக்கே உள்ள செவ்வியல் மொழியினும் நாட்டியல் வழக்கும் குன்றாமல் கொண்ட மொழிக்கு இரட்டை வளப்பேறும் வாய்ப்புப் பேறும் வழங்குதல்.

10. செவ்வியல் மொழிக் காலவரம்பை ஈராயிரம் ஆண்டு களுக்கு முற்பட்டவை என்னும் நிலையில் இருந்து கீழ் இறக்காமை; தமிழை மூவாயிர ஆண்டுப் பழைமைய தெனத் திட்டப்படுத்தல்.

11. செவ்வியல் மொழிவளாகம் பன்னாட்டு அறிஞரும் பல்லாற்றானும் பயன்படும் வகையில் பாரிய திட்டம்-துறை இயற்கைச் சூழல் உண்டுறை விடுதி வாய்ப்புப் பேற்றுடன் கலைநலம் செறிய அமைத்தல்.

12. தமிழக இயற்கை மரம் செடி கொடி புல் பூண்டு மூலிகை தவசம் உயிர்வகை முதலிய நேர்காண் உயிரியக்கப் பகுதியாக அமையச் செய்தல்.

✻

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை.
Federation of Tamil Sangams of North America

(A Registered, Non-Profit, Tax - Exempt Organization EIN# 36-3759132)

2756 Sunbonnet Court, San Jose, CA 95125
www.fetna.org

President
Mr. Thillai K. Kumaran 408 267 8036
Vice President
Dr. R Prabhakaran 410 420 [illegible]
Secreatry
Mr. Mani Kumaran [illegible]
Joint Secreatry
Mr. Ravi Shanmugam 919 465 1606
Treasurer
Mr. Sri Subramaniam 863 421 7949

Directors
Mr. S. Sittambalam 416 444 4931
Mr. Palani Sundaram 203 271 2064
Mr. O.P. Ravanan 732 985 1347
Mr. R Porchezhian 314 878 5835

Tamil Sangams

March 19, 2007

The Consulate General of U.S.A.
Visa Section, 220 Anna Salai
Chennai 600006,
Tamil Nadu, India

Re: US Visitors visa to Mr. R. Ilankumaran

Dear Sir/Madam,

The Federation of Tamil Sangams (Associations) of North America (FeTNA), an umbrella organization consisting of over 40 Tamil Sangams of major cities in USA and Canada, is preparing for the 20th Annual National Convention in Raleigh, NC on July 7, 8 and 9, 2007.

Austin Tamil Sangam
San Francisco Bay Area Tamil Manram
Bharathi Kalai Manram, Houston
Bharathi Society of America, New York
Boston Muthamizh Sangam
California Muthamizh Sangam
Chicago Tamil Sangam
Colorado Tamil association
Columbus Tamil Sangam
Connecticut Tamil Sangam
Greater Atlanta Tamil Sangam
Greater Charlotte Tamil Association
Harrisburg Area Thamil Sangam
Ilankai Tamil Sangam of Florida
Ilankai Tamil Sangam of Texas
Ilankai Tamil Sangam of USA
Indianapolis Tamil Sangam
Metroplex Tamil Sangam
Midwest Thamizh Sangam
Milwaukee Tamil Sangam
Minnesota Tamil Sangam
Muthamil Sangam, Orlando
National Capital Tamil Service Society
New England Tamil Sangam
New Jersey Tamil Arts & Cultural Society
New Jersey Tamil Sangam
New Mexico Tamil Sangam
New York Tamil Sangam
Panai Nilam Tamil sangam
Oklahoma Tamil Sangam
San Antonia Tamil Sangam
Seattle Tamil Sangam
South Florida Tamil Sangam
Tamil Association of Greater Delaware
Tamil Eelam Society of Canada
Tamil Manram, Jacksonville
Tamil Sangam of Carolinas
Tamil Sangam of Greater Washington
Tamil Sangam of Los Angeles
Tampa Tamil Association of USA
Tennessee Tamil Sangam
Thamizh Sangam of Missouri
Wisconsin Tamil Sangam

Mr. Ilankumaran is an outstanding Tamil scholar and an excellent speaker who has published numerous books on Tamil literary topics. Specifically, his depth of knowledge on Thirukkural is well known in Tamil literary circles. FeTNA is proud to invite him to the 20th Annual National Convention.

Mr. Ilankumaran has kindly consented to attend the convention and preside over the poetry session and serve as a judge and commentator of that session. He will also deliver a special address during the third day of the convention which is dedicated to Tamil Literature. Based on the enthusiasm of the audience, he may visit few member Tamil Associations in other cities.

FeTNA will provide his nominal travel expenses from Chennai to Raleigh, NC and back. FeTNA will also be responsible for all the expenses associated with Mr. Ilankumaran's boarding, lodging and health care during his stay of 2-4 weeks in the US. Please find enclosed the copy of the invitation sent to Mr. Ilankumaran.

On behalf of FeTNA I request you to grant him the necessary Visitor's visa needed for his entry in the United States.

If you need additional information, please fell free to contact me by phone or email.

Sincerely,

Thillai K. Kumaran
President, Federation of Tamil Sangams of North America, Inc.
president@fetna.org / thillai@sbcglobal.net
Home: 408-267-8006 / Mobile: 408-857-0181

CC: Mr. Ilankumaran

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை

Federation of Tamil Sangams of North America

(A Registered, Non-Profit, Tax - Exempt Organization EIN# 36-3759132)

2756 Sunbonnet Court, San Jose, CA 95125
www.fetna.org

President
Mr. Thillai K. Kumaran 408 267 8036
Vice President
Dr. R Prabhakaran 410 420 0111
Secreatry
Mr. Mani Kumaran 703 378 6094
Joint Secreatry
Mr. Ravi Shanmugam 919 465 1606
Treasurer
Mr. Sri Subramaniam 563 421

Directors
Mr. S. Sittambalam 416 444 4931
Mr. Palani Sundaram 203 271 2064
Mr. O.P. Ravanan 732 985 1347
Mr. R Porchezhian 314 878 5832

Tamil Sangams

Austin Tamil Sangam
San Francisco Bay Area Tamil Manram
Bharathi Kalai Manram, Houston
Bharathi Society of America, New York
Boston Muthamizh Sangam
California Muthamizh Sangam
Chicago Tamil Sangam

March 19, 2007

Mr. R. Ilankumaran
Thiruvalluvar Thavachaala¶
Allur (Thiruvalarkudi)
Thiruchirapalil District 620 101
Tamil nadu, India

Dear Mr. Ilankumaranaar,

The Federation of Tamil Sangams of North America will be conducting its Annual Tamil Convention – 2007 from July 7 to July 9, 2007 in Raleigh, North Carolina, USA. Eminent scholars, well-known speakers and popular artists will be invited to participate in the Convention. The Annual Tamil Conventions usually draw a large number of attendees from various States in USA and several provinces in Canada.

A special feature of the Annual Tamil Convention – 2007 is that a purely Literary Meeting will be held on the last day (July 9, 2007). The theme for the Literary Meeting will be "Tamil Culture as Depicted in the Ancient Tamil Literature".

Chicago Tamil Sangam
Colorado Tamil association
Columbus Tamil Sangam
Connecticut Tamil Sangam
Greater Atlanta Tamil Sangam
Greater Charlotte Tamil Association
Harrisburg Area Thamil Sangam
Ilankai Tamil Sangam of Florida
Ilankai Tamil Sangam of Texas
Ilankai Tamil Sangam of USA
Indianapolis Tamil Sangam
Metroplex Tamil Sangam
Midwest Thamizh Sangam
Milwaukee Tamil Sangam
Minnesota Tamil Sangam
Muthamil Sangam, Orlando
National Capital Tamil Service Society
New England Tamil Sangam
New Jersey Tamil Arts & Cultural Society
New Jersey Tamil Sangam
New Mexico Tamil Sangam
New York Tamil Sangam
Panai Nilam Tamil sangam
Oklahoma Tamil Sangam
San Antonia Tamil Sangam
Seattle Tamil Sangam
South Florida Tamil Sangam
Tamil Association of Greater Delaware
Tamil Eelam Society of Canada
Tamil Manram, Jacksonville
Tamil Sangam of Carolinas
Tamil Sangam of Greater Washington
Tamil Sangam of Los Angeles
Tampa Tamil Association of USA
Tennessee Tamil Sangam
Thamizh Sangam of Missouri
Wisconsin Tamil Sangam

A Program Committee has been organized to evaluate the credentials of the scholars, speakers and artists to help the Federation to invite them. I am pleased to inform you that you are one of the scholars that the Program Committee has decided to invite for the upcoming Tamil Convention.

On behalf of the Federation of Tamil Sangams of North America, I am proud to invite you to participate in the Annual Tamil Convention – 2007.

Attached is a formal Memorandum of Understanding (MOU) outlining the arrangements that FeTNA will be ready to undertake in connection with your travel and stay in USA and also our expectation from you as our invited guest. Please sign and send the MOU with your letter of acceptance to the above address.

I am looking forward to receive your letter accepting our invitation.

Sincerely yours,

Thillai K. Kumaran
President, Federation of Tamil Sangams of North America, Inc.
president@fetna.org / thillai@sbcglobal.net
Home:408-267-8006/Mobile:408-857-0181

CC: The Consulate General of USA, 220 Anna Saalai, Chennai 600 006

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு

FEDERATION OF TAMIL SANGAMS
OF NORTH AMERICA

Presents

THE LIFETIME ACHIEVEMENT AWARD

To

THIRU IRA. ILANGUMARANAR

In grateful appreciation
of his immense contributions to Tamil and
his dedication to the welfare of Tamil People

ANNUAL TAMIL CONVENTION 2007
Raleigh, North Carolina, USA
July 6-9, 2007

Thillai K. Kumaran
PRESIDENT

Thani Kumar Cheran
COORDINATOR